





நம் சுதந்திரப் போராட்டத் தியாகிகள், இம்மண்ணில் வீரத்துடன் சிந்திய புனித ரத்தத்தையும்... தாய் நிலத்திற்காக, உயிரையும் சேவையையும் தன்னலமின்றி அர்ப்பணித்த அந்தத் தூய வெள்ளை உள்ளங்களையும்... காலச்சக்கரத்தின் சுழற்சியில், மறைந்து போனாலும், மறந்து போகாத அம் மாமனிதர்களின் இன்றியமையாத பங்களிப்பையும்... பசுமையாய், மூவர்ணங்களாய் பிரதிபலித்து...

பல தியாகிகளின் மனைவியர் இழந்த தாலிக் கொடியை இச்சமூகத்திற்கு நினைவு படுத்தியபடி...

இன்றும் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது... நம் தேசியக்கொடி!

அந்த உன்னதக் கொடியின் படபடப்பு... உங்களின் இதய ஒலியாய்... உங்களைப் போன்ற தியாகிகளின் உயிர்த் துடிப்பாய் என்னுள் கேட்கிறது!

இனி வரும் இளைய சமுதாயம்... சுதந்திர வேள்விக்காக நாம் கொடுத்த விலையை உணர்ந்து பயணித்தால், அதுவே மிகப் பெரிய வெற்றியாகும். ஜெய்ஹிந்த்!

- உமாபாலகுமார்

# வேதமடி நீயெனக்கு!

## 1

அந்த அந்தி வேளையில், பூஞ்சோலைகள் இளஞ் சிவப்பு சேலையணிந்து, இரவு மன்னனுக்காய் காத்திருந்தன.

மலர்களுக்கு மேலாடையாய் வண்ணத்துப் பூச்சிகள் அமர்ந்திருக்க, மழைக்கால மின்மினிகளாய் மின்னிக் கொண்டிருந்தன, விண்மீன்கள்!

விடுமுறை என்பதால் ஓய்வாக அமர்ந்து பு[illegible] படித்துக் கொண்டிருந்த சௌந்தர்யாவை செல் இசை[illegible] அழைத்தது.

எடுத்துப் பார்த்[illegible] நண்பன் தான் அழைத்திருந்[illegible]

12.02.2009 00:30

நம் சுதந்திரப் போராட்டத் தியாகிகள், இம்மண்ணில் வீரத்துடன் சிந்திய புனித ரத்தத்தையும்... தாய் நிலத்திற்காக, உயிரையும் சேவையையும் தன்னலமின்றி அர்ப்பணித்த அந்தத் தூய வெள்ளை உள்ளங்களையும்... காலச்சக்கரத்தின் சுழற்சியில், மறைந்து போனாலும், மறந்து போகாத அம் மாமனிதர்களின் இன்றியமையாத பங்களிப்பையும்... பசுமையாய், மூவர்ணங்களாய் பிரதிபலித்து...

பல தியாகிகளின் மனைவியர் இழந்த தாலிக் கொடியை இச்சமூகத்திற்கு நினைவு படுத்தியபடி...

இன்றும் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது... நம் தேசியக்கொடி!

அந்த உன்னதக் கொடியின் படபடப்பு... உங்களின் இதய ஒலியாய்... உங்களைப் போன்ற தியாகிகளின் உயிர்த் துடிப்பாய் என்னுள் கேட்கிறது!

இனி வரும் இளைய சமுதாயம்... சுதந்திர வேள்விக்காக நாம் கொடுத்த விலையை உணர்ந்து பயணித்தால், அதுவே மிகப் பெரிய வெற்றியாகும். ஜெய்ஹிந்த்!

- உமாபாலகுமார்

# வேதமடி நீயெனக்கு!

## 1

அந்த அந்தி வேளையில், பூஞ்சோலைகள் இளஞ் சிவப்பு சேலையணிந்து, இரவு மன்னனுக்காய் காத்திருந்தன.

மலர்களுக்கு மேலாடையாய் வண்ணத்துப் பூச்சிகள் அமர்ந்திருக்க, மழைக்கால மின்மினிகளாய் மின்னிக் கொண்டிருந்தன, விண்மீன்கள்!

விடுமுறை என்பதால் ஓய்வாக அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த சௌந்தர்யாவை செல் இசையாய் அழைத்தது.

எடுத்துப் பார்த்தால், அவளுடன் கல்லூரியில் படித்த நண்பன் தான் அழைத்திருந்தான்.

12.02.2009 00:31



"ஹலோ! நான் கோபி பேசறேன் சௌந்தர்யா. உன் ப்ளட் குருப் 'ஏபி பாஸிடிவ்தானே? அப்பாவுக்கு ஒரு ஆக்ஸிடெண்ட் பாத்ரூமில வழுக்கி விழுந்து தலையில அடி! ... ப்ளட் கிடைக்கலை.. நீ வரமுடியுமா?" பதட்டத்துடன் கேட்டான்.

"நான் உடனே வரேன் கோபி! எந்த ஹாஸ்பிடல்?" பதைப்புடன் விபரத்தை அறிந்தவள் உடனே கிளம்பினாள்.

அப்போதுதான் மொட்டை மாடியில் உலர்த்தியிருந்த வடகத்தை எடுத்துக் கொண்டு கீழே வந்தார் அவளுடைய தாய் ரேணுகா.

"எங்கேடா கிளம்பிட்டே? அப்பா வந்தவுடனே கோவிலுக்குப் போகலாம்னு சொன்னேனே...?" மெதுவாகக் கேட்டார்.

"அம்மா! என் பிரண்டோட அப்பாவுக்கு உடனே பிளட் தேவைப்படுதாம்! நான் கிளம்பணும்! நீங்க கோவிலுக்குப் போயிட்டு அவருக்கும் சேர்த்து வேண்டிக்கிட்டு வந்துடுங்க!"

அவசரமாகக் கூறிவிட்டு கிளம்பியவளைப் பெருமையுடன் பார்த்தார் ரேணுகா...

சௌந்தர்யா எப்போதுமே அப்படித்தான்... யாருக்காவது ஏதாவது ஒரு கஷ்டம் என்றால் அவளால் தாங்க முடியாது.. முதல் ஆளாக உதவ நிற்பாள்..!

மகளைப் பற்றிப் பெருமிதத்துடன் எண்ணியபடி அவர் உடை மாற்றிக் காத்திருக்க, சௌந்தர்யாவின் ஸ்கூட்டி மருத்துவமனையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.



சரியான நேரத்திற்கு சென்று ரத்ததானம் செய்து விட்டு வெளியே வந்தபோது கோபியின் தாய் நெகிழ்ச்சியுடன் அவளுடைய கைகளைப் பிடித்தபடி நன்றி கூறினார்.

பிறகு இருவருக்கும் ஆறுதல் கூறி விட்டு விடை பெறும் போதுதான் அவனுடைய அண்ணன் சந்தானம் அங்கு வந்தான்.

"கோபி! ப்ரதீப் வரேன்னிருக்கான்... அவனும் அதே குருப் தான்!"

"இல்லைண்ணா! இவ என் ப்ரெண்ட் சௌந்தர்யா! இவளே குடுத்துட்டா... வேண்டாம்னு சொல்லிடுங்க! டாக்டர் ஒரு யூனிட் போதும்னு சொல்லிட்டாங்க."

அவன் கூறும்போதே சந்தானத்தின் விழிகள் அவளை நன்றியுடன் ஏறிட்டன.

"தேங்க்யூ மிஸ் சௌந்தர்யா..." உணர்ச்சிப் பெருக்குடன் நன்றி கூறினான்.

"பரவாயில்லைண்ணா! இது எங்களுக்கு ரொட்டீன் தான்! கோபி, நான் எல்லாருமே ரெகுலர் டோனர்ஸ் தானே! அப்பாவை கவனிங்க... நான் கிளம்பறேன்... பை கோபி" விடைபெற்று வெளியே வந்தாள்.

* * *

ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பியபோது மனம் நிறைந்திருக்க, வழியில் ஒரு கடையில் நிறுத்தினாள்.

ஆப்பிள் ஜூஸை மெதுவாக உறிஞ்சியபடி போக்குவரத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோதுதான் அந்த விபத்து நடந்தது.

வேகமாக வந்த ஒரு கார், அப்போது சாலையைக் கடக்க முயன்ற ஒரு வயதான பெண்மணியின் மீது இடித்து நின்றது.

12.02.2009 00:31

அவர் உடனே கீழே விழுந்து விட, பதறிப் போய் எழுந்து ஓடினாள் அவள்.

கார் டிரைவர் குற்றவுணர்வுடன் இறங்கி நிற்க, அவள் அந்தப் பெண்மணியைத் தூக்கி நிறுத்திவிட்டு, காரின் மறுபுறமிருந்து இறங்கிய ஒரு நெடிதுயர்ந்த வாலிபனிடம் திரும்பினாள்.

''ஏன் மிஸ்டர்... உங்களுக்கெல்லாம் காரில் ஏறிட்டா கண்ணே தெரியாதா? ப்ளேன்ல போறதா நினைப்பா? பாத்து வரதில்லை... இவங்களுக்கு ஏதாவது ஆகியிருந்தா என்ன செய்யறது? ஒரு உயிரை உங்களாலே திருப்பித் தர முடியுமா?'' படபடவெனப் பொரிந்தாள்.

உடனே அவனுடைய முகம் கோபத்தில் ரௌத்ரமாய் சிவந்தது.

''மிஸ்.. ஒரு நிமிஷம்! யாரும் வேணும்னு வயசான வங்க மேல காரை இடிக்க மாட்டாங்க... நான் கொஞ்சம் அவசரமாப் போகணும்னு டிரைவர்கிட்ட சொன்னதாலே அவரும் வேகமா வந்துட்டாரு! அவ்வளவுதான்! எங்களுக்கும் மனித நேயமெல்லாம் உண்டு! நாங்க பாத்துக்கறோம். என்னவோ நீங்கதான் பெரிய மதர் தெரசா மாதிரியும், மத்தவங்க எல்லாரும் அயோக்கியனுங்க மாதிரியும் நினைக்கறதை இன்னியோட விட்டுடுங்க.'' என்றவன் அந்த முதியவரிடம் திரும்பினான்.

''அம்மா! சாரி... நீங்களும் பாத்து வந்திருக்கணும் இல்லையா? இது பெடஸ்ட்ரியன் கிராஸ் இல்லையே? சரி... இந்தாங்க எதுக்கும் டாக்டரைப் பாத்துருங்க!'' என்றபடி ஐநூறு ரூபாய் நோட்டை எடுத்து அவரிடம் நீட்டினான்.



உடனே கையெடுத்துக் கும்பிட்ட அந்தப் பெண்மணி, ''நீங்க மகராசனா இருக்கணும்பா... எனக்கு ஒண்ணுமில்லை.... கையில லேசா சிராய்ச்சிடுச்சி... அவ்வளவுதான் ஏதாவது மருந்து போட்டா சரியாப் போயிடும்.''

அவர் மறுக்க மறுக்க வற்புறுத்தி பணத்தை அளித்தவன், அவளைத் திரும்பியும் பார்க்காமல் வேகமாய் காரில் ஏறினான்.

அவனையே ஒருவித இயலாமை கலந்த கோபத்துடன் பாத்திருந்தவளை அந்த மூதாட்டியின் குரல் கலைத்தது.

''ரொம்ப நன்றிம்மா! ரோட்டில போறவங்களெல்லாம் நமக்கென்னன்னு போயிட்டிருந்தப்ப எனக்காக பேச வந்தீங்களே... நான் வரேம்மா'' என்றபடி விடைபெற்றார்.

மனதிற்குள் ஏதோ ஒரு கோபம் இனம் புரியாமல் பீறிட்டெழ... அதற்கு மூல காரணமாய் அவன் உருவம்!

ஆறடிக்கும் மேல் உயரத்தில் மாநிற முகத்தில் விழிகள் கூர்மையாய் தெரிய, அந்தக் கோப இறுக்கத்தில் களையாய் தெரிந்த அவனுடைய முகம் ஏனோ அவளறியாமலே மனதில் பதிவதாய்!

ஒரு பெருமூச்சுடன் ஸ்கூட்டியை கிளப்பியவளுக்கு, மீதமிருந்த அந்த ஜூஸைக் குடிக்கவும் மனம் வரவில்லை.

## 2

வீட்டிற்கு சென்றபோது நாகராஜூம், ரேணுகாவும் கோவிலிலிருந்து வந்திருந்தனர்.

12.02.2009 00:31



அவளுக்கு விபூதியைப் பூசி விட்ட நாகராஜ், ''என்னடா? ப்ளட் டொனேட் பண்ணப் போயிட்டியாமே?'' வாஞ்சையுடன் வினவினார்.

''ஆமாம்ப்பா! என் ஃப்ரெண்டோட அப்பாவுக்குத் தான்... தலையில அடி பட்டிருக்கு அதான்'' என்றவள் உள்ளே சென்று குளித்துவிட்டு வந்தாள்.

''இந்தா.. இந்த மைலோவைக் குடி.. கொஞ்சம் தெம்பா இருக்கும். ஆம்லேட்டும் இருக்கு... அப்படியே சாப்பிடு!'' என்றபடி வந்தார் ரேணுகா.

மௌனமாக அமர்ந்து டி.வி.யைப் பார்த்தபடி சாப்பிட்டவளுக்குள், ஊடுருவும் பனிப் புயலாய் அவன் நினைவே!

எவ்வளவு எகத்தாளமான வார்த்தைகள்... ஏனோ அவனுடைய அழுத்தமான இறுக்கமும், எளனப் பேச்சும் அவளுக்குள் உறுத்தலாய்!

பிறகு தந்தையுடன் கிரிக்கெட் பற்றி விவாதித்ததில் பொழுது சுவாரசியமாய் செல்ல அவனை மறந்தே போனது மனது.

* * *

மறுநாள்... அவளுடைய தோழி தாராவின் திருமணம் அடுத்த வாரம் இருப்பது நினைவு வர, பியூட்டி பார்லருக்கு சென்றிருந்தாள் சௌந்தர்யா!

பேஷியல் செய்து முடித்துத் திரும்பும்போது வழியில் செல் ஒலித்தது.

பாதையோரம் ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு யாரென்று நோக்கினால் புது மணப் பெண் தாராதான் அழைத்திருந்தாள்.



''என்னடி தாரா... கனவுலகிலே இருப்பேன்னு டிஸ்டர்ப் செய்யாம இருந்தா, நீயே போன் பண்றே? எங்க நினைப்பெல்லாம்கூட இருக்கா?'' குறும்புடன் கேட்டாள்.

மறுமுனையில் எந்த சப்தமுமின்றி நிசப்தமாக இருக்க, மெல்லிய விசும்பல் ஒலி கேட்பது போல்!

உடனே பதறிப்போனவள், ''தாரா! என்னடி ஆச்சு. ஏதாவது ப்ரச்னையா? ஏன் அழறே?'' குழப்பத்துடன் கேட்டாள்.

''ம்..... என் கல்யாணம்... நடக்காது போலருக்குடி!'' சிறு விம்மலுடன் கூறினாள் அவள்.

''ஏன்டி? ஏதாவது வரதட்சணை ப்ரச்னையா?''

''அதெல்லாம் இல்லை... அவரோட.... கண்ணனோட அம்மாவுக்கு திடீர்னு ஸ்ட்ரோக் வந்திருக்காம்! உடனே என்னைப் பத்தி அவங்க குடும்பமே தப்பாப் பேசியிருக்கு! நான் ராசியில்லாதவளாம். அவரோட அப்பா, அக்கா எல்லாரும் சொல்றாங்களாம்!

''இன்னிக்கு தரகர் வந்து எல்லா விபரமும் சொல்லிட்டு வருத்தப்பட்டுட்டு போனாரு. ஆனா அவங்களா வந்து எங்ககிட்ட எதுவும் பேசலை. கல்யாணத்துக்கு இன்னும் அஞ்சு நாள் தான் இருக்கு... அப்பாவும் அம்மாவும் உடைஞ்சு போயிட்டாங்க! நீ கொஞ்சம் வர முடியுமாடி?'' கெஞ்சலாகக் கேட்டாள்.

உடனே வருவதாகக் கூறி விட்டு அங்கு சென்றபோது, வீடே களையிழந்து தெரிந்தது.

அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டுத் திரும்பி வரும் போது மனம் பெரிதும் கனத்திருந்தது.

எந்தவொரு காரியத்துக்கும் பெண்களையே பகடைக் காயாய் உருட்டி வி[illegible]

12.02.2009 00:32

நிறுத்தப் போகிறதோவென்று மனம் கசந்து விட, அமைதியாக வீட்டிற்கு வந்தாள் அவள்.

* * *

மறுநாள் காலையில் எழுந்து தோட்டத்திற்கு வந்து பல் துலக்கியவள், மொட்டு விட்டிருந்த ரோஜாச் செடிகளைப் பார்வையிட்டபடி அதன் அழகில் மனம் லயித்துப் போயிருந்தாள்.

விடியலின் சீதனமாய், பறவைகளின் மொழியும், காய்கறி வண்டிக்காரரின் கூவலும், சமையலறையிலிருந்து ஒலித்த பால் குக்கரின் விசிலும் தாள லயத்துடன் ஒலித்தன.

குளித்து தயாராகி லைப்ரரிக்கு கிளம்பியபோது, ரேணுகா அவளை அழைத்தார்.

''சௌந்தர்யா! தாரா கிட்டருந்து உனக்கு போன் வந்திருக்கு பாரு!''

''தோ வரேம்மா'' என்றவள் மனதில் கனத்த சுமையுடன் போனை எடுத்தபோது, அவளோ பெரும் உற்சாகத்திலிருந்தாள்.

''சௌந்தர்யா! அவங்க வீட்டிலருந்து காலையில வந்தாங்க... அவங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையாம்! கல்யாணத்தை நடத்தலாம்னு சொல்லிட்டாங்க. அவரோட அம்மாவுக்கு கூட இப்ப தேவலையாம்.

''ஏய்... ரொம்ப சந்தோஷமா இருக்கு! அவங்க எப்படி திடீர்னு மனசு மாறினாங்க?''

''அவரோட சித்தப்பாவும் ஃப்ரெண்டும் வந்தாங்க... அந்த ப்ரெண்ட்தான் எல்லார்கிட்டயும் பேசி இருக்காரு... நேத்திக்குன்னு பாத்து, கண்ணனுக்கு ப்ரமோஷன்



கிடைச்சிருக்கு! உடனே அந்த நண்பர் அதையே காரணமாகக் காட்டி நான் வந்த நேரம் நல்ல நேரம் தான்னு வீட்டுலே எடுத்துச் சொல்லியிருக்காரு... அவங்க வீட்டுக்கு அந்த நண்பர் ரொம்ப செல்லப் பிள்ளையாம்! அவர் சொல்றதைத்தான் இவங்க வீட்டில் எல்லாரும் கேப்பாங்களாம்!

''இவருக்கு வேலை வாங்கித் தந்தது அவர்தானாம்! நல்ல வேளை... அவர் ஊரிலே இருந்ததாலே எல்லாமே நல்லபடியா முடிஞ்சதுன்னு கண்ணனோட சித்தப்பா சொன்னாங்க!'' உற்சாகத்துடன் முடித்தாள்.

நல்ல வேளையாக ஒரு பெண்ணின் வாழ்க்கை கேள்விக்குறியாகி விடாமல் தடுத்து விட்டானே என்று அந்த முகம் தெரியாத மனிதனின் மேல் மதிப்பு வந்தது.

''பரவாயில்லைடி! எனக்கு அவரைப் பாத்து லட்சம் தேங்க்ஸ் சொல்லணும் போலருக்கு!

''இந்த மூட நம்பிக்கைகளை எல்லாம் நம்பாம ஒருத்தர் இருக்காருங்கிறதே சந்தோஷமா இருக்கு!'' ஒருவித நிறைவுடன் கூறினாள்.

எல்லாவற்றையும் கேட்டிருந்த ரேணுகா அவளிடம் என்னவென்று விசாரித்தார்.

அவள் விபரம் கூற ''ஆமாம்! கல்யாணத்துக்கு முன்னாடி ஏதாவது சின்னதா ஒரு அசம்பாவிதம் நடந்துட்டாகூட உடனே அதைப் பெண்ணோட தலையிலே சுமத்தி ராசியில்லாதவன்னு ஒரு முத்திரை குத்தறது இந்த சமுதாயத்தோட பழக்க.:! நல்லவேளை உன் ப்ரெண்ட் தாரா அதிலருந்து தப்பிச்சிட்டா!'' ஒரு பெருமூச்சுடன் கூறினார்.

12.02.2009 00:32



## 3

தாராவின் திருமண நாளும் வந்தது!

சௌந்தர்யா பரபரப்பும், மகிழ்ச்சியுமாக தயாராகிக் கொண்டிருந்தாள்.

மைக்கேல் ஆஞ்செலோவின் சிற்பம் போல் இருந்தவளுக்கு பட்டுப் புடவையும் நகைகளும் மேலும் அழகூட்டின.

அவள் மண்டபத்து வாயிலை அடையும்போதே ரிசப்ஷனில் நின்று வரவேற்றுக் கொண்டிருந்த அந்த இளைஞனைக் கண்டதும், சட்டென்று அவளின் இதயம் சுருங்கியது.

அன்று ஒரு வயதானவரை இடித்து விட்டு அவளையும் ஏளனமாகப் பேசியவன்!

அதே நேரம் அவனுடைய விழிகளும் அவளையே நோக்க, ஒரு நொடி கண்கள் இடுங்கியதே தவிர, அவளை அடையாளம் கண்டு கொண்ட அறிகுறியே அவனிடமில்லை!

அவளுக்குள் எதுவோ பிறழ்வது போல வேண்டுமென்றே தன்னை அடையாளம் தெரியாத மாதிரி நடிக்கிறானோவென்ற கேள்வி நெருடலாய்!

தலையைக் குலுக்கி அவள் உள்ளே செல்ல, உணர்ச்சியின்றி அவளையே தொடர்ந்தன அவன் விழிகள்.

பிறகு திருமணம் முடிந்து மணமக்களை வாழ்த்துவதற்காக பரிசுப் பொருளுடன் அவள் மேடைக்குச் சென்றாள்.



அப்போது தாரா தன் கணவன் கண்ணனை அறிமுகப் படுத்தி விட்டு, அருகில் நின்றிருந்த அந்த நெடிதுயர்ந்த மனிதனையும் அவளுக்கு அறிமுகம் செய்தாள்.

''சௌந்தர்யா! நான் சொன்னேன் இல்லை... இவரோட ஃப்ரெண்ட்தான் எங்க கல்யாணத்துல வரவிருந்த ப்ரச்னையை எல்லாம் சரி பண்ணி இந்தத் திருமணத்தை நடத்தி வச்சாருன்னு. அவரு ப்ரதீப் அண்ணாதான்! எங்க கல்யாணத்துக்காக கோவாவிலேருந்து வந்திருக்காரு!'' உற்சாகத்துடன் கூறினாள்.

அவளுக்குள் மெல்லிய விதிர்ப்பும் இவனா அவ்வளவு மனித நேயத்துடன் நடந்து கொண்டானென்ற வியப்பும் ஒருங்கே கை கோர்த்தன.

அவளது வியந்த விழிகளை ஒற்றைப் புருவத்தை உயர்த்தி எதிர் கொண்டான் அவன்.

''என்ன தாரா? உங்க ப்ரெண்ட் என்னவோ பேயைப் பாத்த மாதிரி பேந்தப் பேந்த முழிக்கிறாங்க... நான் நல்லது செஞ்சதாத்தானே சொன்னீங்க, அதிலே என்ன இவ்வளவு ஆச்சர்யம்?'' சௌந்தர்யாவையே கூர்ந்தபடிக் கேட்டான்.

சட்டென்று அவள் தலை குலுக்கி நிமிர, ''ப்ரதீப் அண்ணா! நான் சொன்னேன் இல்லை. என் ப்ரெண்ட் உங்களுக்கு லட்சம் தேங்க்ஸ் சொல்லணும்னு சொன்னான்னு! அது இவதான்'' தாரா கூறினாள்.

அதே சமயம் தர்ம சங்கடத்துடன் அவள் கண்களை இறுக மூடித் திறக்க, ''உங்க நன்றிக்கு வெல்கம்!'' என்று கிண்டலாக தலை சாய்த்துக் கூறியவனின் இதழோரங்கள் குறும்புடன் துடித்தன.

12.02.2009 00:32

''அவ இன்னும் தேங்க்ஸே சொல்லலையேண்ணா. அதுக்குள்ளே வெல்கம் சொல்றீங்க?''

தாரா குறும்புடன் கேட்க, ''ம்... அவங்க பார்வையே சொல்லிடுச்சே!'' சோம்பலாகக் கூறி விட்டு தலை சரித்துப் புன்னகைத்தான் அவன்.

அந்தக் கணம், கரு மேகங்களுக்கிடையில் ஒளிரும் மின்னல் கீற்றாய் அவன் புன்னகை அழகிய கீற்றாய் ஒளிர்ந்தது.

அவள் வியப்புடன் நோக்கும்போதே, அப்படி ஒரு விஷயமே நிகழாதது போல் அவன் முகம் உணர்ச்சி களைத் துடைத்து இறுகியது.

சட்டென்று திரும்பியவன், ''கண்ணா! நான் போய் உமாபதி அங்கிளோடக் கொஞ்சம் பேசிட்டு வரேன்'' என்று கூறிவிட்டு விருட்டென்று மேடையிலிருந்து இறங்கிக் கீழே சென்றான்.

அவளுக்குள் தான் எதுவோ கலைந்தாற் போல்... திடீரென்று அவளுடைய வானமே இருட்டியதைப் போன்ற ஒரு உணர்வு!

பிறகு தோழியிடம் விடைபெற்றுக் கீழே வந்து சாப்பிடச் சென்றபோதும் அவளால் அவனைப் பார்க்க முடியவில்லை.

சாப்பிட்டு விட்டுக் கிளம்பும்போதுதான், யாரோ பெயர் சொல்லி அவளை அழைப்பது கேட்டது.

யாரென்ற யோசனையுடன் அவள் திரும்ப, அங்கு கோபியின் அண்ணன் சந்தானம் நின்றிருந்தான்.

அவனருகில் அந்த ப்ரதீப்பும் நின்றிருப்பது தெரிய, ''ஹலோண்ணா! நீங்க இங்கே எப்படி?'' மெதுவாக விசாரித்தபடி அவனருகில் சென்றாள்.



''கண்ணனும், நானும் காலேஜில் ஒண்ணாப் படிச்ச வங்கம்மா! உனக்குப் பெண் வீட்டில உறவா?''

''ஊஹூம்... தாரா என்னோட க்ளோஸ் ஃப்ரெண்ட்! கோபி வரலையாண்ணா?'' அவள் ஆர்வத்துடன் விசாரித் தாள்.

''இல்லைம்மா!'' என்றவன், ப்ரதீப்பிடம் திரும்பினான்.

''ப்ரதீப்! அன்னிக்கு அப்பாவுக்கு ப்ளட் குடுக்க நீ வந்தப்ப, கோபியோட ப்ரெண்ட் வந்து குடுத்திட்டதா சொன்னேன் இல்லை... அது இந்த சௌந்தர்யா தான்!'' என்றான்.

''ஓ!'' நம்ப இயலாத வியப்புடன் விழிகள் இடுங்கத் தலையசைத்தவன், ''பரவாயில்லையே! கிளாமர் டால்ஸ் எல்லாம் கூட சோஷியல் சர்வீஸ் பண்றாங்கன்னு கேள்விப்படறப்போ ஆச்சர்யமா இருக்கு!'' சுழித்த உதடு களுடன் பகர்ந்தான்.

''நீ நினைக்கிற மாதிரி இல்லை ப்ரதீப்.. சௌந்தர்யா வெல்லாம் ரெகுலர் ப்ளட் டோனர்ஸாம்... கோபி சொன்னான்... அவன்தான் இவங்களைப் போன் செஞ்சு வரவழைச்சிருக்கான்.

''முன்னாடி மாதிரி இல்லை. சோஷியல் ரெஸ்பான்சிபி லிடியும், மனித நேயமும் நம்மை மாதிரி, இளைஞர்கள் கிட்டதான் இப்போ அதிகமாப் பாக்க முடியுது!'' பெருமை யுடன் முடித்தான்.

''நம்ம மாதிரி இளைஞர்கள் சரி! இவங்க மாதிரி பெண்கள்... நம்ப முடியலையே! ஆனாலும் ஒரு விஷ யத்துல நம்பத்தான் வேண்டியிருக்கு!

''அன்னிக்குதான் இவங்க யாரோ ஒரு வயசான லேடிக்காக சப்போர்ட் பண்ணி என்கிட்டே சண்டை



12.02.2009 00:32



போட்டு நான் ஹாஸ்பிடலுக்கு வரதை தடுத்து டிலே பண்ணிட்டாங்க! சோ... கொஞ்சம் சமூக அக்கறை இருக்கு!''

சுவாரசியமின்றி தோளைக் குலுக்கி முடித்து விட்டு அவன் விலக... அவளுக்குள்தான் ஏதோ ஒரு புயல் வந்து தீண்டிப் போன அதிர்வு!

பிறகு சந்தானத்திடம் விடை பெற்று வீட்டிற்குச் செல்லும் போதெல்லாம் ப்ரதீப்பின் அலட்சியப் பார்வை களும், ஏளனப் பேச்சுகளுமே அவளுக்குள் மையம் கொள்வதாய்!

## 4

வீட்டிற்கு வந்தது உடை மாற்றி நைட்டியுடன் ஓய் வெடுத்தபடி அமர்ந்திருந்தவளை போன் உசுப்பி அழைத்தது.

எடுத்தால் ரேணுகாதான் பேசினார்... ''சௌந்தர்யா! வீட்டுக்கு வந்துட்டியா?'' பதட்டத்துடன் கேட்டார்.

''ஏம்மா... வந்தாச்சே! என்கிட்டே ஒரு சாவி இருந்த தாலே திறந்து வந்திட்டேன்.. ஏதாவது முக்கியமான வேலையா வெளிய போயிட்டீங்களா?''

''அப்பாவுக்கு திடீர்னு நெஞ்சு வலி வந்திடுச்சாம்... ஆபீஸிலிருந்து போன் பண்ணினாங்க... உடனே ஹாஸ்பிடலுக்கு வந்துட்டேன். உன் செல் ஆஃப் பண்ணி யிருந்தது அதான்... உடனே வரியாடா?'' உடைந்த குரலில் கேட்டார்.



உடனே பதட்டமானவள், மருத்துவமனையின் பெயரைக் கேட்டு அறிந்து கொண்டு மறு கணமே கிளம்பினாள்.

மனம் முழுவதும் பதட்டமாய் ஒரு பயம் நிறைய அவருக்கு ஒன்றும் ஆகக் கூடாதென்ற ப்ரார்த்தனை!

அந்தப் பெரிய மருத்துவமனைக்குச் சென்றபோது, நாகராஜ் ஐ.சி.யூ.வில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

உடனடியாக ஆபரேஷன் செய்வதற்குண்டான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

மேஜிவ் ஹார்ட் அட்டாக் வந்திருப்பதாகக் கூறிய டாக்டர்கள் மூன்று யூனிட் ரத்தத்திற்கு ஏற்பாடு செய்யும்படிக் கூறினர்.

சில நண்பர்களுக்கு போன் செய்து விபரம் கூறி விட்டு, அழுது கொண்டிருந்த ரேணுகாவை சமாதானப் படுத்த ஆரம்பித்தாள் அவள்.

பிறகு மெதுவாக எழுந்து சென்று கார்டியாக் கேர் யூனிட்டின் கண்ணாடிக் கதவு வழியாக பரிதவிப்புடன் தன் தந்தையைக் காண நின்றபோதுதான் உள்ளிருந்து வெளியே வந்தான் பிரதீப்!

உள்ளே செல்வதற்கு தான் அணிந்திருந்த கோட்டைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டி விட்டுத் திரும்பியவன், அவளைக் கண்டதும், ''மிஸ். சௌந்தர்யா! நீங்க இங்கே எப்படி...? கேள்வியுடன் நிறுத்தினான்.

''நான்... எங்கப்பாவை இங்கே அட்மிட் பண்ணி யிருக்காங்க! அதான்!'' அவளுடைய குரல் பெரிதும் உடைந்திருந்தது.

''ஓ! டாக்டர்ஸ் யாரையாவது தெரியுமா?'' அக்கறையாக வினவினான்.

12.02.2009 00:32

தெரியாது என்பது போல் கலங்கிய விழிகளுடன் மெல்லத் தலையசைத்தவளையே ஒரு கணம் கூர்ந்தவன், "சரி! என்னோட வாங்க!" என்று அழைத்துச் சென்றான்.

ரேணுகாவிடம் கூறிவிட்டு அவனுடன் சென்றபோது தான் தெரிந்தது..... சீஃப் சர்ஜன் அவனுக்கு மிகவும் நெருங்கிய நண்பர் என்பது!

அவருடைய அறைக்கு அவளை அழைத்துச் சென்று பேஷண்ட் பற்றி எல்லா விபரங்களையும் கேட்டறிந்தவன், திடீரென்று அவளிடம் திரும்பினான்.

"நீ கொஞ்சம் வெளியே போய் இரு! நான் டாக்டர்கிட்டே பேசிட்டு வரேன்!" என்றான்.

கவலையும் வேதனையும் சுமந்த முகத்துடன் அவள் வெளியேறுவதையே ஓரக் கண்ணால் அளந்தவன், டாக்டரிடம் பேசத் தொடங்கினான்.

வெளியே நின்றிருந்த நிமிடங்கள், சௌந்தர்யாவிற்கு யுகங்களாகின. பிறகு வெளிய வந்தவன், ''டாக்டர்கிட்ட எல்லாம் பேசிட்டேன் ஆபரேஷனுக்கு ஒன்றரை லட்ச ரூபா ஆகும்னு சொன்னாங்க... நாங்க ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் சேர்ந்து ஒரு ட்ரஸ்ட் நடத்தறோம்.

"இந்த வருஷத்துக்கு உங்கப்பா கேஸை எடுத்துக்கலாம்னு முடிவு செஞ்சிருக்கோம். அதனாலே பாதி செலவை நாங்க ஏத்துக்கறதா சொல்லிட்டேன். எழுபத்தைஞ்சாயிரம் ஏற்பாடு பண்ணனும்... முடியும் தானே?" மெல்லக் கேட்டான்.

''ம்... பணம் ப்ரச்னை இல்லை! அப்பா...'' தாங்க முடியாமல் கைகளில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தவளை ஒரு இயலாமையுடன் வெறித்தவனின்



மனதில் ஒரு காலத்தில் இதுபோல் தன் தந்தைக்காக தான் ஏங்கி அழுத ஞாபகம்!

''உஷ்! சௌந்தர்யா... அழக்கூடாது ப்ரச்னைகள் வரும்போதுதான் தைரியமா இருக்கணும்... நான் உங்களை ரொம்ப பிரேவ்ன்னு நினைச்சேன்.. ஓ.கே. முதல்லே கண்ணைத் துடைங்க! போய் உங்கம்மாவுக்கு தைரியம் சொல்லலாம்.. வாங்க!" என்றபடி அவளை அழைத்துச் சென்றான்.

அங்கு ரேணுகாவிடமும் ஆறுதல் கூறியவன், ''நான் போய் பிளட் குடுத்துட்டு வந்திடறேன்!'' என்று கிளம்பினான்.

''நீங்க... உங்களுக்கு எப்படித் தெரியும்?'' அவள் வியப்புடன் கேட்டாள்.

''ம்... சந்தானம் இப்பதான் மெஸேஜ் பண்ணினான். அவனும் கோபியும், சில ஃப்ரெண்ட்சோட இன்னும் கொஞ்ச நேரத்துல இங்கு வராங்களாம்... வெயிட் பண்ணுங்க!'' கூறிவிட்டு உள்ளே சென்றான்.

பிறகு ரேணுகாவிடம் அவள் எல்லா விபரங்களையும் கூறியபோது அவர் நெகிழ்ந்து போனார்.

''நல்லவேளை! இந்தத் தம்பி உதவிக்கு வந்தது கடவுள் செயல்தான்! பணம் நமக்கு பிரச்னை இல்லை! சீஃப் டாக்டர் கிட்டே சொல்லி கவனிச்சிக்கச் சொன்னா, அது போதும்!'' கண்ணீருடன் கூறினார்.

பிறகு நண்பர்கள் ஒவ்வொருவராக வந்து ரத்ததானம் செய்தனர்.

அப்போதுதான் தெரிந்தது. ப்ரதீப் தன்னுடைய நண்பன் கண்ணனுடைய தாயை ஐ.சி.யூவில் பார்க்க வந்திருந்த விபரம்!

12.02.2009 00:32



அன்றே ஆபரேஷன் வெற்றிகரமாக முடிய ஏதோ ஒரு பயங்கரக் கனவிலிருந்து விழித்து மீண்ட உணர்விலிருந்தனர் ரேணுகாவும் சௌந்தர்யாவும்!

ப்ரதீப்பின் உதவியால், டாக்டரைப் பார்த்து, நாகராஜின் உடல்நிலை பற்றிய விபரங்களை தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஆபரேஷன் முடிந்த மறுநாளே வந்து பார்த்தவன், இருவரிடமும் தான் ஊருக்கு செல்வதாக விடை பெற்றான்.

"நான் சீஃப் டாக்டர்கிட்டே பேசிட்டேன். ஒண்ணும் பயமில்லைன்னாரு! போஸ்ட் ஆபரேடிவ் கேர் முடிஞ்சு வீட்டுக்கு அழைச்சிட்டுப் போனப்புறம், டாக்டர்ஸ் எப்படி இருக்கணும்னு சொல்றாங்களோ அதே மாதிரி ஃபாலோ பண்ணச் சொல்லுங்க. டயட், எக்சர்ஸைஸ் விஷயத்துல கரெக்டா இருக்கணும். நான் கிளம்பறேன். ஏதாவது ஹெல்ப் வேணும்னா சீஃப் டாக்டர் கிட்டயே பேசுங்க! நான் சொல்லியிருக்கேன். வரேங்க."

ரேணுகாவிடம் கூறிவிட்டு அவளிடம் திரும்பியவன், "ஓகே... டேக் கேர் மிஸ் சௌந்தர்யா... பை'' என்று விடைபெற்றுக் கிளம்பினான்.

அவன் சென்ற பிறகு, ஏனோ, நல்ல நண்பனைப் பிரிந்த ஒரு விநோத உணர்வு வந்தது அவளிடம்! அவளுடைய தோழிகளும், நண்பர்களும், அடிக்கடி மருத்துவமனைக்கு வந்து நாகராஜைப் பார்த்துச் சென்றனர்.

அவர் மெதுவாக குணமாகி வீட்டுக்கு வந்த பிறகுதான் பெண்கள் இருவருக்கும் நிம்மதியாய்!

ஒருநாள் ரேணுகா, ப்ரதீப்பை பற்றியும் அவன் செய்த உதவிகளைப் பற்றியும் அவரிடம் கூற, பெரிதும் நெகிழ்ந்து போனார் நாகராஜ்!



முகம் தெரியாத அந்த மனிதன் மேல் இனம் புரியாத நன்றியும் பாசமும் நிறைந்தன.

## 5

விளம்பரம் வந்திருப்பதை பத்திரிகையில் கண்டவள், உடனே அதற்கு ஒரு அப்ளிகேஷன் எழுதிப் போட்டாள்.

திடீரென்று மனதில் அந்த ப்ரதீப்பின் நினைவு!

அவனுடைய விலாசம், ஊர் எதையுமே தான் கேட்க மறந்தது ஞாபக அடுக்குகளை மெலிதாய் நீவியது.

வாசலுக்கு சென்று நின்றபோது, மெதுவாகத் தரையிறங்காமல் வல்லின யுக்தியுடன் பூமியில் பரவி இன்னிசையைப் பரிசளிக்க ஆரம்பித்தது, மழை!

சிறு சிட்டுக்குருவிகள் மழைக்கு அஞ்சி வெராந்தாவில் புகலிடம் தேடின. அந்த நிமிடம் அவளுடைய தோள் மெலிதாகப் பற்றி அழுத்தப்பட, திரும்பினால் ரேணுகா நின்றிருந்தார்.

''அப்பா உன் கூட ஏதோ பேசணுமாம்... வரியா?'' சோர்வுடன் கேட்டார்.

உடனே உள்ளே வந்தபோது, நாகராஜ் தீவிர யோசனையுடன் அமர்ந்திருந்தார்.

அவரருகில் சென்று அமர்ந்து ஆதரவாக கையைப் பற்றிக் கொண்டவள்,

"என்னப்பா? எதுக்காக கூப்பிட்டீங்க? எதுக்கும் கவலைப் படாதீங்க! டாக்டர் நீங்க டென்ஷனே ஆகக் கூடாதுன்னு சொல்லி இருக்காரில்லை!'' மெல்லிய குரலில் கூறினாள்.

12.02.2009 00:33

அவர் முகம் மெதுவாக மலர, ''ஒண்ணுமில்லைடா! இனிமே என்னால ரைஸ்மில்லையும் பண்ணையையும் பாத்துக்க முடியும்னு தோணலை! அதான்... அதை லீஸுக்கு விட்டுடலாம்னு யோசிக்கிறேன்... உன் கிட்டயும் அபிப்ராயம் கேக்கலாம்னு தான்!'' யோசனையுடன் கேட்டார்.

''இதுக்கு ஏன்ப்பா என்கிட்டே கேக்கறீங்க? நல்ல முடிவுதானே? உடனே அதுக்கு ஏற்பாடு பண்ணுங்க! இது வரைக்கும் ராத்திரி பகல் தூக்கம் பாக்காம ஓடி ஓடி நீங்க உழைச்சதெல்லாம் போதும்ப்பா!'' சலுகையுடன் கூறினாள்.

''இல்லைடா! நீ ஆம்பிள்ளை பிள்ளையா இருந்தாலும் பரவாயில்லை... இன்னொரு வீட்டுக்கு கல்யாணம் ஆகி போகப் போறவ! உன்னாலயும் இதை நிர்வகிக்க முடியாது! அதான்!''

''அப்பா! இந்தப் பேச்செல்லாம் இப்ப வேணாம்! நான் உங்களை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டேன். புரிஞ்சதா! ஆனா மில்லையும் என்னால உங்க அளவு சாமர்த்தியமா நிர்வகிக்க முடியும்னு தோணலை! அதனால நீங்க சொல்ற மாதிரியே செஞ்சிடலாம்... ஏம்மா?'' ரேணுகாவிடம் திரும்பிக் கேட்டாள்.

''ம்... இதுல நான் சொல்றதுக்கு என்ன இருக்கும்மா... உங்கப்பா முடிவெடுத்தா அது சரியாத்தான் இருக்கும்!'' அமைதியாக முடித்தார் அவர்.

* * *

பிறகு வந்த நாட்களில் அவர்களுடைய ரைஸ் மில்லையும் நிலங்களையும் வேறு ஒரு மில் அதிபர் லீஸுக்கு எடுத்துக் கொள்ள, சௌந்தர்யாவும் வேலைக்கு விண்ணப்பிக்க ஆரம்பித்தாள்.



முதல் இண்டர்வியூவிற்கு சென்று தேர்வாகும் நேரத் தில் சென்னை ப்ராஞ்சில் வேலை என்றதும் மறுத்து விட்டு வந்து விட்டாள்.

தாய் தந்தையை விட்டு விட்டு வேறு இடம் செல்ல விருப்பமில்லாததும், நாகராஜின் உடல்நிலையும் அதற்குக் காரணமாய் அமைந்தன.

* * *

அன்றும் ஒரு நேர்முகத் தேர்வு!

அவள் அவசரமாகக் கிளம்பும் போதே வாசலில் ஒரு கார் வந்து நிற்க, அதிலிருந்து இரு புதிய மனிதர்கள் இறங்கினர்.

இருவரில் வயதில் மூத்தவர் அவளைக் கண்டவுடன் ஒரு கணம் பிரமிப்புடன் அதிர்ந்து நின்றதை, அவள் அறியவில்லை.

வந்தவர்களை வரவேற்கும் விதமாகப் புன்னகைத் தவள், ''வாங்க... நீங்க யாரைப் பார்க்கணும்?'' மெதுவாகக் கேட்டாள்.

''நாங்க மிஸ்டர் நாகராஜைப் பார்க்கணும்மா... அவர் இருக்காரா?'' பவ்யமாக வினவினார் ஒருவர்.

''உள்ளே வாங்க! அப்பா இருக்காங்க...'' என்றவள் அவர்களை அமர வைத்துவிட்டு, உள்ளே சென்று விபரம் கூறினாள்.

யோசனையுடன் இருவரும் வெளியே வர அவர் களிடம் விடைபெற்று இண்டர்வியூவிற்கு கிளம்பிய வளை வாழ்த்தி அனுப்பி வைத்தார் நாகராஜ்.

நேர்முகத் தேர்வை நன்றாகச் செய்து முடித்து அவள் வீடு திரும்பியபோது, காலையில் வந்திருந்த இருவரும் சென்றிருந்தனர்.

12.02.2009 00:33



''அப்பா எப்படி இருக்கீங்க... மாத்திரை எல்லாம் ஒழுங்கா சாப்பிட்டீங்களா?'' அக்கறையுடன் விசாரித்தாள்.

''ம்... சாப்பிட்டேம்மா! உன் இண்டர்வியூ என்னாச்சு?''

''தெரியலைப்பா. நல்லா செஞ்சிருக்கேன். ரிசல்ட் அடுத்த வாரம்தான் தெரியும்.''

''நான் உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேச ணும்மா!'' தீவிர யோசனையுடன் கூறினார் அவர்.

''காலையில நம்ம வீட்டுக்கு வந்திருந்தாங்களே... அவங்க ரெண்டு பேரும் யாரு? ஒரு வேளை எனக்குக் கல்யாணம் பேச வந்திருந்தாங்கன்னா, தயவு செஞ்சு இப்ப அதைப் பத்திப் பேச வேண்டாம்னு சொல்லிடுங்க! ப்ளீஸ்!'' என்றபடி அவரருகில் அமர்ந்து கொண்டாள்.

''சௌந்தர்யா!''

''அவங்க உன் விஷயமாத்தான் வந்திருந்தாங்க... ஆனா கல்யாணம் பத்திப் பேச வரலை!'' நாகராஜ் தயக்கத்துடன் நிறுத்தினார்.

''என் விஷயம்... அதுவும் கல்யாணம் இல்லைன்னா? என்னப்பா அது?'' வியப்புடன் விசாரித்தாள் அவள்.

அப்போது ஆரஞ்சு ஜூஸ் கொண்டு உள்ளே வந்த ரேணுகா, அதை இருவரிடமும் அளித்து விட்டு, கணவனிடம் திரும்பினார்.

''அவதான் கேக்கிறா இல்லை? விபரத்தைச் சொல் லுங்க... தன்னைப் பத்தின உண்மையை முழுசாத் தெரிஞ்சுக்கற பக்குவமும் முதிர்ச்சியும் அவளுக்கு வந்திட்டதா அன்னிக்கு நீங்கதானே சொன்னீங்க?''

ரேணுகா கூறியதும் எதுவும் புரியாமல் குழம்பிய வளுக்குள், தன்னைப் பற்றிய உண்மை என்னவாக இருக்குமென்ற திகைப்பும், ஆராய்ச்சியும்!



மனதிற்குள் புதிதாய் எழுந்த சிறு நெருடலுடன், ''என்னப்பா! அம்மா என்னென்னவோ சொல்றாங்க? என்னைப் பத்தின உண்மைன்னா? எனக்கு ஏதாவது பெரிய வியாதி ஏதும், வந்திருக்கா? சினிமாவிலே வருமே... திடீர்னு கேன்சரும்பாங்களே அது மாதிரி?'' யோசனையுடன் கேட்டாள்.

உடனே பதறிப் போன நாகராஜ் ''அப்படி எல்லாம் அபசகுனமாப் பேசாதடா! உனக்கு எதுவும் வராது! இது உன்னைப் பத்தின... உன் அம்மாவைப் பத்தின ஒரு உண்மை!'' மெதுவாக நிறுத்தினார்.

உடனே அவள் ரேணுகாவிடம் திரும்பியபோது அவர் விழிகள் நிறைந்திருந்தன.

''என்னம்மா... ஏன் அழறீங்க? என்னைப் பத்தி அப்படி என்ன பெரிய ரகசியம்?''

அதிர்ந்து போய் கேட்டவளின் கையை மெதுவாகப் பற்றிய ரேணுகா,

''உங்கப்பாவோட சின்ன வயசுக் கதை இது! அதை அவரே சொல்லட்டும்... ஆனா ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்காமப் பேசுங்க!'' என்றபடி வெளியேறினார்.

## 6

நாகராஜ் மெதுவாகத் தொண்டையை செருமியபடி பேச ஆரம்பித்தார்.

''அப்போ எனக்கு இருபத்து மூணு வயசிருக்கும்... எங்களுது சாதாரணமான ஒரு மிடில் கிளாஸ் குடும்பம்!

12.02.2009 00:33

ஒரு சொந்த வீடு மட்டும்தான்! நானும் மாஸ்டர் டிகிரி முடிச்சிட்டு வேலை தேடி அலைஞ்சிட்டிருந்தேன்.

"அப்பதான் உன் பாட்டி இறந்து போனாங்க... சாகற துக்கு முன்னாடி என்னையும் உன் தாத்தா சதாசிவத் தையும் கூப்பிட்டு தன் தம்பி பொண்ணு ரேணுகாவைத் தான் என் மனைவியாக்கிடணும்னு கேட்டுக்கிட்டாங்க.

"அப்போ என் மாமா இந்த ஊரிலே பெரிய மனுஷர்! பெரிய மில் ஓனர்! ஆனா, அவர் கிட்ட பொண்ணு கேக்கப் போன எங்கப்பாவை அவர் மரியாதையில்லாமல் பேசி திருப்பி அனுப்பிட்டாரு!

"உடனே அப்பாவுக்குள்ளே பெரிய வெறி... அவருக்கு சரி சமமா என்னையும் ஒரு மில் ஓனரா ஆக்கிக் காட்டறேன்னு சபதம் போட்டாரு!

"வீட்டை, நகைகளை வித்து லோனும் போட்டு ஒரு மில்லை என் பெயரிலே வாங்கினாரு... அவரும் நானும் முழு மூச்சா அதிலே இறங்கி பாடுபட்டோம்.

"மூணே வருஷத்தில எதிர்பார்க்கவே முடியாதபடி நல்ல வளர்ச்சியடைந்தோம்.

"ஒரு நாள், மில் விஷயமா பெரிய கொள் முதல் ஆர்டருக்காக நான் கோபிச் செட்டி பாளையம்கிற ஊருக் குப் போக வேண்டியிருந்தது.

ஒரு பெருமூச்சுடன் முடித்தவர், சிறிது நேரம் கழித்து சோகமாகத் தொடர்ந்தார்.

"அங்கேதான் அவளை... உன்னைப் பெத்த தாய், தேன் மொழிய நான் சந்திச்சேன்" அவர் கூறியதும், அது வரை அமைதியுடன் ஆர்ப்பரித்த கடல், ஆழிப்பேரலையாய் உயர்ந்து சுனாமியாய் தன்னைப் புரட்டிப் போட்டது போன்ற உணர்வில் பரிதவித்துப் போனாள் அவள்.



"அப்போ இந்த அம்மா.." உதடுகள் அதிர்ச்சியும் தவிப்புமாய் முணுமுணுக்க, விழிகளில் நீர்ச்சரங்கள் இறங்க ஆரம்பித்தன.

உடனே, அவளை ஆதரவுடன் அணைத்துக் கொண் டவர், "இல்லைடா! இவ உன்னை வளர்த்தவ... ஆனா, உங்கம்மா இருந்தா உன்னை எப்படி வளர்த்திருப்பாளோ அதே பாசத்தோட உன்னைப் பராமரிச்சவ... என்னோட ரெண்டாவது மனைவி!" என்றபோது அவர் குரல் பெரிதும் கனிந்திருந்தது.

அவள் எதிர்பார்ப்பும் ஏக்கமுமாய் அவரையே நோக்க, "உங்கம்மா தேன்மொழி... நீ பிறந்தவுடனே இறந்துட் டாடா! அன்னியிலிருந்து உன்னைத் தன் குழந்தையா வளத்துட்டு வர்றவ ரேணுகாதான்!

"உனக்காகத்தான் உன்னை பாத்துக்கத்தான் நான் அவளை ரெண்டாவது கல்யாணமே செஞ்சுக்கிட்டேன்!

"உங்கம்மாவும் அவளும் நெருங்கின தோழிகள்! அவளும் என்கிட்ட ஒரு கோரிக்கை வெச்சா... கடைசி நேரத்துல அதுக்கு மரியாதை குடுக்கறதுக்காக நான் ரெண்டாவது கல்யாணம் செஞ்சுக்கிட்டேன்னு கூட சொல்லலாம்.

"நான் உங்கம்மாவை முதன் முதல்லே பாத்ததை இதுவரைக்கும் என்னால மறக்க முடியலை .." தூரப் பார்வை பார்த்தவரின் விழிகளில் காட்சிகள் கனவுப் படலமாய் விரிய ஆரம்பித்தன.

* * *

இருபத்தி மூன்று வருடங்களுக்கு முன்பு நாகராஜ் தொழில் முறையில் கோபிச் செட்டிப் பாளையத்திற்கு சென்றிருந்த நாள்!

12.02.2009 00:33



வேலை விஷயமாக ஒருவரைப் பார்த்துவிட்டு அவர் ஹோட்டலுக்குத் திரும்பி வரும்போது, வழியில் பெரிய கோவில் ஒன்று தெரிந்தது.

சுவாமி தரிசனம் செய்ய எண்ணி தன் செருப்புகளை அவர் கழற்றிவிட்டு அர்ச்சனைத் தட்டு வாங்கும்போது அந்த விபரீதம் நிகழ்ந்தது.

அருகில் நின்றிருந்த காரில் ஏறப்போன ஒரு இளம் வயதுப் பெண்ணை இருவர் வழி மறித்து வாயில் துணியை அடைத்து கடத்த முற்பட்டனர்.

அதைப் பார்த்த ஒரு வயதான பெண்மணி அலற ஆரம்பிக்க டிரைவர் ஓடி வந்து அவர்களைத் தடுக்க முயற்சி செய்தார்.

அவரும், வயது முதிர்ந்தவர் என்பதால் டிரைவரையும் அடித்துப் போட்டுவிட்டு, அந்தப் பெண்ணை தங்கள் காரில் ஏற்ற இருவரும் முயற்சித்தனர்.

உடனே வெகுண்டெழுந்த நாகராஜ் இருவரையும் ஒரு கை பார்க்க, வயதானவர்களிடமும், இளம் பெண்ணிட மும் வீரம் காட்டியவர்கள், அவனிடம் தோற்று ஓடினர்.

அவர்களுடைய கார் கிளம்பவும், வேறு ஒரு கார் அங்கு வந்து நிற்கவும், சரியாக இருந்தது.

அந்தப் பெண்ணை சமாதானப் படுத்தியபடி அவன் ஆறுதல் கூறி காரில் ஏற்றிய அதே நேரத்தில் அவ னுடைய பிடரியில் பெரிய அடியொன்று விழுந்தது.

தாங்க முடியாத வலியில் அவன் துடித்துத் திரும்ப, அந்தப் பெண் ஒரு விநோதக் குரலெடுத்துக் கதற ஆரம்பித்தாள்.

அதற்குள் ஒருவன் அவனை அடிக்க ஆரம்பிக்க ஓடி வந்து தடுத்தார் டிரைவர்.



"ஐயா... அவர் ரொம்ப நல்லவருய்யா. பாவம் விட் டுடுங்க! நம்ம பாப்பாவை யாரோ கடத்திட்டுப் போகப் பாத்தாங்க... தடுக்க வந்த என்னையும் அடிச்சிப் போட்டாங்க.

"அப்ப இந்தத் தம்பிதான்யா வந்து காப்பாத்தினாங்க. நம்ம அம்மா ரொம்ப பயந்துட்டாங்க. அவங்களுக்கு ஆறுதல் சொல்லி அவரு காரில ஏத்துறப்ப தான் நீங்க வந்து தப்பாப் புரிஞ்சிக்கிட்டீங்க."

கையெடுத்துக் கும்பிட்டபடி இறைஞ்சினார் அந்த டிரைவர்.

"ஏய்... என்ன கதை விடறியா? இவளை யாராவது கடத்த முயற்சி செஞ்சாங்களா? நம்பற மாதிரி சொல்லு! எத்தனை நாளா நடக்குது இந்தக் கள்ளக் காதல் நாடகம்! நீயும் இதுக்கு உடந்தையா?" மிருகமாய் உறுமினான் அவன்.

"ஆ... ஆ..." என்றபடி அந்தப் பெண் எதுவும் பேச முடியாமல் மிழற்றியபடி குரல் கொடுக்க, அவள் ஊமை என்பதையே அப்போதுதான் புரிந்து கொள்ள முடிந்தது.

அவள் இல்லை என்பதுபோல் கையசைத்தபடி அந்த மனிதனிடம் கையெடுத்துக் கும்பிட, அவனோ எதையும் நம்புகின்ற நிலையில் இல்லை.

"சார்! டிரைவர் சொல்றதுதான் உண்மை! நான் உங்க தங்கச்சியை இப்பதான் முதல் முறையா சந்திக்கிறேன்."

அவன் கூறக்கூற அந்த மனிதன் பளாரென்று அவளை அறைந்தான்.

"இனிமே கோவிலுக்குப் போறேன்னு சொல்லிட்டு உன் கள்ளக் காதலனை [illegible] காரில் அவளை ஏற்றினான்.

12.02.2009 00:33

உடனே நாகராஜிடம் திரும்பியவன், ''ஏய்! உன் உடம்புல உசிர் இருக்கணும்னா இந்த நிமிஷமே எங்கே யாவது ஓடிப் போயிடு'' என்று எச்சரித்துவிட்டு காரை எடுத்தான்.

உடனே கார் கிளம்பிச் செல்ல, ஓடி வந்து அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டார் அந்த டிரைவர்.

''தம்பி... அவரு பொல்லாதவரு. எங்கம்மாவைக் காப்பாத்த வந்து நீங்க பாவம்... வேண்டாம். உடனே கிளம்பி உங்க ஊருக்குப் போயிடுங்க.

''ஏன் பயப்படறீங்க பெரியவரே? நான் கோயமுத்தூரி லேருந்து வந்திருக்கேன். சூர்யா ஹோட்டல்லேதான் தங்கியிருக்கேன்... என் வேலை முடிஞ்சவுடனே நாளைக்கு மதியானம் கிளம்பிடுவேன்.''

''தம்பி! சீக்கிரம் கிளம்பிடுங்க.''

கெஞ்சுகின்ற குரலில் கூறிவிட்டு அவர் அவசரமாக விடைபெற்றார்.

ஏனோ நாகராஜின் மனதில் முதல் முறையாக ஒரு மெல்லிய சலனம்!

ஹோட்டல் அறைக்குச் சென்ற பிறகும் அவள் நினைவே பெரும் அலையடிப்பாய் அவனுள் நிறைந் திருந்தது.

என்ன மனிதன் அவன்! பிறர் கூறுவதைக் கேட்காமல் அந்தப் பெண்ணை சித்ரவதை செய்பவன் என்று மனம் கலங்கிப் போனது.

ஏனோ அந்தப் பெண்ணை மீண்டும் பார்க்க வேண் டும் போல்... அவளுடைய அழகிய முகமும், வாய் விட்டுச் சொல்ல முடியாமல் பரிதாபமாய் இறைஞ்சிய



விதமும் இரவு முழுவதும் அவனை உறங்க விடாமல் வதைத்தன.

## 7

மறுநாள் வந்த வேலை முடிந்து, அவன் பேருந்து நிலையத்திற்குச் செல்லும்போது, அவனுடைய ஆட் டோவை வழிமறித்தாற் போல் வந்து நின்றது, நேற்று பார்த்த அந்த அம்பாசடர் கார்.

அதிலிருந்து வேகமாக இறங்கிய அந்தப் பெண், ஓடி வந்து அவனிடம் கைகுவித்து தன் நன்றியைக் கலங்கிய விழிகளுடன் தெரிவித்தாள்.

டிரைவர் பவ்யத்துடன் நின்றபடி நடப்பதை வேடிக்கை பார்க்க, அவள் முக பாவத்திலிருந்து மிகவும் நெகிழ்ந் திருப்பது தெரிந்தது.

மொழிகளில் வெளிப்படுத்த முடியாத நன்றி உணர் வும், சைகை மொழியில் தன் அண்ணன் நடந்து கொண்ட தற்கு வருத்தமும் அவள் தெரிவித்தபோது, மனம் கனத்துப் போனது அவனுக்கு!

அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டவன், ''உங்க நிலைமை எனக்குப் புரியுது... நீங்க கிளம்புங்க.. திரும்பவும் உங்க வீட்டிலே யாராவது பாத்துட்டா வம்பு!'' என்றபடி விடை கொடுத்தான்.



12.02.2009 00:34



கலங்கிய விழிகளுடன் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சென்று, அவள் காரில் ஏறும்போதுதான் அந்த விபத்து நடந்தது.

அவள் சாலையின் வலப்புறமாக சென்று கார் கதவைத் திறக்க, அந்த நேரம் வேகமாக வந்த பைக் ஒன்று அவளை இடித்துத் தள்ளி விட்டு நிற்காமலே செல்ல ஆரம்பித்தது.

மறுகணமே பதறிப் போன நாகராஜ் மூர்ச்சையாகி அடிபட்டு விழுந்தவளை ஒரு பூவைப் போல் தாங்கிக் கொண்டான்.

உடனே இருவருமாகச் சேர்ந்து பதட்டத்துடன் அந்தப் பெண்ணை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு அட்மிட் செய்தபோதுதான், அவள் பெயர் தேன்மொழி என்பதையே அவன் தெரிந்து கொண்டான்.

தலையில் அடிபட்டு ரத்தம் சேதாரமாகியிருந்ததால், அவளுக்கு முதலுதவி செய்து முடிக்கும் வரை, அவன் பதட்டமாகக் காத்திருந்தான்.

அப்போது அவனருகில் வந்த டிரைவர், ''ஐயா... எந்த நிமிஷம் வேணாலும் ஐயாவும் அம்மாவும் வந்திடுவாங்க. அதனால...''

அவர் முடிக்கும் முன்பே, ''ஏய்... இவன் எங்கே இங்கே வந்தான்? நான் நினைச்சேன்... சொல்லாம கொள்ளாம காரை எடுத்திட்டு இவ கிளம்பி வரும்போதே சந்தேகப் பட்டேன்...'' என்றபடி, நாகராஜின் சட்டையைக் கொத் தாகப் பிடித்து உலுக்க ஆரம்பித்தான் தேன் மொழியின் அண்ணன்!

''வேதாசலம்... அவன் கிட்ட என்ன பேச்சு? நம்ம வீட்டுப் பொண்ணு வளர்ப்பு சரியில்லை... அய்யாவோட



வளர்ப்பு... அதான்! உன் தங்கச்சியை நாலு போடு போட்டு காலை உடைச்சி வீட்டில் அடைச்சி வெப்பியா? வாடா!''

உரத்த குரலில் கூறி விட்டு அதிகாரத் தோரணை யுடன் ஒரு வயதான பெண்மணி அறைக்குள் செல்ல, யோசனையும், கவலையுமாய் டிரைவரிடம் திரும்பினான் அவன்.

''அவங்கதான் சௌந்திர நாயகியம்மா!

''இவரு அவங்க பையன் வேதாசலம் ஐயா!

''அந்தம்மா வெச்சதுதான் அந்த வீட்டில சட்டம்! ஒருத்தரைப் பிடிக்கலைன்னா, எந்த அளவுக்கு வேணா லும் போய், அவங்களை அழிக்கத் தயங்காத கூட்டம்!

''அதான்யா சொன்னேன்...'' தவிப்புடன் அவர் கூற, அவன் மனம் ஒரு முடிவுடன் இறுகியது.

''இல்லை பெரியவரே! நான் தேன் மொழியைப் பாக் காம இங்கிருந்து போகமாட்டேன்!'' உறுதியுடன் கூறி னான்.

பிறகு அவன் பிடிவாதம் புரிந்து அவர் பேசாதிருக்க, அவளுக்கு நினைவு வந்தவுடன் ஜன்னல் வழியே பார்த்து விட்டுத்தான் கிளம்பினான்.

ஏனோ மனம் முழுவதும், அவள் நினைவுகளே நிறைந் திருக்க, ஊருக்குச் செல்லவே அவனுக்கு மனமில்லை.

அன்று, ஹோட்டலிலேயே மீண்டும் அறை எடுத்துத் தங்கியவன், மறுநாளும் அவளைப் பார்க்க வேண்டு மென்ற ஆவலுடன் மருத்துவமனைக்குச் சென்றான்.

அங்கு அவளுடன், வயதான பெண்மணி ஒருவர் துணையிருந்தார்.

12.02.2009 00:34

அவனைக் கண்டதும் பரபரப்புடன் எழுந்து அமர்ந்த தேன்மொழி, வரவேற்கும் விதமாக வணங்கி விட்டு அவனை அமரும்படி சைகை செய்தாள்.

பிறகு அந்தப் பெண்மணியிடம் திரும்பி கையசைவில் அவள் ஏதோ ஜாடை செய்ய அந்த அம்மாள் ஓடி வந்து அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டார்.

"ரொம்ப நன்றி தம்பி.. ரெண்டு தடவையும் என் தங்கத்தைக் காப்பாத்தியிருக்கீங்க! நான் இவளை வளர்த்த அம்மா! இவ மனசை நல்லாப் புரிஞ்சிக்கிட்டவ...

"ஏனோ இவங்க அம்மாவுக்கும் அண்ணனுக்கும் இவளோட உணர்ச்சிகள் புரியவே மாட்டேங்குது... இவளை ஒரு கைதி மாதிரி வெச்சிருக்காங்க.

"நாங்க எல்லாரும் கோவாவிலேருந்து இங்கே வந்திருக்கோம்! இவங்கப்பா ஜீவரத்னம் ஐயாவுக்கு பூர்வீகம் இந்த ஊருதான்!

"அவரு, கல்யாணம் பண்ணிட்டுப் போய் வியாபாரம் செஞ்ச இடம் கோவா! அய்யா இப்ப இல்லை... இறந்துட்டாங்க.

"இப்போ, இங்கே இருக்கற சொத்துக்களை விக்கறதுக்காக அம்மா இந்த ஊருக்கு வந்திருக்காங்க!

"நாங்க ஊருக்குப் போறதுக்குள்ளே, அவங்ககிட்டேயிருந்து சின்னம்மாவைக் காப்பாத்தி அழைச்சிட்டுப் போயிடுங்கய்யா!"

"ஐயா இருந்த வரைக்கும் தேன் மொழி அம்மாவை அப்படி வளர்த்தாங்க... அவ்வளவு ஆசை அவருக்கு பொண்ணு மேல... இப்ப எல்லாம் மாறிப்போச்சு!"

கூறிவிட்டு விம்மத் தொடங்கினார்.



அதற்குள் பதறிப்போன தேன்மொழி சைகையில் ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

உடனே அவளை ஆறுதல் படுத்திய அந்தப் பெண் மணி "அவ பயப்படறா.. அவங்க அண்ணனும் அம்மாவும் வந்திட்டா என்ன செய்யறதுன்னு! அதெல்லாம் வரமாட்டாங்க!" வாஞ்சையுடன் கூறினார்.

"அப்படியே வந்தாலும் நான் பயப்படறதா இல்லை... நைட் முழுக்க யோசிச்சி நான் ஒரு முடிவெடுத்திருக்கேன்... எனக்கு... தேன்மொழியை ரொம்பப் பிடிச்சிருக்கு! அவ விரும்பினா நான் அவளை மனைவியா ஏத்துக்கத் தயாரா இருக்கேன்" நாகராஜ் மென்மையாகக் கூறினான்.

மறுகணமே விதிர்த்துப் போய் நிமிர்ந்த தேன் மொழியின் முகம் சட்டென்று மலர்ந்து, சிறு வெட்கச் சிவப்பைப் பூசிக் கொண்டது.

"ஐயா! உங்களை எங்க குலசாமியாவே பாக்கறேன்... இந்த நல்ல காரியத்தை மட்டும் நீங்க செஞ்சிட்டீங்கன்னா, நான் ரொம்ப சந்தோஷப் படுவேன்... எங்க பண்ணையாரம்மாவோட அதிகாரத்திலிருந்தும், ஐயாவோட கெடுபிடியிலிருந்தும் இவங்களைக் காப்பாத்தின புண்ணியம் உங்களுக்குக் கிடைக்கட்டும்." கைகூப்பித் தொழுதபடி நெகிழ்ந்து போய்க் கலங்கினார் அவர்.

உடனே தேன்மொழியிடம் திரும்பியவன், "என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா? என்னடா இவன் பா[illegible] மறுநாளே இப்படிப் பேசறானேன்னு நினைக்காதீங்[illegible] வரைக்கும் நான் எந்தப் பெண்ணையும் [illegible]சது கிடையாது.

"முதன் முதலா உங்களுக்குத்தான் என் மன[illegible] தந்திருக்கேன். யோசிச்[illegible]

12.02.2009 00:34



அட்ரசுக்கு ஒரு லெட்டர் எழுதிப் போடுங்க... நான் உங்களைக் கல்யாணம் செஞ்சுக்க ஆசைப்படறேன்." என்றபடி தங்களுடைய மில்லின் முகவரி அடங்கிய கார்டை அவளிடம் கொடுத்தான் அவன்.

உடனே அதை வாங்கியவள், ஏதோ நீண்ட சைகை செய்துவிட்டு குனிந்து கொள்ள அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அந்தப் பெண்மணிதான் அது என்னவென்று மொழி பெயர்த்தார்.

"கடிதம் எல்லாம் வேண்டாமாம்! அவளும் உங்களை மனசார விரும்பறாளாம். ஆனா அவங்க வீட்டை நினைச்சாதான் பயமா இருக்குன்றா."

"பயப்படாதீங்க! எல்லாம் நான் பாத்துக்கறேன்!"

"தம்பி... அவளுக்கு வேற ஒரு பயம் இருக்குப்பா! அவ வாய் பேசாதவங்கன்றதாலே அந்தப் பெரியம்மாவுக்கும் அவங்க அண்ணனுக்கும் இவங்களைக் கண்டாலே இளக்காரம்தான்!

"ஒருவேளை தனக்கும் அதே மாதிரி குறையோடு ஒரு குழந்தை பிறந்திட்டா என்ன செய்யறதுன்னு ரொம்ப பயப்படறா தம்பி."

அவர் கலக்கத்துடன் முடிக்க, அவன் கனிவுடன் அவளிடம் திரும்பினான்.

"அந்த பயமே உங்களுக்கு வேண்டாம்! அப்படி எல்லாம் நடக்காது... நடந்திட்டா, நம்ம குழந்தையை பூ மாதிரி நான் பார்த்துப்பேன்" உறுதியான குரலில் முடித்தான்.

இருவரும் நெகிழ்வுடன் அவனையே நோக்க,



"நான் ஊருக்குப் போய் எங்கப்பாவுடைய சம்மதத்தோடு வந்து உங்களைப் பொண்ணு கேக்கறேன்" அவளுடைய கையைப் பிடித்து மெதுவாக அழுத்தியபடி கூறிவிட்டுக் கிளம்பினான் அவன்.

## 8

ஊருக்கு வந்த பிறகு தன் தந்தையிடம் இதைப் பற்றி எப்படிப் பேசுவதென்று யோசித்தவன், ஒரு நாள் தைரியமாகத் தன் மனதை வெளிப்படுத்தி விட்டான்.

சதாசிவத்துக்கும் மிகுந்த ஆச்சர்யம்...

அமைதியாக எதுவுமே அறியாமல் தொழிலில் மட்டுமே ஆர்வத்துடனிருந்த தன் மகனுக்குள் இப்படி ஒரு மாற்றமா என்ற கேள்வி!

தன்னுடைய மனைவியின் கோரிக்கை வேறு இதயத்தை முள்ளாய் நெருட, ஒரு முடிவெடுப்பதற்குள் வெகுவாகக் குழம்பிப் போனார் அவர்.

எப்படி இருந்தாலும் மைத்துனரிடம் இவ்வளவு அவமானப்பட்ட பிறகு அந்தப் பெண் ரேணுகாவை தன் மகனுக்கு மண முடிக்கவும் அவர் மனம் இடம் தரவில்லை.

பிறகு ஒரு முடிவுடன் அவர் சம்மதிக்க சில நெருங்கிய உறவினர்களுடன் ஒரு வேனை எடுத்துக் கொண்டு அனைவரும் கிளம்பினர்.

கோபிச் செட்டிப் பாளையத்திற்கு சென்று ஒரு ஓட்டலில் இளைப்பாறி விட்டு தேன் மொழியின் வீட்டிற்கு வழி விசாரித்து சென்றனர்.

12.02.2009 00:35

ஆனால், அவளுடைய பிரம்மாண்டமான வீட்டின் முன் வேன் சென்று நின்றபோது தான் தெரிந்தது... அவர்கள் அந்த ஊரிலேயே பெரிய பணக்காரர்களென் பதும், அந்த ஊரில் பாதி அவர்களுக்குச் சொந்தம் என்பதும்!

ஆனால் ஜீவரத்னம் கோவாவிற்குச் சென்று தொழில் தொடங்கிய பிறகு அவருடைய மைத்துனர் ராஜலிங்கம் தான் இந்தப் பண்ணையை நிர்வகித்து வருவதையும் அறிந்தனர்.

இப்போது இந்த சொத்துக்களை விற்பதற்காகவே இருவரும் வந்திருக்கின்றனர்.

அவர்கள் அனைவரும் இறங்கி பிரமிப்புடன் உள்ளே சென்றபோது, ஓடி வந்து வரவேற்றது தேன் மொழி மட்டும் தான்.

பிறகு சௌந்தா நாயகி அம்மாவும், வேதாசலமும் ராஜலிங்கமும் அவர்களின் நோக்கத்தை அறிந்ததும் தாக்குறைவாக ஏசி தங்களது அந்தஸ்தை காரணம் காட்டி அவர்களின் தேங்காய் பழத் தட்டை விசிறி அடித்து விரட்டினர்.

அந்த நிமிடம், வேதாசலத்திடம் சவால் விட்ட நாகராஜ், தேன் மொழியைத்தான் மணந்து காட்டுவதாக சபதம் போட்டு விட்டுக் கிளம்பினான்.

அந்த நிமிடம் அழுது கொண்டே உள்ளே ஓடினாள் தேன்மொழி.

பிறகு அனைவரும் யோசனையுடன் கிளம்பி ஹோட்ட லுக்குச் சென்று சாப்பிட்டு விட்டு ஊருக்குச் சென்றனர்.

அப்போதுதான் அந்த ஊர் எல்லையில் சிறு பெட்டி யுடன் தன் வளர்ப்புத் தாயின் துணையுடனும் அவர் களுடைய வேனை வழி மறித்தாள் தேன்மொழி.



அனைவரும் தாங்க முடியாத வியப்பும் மகிழ்ச்சியுமாய் அவளை ஏற்றிக் கொண்டு கோயம்புத்தூருக்குத் திரும் பினர்.

உடனே தன்னுடைய காவல்துறை நண்பருடன் ஆலோசித்துவிட்டு மறுநாள் விடியலிலேயே ஊர்க் கோவிலில் அவர்களுடைய திருமணத்தை எளிமையாக முடித்து விட்டார் சதாசிவம்.

பிறகு ஊரே பார்த்து வியக்கும்படி மில்லில் ஒரு வரவேற்பையும் ஏற்பாடு செய்தார்.

ஊர் மக்களெல்லாம் ஒன்று கூடி மணமக்களை வாழ்த்திக் கொண்டிருக்கும் போதுதான் தேன் மொழியின், தாயும், அண்ணனும் மாமாவும் அங்கு வந்தனர்.

தன் மகளுக்கு திருமணமே முடிந்து விட்டதென்று தெரிந்ததும், கண் மண் தெரியாமல் வக்ர வார்த்தைகளால் கத்தத் தொடங்கினார் சௌந்தரநாயகி.

வேதாசலமும், ராஜலிங்கமும் வெறியுடன் பாய்ந்து வர, போலீஸ் அதிகாரிதான் அவரைத் தடுத்து நிறுத் தும்படி ஆயிற்று.

பிறகு நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் போது, தான் விரும்பியே வந்ததை தேன் மொழி எழுத்து வடிவாக்கித் தந்தபோது கொதித்துப் போனார் வேதாசலம்.

''சீ... நம்ம குடும்பத்துக்கு அவமானத்தைத் தேடித் தந்த நீயும் ஒரு பொண்ணா? இன்னியிலிருந்து எங்களைப் பொறுத்த வரைக்கும் நீ செத்துட்டே!'' கோப மாக இரைந்தபடித் தாயுடனும் மாமாவுடனும் வேகமாக வெளியேற, நாகராஜின் தோளில் சாய்ந்து அழ ஆரம் பித்தாள் தேன்மொழி.

12.02.2009 00:35



அன்று அவளைக் கண் துடைத்துத் தேற்றியவன்தான்... பிறகு எதற்குமே அவளைக் கலங்க விடவேயில்லை.

## 9

நாகராஜின் குடும்பமே அவளைப் பூவாய் தாங்க, மனதளவில் தன்னை சமாதானப்படுத்திக் கொண்ட ரேணுகாவும், தேன்மொழிக்கு ஒரு நல்ல தோழியானாள்.

திருமணத்துடன் பிறந்த வீட்டு தொடர்பே அற்றுப் போன தேன்மொழி இரு மாதங்களிலேயே கருவுற்றாள்.

நாகராஜ் பெரிதும் மகிழ்ந்துவிட, அந்த வீட்டிற்கு ஒரு வாரிசை அவள் ஈன்றெடுக்கும் நாளை எதிர்பார்த்து அனைவருமே ஆவலுடன் காத்திருந்தனர்.

எங்கு சென்றாலும், அவள் ரேணுகாவின் துணையுடன் செல்ல, இருவருக்குமிடையே இனிய நட்புறவு மொட்டு விட்டு மலர்ந்து, பெரும் அன்யோன்யமும் ப்ரியமும் ஜனித்திருந்தன.

அப்போதுதான் ரேணுகாவிற்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்திருந்தனர்.

அவளும் தேன்மொழியின் பிரசவம் முடியட்டும் என்று உறுதியாகக் கூறிவிட்டு, இனிய தோழியாய் துணையிருந்தாள்.

பிரசவத்திற்கு டாக்டர் நாள் குறித்திருந்த தேதிக்கு சரியாக பத்து நாட்கள் முன்புதான், தேன் மொழிக்கு அந்த விபத்து நிகழ்ந்தது.



மாடியிலிருந்து அவசரமாக இறங்கி வந்தவள் கால் தவறி 'ஆ'வென்ற அலறல் சப்தத்துடன் படிகளில் உருண்டு விழ ஆரம்பித்தாள்.

அவளுடைய சப்தம் கேட்டு வீட்டிலிருந்த அனை வரும் ஓடி வருவதற்குள் கீழ்ப் படியில் மூர்ச்சையாகிக் கிடந்தவளைப் பார்த்தால், நாகராஜிற்கு நெஞ்சடைத்துப் போயிற்று.

உடனே பதறிப் போய் அவளைத் தூக்கிச் சென்று மருத்துவமனையில் சேர்த்தபோது, ரேணுகாவிற்கு அவளுடைய உயிரே அவள் வசமில்லை.

கடவுளே இரு உயிரையும் காப்பாத்து என்று இறைவ னிடம் மானசீகமாக இறைஞ்சிக் கொண்டிருந்தாள் அவள்.

ஆனால் எல்லாருடைய வேண்டுதலையும் மீறி, தலையில் பட்ட அடியால் குழந்தை பிறந்து சிறிது நேரத்திலேயே தேன்மொழி இறந்து விட்டாள்.

ஆனால், இறப்பதற்கு முன்பு தன் கணவனையும், ரேணுகாவையும் அழைத்தவள், தன் குழந்தையை அவளிடம் கொடுத்தாள்.

விழிகள் கண்ணீர் சொரிய, ''இனிமே இவளுக்கு நீதான் அம்மா!'' என்று ஜாடை செய்தவள், உடனே கணவ னிடம் திரும்பினாள்.

அவனையே ஏக்கத்துடன் நோக்கியவளின் கரம் மெல்ல உயர்ந்து, நாகராஜின் கையைப் பிடித்து ரேணுகா வுடன் இணைத்து வைத்தது!

மறுகணமே, அந்த விழிகள் உயிர்ப்பின்றி தூரப் பார்வை பார்த்தன.

தேன்மொழி... பூச்சூடும் நித்திரையில் ஆழ்ந்திருந் தாள்!

12.02.2009 00:35

ஊமை கண்ட கனவாய் அவளுடைய வாழ்க்கை ஆரம்பித்த உடனே முடிந்து விட, மிகவும் உடைந்து போனது நாகராஜுதான்!

உடனே அவளுடைய வீட்டிற்கு தகவல் அனுப்பி விட்டுக் காத்திருந்தபோது, தான் தெரிந்தது... அனைவரும் சொத்துக்களை விற்றுவிட்டு கோவாவிற்கே சென்று விட்ட விபரம்!

அவர்கள் கோவாவிலிருந்து வரத் தாமதமாகுமென்பதால், தேன்மொழியின் இறுதிச் சடங்கை நாகராஜே செய்து முடித்தார்.

மறுநாளே வந்த சௌந்தர நாயகியும், வேதாசலமும், தாங்கள் வருவதற்குள், எப்படித் தன் மகளுடைய ஈமச் சடங்குகளை முடிக்கலாமென்று தகராறு செய்ய ஆரம்பித்தனர்.

பிறகு, ஊர்ப் பெரிய மனிதர்கள், ஊர்க்கட்டுப் பாட்டிற்காக தாங்கள்தான் சடங்குகளை துரிதப் படுத்தியதாகக் கூறி சமாதானம் பேசி அவர்களை அமைதிப் படுத்தினர்.

இருவரும், கிளம்பும்போது, குழந்தையை தங்கள் சொத்தென்று உரிமை கொண்டாட, நாகராஜ், தீர்மானமாக மறுத்து விட்டான்.

மனைவியை இழந்தவனுக்கு, அவளுடைய துணை ஒன்றே பெரும் மருந்தாய்!

அவனுடைய மறுப்பினால் கோபமுற்று தாயை அழைத்துக் கொண்டு வெளியேறிய வேதாசலம், பிறகு தங்கைக்கு நடந்த எந்தக் காரியத்திலும் பங்கேற்கவில்லை.

அப்படியே இருவருக்குமிடையே இருந்த தொடர்பே அற்றுப் போக, குழந்தையைத் தானே வளர்க்க ஆரம்பித்தாள் ரேணுகா!



ஆனால், நாகராஜ் தன் மனதை மாற்றிக் கொள்ளத் தான் ஒரு வருடத்திற்கு மேல் ஆயிற்று.

பிறகு, ரேணுகாவின் தந்தையே தன் மகளின் முடிவு கண்டு மனம் மாறி இறங்கி வந்து அவனிடம் பேசினார்.

தந்தையும் வற்புறுத்த ரேணுகாவை மணந்து கொள்ள அரை மனதுடன் சம்மதித்தான் அவன்.

திருமணத்திற்குப் பிறகு அவர்களிருவருக்கும் குழந்தை பாக்கியமே இல்லாமல் போக, சௌந்தர்யா தனிக்காட்டு ராணியாக, செல்லமாக வளர்ந்தாள்.

தேன்மொழியின் விருப்பமாய், அவளுடைய தாயின் பெயர் வரும்படி 'சௌந்தர்யா' என்றே குழந்தைக்குப் பெயர் வைத்திருந்தான் அவன்.

இத்தனை வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் சௌந்தரநாயகி இறந்து போன பிறகு அவளுடைய வக்கீல் உயில் விஷயமாக அவர்களை தேடி வந்து சந்தித்திருக்கிறார்.

* * *

நாகராஜின் நினைவுகள் வானில் வட்டமிட்டு ஓய்ந்த பருந்தாய் தரையிறங்க, சௌந்தர்யாதான் பெரிதும் சோர்ந்திருந்தாள்.

''அப்பா! அம்மா?'' அவள் இழுக்க உடனே பூஜையறைக்கு அழைத்துச் சென்றார் அவர்.

''இதோ இவதாம்மா. உன்னோட அம்மா'' வரிசையாக மாட்டியிருந்த பல புகைப்படங்களில் ஒன்றை அவர் காட்ட, இதுவரை பெரியம்மா என்று எண்ணியிருந்தவர் தான் தன் தாய் என்று தெரிந்ததுமே நெஞ்சுக்குள் பெரும் பாரம் வந்தது அவளுக்கு!

12.02.2009 00:35



அப்போது பின்புறமிருந்து அவளை அணைத்த ரேணுகா, ''சௌந்தர்யா! மனசைத் தளர விடக்கூடாது! தேன் மொழிக்கு நாங்க குடுத்த வாக்கை காப்பாத்திட்டோம்! உன்னை ஒரு நல்ல பொண்ணா வளத்திருக்கோம்! என்னிக்குமே உன் அம்மா நான்தான்! நான் வேற தேன் மொழி வேற இல்லைடா!'' மெதுவாகக் கூறினாள்.

''உனக்கு இன்னைக்கு நான் ஒரு உண்மைய சொல்லப் போறேன் சௌந்தர்யா!

''உன்னை நல்லா வளத்து ஆளாக்கணும்னு தனக்கு ஒரு குழந்தை வராமப் பாத்துக்கிட்டவ இவ.''

மெல்லக் கசிந்த விழிகளுடன் நாகராஜ் கூற, ''அம்மா...''வென்று கதறியபடி திரும்பி ரேணுகாவை அணைத்துக் கொண்டாள் அவள்.

தாய்மையின் வித்தியாசமான ஒரு பரிணாமத்தை உணர்ந்த புரிதலும், தவிப்பும் அவளிடம் அந்த நிமிடம் தெரிவதாய்!

* * *

மறுநாளே வக்கீலிடமிருந்து அவர்களுக்கு அழைப்பு வர, அவரை சந்திப்பதற்காக மூவருமே அங்கே சென்றனர்.

வக்கீல் விமல்நாத் அவர்களை ஆவலுடன் வரவேற்க தன் முடிவை உறுதியாய் அவரிடம் கூறிவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் உள்ளே சென்று அமர்ந்தாள் சௌந்தர்யா.

அவர் வரவேற்கும்போதே இடைமறித்தவள், ''சார்! எனக்கு எந்த சொத்தும் வேண்டாம்! எல்லாத்தையும் பாட்டிக்கு வேற வாரிசுங்க யாராவது இருந்தா, அவங்க பெயருக்கே மாத்தி எழுதிடுங்க!



''எனக்கு, எங்கப்பா சம்பாதிச்ச சொத்தே போதும்! அதுவே நிறைய இருக்கு! இதுவரைக்கும் நான் பாத்தே அறியாத பாட்டியோட அன்பே எனக்குக் கிடைக்கலை... சொத்து மட்டும் எதுக்கு?'' உறுதியுடன் மறுத்தாள்!

''உங்க பாட்டியோட உயிலைப் படிக்கிறேன்மா. அதுக்கப்புறமா நீங்க என்ன செய்யலாம்னு ஒரு முடிவெடுத்துக்கங்க. அவங்க உங்ககிட்டே சேர்க்க சொல்லி ஒரு லெட்டர் கூட குடுத்திருக்காங்க. அதையும் படிச்சிப் பாத்துட்டு அப்புறமா சொல்லுங்க'' என்றபடி உயில் விபரங்களைப் படிக்க ஆரம்பித்தார் அவர்.

பல ஏக்கர் மதிப்புள்ள பயிர் விளையும் பூமி, காபித் தோட்டம், பழப்பண்ணை, மீன் பண்ணை என்று எல்லாமே சரிசமமாகப் பங்கிடப்பட்டிருந்தது.

ஹோட்டலும், ரெடிமேட் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலையும் அவளுக்கு எழுதப்பட்டிருந்தன!

இரும்புச் சுரங்கமும், ஏற்றுமதி நிறுவனமும் அவளுடைய மாமா மகன் ஜீவரத்னத்தின் பெயருக்கு மாற்றப்பட்டிருந்தன.

ஆனால் அடுத்து அவர் கூறிய செய்தி தான் அவளுக்குப் பெரும் வியப்பும் அதிர்ச்சியுமாய்!

இப்போது ஜீவரத்னமும் அவனுடைய குடும்பமும் வசிக்கின்ற பூர்வீகப் பண்ணை வீட்டையும் அவளுடைய பெயருக்கே எழுதியிருந்தார் சௌந்தரநாயகி அம்மாள்.

அதில் வசிப்பதற்கு மட்டும் ஜீவரத்தினத்துக்கு உரிமை தருவதாகவும், விற்பதற்கு அவனுக்கு எந்த உரிமையுமில்லை என்பதையும் அதில் ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருந்தார்.

12.02.2009 00:35

அவளுக்குள் பல குழப்பங்கள்!

சிறு வயதிலிருந்து வளர்த்த பேரனை நம்பாமல் தான் பார்த்தே அறியாத மகள் வயிற்றுப் பேத்திக்கு அந்த பூர்வீக வீட்டை அவர் அளித்திருப்பது ஏதோ ஒரு விதத்தில் உறுத்துவதாய்!

அவள் யோசனையுடன் அமர்ந்திருக்கும் போதே, அவர் ஒரு சீல் செய்த கடிதத்தை அவளிடம் அளித்தார்.

"இந்த லெட்டர் சௌந்தர நாயகி அம்மா உங்களுக்கு பர்சனலா எழுதினது! இதை படிச்சதுககப்புறம் நீங்க எந்த முடிவுக்கு வந்தாலும் நான் அதுக்கு சம்மதிக்கிறேன்."

முடிவாகக் கூறியவரிடம் விடைபெற்று வீட்டிற்குக் கிளம்பியபோது அந்தக் கடிதத்திற்குள் என்ன இருக்கு மென்ற தவிப்பு அனைவருக்கும்!

* * *

வீட்டுக்கு வந்து அந்தக் கடிதத்தைப் படித்தபோது தான், சௌந்தர நாயகி எவ்வளவு காயப்பட்டிருக்கிறா ரென்பதே புரிவதாய்!

அந்தக் கடிதம் பல ரகசியங்களை அம்பலப் படுத்தியது... சௌந்தர நாயகி மருமகளிடமும், பேரனிடமும் தான் பட்ட கஷ்டங்களை விவரித்து எழுதியிருந்தார்.

தானும், தன் மகனும், வாய் பேச முடியாதவளென்று மகள் தேன்மொழியை வெறுத்ததாகவும், அந்தப் பாவமே பிற்காலத்தில் தன்னை வதைத்ததாகவும் வருந்தியிருந்தார்.

தனது இந்த முடிவு, தன் மகளுக்குச் செய்கின்ற ஒரு பிராயச்சித்தமென்றும், தன் மகளுக்கு செய்யாததை பேத்திக்கு செய்ததாகவும் எழுதியிருந்தார்.



தன் மகன் இறந்த பிறகு, வாயிருந்தும் ஊமையாய், மருமகளுக்கு பயந்து வாழ்ந்ததை கண்ணீருடன் நினைவு கூர்ந்திருந்தார்.

வேதாசலத்திற்குப் பிறகு அவனுடைய மனைவி மனோன்மணியும், பேரன் ஜீவரத்னமும் தனக்கிழைத்த கொடுமைகளை சோகத்துடன் கூறியிருந்தார்.

தன் மருமகளுடைய மோசமான வளர்ப்பினால், ஜீவரத்னம் பெரும் ஊதாரியாக வளர்ந்து விட்டதையும், குடி, சூதாட்டம், ரேஸ் என்று ஒரு பகட்டுப் பேர் வழியாக மாறி விட்டதையும் வருத்தத்துடன் குறிப்பிட்டிருந்தார்.

அவனிடம் இருந்தால் எல்லா சொத்துகளும் கைவிட்டுப் போய்விட வாய்ப்பிருப்பதால் அவள் பெயருக்கு பாதி சொத்தை எழுதி வைத்திருப்பதாகவும், அதுவும் அந்தப் பூர்வீகப் பண்ணை வீட்டை அவள் பொறுப்பிலேயே விட்டிருப்பதாகவும், ஜீவரத்னம் அதில் வசிக்கலாம்; அந்த உரிமை அவனுக்கு இருப்பதையும் ஆனால் விற்க முடியாதென்பதையும் உறுதியாகக் குறிப்பிட்டிருந்தார்.

சொத்துக்களையும் பண்ணையை விஸ்தரிக்கும் பொறுப்பையும் அவளையும், மாப்பிள்ளையையும் நம்பி விட்டிருப்பதாகவும் அவர் எழுதியிருந்ததைப் படித்த போது மனம் கசிந்தது.

தொடர்ந்து படிக்க ஆரம்பித்தாள்.

தன்னைக் கடைசி காலத்தில் மரியாதையின்றி ஒரு வேலைக்காரியைப் போல் நடத்தி பின்புற இருட்டறையில் தள்ளி வதைத்த மருமகள் இறந்ததும், பேரனால் அது தொடர்கதையானதும், அவர்களைத் தவிர தனக்கு யாருமே இல்லை என்ற தைரியத்தில் தன்னை வதைத்ததையும், நிம்மதியின்றி ஆக்கியதையும் பெரும் சோகத்துடன் கூறியிருந்தார்.



12.02.2009 00:36



"அந்த வீடு அவர்களிடம் இருந்தால், ஒரு நாள் அவனுடைய ஊதாரித்தனத்திற்கு அது இரையாகி விடும் என்பதாலேயே அவள் பெயருக்கு மாற்றியதாகவும் எழுதியிருந்ததைப் படித்தபோது, அவளுடைய மனதில் பெரும் உறுதி வந்தது.

இதைப் பற்றி யாரிடமும் கூற வேண்டாமென்றும், இறுதியாக ஒரு வேண்டுகோளும் அவர் விடுத்திருந்தார்.

தன்னுடைய பாட்டியை கடைசிக் காலத்தில் நிம்மதியின்றி வதைத்தவர்களிடம் அந்த சொத்தை முழுமையாக ஒப்படைக்கக் கூடாதென்ற எண்ணம் வலுவடைவதாய்!

உடனே அந்தக் கடிதத்தை நாகராஜிடம் கொடுத்தவளுக்குள் பெரும் யோசனை!

புது இடத்திற்கு..... அதுவும் மொழி புரியா இடத்திற்குச் சென்று அங்குள்ள பொறுப்புகளைத் தான் எப்படி ஏற்பதென்ற குழப்பமும் கவலையும் அவளுக்குள் விரவிப் பரவின.

அந்தக் கடிதத்தைப் படித்த நாகராஜும் அதே நிலையிலிருந்தார்.

பிறகு மகளிடம் திரும்பியவர், "நீ என்ன முடிவெடுத்திருக்கேம்மா... உன் முடிவுதான் எங்களுடையதும்! உங்க பாட்டி இப்படி திடீர்னு ஒரு குண்டைத் தூக்கிப் போடுவாங்கன்னு நான் எதிர்பார்க்கவேயில்லை.

"இதை ஏத்துக்கிட்டு அந்த ஊருக்குப் போறதோ... இல்லை மறுக்கறதோ உன் இஷ்டம்! இதிலே நான் தலையிட மாட்டேன்... உனக்கு எது சரின்னு படுதோ அதைச் செய்!"

அவளுடைய தலையை வாஞ்சையுடன் கோதி விட்டு, மெதுவாக எழுந்து அந்த அறையை விட்டு வெளியேறினார்.

* * *



அன்று முழுவதும் யோசித்தவளால் ஒரு முடிவிற்கு மட்டுமே வரமுடிந்தது.

தான், கோவாவிற்குச் சென்று அம்மாவின் உறவுகளையெல்லாம் பார்க்க வேண்டும். பார்த்த பிறகே, ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்ற உறுதி வந்தது.

அன்றிரவே, இதுபற்றி, தன் தந்தையிடம் பேசினாள் அவள்.

அவருக்கும் ஒரு இடமாற்றம் இருப்பது நல்லதென்று டாக்டர்கள் பரிந்துரைத்திருக்க, ஒரு முடிவுடன் வக்கீலை சந்தித்தாள்.

விமல்நாத்திடம் அவள் பேசியபோது, முதலில் பதினைந்து நாட்கள் மட்டுமே, அங்கு தான் தங்கப் போவதாகவும், பிறகு முடிவெடுத்துக் கொள்ளலாம் என்றும் கூறினாள்.

அவள், இதுவரை இறங்கி வந்ததே அவருக்கு மிகவும் சந்தோஷம்!

தன்னுடைய கட்சிக்காரரின் இறுதிக் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கப் போகின்ற நிம்மதி!

வீட்டைப் பூட்டி காவலுக்கு ஏற்பாடு செய்துவிட்டு மூவரும் விமல்நாத்துடன் கோவாவிற்குக் கிளம்பினார்.

## 10

விமானத்தில் சென்று கோவாவில் இறங்கியபோது, அந்த ஊரின் அழகும், சுத்தமும் இனிதாய் அவர்களை வரவேற்றன.

12.02.2009 00:36

நவீன விமான நிலையங்களுடன் ஒப்பிட முடியாத எளிமையான அழகுடனிருந்தது. விமான நிலையம்!

காரில் பயணித்து ஊருக்குள் நுழையும்போதே ஏனோ அவளுடைய உடல் சிலிர்த்தது!

தன் தாயின் பிறந்த ஊருக்குச் செல்லும்போது, ஏனோ வயதைத் தொலைத்து தானும் பால்யத்திற்குள் சென்று விட்ட உணர்வு!

கோவையைப் போல் மக்கள் நெருக்கடியுடன் கூடிய விஸ்தாரமான சாலைகள் அங்கு இல்லை!

இருபுறமும் வீடுகள்... சுற்றிலும் பசுமையான தோட்டம்... செடி, கொடிகள் சூழ அழகுற அமைந்திருந்தன.

போர்ச்சுகீசிய நாகரிகத்துடன் வெள்ளை நிறத்தில் காணப்பட்ட வீடுகள் அனைத்திலும், மேற்கூரை போல் ஓடுகள் வேய்ந்து தனி எழிலுடன் தெரிந்தன.

கொங்கணியும், மராத்தியும், வழக்கு மொழியாக இருக்க, இந்தி தான் அங்கு ஆட்சி மொழியென்று கூறினார் விமல்நாத்.

சில வீதிகள் போக்குவரத்தின்றி வெறிச்சோடி இருக்க, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சைக்கிளை ஓட்டியபடி உற்சாகமாகச் சென்று கொண்டிருந்தனர்.

திடீரென்று வீடுகள் மறைந்து விட, கடல் காற்று முகம் தீண்டத் திரும்பினால், தூரத்தில் நீலக்கடல் அலைக் கரங்களால் ஆர்ப்பரித்து வரவேற்றது.

பாதையின் மறுபுறம் அடர்ந்த தென்னை மரங்கள் அணிவகுத்திருந்தன.

இவ்வளவு அழகிய ஊரா என் தாயின் ஊர் என்று இதயம் மௌனமாய் வியந்தது.



சிறிது நேரப் பயணத்திற்குப் பிறகு ஒரு பிரம்மாண்டமான வெண்ணிற பங்களாவின் முன் சென்று கார் நின்றது.

உயர்ந்த படிகளுடனும், வெண்ணிறத் தூண்களும் நிறைந்த தாழ்வாரம் சூழ்ந்த அமைப்புடனுமிருந்த அந்த வெள்ளை மாளிகை... அவளை மிகவும் கவர்ந்து பெரும் பிரமிப்பை ஏற்படுத்தியது!

திரைப்படங்களில் வருகின்ற பெரிய மாளிகையைப் போன்ற தோற்றத்துடனிருந்த அந்த வீட்டை, சௌந்திர நாயகி பொக்கிஷமாக எண்ணியது இப்போது புரிந்தது.

இதைக் கட்டிக் காக்கவும், பராமரிக்கவும் பெரும் பொருட் செலவு ஆகுமென்பதை, பார்த்த மறுகணமே உணர்ந்து கொண்டாள் அவள்.

''ரொம்ப அழகா இருக்கு! அந்தக் கால ராஜாவோட குட்டி அரண்மனை மாதிரி!'' அவள் காதோரம் கிசுகிசுத்தார் ரேணுகா!

மேல்மட்ட ரசனையும்... எளிமையும்... பணத்தின் செழிப்பும்... அந்த பங்களாவின் அமைப்பில் கலந்து விரவித் தெரிந்தன.

அனைவரும் உள்ளே சென்றபோது, ஹாலில் அமர்ந்து தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த ஒரு ஆண், அலட்சியமாகத் திரும்பி அவர்களை வரவேற்றான்.

புன்னகையுடன் முன்னே சென்ற விமல்நாத் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

''ஜீவா! இவங்கதான் உன் அத்தை பொண்ணு சௌந்தர்யா!

''அவரு உங்க மாமா நாகராஜ். அவங்க அவரோட மனைவி!''

12.02.2009 00:36



மெல்லிய குரலில் அவர் கூற, ''ஓ! வாங்க.. வாங்க! பாட்டி, அப்பா, அம்மா எல்லாரும் இறந்தப்பவெல்லாம் வராதவங்க, சொத்து கிடைக்குதுன்னவுடனே வந்திருக்கீங்க! ம்... பணத்துக்குத்தான் எவ்வளவு சக்தி பாருங்க'' நக்கலான குரலில் வரவேற்றான்.

உடனே அவளுக்குள் கோப ஊற்று பீறிட்டுக் கிளம்ப, சுள்ளென்று பதில் கொடுத்தாள்.

''ஒரு நிமிஷம்! நாங்க இந்த சொத்துக்காக வரலை! என் பாட்டியோட ஒரு கோரிக்கைக்காக... அவங்களோட கடைசி ஆசையைப் பூர்த்தி செய்யறதுக்காக வந்திருக்கோம்.''

''ஓ! இத்தனை நாள் இந்த பேத்தி பாட்டி பாசமெல்லாம் எங்கேம்மா போயிருந்தது?''

அவன் ஏளனத்துடன் கேட்க, ''மிஸ்டர் ஜீவா! அவளுக்கு தன் அம்மா யாருன்னே தெரியாது. என் ரெண்டாவது மனைவி ரேணுகாவைத்தான் தன்னோட அம்மான்னு அவ இதுவரைக்கும் நினைச்சிட்டிருந்தா... இப்பதான் அவளுக்கு உண்மையே தெரியும்!

இடைமறித்துக் கூறினார் நாகராஜ்.

''அப்பா! நீங்க டென்ஷனாகாதீங்க! அப்படியே இருந்தாலும்... மிஸ்டர் ஜீவா! உங்க வீட்டுப் பெரியவங்க இறந்ததுக்கு நீங்க ஒரு முறைக்காகவாவது எங்களுக்கு சொல்லி அனுப்பி இருக்கலாமே! ஆனா அந்த பேஸிக் கர்ட்டஸிகூட உங்களுக்குத் தெரியலையே'' நக்கலாகவே அவளும் முடித்தாள்.

அதற்குள் குறுக்கிட்ட விமல்நாத், ''ஜீவா! இப்போ அவங்க இங்கே விருந்தாளியா மட்டும் வரலை! இந்த



வீட்டுக்கு உரிமைக்காரங்களா வந்திருக்காங்க... எதையுமே யோசிச்சிப் பேசுங்க... வீண் ப்ரச்னை வேண்டாம்'' மெல்லிய குரலில் அறிவுறுத்தினார்.

''ஆமாம்! இப்ப நீங்க அவங்க பக்கம்கிறதையே நான் மறந்திட்டேன். சாரி! பணபலம் இருக்கற பக்கம் தானே பொதுவா மனுஷங்க சாயறாங்க.''

விரக்தியில் சுழித்த உதடுகளுடன் அவன் பேச மறுகணமே விமல்நாத் ஊமையானார்.

''மிஸ்டர் ஜீவா! உங்களோட அன்பான வரவேற்புக்கு நன்றி! நாங்க தங்க வேண்டிய ரூம் எங்கேன்னு சொன்னீங்கன்னா, போயிட்டே இருப்போம்.'' அழுத்தமான குரலில் கேட்டாள் அவள்.

அதற்குள் உள்ளிருந்து வந்த ஒரு பெண், அவர்களை சிறு மிரட்சியுடன் வரவேற்றாள்.

''வாங்க... உங்க ரூம் மாடியில இருக்கு.. கெஸ்ட் ரூம்ஸ் எல்லாம் அங்கேதான். நீங்க முதல்லே ஓய்வெடுங்க... அப்புறம் பேசிக்கலாம்.'' அவசரமாக அழைத்தாள்.

''இவங்கதான் ஜீவாவோட மனைவி மாலதி! ரொம்பப் பண்பானவங்க! இவர்... சேர் டேக்கர் சைமன். ஏதாவது தேவைன்னா, நீங்க இவங்ககிட்டே கேட்கலாம்!'' என்று அவளை அறிமுகப்படுத்தினார் விமல்நாத்!

அவளிடம் பேசிவிட்டுத் திரும்பினால் ஜீவாவை அங்கு காணவில்லை!

அந்த வீட்டிற்கு அவர்கள் வந்ததை அவன் விரும்பவில்லை என்பதை அவனுடைய செயல்கள் மெய்ப்பித்தன.

ஆனால் தன்னுடைய வீடு என்று எண்ணியிருந்த அந்த சொத்தை திடீரென்று வேறு ஒருவருக்கு முழுதாக

12.02.2009 00:36

விட்டுத்தர வேண்டுமென்றால் எவ்வளவு கஷ்டமாக இருக்குமென்ற யோசனை வர, மெதுவாக மாடிக்குச் சென்றாள் அவள்.

தான் இங்கு வந்ததை அவன் விரும்பவில்லை என்பதை உடனே உணர்ந்தவளுக்குள், பெரும் சோகம் சூழ்வதாய்!

இந்த நிமிடமே இந்த சொத்தும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம் என்று தூக்கியெறிந்து விட்டு செல்லத் துடித்த மனதை, அவளுடைய பாட்டியின் கண்ணீர்க் கோரிக்கை தடுத்தது.

அந்தப் பெண் மாலதியைப் பார்த்தபோது, ஏனோ பரிதாபமாய்...

அந்த ஜீவாவிடமும், அவனுடைய தாயிடமும் அவள் படாத பாடு பட்டிருப்பாள் என்று தோன்றியது.

* * *

பிறகு வீட்டைச் சுற்றிப் பார்த்தபோது, எங்கு திரும்பினாலும் பீங்கான், கண்ணாடி ஜாடிகளில் மலர்க் கொத்துக்கள் நிறைந்து தெரிந்தன.

வெள்ளிப் பாத்திரங்கள், பழைய ஆன்ட்டிக் பொலிவுடன் பெரிய அலமாரியில் அடுக்கப்பட்டிருந்தன.

சேட்டின் துணியினாலான பெரிய சோபாக்கள், திரைச் சீலைகள், பழங்கால சுவர் ஓவியங்கள் என்று அந்த இடமே, அந்த வீட்டின் பாரம்பரியத்தையும் செழுமையையும் பறை சாற்றுவதாய்!

அந்தப் பெரிய ஹாலைச் சுற்றிலும் நிறைய அறைகள் தெரிந்தன.

மாடி முழுவதும் விருந்தினர் அறைதான் என்று கேர் டேக்கர் சைமன் கூறினார்.



அவர்களுக்கு என்று மாடியில் அளிக்கப்பட்டிருந்த அறைகள் பாரம்பரியப் பெருமையைப் பறைசாற்றியபடி ஆன்ட்டிக் பொருட்களுடன் மிளிர்ந்தன.

பெரிய ரோஸ் வுட் கட்டிலும், பழைய செஸ்ட் ஆஃப் டிராயர் டிரெஸ்ஸிங் டேபிளும், தேக்கு மர நாற்காலிகளும், மர பீரோவுமாய் அந்த அறையே வெகு நேர்த்தியாக இருந்தது.

ஏதோ ஒரு பழைய அரச மாளிகைக்குள் வந்த உணர்வு வர, யோசனையுடன் ஜன்னலிலிருந்த சேட்டின் திரைச் சீலையை மெல்ல விலக்கினாள்.

அந்த நேரம் அவளுடைய அறைக்கதவு மெதுவாகத் திறக்கப்பட திரும்பினால், அங்கு ஒரு சிறு பெண் குழந்தை நின்றிருந்தது.

அவளைக் கண்டதும் கூச்சத்துடன் புன்னகைத்த குழந்தையை சிறு முறுவலுடன் மெல்ல அணுகினாள் சௌந்தர்யா!

அழகிய ஃப்ராக் அணிந்திருந்த அந்தக் குழந்தைக்கு இரண்டு வயதாவது இருக்குமென்று தோன்றியது.

சட்டென்று மண்டியிட்டு அவளுடைய உயரத்திற்கே சிறிது சமமாய் அமர்ந்து, ''ஹாய் குட்டிப் பாப்பு! உன் பேரென்ன?''

மென் குரலில் வாஞ்சையுடன் கேட்டாள்.

''ம்... மனோ'' திக்கித் திணறியபடி கூறிவிட்டு குழந்தை வெளியே ஓட,

''ஹேய் நில்லு!'' என்றபடி அவளும் பின் தொடர்ந்தாள்.

அப்போது, திடீரென்று அந்தக் குரல் பின்புறம் கேட்டது.

12.02.2009 00:36



''ஏய் குட்டிப் பிசாசு! எங்கேடி போயிட்டே? உன்னை எங்கேல்லாம் தேடறது?'' எரிச்சலுடன் மொழிந்த அந்தக் குரலால் உடனே திரும்பினாள் சௌந்தர்யா.

அங்கு அவளுடைய வயதே இருக்கும் ஒரு பெண் கோபமுகத்துடன் நின்றிருந்தாள்.

'சாரங்' எனப்படும் சிறிய லுங்கி போன்ற பல வர்ண உடையுடன் மேலே, உடலை இறுகப் பிடித்த டாப்ஸூம் அணிந்திருந்தாள்.

இவள் யாராக இருக்கும் என்று யோசிக்கும் போதே அவளிடம் வந்து ஒட்டியபடி பயத்துடன் நின்று கொண்டது அந்தச் சிறு குழந்தை!

''பாவங்க அவ குழந்தை! அவளை ஏன் திட்டறீங்க!''

மெல்லிய குரலில் அவள் கேட்கும் போதே, ''போதும்! இவ என்னோட அக்கா பொண்ணு! நான் என்ன வேணாலும் பேசுவேன்! புதுசா ஒண்ட வந்தவங்களெல்லாம் இதிலே தலையிட வேணாம்!''

சுள்ளென்று முகத்திலடித்தாற் போல கூறிவிட்டு அந்தக் குழந்தையை தரதரவென்று இழுத்தபடிச் சென்றாள் அந்தப் பெண்!

ஏனோ, மனதிற்குள் பெரும் சோர்வாய்...!

கடவுளே... நிம்மதியாக இருந்தவளை ஏன் இங்கு அழைத்து வந்து வதைக்கிறாய் என்று வினா எழுப்பியது நெஞ்சம்!

## 11

அன்றிரவு, சைமன் வந்து அனைவரையும் சாப்பிட வரும்படி அழைத்தார்.



மூவரும் கீழே வந்தபோது மாலதிதான் அவர்களை ஒரு சிறு முறுவலுடன் வரவேற்றாள்.

பன்னிரெண்டு பேர் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருந்த அந்த டைனிங் டேபிளில், ஜீவா ஒருபுறமும் மறுபுறம் மாலையில் பார்த்த அந்தப் பெண்ணும், சிறு குழந்தையும் அமர்ந்திருந்தனர்.

வேலைக்காரர்களும், மாலதியும் பரிமாற மூவரும் சாப்பிட்டபோது, ஏதோ ஒரு வித சங்கடமும், அந்நியத் தன்மையும் அங்கு தெரிந்தன.

உயர்ரக கிரிஸ்டல், மெலமைன் பாத்திரங்களும் கோப்பைகளும் அந்த மேஜையை நிறைத்திருந்தன.

ஜீவரத்னம் சீக்கிரமே சாப்பிட்டுவிட்டு எழுந்துவிட, அவன் சென்றதும், அந்தக் குழந்தை ''அக்கா...''வென்று அழைத்தபடி அவளிடம் தாவியது.

உடனே அந்தக் குழந்தையை அந்தப் பெண் அடக்க, ''விடு நளினி! அவங்களோட நம்ம மனோ பழகட்டும்.... நல்லதுதானே!'' மெதுவாகக் கூறினாள் மாலதி!

அப்போதுதான் அந்தப் பெண்ணின் பெயர் நளினி யென்பதே அவளுக்குத் தெரிந்தது.

''போதும்க்கா ரொம்பதான் வக்காலத்து வாங்காதீங்க! உங்களோட வாழ்க்கையையே கேள்விக் குறியாக்க வந்தவங்களை எப்படித்தான் உங்களாலே சுலபமாக ஏத்துக்க முடியுதோ!'' நொடித்தபடி கூறி விட்டு, குழந்தையுடன் வெளியேறினாள் நளினி.

ஏனோ, முதல் பார்வையிலேயே தன்னை அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்தவளுக்குள் சிறு கோபக் குமிழ்கள் வெடித்தன

12.02.2009 00:37

அன்றிரவு புது இடமென்பதால் உறக்கம் வராத தருணத்தில் யோசித்திருந்தபோது ஒரே நாளில் தன் வாழ்க்கையின் போக்கே மாறி விட்ட உணர்வு!

தன்னுடைய பாட்டியின் கோரிக்கையை நிறைவேற்றி யார் தடுத்தாலும் இந்த சொத்துக்கள் அழிந்து விடாமல் காக்க வேண்டுமென்ற உறுதி... கடும் தீவிரத்துடன் உட்புகுந்தது.

* * *

மறுநாள் காலையில் டிபன் சாப்பிட்ட உடனே விமல்நாத் வந்து விட்டார்.

அவர்களுக்கு பண்ணையையும் டெக்ஸ்டைல், பேக்டரியையும் சுற்றிக் காண்பிப்பதாகக் கூறி அழைத்துச் சென்றார்.

ஜீவா கோபமும் அலட்சியமுமாக விலகிச் செல்ல, நளினியின் குரோதப் பார்வையை விலக்கி, மாலதியிடம் விடைபெற்று மூவரும் கிளம்பினர்.

நெல் வயல்களுக்கு ஆழ்ந்த பச்சைக்கரை பார்டர் அமைத்தது போல் தென்னந்தோப்புகள் நீண்டிருந்தன.

நெற்கதிர்களின் மெல்லிய அசைவுகளில் வித்தியாசமான ஸ்பரிசமாய் ஒருவித மணம் நாசியைத் தீண்டியது.

நெல்வினையும் நிலங்களையும் தென்னந் தோப்புகளையும் பார்வையிட்ட பிறகு அந்தப் பழப் பண்ணைக்கு அவர்களை அழைத்துச் சென்றார்.

பரந்து விரிந்திருந்த அந்த நிலப்பரப்பில் மா, கொய்யா, சப்போட்டா, மாதுளை, அன்னாசி என்று எல்லா வகையான பழவகைகளும் நிறைந்திருந்தன.



கூடைக் கணக்கில் கூலிக்குப் பழங்களைப் பறித்துக் கொண்டிருந்த வேலையாட்களிடம் அவர் சௌந்தர்யாவை அறிமுகப்படுத்த, அவர்கள் அனைவரும் பணிவுடன் வணங்கினர்.

பிறகு டெக்ஸ்டைல் மில்லைப் பார்வையிட்டு விட்டுக் கிளம்பியபோது, இவ்வளவு சொத்துக்களையும் சேர்ப்பதைவிட அதைக் கட்டிக் காப்பது எவ்வளவு கடினமென்பது புரிவதாய்!

வீட்டிற்கு திரும்பும் வழியில் எதிரில் வந்த ஒரு கார், இவர்களுடைய காரைக் கண்டதும் வேகம் குறைந்து நின்றது.

அந்தக் காரின் முன்புறக் கதவைத் திறந்து இறங்கியவனைக் கண்டபோது, சட்டென்று மூச்சடைத்தது அவளுக்கு!

''ப்ரதீப்...''

அவளுடைய இதழ்கள் ஆச்சர்யத்துடன் அவன் பெயரை முணுமுணுக்கும்போதே, அந்தக் காரிலிருந்து இறங்கி அவர்களை நோக்கிவரத் துவங்கினான் அவன்!

உடனே புன்னகையுடன் அவனை வரவேற்ற விமல்நாத், உற்சாகத்துடன் அவளிடம் திரும்பினார்.

''மிஸ்.சௌந்தர்யா! இவர்தான் ப்ரதீப்! ஜீவாவோட க்ளோஸ் ப்ரெண்ட்! நம்ம பண்ணை, மில், எக்ஸ்போர்ட் பிசினஸ், ஹோட்டல்னு எல்லாத்தையும் பார்க்கிறவரு!

''எல்லாத்துக்கும் தனித் தனியா நிறைய வொர்க்கர்ஸ் இருந்தாலும், மொத்தமா அட்மினிஸ்ட்ரேட் பண்ற பொறுப்பு இவருதுதான்! எம்.பி.ஏ. படிச்சிருக்காரு... ஜீவாவுக்கு வலது கை!

12.02.2009 00:37



பெருமையுடன் அவர் அறிமுகம் செய்ய, அவன் பார்வை மேலிருந்து கீழ் வரை அவளை உரச, ஒற்றைப் புருவம் உயர்த்தி அவளைக் கூர்ந்தான்.

பிறகு, ''வெல்கம் டு அவர் டைனஸ்டி! என் நண்பனுக்குப் போட்டியா... நேத்து பெய்த மழையில முளைச்சிருக்கிற அந்தக் காளான் நீங்கதானா?'' ஏளனமாக வந்த அவனுடைய குரல், அவளை சற்று இறுகச் செய்தது.

உடனே, ''இல்லை... என் பாட்டி வீட்டுக்கு உரிமையோட வந்திருக்கற பேத்தி!'' அவள் பதிலடி கொடுத்ததும், தோளை குலுக்கி கைகளை விரித்து நக்கலாகச் சிரித்தான் அவன்!

''ஓ! பாட்டி உயிரோட இருந்தவரைக்கும், எப்படி இருக்காங்கன்னு, அவங்களை ஒரு தடவை கூட எட்டிப் பார்க்காத பேத்தி... அதுவும் ஆசைப் பேத்தி... இல்லை?'' கண்கள் இடுங்க ஒருவிதக் கூர்மையுடன் கேட்டான்.

அவளுக்குள்ளும் வீம்பு வர, ''சாரி! நான் உங்ககிட்ட எதையும் விளக்க வேண்டிய அவசியமில்லைன்னு நினைக்கிறேன்!'' சுள்ளென்று கூறினாள்.

உடனே அவன் விழிகள் வியப்பும் கூர்மையுமாய், நம்ப இயலாத ஒரு தன்மையைச் சுமந்து, அவளையே ஊடுருவின.

பிறகு, ''ஆமாமாம்! இப்ப, மத்தவங்ககிட்டே விளக்கம் கேக்க வேண்டிய நிலையில இல்ல நீங்க இருக்கீங்க!''

''ஹூம்... நான் அதை மறந்திட்டேன்... நீங்க கூட பழசை எல்லாம் மறந்திட்டீங்க போலருக்கு! நான்தான் பழைய மாதிரி நினைச்சி கேட்டுட்டேன்!''

நக்கலாக அவன் முடிக்கும்போதே, இடை மறித்தார் ரேணுகா!



''என்னங்க... இவர்தான் நீங்க ஹாஸ்பிடல்லே இருந்தப்ப ரொம்ப உதவினதா, சொன்னேனே அந்த ப்ரதீப்!'' என்று கணவருக்கு அறிமுகம் செய்தார்.

உடனே வேகமாக முன்னால் சென்று நெகிழ்ச்சியுடன் அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டார் நாகராஜ்!

''ரொம்ப... நன்றி தம்பி! ரேணுகா எல்லாம் சொன்னா! உங்களைப் பாத்து எல்லாத்துக்கும் நன்றி சொல்லணும்னு நினைச்சிட்டிருந்தேன்... ஆனா... இது மாதிரி ஒரு சந்தர்ப்பத்துல சந்திக்கிற மாதிரி ஆயிடுச்சி! தேங்க்யூ'' சிறு வருத்தம் கலந்த நன்றியுடன் கூறினார்.

''பரவாயில்லை அங்கிள்! என்னை ஆன்ட்டியாவது ஞாபகம் வச்சிருக்காங்களே... சந்தோஷம்! சிலர் பணம் வந்தவுடனே எல்லாத்தையும் மறந்துடறாங்க.''

ஓரக் கண்ணால் அவளையே நோக்கியபடி சிறு சினத்துடன் கூறினான்.

ஒரு வித இறுக்கத்துடன் திரும்பிக் கொண்டவளுக்கு, உள்ளூர ஒருவித உறுத்தல் வருவதாய்!

பிறகு அவனிடம் விடைபெற்றுக் கிளம்பியபோது, அவனுடைய பார்வை யோசனையுடன் அவளையே தொடர சௌந்தர்யாவின் நினைவுகளும் அவனையே ராட்டினமாய் சுற்றின.

* * *

பிறகு வீட்டுக்கு வந்தபோது அனைவரும் சாப்பிட்டிருக்க, மாலதி மட்டும் அவர்களுக்காகக் காத்திருந்தாள்.

சௌந்தர்யாவைக் கண்டதும், ''வாம்மா! எல்லாரும் முதல்லே சாப்பிட வாங்க! உங்களுக்காகத்தான் காத்திட்டிருந்தேன்'' பரிவுடன் கூறினாள்.

12.02.2009 00:37

"என்க்கா? எங்களுக்காக ஏன் நீங்க வெயிட் பண்ண ணும். சாப்பிட்டுருக்க வேண்டியதுதானே?"

உரிமையுடன் அவள் கேட்க, "இந்த வீட்டுக்கு நீ உரிமையுள்ளவன்னாலும் உங்க அப்பா வீட்டு மாப்பிள்ளை இல்லையா?". சிறு முறுவலுடன் கூறி விட்டு சாப்பாடு பரிமாற ஆரம்பித்தாள் மாலதி!

முகம் கழுவி வந்து சாப்பிட்ட போது சாப்பாட்டில் சில உணவு வகைகள் வித்தியாசமான சுவையில் இருந்தன.

"இதெல்லாம் என்னக்கா? டேஸ்டே வித்தியாசமா இருக்கு" ஆர்வத்துடன் விசாரித்தாள் அவள்.

"இதெல்லாம் இங்கே கோவானியன் ஸ்பெஷல் சௌந்தர்யா! இது கபீதல். இது விண்டலுலோ... இந்த ஸ்வீட்டுக்கு பேர் டெட்ரியா! சாப்பிட்டு பாருங்க... நல் லாருக்கும்!"

சாப்பிட்டபோது எல்லா உணவு வகைகளுமே தேர்ந்த சுவையுடன் தயாரிக்கப்பட்டிருந்தன.

"எல்லாமே ரொம்ப நல்லாருக்குக்கா! புது இடமாச்சே! எல்லாரும் எப்படிப் பழகுவாங்களோன்ற பயத்தோடவே வந்தோம்... உங்களைப் பாத்தவுடனே எல்லாம் பறந்து போயிடுச்சி!" எங்களை வரவேற்க இந்த வீட்டிலே நீங்க ஒருத்தராவது இருக்கீங்களே!"

சிறு சோகமும் சந்தோஷமுமாக உரைத்தாள்.

"தேங்க்ஸ்மா! கொஞ்ச நாளாச்சுன்னா எல்லாருமே உங்களை ஏத்துப்பாங்க" தேறுதலாகக் கூறிவிட்டு அவரும் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார்.

சிறிது நேரத்தில் ஒரு கிறீச்சிட்ட குரல் அவளை நிமிரச் செய்தது.



"அக்கா! இதுக்காகத்தான் பசிக்கலைன்னு எங்க கூட சாப்பிட மறுத்தீங்களா?

"விருந்தும், மருந்தும் மூணு நாள்தான்னு அவங்க கிட்டே சொல்லுங்க!

"தகுதியில்லாதவங்களுக்கெல்லாம் ரொம்பத்தான் மரியாதை குடுக்கறீங்க" நக்கலாக வந்தது நளினியின் குரல்!

"இல்லை..." அவள் தடுமாறும்போதே இடைமறித் தாள் சௌந்தர்யா!

"மிஸ். நளினி! எங்க தகுதி என்னன்றது எனக்குத் தெரியும்... அதை விட நல்லா உங்களுக்கும் புரிஞ் சிருக்கும்... இது என் பாட்டி வீடு... இப்ப எங்க வீடு! நீங்கதான் விருந்துக்கு வந்திருக்கறவங்கன்றதை மறந் திட்டீங்க போலருக்கு! ஆனா ஒரே ஒரு மாற்றம்... விருந்தும் மருந்தும் இங்கே மாசக் கணக்குல நடக்கும் போலிருக்கு... உங்க விஷயத்துல!"

ஏளனமான குரலில் அவள் பதிலடி கொடுக்க, ஒரு நிமிடம் அசந்து போய் நின்று விட்டாள் நளினி!

மறு கணமே உண்மை உறைத்துவிட, முகம் சுருங்கி கண்கள் கலங்கிவிட சட்டென்று உள்ளே ஓடி விட்டாள்.

உடனே மாலதியிடம் திரும்பியவள், "சாரி! என்னைத் தப்பா எடுத்துக்காதீங்க! அவங்க பேசினதுக்கு பதில் சொல்ல வேண்டியதாயிடுச்சு" மெல்லிய குரலில் கூறினாள்.

அவள் பதிலுக்கு புன்னகைத்த விதமே, தனக்குப் புரிகிறதென்று உணர்த்துவதாய்!



12.02.2009 00:37



# 12

மறுநாளே மீன் பண்ணையையும், மீன் பதனிடும் தொழிற்சாலைகளையும் பார்வையிட, அவர்களை அழைத்துச் சென்றார் விமல்நாத்!

பெரும் செல்வந்தர்கள் அந்த ஊரில் ஐரோப்பிய நாகரிகத்தில் உடுத்தியிருக்க, மிகவும் வயதானவர்கள் போர்ச்சுகீசிய முறைப்படி ஆடை அணிந்திருந்தனர்.

கோல்வா கடற்கரைப் பகுதியில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை, மீன் பிடிப் படகுகள் கரையோரம் நிறுத்தப் பட்டிருந்தன.

ஆர்வத்துடன் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தபோது தான் அந்த மேனேஜர் எல்லாவற்றையும் விளக்கினார்.

"வணக்கம் மேடம். இனிமே நீங்களும் இந்த படகுக் கம்பெனியில ஒரு பார்ட்னர்ன்னு வக்கீல் சொன்னாங்க. ரொம்ப சந்தாஷம்மா!" என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார்.

அவளுக்கோ மிகவும் ஆச்சர்யம்!

"வணக்கம் சார்... எனக்கு ஒரு சின்ன சந்தேகம்! உங்க எல்லாருக்கும் தமிழ் நல்லாப் பேச வருதே" வியப்புடன் கேட்டாள்.

"ஆமாம்மா... எல்லாருமே தமிழர்கள் தானே! பெரியய்யா காலத்துலருந்தே நிறைய தமிழர்கள் இங்கே வேலை செய்யறோம்" பெருமையுடன் பகர்ந்தார்.

"ஓ!" என்றவளிடம், "நம்ம கம்பெனிக்கு நூத்துக்கும் மேல மீன் பிடிப் படகுகள் இருக்கும்மா! ஏலம் போனது



போக மிச்சமெல்லாம் மீன் பதனிடுற தொழிற்சாலைக்குப் போயிடும்... இங்கே கடற்கரையோரமா சின்னச் சின்ன உப்பங்கழிகள் நமக்கு இருக்கு... அங்கேயும் இயற்கை யாவே மீன்களை வளர்க்கற வசதியும் இருக்கு! குளிர்சாதன வசதியோட ஒரு பெரிய பேக்டரியில் மீன்கள் பாதுகாத்து பதப்படுத்தப்படுது" உற்சாகத்துடன் விளக்கினார்.

தன்னுடைய தாத்தா ஜீவரத்னம், எவ்வளவு பாடுபட்டு இந்தத் தொழில்களையெல்லாம் உருவாக்கி விஸ்தரித்து திறமையுடன் நிர்வகித்து, இந்த நிலைக்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருப்பார் என்று எண்ணும்போதே, பெருமிதமும் சிலிர்ப்பும் வந்தன.

அதனால்தான் இவையெல்லாம் கைவிட்டுப் போய் விடாமலிருக்க, பாட்டி அப்படி ஒரு முடிவெடுத்திருக் கிறாரென்பதும் புரிவதாய்!

அவருடைய இறுதி விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற உறுதியும் வேட்கையும் அவளுள் நிறைந்தன.

எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு வரும் போதுதான் தன் மூதாதையரின் பாரம்பரியமும், செல்வச் செழிப்பும் புரிந்தன.

நாளை, அவர்களுடைய ஹோட்டலையும், ரெடிமேட் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலையையும் பார்வை யிடச் செல்லலாம் என்று விமல்நாத் கூறினார்.

அன்று மாலையே, எதிர் பாராத விருந்தாளியாக ப்ரதீப் வந்திருந்தான்.

அவனைக் கண்டதும், முகமலர்ச்சியுடன் ஓடிச் சென்று வரவேற்று கைகளில் தொற்றிக் கொண்ட நளி னியைப் பார்த்தபோது, சிறு எரிச்சலாய்!

12.02.2009 00:37

ஜீவா, மகிழ்ச்சியுடன் அவனை அணைத்து வரவேற்க, மாலதிதான் அவர்களை அவனிடம் அறிமுகப்படுத்தினாள்.

ஆனால் உடனே இடைமறித்தான் அவன்... "மாலதி நாங்க முன்னாடியே ஒருத்தருக்கொருத்தர் சென்னையில அறிமுகமானவங்கதான்! நேத்தே, பாத்துப் பேசிட்டோம்" என்றான்.

"ஆமாம்மா! சென்னையில எனக்கு ஹார்ட் ஆபரேஷன் நடந்தப்ப ப்ரதீப் தம்பிதான் ரத்தம் குடுத்து உதவி, தன் டாக்டர் நண்பர்கிட்ட சொல்லி என்னை நல்லா கவனிச்சிக்கிட்டாங்க!"

பெருமையுடன் நாகராஜ் உரைக்க, அருகில் நின்றிருந்த நளினியின் முகம் கறுத்து சிறுப்பதை ஓரக்கண் பார்வையில் உணர்ந்தாள் அவள்.

ஏனோ அவளை உடனே சீண்ட வேண்டுமென்ற வேகம் வந்தது.

"ஆமாம் மாலதிக்கா! அவர் என் ப்ரெண்டுக்கு ரொம்ப நெருங்கிய நண்பர்! அது மூலமாதான் பழக்கமானாரு! நேத்து ரொம்ப நேரம் பேசிட்டிருந்தோம்."

வரவழைக்கப்பட்ட போலியான முறுவலுடன் பகர்ந்தவளை ஒற்றை புருவம் உயர்த்தி இடுங்கிய கண்களால் ஏறிட்டான். மறு கணம் தோளைக் குலுக்கியபடி, நண்பனிடம் திரும்பினான்.

"ஜீவா! நாளைக்கு நம்ம ஹோட்டலோட ஆனிவர்சரி டேயாச்சே. ஈவினிங் பார்ட்டி இருக்கில்லை?" ஆவலுடன் விசாரித்தான்.

"ம்... எல்லாத்தையும் ஹோட்டல் மேனேஜர் பாத்துப்பாரு... நிர்வாகம்தான் இப்ப கைமாறப் போகுதே!"



பெரும் காழ்ப்புணர்ச்சியுடன் அவன் கூற சட்டென்று அங்கு ஒருவித அமைதியும் இறுக்கமும் சூழ்ந்தன.

"ஓ! அது இப்போ கைமாறிடுச்சா? ப்ச்..."

மெதுவாக முணுமுணுத்தபடி நண்பனைத் தொடர்ந்து முன்புறமிருந்த அலுவலக அறைக்குள் சென்றவனது விழிகள் கடும் வெறுப்பை உமிழ்ந்தன.

* * *

மறுநாள் காலையில் ரெடிமேடு உடைகளை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு சென்றிருந்தனர்.

அதை மேலும் நவீனப்படுத்த என்ன செய்யலாமென்ற பெருத்த யோசனையுடன் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பி வந்தாள் சௌந்தர்யா.

மாலையில் ஹோட்டலில் விழா நடப்பதால், அழகிய டிசைனர் புடவையணிந்து தயாரானவள், அனைவருடனும் கிளம்பி அவர்களுடைய ஹோட்டலுக்குச் சென்றாள்.

அவள் எதிர்பார்த்ததை விட அந்த ஹோட்டல் பெரிதாக இருக்க, விமல்நாத் அனைத்து ஊழியர்களுக்கும் அவளை அறிமுகப்படுத்தினார்.

விழா நடக்கும் ஹாலுக்கு வந்தபோது, அழகிய பல வண்ண மலர்களால், அந்த இடமே வெகு ரம்யமாக அலங்கரிக்கப் பட்டிருந்தது.

அவளுக்கும், அவள் குடும்பத்தினருக்கும், ராஜ மரியாதை அளிக்கப்பட, ஜீவா பெரிதும் ஒதுங்கியே இருந்தான்.

ப்ரதீப்புடன் சுற்றிக் கொண்டிருந்த நளினியைப் பார்த்தபோது, புரியாத ஏதோ ஒரு உணர்வு வந்தது!

அறிமுகப்படலம் முடிந்து, விழாவின் இறுதியில் சாப்பிட்ட பிறகு, நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்த

12.02.2009 00:38

[second photograph of the same pages 68–69]

செயற்கை மலர்களை ரசனையுடன் பார்வையிட்டபடி நின்றிருந்தாள் அவள்.

திடீரென்று யாரோ அருகில் வர, பதட்டத்துடன் திரும்பியவளின் விழிகளில், ப்ரதீப்பின் உருவம்பட, பார்வை தழைந்து மலர்களிடமே பதிந்தது.

அவன் பார்வையும் அவளைத் தொடர, மறுகணமே விழிகள் இடுங்கி, உதடுகள் ஏளனமாக வளைந்தன.

"ம்... நான் கூட முதல்லே உன்னைப் பாத்தப்ப, நல்ல வாசனை உள்ள பூஜைக்கேத்த பூவாத்தான் நினைச்சேன்... இப்ப தானே தெரியுது... நீ பணத்துக்காக என்ன வேணா செய்யற... பாக்க மட்டுமே கலர்ஃபுல்லா இருக்கற வெறும் காகிதப்பூ அப்படின்னு!"

உடனே விதிர்த்து உறைந்தவள், மறுகணமே தெளிந்தாள்.

"நான் அப்படிப்பட்டவ இல்லை... பணத்துக்காக நான் வரலை... என் பாட்டியோட கடைசி விருப்பத்துக்காக வந்தேன்."

"ஓ! இதை நாங்க நம்பணுமா?"

ஏளனமாகக் கேட்டுவிட்டு அவன் திரும்ப, "எதுக்கோ தெரியுமா கற்பூர வாசனைம்பாங்க... அதையே கொஞ்சம் மாத்தி சொல்றேன்... எதுக்கோ தெரியுமா... இந்தப் பூவிலயும் வாசமுண்டுன்னு!"

அவள் முடித்தபோது, அந்த வார்த்தைகள் காற்றில் மட்டுமே கலந்தன... ப்ரதீப் விலகிச் சென்றிருந்தான்.

முதல் நாளென்பதால், எல்லா இடத்தையும் சுற்றிப் பார்த்து விட்டு விழா முடிந்ததும் அவள் கிளம்பினாள்.

முதல் வாரம் முழுவதும், தொழில் முறையில் எல்லா நிறுவனங்களையும் பார்வையிடவே அவனுக்கு நேரம் சரியாக இருந்தது.

* * *

அந்த வாரக் கடைசியில் மூவரும் அவர்களுடைய காபித் தோட்டமிருக்கின்ற மலைப் பகுதிக்குச் சென்றனர்.

அந்த சிறிய மலையும், அவர்களுடைய விருந்தினர் மாளிகையும், அவளை மிகவும் கவர்வதாய்!

அங்கேயே இரண்டு நாட்கள் தங்கிச் செல்லலாமென்று விமல்நாத் கூறியிருந்ததால், அதற்கேற்றாற் போல் தயாராகவே மூவரும் கிளம்பியிருந்தனர்.

பொழுது இருட்ட ஆரம்பித்த பிறகே அங்கு வந்து சேர்ந்திருந்ததால், கருமையிருட்டில், சுற்றுப்புற இயற்கையை அவளால் ரசிக்க முடியவில்லை.

## 13

மறுநாள்!

விடியல்... இருகரம் நீட்டி வெளிச்சக் கதகதப்பை சூரியனிடமிருந்து யாசித்துக் கொண்டிருந்தது.

மெல்ல உறக்கம் கலைந்து எழுந்த ரேணுகா மகளைக் கண்டதும் பெருமையுடன் புன்னகைத்தார்.

கூந்தல் முடிகள் செல்லமாய் முன் நெற்றியில் சில் மிஷம் செய்ய, கன்னக் குழியில் அழகிய புன்னகை உறைந்திருந்தது.

12.02.2009 00:38

உறக்கத்திலும் பு...

எழிலாய் விகசித்திருந்த முகத்தை அவர் ரசிக்கும் போதே மெதுவாக இமை திறந்தாள் அவள்.

சோம்பலாக கைகளை நீட்டி தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டவள், "மணி என்னம்மா?" என்றாள்.

"ம்... ஆறாகப் போகுது!"

அவர் கூறியதுமே துள்ளியெழுந்தவள், "ஒரு நிமிஷம்மா! நான் பல் துலக்கிட்டு வந்திடறேன்...

"வெளியே போய் சுத்திப் பார்க்கலாம்" உற்சாகத்துடன் ஓடினாள்.

பிறகு அவள் திரும்பி வந்ததும் இருவருமாக வெளியே வந்தபோது மெல்லிய பனி வாடைக் காற்று அவர்களை வரவேற்றுத் தழுவியது.

அந்த பங்களாவின் முன்னால் அழகுற அமைக்கப் பட்டிருந்த தோட்டத்தில், குரோட்டன்ஸ், ரோஜாக்கள், டேலியா, ஜெனியா, சால்வியா மற்றும் பல வகையான செடிகள் பசுமையும் வண்ணமுமாய் முகம் மலர்த்தி சிரித்தன.

மெதுவாக அதை ரசித்தபடி நடந்து பின்புறம் சென்ற போது, கண்ணுக்கெட்டிய தூரம் வரை அடர்த்தியாய் ஓக், பைன், சைப்ரஸ் மரங்கள் மலைச் சரிவில் நிறைந்திருந்தன.

மனம் இயற்கையில் பதிந்து லேசாகி விடத் திரும்பிய போதுதான், பங்களா வாசலில் எதிர்பாராத விதமாக ப்ரதீப்பை சந்தித்தாள் அவள்.

"ஓ! இங்கேயும் வந்தாச்சா?" ஒரு புருவச் சுளிப்புடன் கேட்டபடி சோம்பலாக மேலிருந்து கீழ் வரை அவளைப் பார்வையால் வருடினான் அவன்.

உடனே தோளைக் குலுக்கி நிமிர்ந்தவள், "அதை நான் கேக்கணும்! நேத்து நான் வந்தப்ப, உங்களை இங்கே பார்க்கலையே?" நக்கலாகவே கேட்டாள்.

"ஹூம்! உன்கிட்ட அட்டெண்டன்ஸ் குடுத்துட்டு தான் இங்கே வரணும்னு இதுவரைக்கும் யாருமே என்கிட்டே சொல்லலையே?"

இரு கைகளையும் விரித்து அலட்சியமாக மொழிந்து விட்டு வீட்டின் பின்புறமாகச் சென்றான் அவன்.

கம்பீரமான நடையுடன் சென்றவனையே அவள் அளவிட, "சௌந்தர்யா! அப்பா எழுந்திரிச்சிட்டாங்களான்னு பாத்துட்டு வரேன்" என்றபடி யோசனையுடன் விலகிச் சென்றார் ரேணுகா.

இவன் எதற்காக இங்கு வந்தானென்ற யோசனையுடன் உள்ளே சென்று தயாராகி அவள் வந்தபோது தான் அந்த அதிர்ச்சி தருகின்ற விஷயத்தைக் கூறினார், அந்த காபித் தோட்டத்தை நிர்வகித்து வருகின்ற மேனஜர்...

"ப்ரதீப் சார் வந்திருக்காங்கம்மா! இங்கே ஒரு பேக்டரி கட்டணும்னு சின்னய்யா முடிவெடுத்திருக்காங்க! உரத் தொழிற்சாலைக்கு தேவையான கருவிகளை தயாரிக்கிற தொழிற்சாலை!

"அது விஷயமா கவர்ன்மெண்ட் அப்ருவலுக்கு காத்திட்டிருக்காங்க! அதான் அந்த இடத்தைப் பார்வையிட, ப்ரதீப் சார் முதல்லே வந்திருக்காங்க!" மெல்லிய குரலில் கூறினார்!

"ஓ!" என்றவளுக்கு அவருடைய குரலிலிருந்த சிறு கவலையும் வருத்தமும் உடனே புரிந்து போயிற்று!

உடனே "எங்கே பேக்டரிக்கு இடம் ஒதுக்கியிருக்காங்க?" மெதுவாகக் கேட்டாள்.

12.02.2009 00:38

"நம்ம பங்களாவுக்குப் [illegible]... அந்த இடத்திலதான்!" தயக்கமும் வருத்தமுமாய் கூறினார்.

"எங்கே! அந்த அழகான சோலையிலயா? கடவுளே! ஒரு மரம் வச்சி பராமரிக்கிறதே எவ்வளவு கஷ்டம்... இவ்வளவு மரங்களையும் அழிக்கறதா...?"

மனதிற்குள் பெரும் வேதனை மண்டியது... இவர்கள் என்ன கடவுளா? இந்த மலையை இவர்களா படைத்தனர்? இதை அழித்து ஒரு தொழிற்சாலை கட்ட நினைப்பது எவ்வளவு கொடூரம்?"

உடனே இது பற்றி விமல்நாத்திடம் பேசி ஒரு முடிவெடுக்க வேண்டுமென்ற உறுதியுடன் உள்ளே சென்றாள் அவள்.

நாகராஜ் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க ரேணுகாவை அவருக்கு துணையாக வைத்துவிட்டு காபித் தோட்டத்தை சுற்றிப் பார்க்கச் சென்றபோது அங்கு ப்ரதீப்பின் அறிகுறியே இல்லை!

முன்புறப் படிகளில் இறங்கியபோது, கருஞ்சிவப்பு பழங்களும், பசுமையான இலைகளுமாய் காபிச் செடிகள் வண்ண விரிப்பாய் கண் சிமிட்டின.

எஸ்டேட்டில் காபிக் கொட்டைகளை சேகரித்து பதப்படுத்தி தயார் செய்யும் எந்திரங்கள் நிறைய இருந்தன.

அங்கு நிறைய காபித் தோட்டத் தொழிலாளர்கள் ஆஜர் நோட்டில் பதிவுக்காக வரிசையாக காத்திருந்தனர்.

பிறகு நோட்டில் பெயர் கொடுத்துவிட்டு காபிப் பழங்களை சேகரிக்க, எஸ்டேட் பாதையில் அவர்கள் நடக்க ஆரம்பித்தபோது மேனேஜரிடம் திரும்பினாள் அவள்.

"இவங்க எல்லாரும் என்ன வேலை செய்வாங்க?" ஆவலுடன் வினவினாள்.

"காபிக் கொட்டை சேகரிக்கறது... களைகளை வெட்டறது. உரம், மருந்து போடறது, தண்ணீர் பாய்ச்சறது இப்படி எல்லா வேலைகளும் செய்வாங்கம்மா" என்றார் பணிவுடன்.

"இவ்வளவு அழகான மலையில இருக்கறதுக்கு எவ்வளவு குடுத்து வச்சிருக்கணும், இல்லை?" பரவசம் விரவித் தெரிந்தது அவள் குரலில்!

"அப்படி சொல்ல முடியாதும்மா சௌந்தர்யா!

"நாம எப்பவாவது வரோம்... அதனால அப்படி இருக்கும்!

"அவங்களுக்கு காலையில எழுந்து வேலைக்கு வந்தா சாயந்திரமாயிடும். அப்புறம் வீட்டுக்குப் போயி சமைச்சி சாப்பிட்டுப் படுத்தா காலையில இங்கே வரத்தான் சரியா இருக்கும். ரொட்டீனாப் போயிடும்" விமல்நாத் சிறு முறுவலுடன் பகர்ந்தார்.

பிறகு எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்தபோது. அங்கு அரணாய் நின்றிருந்த மரங்களிலிருந்து தென்றல் வந்து தீண்டி இதமாக்கியது.

பங்களாவிற்குத் திரும்பியவுடன் விமல்நாத்திடம் கூறிவிட்டு பின்புறமிருந்த அந்த மரச் செறிவு நிறைந்த சோலைக்குச் சென்றாள் அவள்.

மெதுவாக அந்த ஒற்றையடிப் பாதையில் நடந்தபோது திரும்பிய பக்கமெல்லாம் விசுவரூபித்து நின்ற மரங்கள் 'உஸ்'ஸென்று காற்றில் ஒருவித சுருதி லயத்தை சேர்த்து சப்த சாகித்யம் செய்து கொண்டிருந்தன.

இடையிடையே பசுங் கொடிகளும், வித்தியாசமான மணத்தை நாசிக்கு அறிமுகப்படுத்திய குத்துச் செடிகளும், சுகம் சேர்த்தன.

மனதிலிருந்த [illegible] எல்லாம் மாயமாக, மனம் கவிதை பாடியது.

12.02.2009 00:38

விடியல...
இரவும் பகலும்...
இனிதாய் கைகுலுக்கும் நேரம்!
ஆனால்...
முப்பது நாளும்
விழித்திருக்க ஆசை...
நிலவுக்கு!
நரம்புகளின் நலம் விசாரிக்க...
தாவியணைக்கும் காற்றின் ஈரம்..!
ஆனால்...
மறையாதிருக்கும்
வரம் பெற ஆசை...
ஆதவனுக்கு!
பூமியின் மௌனம் கலைத்த...
பறவைகளின் பட்டிமன்றம்...
ஆனால்...
உறக்கம் முற்றுப் பெறா
மயக்க நிலை தேவை...
மழலைகளுக்கு!
மரித்துப் போன மலர்களின் சருகுகள்...
மண் தொடும் நேரம்!
ஆனால்...
யாரும் தொடாத
ஒப்பந்தம் தேவை...
மலருக்கு!

மனிதா!
உனக்கோ...
பூமியை... வானை
வசப்படுத்த ஆசை!

சில்லென்று மழைநீரை யாரோ முகத்தில் வாரியிறைத்தாற் போல் அவளுடைய கவிதை உலகம் கலைந்தது... சருகுகளில் அழுத்தமாகப் படிந்த காலடியோசையைக் கேட்டு!

எதிரே, அவளையே அலட்சியமாகக் கூர்ந்தபடி இரு பாண்ட் பாக்கெட்டிலும் கைகளை நுழைத்து கம்பீரமான நடையுடன் வந்து கொண்டிருந்தான் ப்ரதீப்.

அவன் அருகில் நெருங்கியவுடன், "ஒரு நிமிஷம்" என்று தடுத்தாள் அவள்.

ஒற்றைப் புருவம் மேலேற, இடுங்கிய கண்களுடன் அவளைக் கூர்மையாக அளவிட்டவனது உதடுகள், கேலியில் சுழித்தன.

"இந்த இடத்துல பேக்டரி கட்டப் போறதா எஸ்டேட் மேனேஜர் சொன்னாரு! இவ்வளவு அழகா சோலை மாதிரி ஏக்கர் கணக்குல வளர்ந்திருக்கற நூத்துக் கணக்கான மரங்களை அழிச்சிட்டு ஒரு தொழிற்சாலை ஆரம்பிச்சுத்தான் ஆகணுமா?

"அதனால இந்த மலையோட இயற்கை அழகும், தண்ணீரும், பொல்யூஷனே இல்லாத இந்தக் காத்தும் சுற்றுப்புறமும் பாதிக்கப்படாதா?"

அமர்ந்த குரலில் சீற்றத்துடன் கேட்டவளையே பார்த்திருந்தவன் நமட்டுச் சிரிப்புடன் பதிலளித்தான்.

"ம்! சில ஆக்கப் பூர்வமான முன்னேற்றங்களுக்கு இது மாதிரி சில அழிவுகளை சந்திச்சுத்தான் ஆகணும். இது

12.02.2009 00:38

உலக நியதி! சில நேரங்களில் ... இழந்துதான் இன்னொன்னை அடைய வேண்டியிருக்கும்!'' அலட்சியமாகப் பார்த்தான்.

''ஏன்? வேற இடமே இல்லையா? இங்கே ஏன் வந்து அதைச் செய்யணும்? மலைக்காட்டை அழிச்சித்தான் பேக்டரி கட்டணும்னு இல்லையே? சாதாரண நிலப் பகுதியில தரிசு நிலமா இருக்கற ஏதாவது ஒரு இடத்துல கட்டலாமே?'' விழிகளில் செவ்வரிகள் படரக் கேட்டாள்.

''என்னடா... சோழியன் குடுமி சும்மா ஆடுதேன்னு பாத்தேன்! இப்போ இதுக்கு நீயும் ஓனர்ங்கிற ஆணவத்துல பேசறியா?'' சுள்ளென்று கேட்டு விட்டான்.

உடலும், உள்ளமும் உடனே விதிர்த்துப் போக, ''நல்லதை யார் வேணா சொல்லலாம். ஒரு தவறு நடக்கப் போகுதுன்னா அதைத் தடுக்கற உரிமை எல்லாருக்குமே உண்டு!'' அடிக்குரலில் சீறினாள்.

''இங்கே என்ன தப்பு நடந்துடுச்சி..... இங்கே பேக்டரி கட்டினா, அதிலே நூத்துக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். இதிலே இந்த ஊருக்குப் பொருளாதார ரீதியாவும் நன்மைதான். நாங்க ஒரு தொழிற்சாலை கட்டறதால இந்த மலையோட இயற்கையழகு கெட்டுடாது!''

''இல்லை! முதல்லே நீங்க ஒரு பேக்டரி ஆரம்பிப்பீங்க. அப்புறம் தொழிலாளர்களுக்குன்னு அவங்க தங்க குவார்ட்டர்ஸ் கட்டுவீங்க...

''இப்படியே வரிசையா இந்த இயற்கையான மரக் காடுகளை அழிச்சி நாளடைவில் இதுவும் ஒரு வியாபார ஸ்தலமா மாறிடும்...

''நிச்சயம் இந்த மலையோட அழகும் மாசில்லாக் காற்றும் சிதைஞ்சுதான் போகும். இதுக்கு நான் அனுமதிக்கமாட்டேன்!''

ஆணித்தரமாகக் கூறியவளை ஆத்திரத்துடன் முறைத்தவன், ''என்னடா... இன்னும் எந்த வம்பும் வரலையேன்னு பாத்தேன்... ஆரம்பிச்சாச்சா! ஜீவாவும் நளினியும் சொன்னாங்க... நீ வந்தவுடனே குழப்பம்தான்னு! அது சரியாப் போச்சு!''

''நான் ஒண்ணும் இங்கே குழப்பம் பண்ண வரலை! நியாயத்தை யார் வேணாக் கேட்கலாம்!''

''இது ஜீவாவோட சொத்து... யார் வேணா கேக்க முடியாது!''

''இல்லை... இப்ப இது பொது சொத்து! என்னைக் கேக்காம எதுவும் செய்ய முடியாது... இதுக்கு என் ஒப்புதலும் இப்போ தேவை... அது உங்களுக்குத் தெரியுமா?''

உடனே தோளைக் குலுக்கி முகம் உயர்த்தி சப்தமாக சிரிக்கத் துவங்கினான் அவன்.

அவள் குழப்பமாய் நோக்கும்போதே, சட்டென்று தன் சிரிப்பை நிறுத்தியவன் ''உன்னால தடுக்க முடியாது! ஜீவா ஒரு முடிவெடுத்துட்டா அதை யாராலும் மாத்த முடியாது!'' அழுத்தமான குரலில் முடித்தான்.

அடி வயிறு வரை கலக்கிய கோபத்தில் அவள் உடலே சூடாகியது.

''பாத்துருவோம்! இதை நான் விடமாட்டேன் மிஸ்டர் ப்ரதீப்! வக்கீல்கிட்டே பேசி உடனே ஒரு முடிவெடுக்கறேன்!

''நாம சுவாசிக்க ப்ராண வாயுவும், பூமி செழிக்க மழையும், நிழலும், குளிர்ச்சியும் தர்ற மரங்களை வெட்டிட்டு அப்படி தொழிற்சாலை கட்ட நினைக்கறது முட்டாள்தனமென்றும் சுற்றுப்புற சூழலை மாசுபட செய்யறதுக்கான முயற்சி... வைக்கிறேன்!''

12.02.2009 00:39

''ஏய்! ஏதாவது பணம் ... ஜீவா தருவான்.. வாங்கிட்டு ஓடிடு. ரொம்பத்தான் இந்த இடத்து மேல அக்கறை இருக்கற மாதிரி நடிக்காதே'' ப்ரதீப் ஏளனமாக மொழிந்தான்.

சட்டென்று அவனையே இமைக்காமல் வெறித்தவளின் விழிகளில் பெரும் கோபமும் சிறு வெறுப்பும் நிறைந்திருந்ததை உடனே கண்டு கொண்டான் அவன்.

''என்ன? சிங்கத்து குகைக்குள்ளே வந்து சிறு நரி ஆட்டம் போடுது.. பாத்து... ஒண்ணுமில்லாமப் போயிடப் போறே!''

கேத்தான வார்த்தைகளை வீசினான்.

''இங்கே யாரும் நடிக்கவும் இல்லை! நீங்களும் ஜீவாவும் சிங்கமும் கிடையாது! பணம்! ஹும்.. உங்களுக்கு வேணா அது தான் பெரிசா இருக்கலாம்! ஆனா அதை விட உயர்ந்த விஷயங்கள் உலகத்தில இருக்குன்றதை கூடிய சீக்கிரமே நீங்க புரிஞ்சிப்பீங்க!''

உறுதியுடன் மொழிந்து விட்டு வேகமாகச் சரிவில் இறங்க ஆரம்பித்தவளை, ''ஏய் பெண்ணே! என்ன பயந்து ஓடறியா?'' நக்கலுடன் நிறுத்தியது அவன் குரல்!

தலையை சிலுப்பித் திரும்பியவள், ''இல்லை! இந்த அற்புதமான மண்ணோட... ஜீவ மூலிகைகளைத் தாங்கி நிற்கிற மலையோட, அருமை புரியாத ஒரு... ஹூம்... நான் பேச விரும்பலை!'' சீறிவிட்டு நடக்க ஆரம்பித்தாள்.

மறு கணமே, அவனுடைய கரம், இரும்பெனப் பற்றி நிறுத்தப்பட்டது!

''ஏய்.. என்ன சொல்ல வந்து இப்ப நிறுத்தினே? மலையோட அருமை புரியாத கொடூரன்னா... இல்லை - ராட்சசன்னு சொல்ல வந்தியா?'' எச்சரிக்கும் சினக் குரலில் கர்ஜித்தான்.

''ஓ! உங்களுக்கே உங்களோட மறு பெயரெல்லாம் நல்லாத் தெரியறப்ப, என்கிட்டே ஏன் விளக்கம் கேக்கறீங்க?''

சௌந்தர்யா தன் கையைப் பெரும் பிரயத்தனத்துடன் விடுவித்தபடி, தைரியமாகவே அவனை எதிர்கொண்டு வினவினாள்.

''என்னடி... நீதான் இந்த இடத்துக்கு முதலாளின்ற இறுமாப்புல ரொம்பப் பேசறியா? ஒரு தட்டுத் தட்டினா, உங்க ஊரில போய் விழுவே... தெரியுமா?''

''ம்... மரியாதை ப்ளீஸ்! வாடி போடின்றதுக்கு நான் உங்க மனைவி இல்லை... அதோட என்ன... மிரட்டறீங்களா?''

''நானும், உடனே திரும்பி ஊருக்குப் போயிடலாம்கிற எண்ணத்தோடதான் இங்கே வந்தேன்!

''ஆனா இங்கே என்னை சுத்தி நடக்குற விஷயங்களைப் பாத்தவுடனே, இங்கேயே இருந்து எல்லாத்தையும் சரி பண்ணிடணும்கிற முடிவுக்கு வந்திட்டேன்...''

அழுத்தமான குரலில் கூறிவிட்டு ஒருவித திமிருடன் அச்சமின்றித் தன்னையே எதிர்த்தவளைக் கண்டதும், சிறு யோசனையுடன் அவன் தலையைக் குலுக்கினான்.

பிறகு, ''இதுக்காக ஒரு நாள், நீ ரொம்ப வருத்தப்படப் போறே!'' ஆழ்ந்த குரலில் கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தான்.

பின்னும், ''பாப்போம்.. யாரு வருத்தப் படறாங்கன்னு...'' என்ற அவனுடைய குரல் மெல்லத் தொடர்ந்து பிறகு தேய்ந்தது.



12.02.2009 00:39

## 14

பங்களாவிற்கு வந்து எல்லா விபரங்களையும், அவள் நாகராஜிடம் பகிர்ந்தபோது, அவரும் அவளுக்கு ஆதரவாகவே பேசினார்.

ஆனால் "வேண்டாம் சௌந்தர்யா? நமக்கு எதுக்கு அவங்க இடம்... எதுவேணா செஞ்சுட்டுப் போறாங்க. ஏன் நாம வீணா ப்ரச்னை பண்ணணும்?" பயந்த குரலில் ரேணுகா கூறினார்.

"இல்லம்மா! இப்போ அது எனக்கும் சொந்தமான ஒரு இடம்! நான் இதுபத்தி உடனே விமல்நாத் சார் கிட்டே பேசப் போறேன்."

உறுதியுடன் கூறிய மகளையே வாஞ்சையுடன் வருடி அவளை ஆமோதித்தார் நாகராஜ்!

அன்று மாலையே இது பற்றி அவரிடம் பேசியபோது, இப்போது அவளுடைய ஒப்புதலில்லாமல் எந்தக் காரியமும் செய்ய முடியாதென்று கூறினார் விமல்நாத்.

ஒருவித ஆறுதலுடன் தோட்டத்திற்குச் சென்றபோது, வானம் மப்பும் மந்தாரமுமாக இருண்டிருந்தது.

எங்கிருந்தோ ஒரு குயில் சோகத்வனியில் கூவியது.

பலவித மலர்கள், மூலிகைச் செடிகளின் நறுமணமும் சேர்ந்து, வெகு சுகந்தமாய் நாசியில் பரவியது.

கண்களை மூடி மெல்ல அருகிலிருந்த மரத்தில் சாய்ந்து அந்த மணத்தை ஆழ்ந்து நுகரும்போதே, மழை



வருவதற்கு முன்பு வருகின்ற மண் வாசனையையும் சுமந்து வந்தது... மெலிதாய் வீசிய மலைக்காற்று!

இதயம்... கவிதையைத் துணைக்கழைத்தது!

தென்றல்காற்றின்
தெம்மாங்கு சப்தம்...
தேன் மலர்களின்
தேவ நிசப்தம்...
சில் வண்டுகளின்
ரீங்காரம்...
சிலுசிலுக்கும்
குளிர் நேரம்...
வேருக்கு குடையாகும்
விழுதுகள்...
வானுக்கு ஒட்டடை
அடிக்கும் மரங்கள்...
மரங்களுக்கு நிழல்தரும்
மேகங்கள்...
மண்வாசனை ஏந்தி வரும்
மழைத்தாரைகள்!

மனம் மயங்கி விட அப்படியே ஒரு மரத்தில் சாய்ந்து கண் மூடியபோது, மரங்கள் எவ்வளவு பயனுள்ளவை என்பதை, அந்த ப்ரதீப்பிற்கு எப்படிப் புரிய வைப்ப தென்ற ஆயாசமும், வருவதாய்!

திடீரென்று ஒலித்த குரல் அவளைக் கலைத்தது.

"என்ன சௌந்தர்யா! இங்கே வந்து என்ன செய்யறே?" ரேணுகாதான் [illegible] தேடி வந்திருந்தார்.

12.02.2009 00:39



"ஒண்ணுமில்லம்மா! என்னவோ நினைச்சி இங்கே வந்தேன். ஆனா இந்த இடம் என்னை விடாது போல ருக்கு!"

ஒரு பெருமூச்சுடன் கூறிவிட்டு வாஞ்சையுடன் கைகளைப் பற்றிய தாயைப் பின் தொடர்ந்து சென்றாள்.

* * *

மறுநாள் காலையில், குளித்து விட்டு மெதுவாக நடந்த போது, பின்புற மரச்சோலையருகே புதிதாக நிறைய மனிதர்கள் நின்றிருந்தனர்.

அங்கிருந்த காவலாளியிடம் விசாரித்தபோது, தொழிற்சாலை கட்டுவதற்கு அந்த இடம் ஏற்றதாவென்று பரிசோதிக்கவும், அப்ருவல் வழங்கவும் அரசாங்க அதிகாரிகள் வந்திருப்பதாகக் கூறினான்.

உடனே உள்ளே சென்று, விமல்நாத்திடம் விபரம் கூறி அழைத்தவள், வேகமாக அங்கு சென்றாள்.

விமல்நாத் தயக்கத்துடன் சென்று அந்த அதிகாரிகளிடம் பேச, ப்ரதீப்போ கடும் ரௌத்ரத்துடன் திரும்பினான்.

"உன் மனசுல நீ என்ன நினைச்சிட்டிருக்கே? இத்தனை நாள் எங்கேயோ இருந்துட்டு... இப்போ சொத்து வருதுன்னவுடனே பல்லை இளிச்சிட்டு வந்து இங்கே எல்லாரையும் ஆர்டர் பண்றியா?

"இது என் ஜீவாவோட பூமி! இங்கே அவன் விருப்பப்படிதான் எல்லாம் நடக்கும்! இதை எப்படி வேணாலும் அழிப்போம்... பேக்டரி கட்டுவோம்... யார் கிட்டே பேசறோம்கிறதை மறந்து ஆடாதே!"

கடும் சினக்குரலில் அவன் எச்சரிக்க, பெரும் விதிர்ப்பு வந்தது அவளிடம்!



"மரம்கிறது ஒரு உயிர் மாதிரி! காத்து, மழை, நிழல், கனிகள் எல்லாம் தந்து நம்மை மகிழ்விக்கற ஒரு ஜீவன்!

"இப்படி மரத்தை வெட்டிட்டே போறதாலதான் சரியா மழையில்லை... பொல்யூஷனும் அதிகமாகுது!

"ரொம்ப அவசியம்னா ஒரு மரத்தை வெட்டலாம்... ஆனா அதுக்கு முன்னாடி ஒரு மரக்கன்றையாவது நடணும்!

"இப்படி ஆயிரக்கணக்கான மரத்தை வெட்டறது இயற்கைக்கு நாம செய்யற பெரிய துரோகம்...

"அதோட, இந்த இடம் எங்க மூதாதையர் வாழ்ந்த இடம். அவங்க விதை விதைச்சு நட்டு பராமரிச்ச இந்த மரங்களை நான் வெட்ட விடமாட்டேன்."

விழிகளால் எரித்தபடிப் பொங்கியவளையே வெறுப்புடன் ஏறிட்டவன், "என்ன... பெரிய ரெவல்யூஷனிஸ்டா நீ! ரொம்பப் பேசினே, அடையாளமே இல்லாம பண்ணிடுவோம்! ஜாக்கிரதை!" கோபத்தில் இரைந்தான்.

"ஹூம்! எப்படி சார் இப்படி நடிக்கிறீங்க? அங்கே கோயம்புத்தூருக்கு வந்தா ரத்ததானமெல்லாம் செஞ்சு பெரிய தர்மப்பிரபு மாதிரி நடந்துக்கறீங்க!

"இங்கே வந்து பாத்தா அராஜகத்தோட மொத்த உருவமா இருக்கீங்க! உங்களுக்கு ரெண்டு முகமா...? சே!"

வெறுப்பும், சினமுமாக சீறி விட்டு முன்னே சென்றாள்.

அதற்குள் விமல்நாத் அவர்களிடம் பேசிவிட்டிருக்க, அந்த அதிகாரிகள் ப்ரதீப்பிடம் சென்றனர்.

ஒரு ஓரப்பார்வையில் அவன் சீற்றத்தை அளவிட்டபடி அந்த மரச் செறிவிற்குள் நடக்க ஆரம்பித்தாள் அவள்.

மிக அமைதியா[illegible] இடம் நடப்பதற்கு இதமாய்!

12.02.2009 00:39

மரங்களின் இலைகள் உஸ்ஸென்ற சப்தத்துடன் உரசிந்து அவளுடன் பேசுவதைப் போல் ஒரு உணர்வு!

இனம் புரியா ஒருவித நறுமணம் அங்கு பரவியிருக்க, இதயம் லேசாகியது.

பலவிதமான பறவைகளின் சப்தங்கள் ஜலதரங்கமாய் மரங்களை ஊடுருவி செவிகளை நிறைத்தன.

சிறிது நேரம் நின்று ரசித்துவிட்டு நடந்தபோது உலர்ந்த சருகுகளின் ஓசை, யாரோ வருவதை அறிவிப்பதாய்!

மெதுவாகத் திரும்பினால், உணர்ச்சிகளைத் தொலைத்த முகத்துடன் ப்ரதீப்தான் வந்து கொண்டிருந்தான்.

அவளருகே வந்ததும் நின்றவன், ''எனக்கு ரெண்டு முகமான்னு கேட்டே இல்லை? எவ்வளவு.. தைரியம் உனக்கு! பெரிசா ஜெயிச்சிட்டதா நினைச்சி கர்வப்பட வேணாம்! இது வரைக்கும் நாங்க யார்கிட்டயும் தோற்றதில்லை! நீ எத்தனை நாள் இங்கே இருந்து இதைத் தடுக்க முடியும்... நான் அதையும் பாத்திடறேன்'' எச்சரிக்கும் குரலில் சவாலாக முடித்தான்.

உடனே அவளுக்குள் ஏனோ சிரிப்பு குமிழியிட்டுப் பீறிட்டது.

அவனை கலபத்தில் வென்ற ஒரு உணர்வு!

''ம்... எத்தனை நாளா? இனிமே நான் இங்கேதான் இருக்கப் போறேன்! இந்த ஊர் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு! வாரா வாரம் இங்கே இந்த காபி எஸ்டேட்டுக்கு வரதாவும் முடிவு செஞ்சிருக்கேன்.

''என்னை மீறி எதுவும் நடக்க முடியாது... அப்படி இந்த இயற்கையை சிதைக்க நினைச்சா, எந்த அளவுக்கு வேணாலும் நானும் இறங்குவேன்.



''அப்புறம்.... என்ன சொன்னீங்க? இதுவரைக்கும் தோற்றதில்லைன்னா?

''ஹூம்... எல்லாருக்கும் முதல் தோல்வின்னு ஒண்ணு, வாழ்க்கையில் உண்டு.... அதைக் கூடிய சீக்கிரமே புரிஞ்சிப்பீங்க!''

உறுதியாகக் கூறிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வந்த வழியே திரும்பி நடக்கத் துவங்கினாள் அவள்.

அடக்க முடியாத கோபத்துடன் அவளையே தொடர்ந்த விழிகளைத் திருப்பியவன், உடனே செல்லை எடுத்து ஜீவாவிற்கு தொடர்பு கொண்டான்.

ஆனால், மனம் அவள் வார்த்தைகளிலிருந்த நியாயத்தை உள்ளே பதியன் போட ஆரம்பித்தது.

## 15

மறுநாளே மூவரும் கிளம்பி மதியம் சாப்பாடு நேரத்தில் அவர்களுடைய பூர்வீக பங்களாவை அடைந்தனர்.

மாலதி அவர்களுக்காகக் காத்திருக்க, சாப்பிட்டு விட்டு ஓய்வெடுத்த போதுதான் ஜீவாவின் நினைவு வந்தது.

அவன் எவ்வளவு கோபமாக இருப்பான் என்று நினைக்கும் போதே, உள்ளூர ஒரு குளிர் பரவியது!

அன்று மாலையில், அவள் தோட்டத்தில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தபோதுதான், ஜீவா அவளைத் தேடி வந்தான்.

12.02.2009 00:39



கண்ணுக்கெட்டிய தூரம் வரை பூரித்து செழித்த பசுமையும், மறுபுறம் திரும்பினால் வானப் பெண்ணின் கழுத்திற்கு ஆரமிட்டது போல் நீலக்கடலும் உற்சாகமாக ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

திடீரென்று அந்த அழகுலகம் சிதைந்தாற்போல் ஜீவா எதிரே வந்து நின்றான்.

''இங்கே பார்... நான் யாருன்னு தெரியாம என்கிட்டே மோதறே? அது எங்க மலை... அதை நான் அழிப்பேன்... தொழிற்சாலை கட்டுவேன். அது என் விருப்பம்... அதைத் தடுக்க நீ யாரு?'' கோபாவேசமாகக் கத்தினான்.

அவனுடைய அகன்ற விழிகளில் கசிந்தது கோபமா, விரக்தியா என்பதை அவன் உணரும் முன்பே, அவள் பேச ஆரம்பித்தாள்.

''மரம் நமக்கு எவ்வளவு வளங்களை சுயநலமில்லாமத் தருது? ஒரு கிளையை வெட்டினாலே என் மனசு துடிச்சிப் போயிடும்! ஒரு மரக் கூட்டத்தையே அழிக்க நினைச்சா, நான் சும்மா பாத்திட்டிருக்கமாட்டேன்! அவைகளை வெட்டிக் கிட்டே போறதாலதான் குளாபல் வார்மிங் வருது... காடுகள் அழிக்கப்பட்டு வனாந்தரமாகி மழை இல்லாம வறண்டு, ஒரு பக்கம் புயல் சுனாமின்னு இயற்கையோட சீற்றத்துக்கு ஆளாகிட்டிருக்கோம்! இயற்கையை தயவு செய்து அழிக்காதீங்க!

''நம்ம படிப்பு, திட்டமெல்லாம் நாட்டைக் காப்பாத்தணுமே தவிர அழிக்கக்கூடாது. உங்களை மாதிரி மனிதர்களுக்கு சுற்றுப்புறச் சூழல்லேயும், அக்கறை இல்லை... மக்கள் மேலயும் கருணை இல்லை! இனிமே உங்ககிட்டே பேசி ப்ரயோஜனம் இல்லை! இப்ப என்ன சொன்னீங்க, அது உங்க மலைன்னு தானே? இல்லை



அது நம்ம இடம்... நம்ம மூதாதையர்களோட காலடிச் சுவடுகள் பதிந்த பூமி! அதை சிதைச்சுப் பாலைவனமாக்க நான்விட மாட்டேன்!''

உறுதியாக முடித்தவளை கடும் சினத்துடன் ஏறிட்டவன், ''இந்த மலையிலிருந்து நீ உயிரோட போகணும்னு ஆசைப்பட்டா இதிலெல்லாம் தலையிடாதே!

''சத்தம் போடாம இருந்தே... உனக்குதான் லாபம்! இல்லைன்னா சுட்டுத் தள்ளிடுவேன். அப்புறம் பார்சலாத்தான் உங்க ஊருக்குப் போகணும்.. தெரியுமா?

''மரத்தையா வெட்டக்கூடாதுங்கறே... முதல்லே உன்னை வெட்டுவேன். புரியுதா?''

அவன் கர்ஜிக்க, ஒரு கணம் மிரண்டு விதிர்த்து அதிர்ந்தாலும், மறு கணம் தைரியமாய் நிமிர்ந்தாள்.

அதற்குள் ப்ரதீப்பின் குரல் அவனை இடைமறித்தது.

''வேண்டாம் ஜீவா! அவளைக் கொன்ன பாவம் உனக்கு வேண்டாம். அவ சொல்றதுலயும் கொஞ்சம் நியாயமிருக்கு யோசிச்சிப்பாரு... உனக்கே புரியும்!'' வேகமாகத் தடுத்தான்.

''என்னடா.. நீயும் இவ பக்கம் சாய்ஞ்சிட்டியா?''

அவன் ஏளனத்துடன் கேட்க, ''நீ வா! நான் யார் பக்கமும் சாயலை! கோபத்துல எந்த முடிவையும் சரியா எடுக்க முடியாது!

''நாம உள்ளே போய்ப் பேசலாம்... தோட்டக்காரங்க வேடிக்கை பாக்கறாங்க பாரு! வீட்டு விஷயம் மத்தவங்க வாய்க்கு அவலாகக் கூடாது ப்ளீஸ்!'' என்றபடி நண்பனை இழுத்துச் சென்றான்.

12.02.2009 00:39

சௌந்தர்யாவின் உடலும் உள்ளமும் பெரிதும் சோர்ந்திருக்க, அப்படியே சரிந்து அருகிலிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தாள்.

முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போல், இங்கு வந்தவுடனே ப்ரச்னைகளுடனே வாழ்க்கை ஆரம்பிப்பது, பெரும் சோகத்தை விதைப்பதாய்!

அந்த பெஞ்ச்சின் மேல் சிதறியிருந்த மலர்களை மெதுவாக சேகரித்து எடுத்து நாசியில் நுகர்ந்தாள்.

ஏதோ ஒரு விதக் கலவையான வாசனை மனதை நிறைக்க நிமிர்ந்தபோது, ப்ரதீப் வருவது தெரிந்தது.

இன்று, இன்னும் என்ன பாக்கியிருக்கிறதோவென்ற நினைவில் எழுந்தபோது, அவனிடம் சிறு மாற்றம் தெரிவது போல்!

அமைதியாக அருகில் வந்தவன், தொண்டையை செருமியபடிப் பேச ஆரம்பித்தான்.

''நான் ஜீவா கிட்ட பேசி சமாதானம் செஞ்சிருக்கேன்.

''இந்த ப்ராஜெக்டை வேற இடத்துல ஆரம்பிக்கலாமின்னு முடிவு செஞ்சிருக்கோம்.''

உலர்ந்த குரலில் அவன் கூற, உணர்ச்சிப் பெருக்குடன் 'தேங்க்ஸ்' என்றாள் அவள்.

மணம் கூடைப் பூக்கள் சிதறி விழுந்த நிலமாய்... நந்த வனமாய் மணத்தது.

கசிந்த அவளுடைய விழிகளில் நிறைந்திருந்த நன்றியுணர்வும், நெகிழ்வும் அவனை வேறுபுறம் திரும்ப வைத்தன.

''தேங்க்ஸ்! இந்த விஷயத்துல உங்களைத்தான் மலை போல நம்பியிருக்கேன். இதை எப்படியாவது தடுத்திடுங்க... ப்ளீஸ்!''



எவரிடமும் கெஞ்சிப் பழக்கமில்லாதவள் அவளென்பது புரிய, ''அய்யோ... அந்த மலையை எப்படி... என்னைப் போல நம்பியிருக்கியா?'' சீண்டலாகக் கேட்டான்.

முதன் முதலாக அந்தக் குரலில் தெரிந்த மென்மையும், முகம் அறிவித்த இளக்கமும் அவளைப் பெரிதும் சலனப்படச் செய்வதாய்!

''இல்லை...

''இது ஒரு அற்புதமான பூமி. அதோட இயற்கையான வளங்களை பூமிக்கு கவசமா நிக்கிற செல்வங்களை அழிக்கறது தப்பு... அதான்!'' சிறு தடுமாற்றத்துடன் கூறினாள்.

சட்டென்று முறுவலித்தவன், ''ஒரு புரட்சிக்காரப் பெண்ணுக்கு... இவ்வளவு தடுமாற்றம் வருது! ஜான்சி ராணி தோற்கக் கூடாது... ஓகே!'' மென் குரலில் கூறிவிட்டு கம்பீரமாக விலகிச் சென்றான்.

முதன் முதலாக இதயம் நேசப்பூரிப்பில் நிறைய... அந்தக் கணம் சுற்றுப்புறமே ரம்யமானதைப் போல்!

சுற்றிலுமிருந்த மரங்கள் நன்றியோடு தலையசைத்தால் எப்படி இருக்குமென்ற கற்பனையோடு நிமிர்ந்தபோது, செம்பூக்களுடன் செல்லமாகச் சிரித்தது குல்மொஹர் மரம்!

மறுபுறம் இளம் கத்திரிப்பூ நிறப்பூக்களை சொரிந்தபடி பூமியை மலர்ப் படுக்கையாக்கியிருந்தது மற்றொரு மரம்!

பல வர்ணப்பூக்கள்... பாடும் கானக் குயில்கள்... மைனாக்கள், வண்ணத்துப் பூச்சிகள்... கூழாங்கல் பாதை... பசிய புல்வெளி... சுற்றிலும் அரணாய் சூழ்ந்து

12.02.2009 00:40



வானைத் தொட முயன்ற மரங்கள் இன்று எல்லாம் புதிதாய் தெரிய மெய் மறந்து நின்றிருந்தாள் அவள்!

''என்ன சௌந்தர்யா! திரும்பவும் ஏதாவது ப்ரச்னையா? நீயும் ப்ரதீப் தம்பியும் பேசிட்டிருக்கறதா வேலைக்காரி சிந்து சொன்னா... அதான் அவசரமா வந்தேன்!'' பதட்டத்துடன் கேட்டார் ரேணுகா.''

''அதெல்லாம் இல்லம்மா! நான் சொன்னதை யோசிச்சிப் பார்த்தாரு போலருக்கு... எனக்கு பரிஞ்சு ஜீவா கிட்டயும் பேசியிருக்காரு. அதை சொல்லத்தான் வந்தாரு.''

மெல்லிய புன்னகையுடன் கூறியவளிடம் ''நான்தான் சொன்னேன் இல்லையா? அந்த ப்ரதீப் தம்பி, ரொம்ப நல்லவரா தெரியறாருன்னு... நீதான் நம்பலை!'' சலுகையாய்க் கூறியபடி உள்ளே அழைத்துச் சென்றாள்.

## 16

பிறகு தொடர்ந்த நாட்கள் எந்தவிதப் ப்ரச்னையுமின்றி செல்ல, ஒருநாள் அவளைத் தேடி வந்தான் ப்ரதீப்!

அன்று தோட்டத்தில் மனோவுடன் விளையாடிக் கொண்டிருந்தாள் அவள்.

அழுத்தமான காலடியோசை கேட்டுத் திரும்பினால், ப்ரதீப்தான் உறுதியான நடையுடன் வந்து கொண்டிருந்தான்.

அன்றைய நினைவில், சிறு முறுவலுடன் அவனை வரவேற்றாள் அவள்.



''மிஸ் சௌந்தர்யா! ஜீவா ஆரம்பிக்க இருக்கற பேக்டரிக்கு ஒரு புது இடம் செலக்ட் பண்ணியிருக்கோம்! ஆனா.''

அவன் தயக்கத்துடன் நிறுத்த, ''ஏன் பாதியிலேயே நிறுத்திட்டீங்க. எந்த இடத்தை முடிவு செஞ்சிருக்கீங்க மிஸ்டர் ப்ரதீப்?'' ஆவலுடன் கேட்டாள்.

''ம்... அது இப்ப உனக்கு சொந்தமானது! ஹோட்டலுக்கு பின்னாடி இருக்கற அஞ்சு ஏக்கர் தான் அதுக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கும்னு சர்வேயர் சொல்றாரு!

''அதான் உன்னோடக் கலந்து பேசி முடிவெடுக்கலாமென்று வந்தேன்!

''ஒரு நல்ல காரியத்துக்கு நிச்சயமா நான் மறுப்பு சொல்ல மாட்டேன் மிஸ்டர் ப்ரதீப்! அங்கே ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கறதிலே எனக்கு எந்த ஆட்சேபணையுமில்லை! நான் என்ன செய்யணும்?''

''சர்ப்ரைசிங்! இதை நான் எதிர்பார்க்கலை. உடனே மறுத்து ஆர்க்யூ பண்ணுவேன்னு நினைச்சேன்!''

இடுங்கிய விழிகளுடன் கூர்ந்தபடி வியப்பாய் கூறினான்.

''என்னைப் பத்தி நீங்க என்ன நினைச்சிட்டிருக்கீங்க? ம்... ப்ராப்ளம் க்ரியேட்டர்னா? அநியாயத்துக்கு என்னால துணை போக முடியாது... அவ்வளவுதான்!

''ஆனா, எங்க பாட்டியோட ஆசையே இந்த சொத்துக்களை பெருக்கணும்கிறதுதான்னு தெரிஞ்சிக்கிட்டப்புறம் என்னால எப்படி இதுக்கு தடை சொல்ல முடியும் ப்ரதீப்?''

நியாயமான அவளுடைய கேள்விக்கு பதில் கூற முடியாமல் நின்றிருந்தவன், தோளைக் குலுக்கியபடி நிமிர்ந்தான்.

12.02.2009 00:40

'நோ மோர் ஆர்க்யூமெண்ட்ஸ்... ஓகே? ப்ரெண்ட்ஸ்?''

அவன் நட்புடன் கை நீட்டியபோது, சட்டென்று தன்னுடைய விரல்களை அதில் பதித்தாள் அவள்.

திடீரென்று அவனைச் சீண்ட வேண்டும் போல்!

''இதுவரைக்கும் புலியா உறுமிட்டு இருந்தவரு, இப்ப பூனையா மாறினா... ம்... எதிரிக் கூட்டத்து ஆள் திடீர்ன்னு பாசக்கரம் நீட்டினா...

''ஏதோ உதைக்குதே?'' வேண்டுமென்றே கிண்டல் செய்தாள்.

''ம்! கழுதையா மாறினாலே அப்படித்தான்... யாராவது உதைக்கிற மாதிரியே இருக்கும்!''

சிரிக்காமல் கூறியவனின் விழிகள் மட்டும் மின்னலாய் குறுகுறுத்தன.

அவனுக்குள்ளும் இவ்வளவு நகைச்சுவை உணர்வா என்று யோசிக்கும்போதே, ''கழுதைன்னு சொன்னேன்னு கோபமா? ஒரு வேளை... குதிரைன்னு சொல்லியிருக்கணுமோ? இந்த சீக்ரெட் ஆஃப் சைலன்சிற்கு அர்த்தமென்ன?'' யோசனையுடன் கேட்டான்.

''ம்... கழுதை பேசாதுன்னு அர்த்தம்!'' குறும்பாகக் கூறிவிட்டு அவள் நகைக்க, முதன் முதலாக இணைந்து தலை சாய்த்துப் புன்னகைத்தவனுடைய முகம், மிக அழகாய்... கம்பீரமாய்!

அந்த வாரம், தொழிற்சாலை கட்டுவதற்கு ஏற்ற நிலத்தை ஜீவாவின் பெயருக்கு மாற்றி பத்திரம் எழுதுவதில் சென்றது.

* * *



ஒருநாள் ரேணுகாவும் அவளும் கோவிலுக்குச் சென்றிருந்தனர்.

சிலை பூமாலைகளால் அலங்காரம் செய்யப்பட்டு தமிழ்நாட்டுக் கோவில்களைப் போல் ஊதுபத்தியும் கற்பூரமும் காட்டப்பட்டது.

சாமி தரிசனம் முடிந்து திரும்பியபோது சன்னதிக்கு எதிரே பெரிய தட்டில் மலர்களும், இரு சிறு கிண்ணங்களில் விபூதி குங்குமமும் வைத்திருந்தனர்.

பக்தர்கள் தாங்களாகவே பிரசாதம் எடுத்துச் செல்வதைப் பார்த்து இருவரும் எடுத்துக் கொண்டனர்.

பிரகாரம் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டிருக்க, அமைதியாக அமர்ந்திருந்தபோது நளினியும், ஒரு வயதான பெண்மணியும், தரிசனம் முடிந்து வந்து கொண்டிருந்தனர்.

ரேணுகா நளினியைப் பார்த்து நட்புடன் புன்னகைத்து, ''என்னம்மா? நீயும் இங்கேதான் வரதுக்கு கிளம்பறேன்னு எங்களுக்குத் தெரியாது... தெரிஞ்சிருந்தா சேர்ந்தே வந்திருக்கலாமே!'' என்றார்.

அதற்குள் அருகிலிருந்த அந்தப் பெண்மணி, நளினியிடம் அவர்கள் யாரென்று விசாரித்தார்.

''இவங்க...'' அவள் திணறும்போதே ரேணுகா தானே அறிமுகப்படுத்திக் கொண்டார். ''நாங்கதான் பெரிய வீட்டுக்கு வந்திருக்கறவங்க! இவ சௌந்தா நாயகி அம்மாவோட பேத்தி சௌந்தர்யா! என்னோட பொண்ணு!''

அவர் கூறியவுடன் வாஞ்சையுடன் அவரின் கைகளைப் பற்றி விசாரித்தவர், ''நான் ப்ரதீப்போட அம்மா புனிதா! உங்களைப் பத்தி என் பையன் எல்லாம் சொன்னான். அதுவும் சமீப காலமா சௌந்தர்யாவைப் பத்திதான் அவன் அதிகம் பேசறான்.'' புன்னகையுடன் கூறினார்.

12.02.2009 00:40



சட்டென்று, நளினியின் முகம் தொட்டா சிணுங்கியாய் சுருங்கியது.

''என்னம்மா... என் பையனையே மாத்திட்டே போலருக்கு! மரங்களோட அருமையைப் பத்தி பெரிய பாடமே எடுத்தியாமே?'' ஆவலுடன் கேட்டார்.

''அதெல்லாம் இல்லைம்மா! உண்மையைச் சொன்னேன் அவ்வளவுதான்.''

அடக்கத்துடன் கூறியவளையே அளவிட்டவர், உடனே பூக்கூடையிலிருந்த ஒரு பூவை எடுத்து அவள் தலையில் வைத்து விட்டார்.

உடனே முகம் கருத்துத் திரும்பிய நளினி, ''போகலாமா ஆன்ட்டி?'' என்றாள் சிறு எரிச்சலுடன்!

''இரும்மா! புதுசா அறிமுகமாகியிருக்காங்க பேசிட்டு வரேன்!'' என்றவர் ரேணுகாவிடம் திரும்பினார்.

''ஒரு நாள் நீங்க எல்லாரும் அவசியம் நம்ம வீட்டுக்கு வாஙணும்! சௌந்தர்யா... ஸ்பெஷல் அழைப்பு உனக்குத்தான்!''

கனிவுடன் அழைப்பு விடுத்து விட்டு அவர் விடைபெற, நளினியின் முகம் பொறாமையில் சுருங்கியிருந்தது.

* * *

மறுநாளே அவரிடமிருந்து தொலைபேசியில் அழைப்பு வருமென்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

அந்த ஞாயிறன்று அவர்களை விருந்துக்கு அழைத்திருந்தார் புனிதா!

ப்ரதீப்பும் அந்த வார நடுவில் ஜீவாவைப் பார்க்க வந்தபோது, நாகராஜிடம் தனியாக அழைப்பு விடுத்தான்.

பிறகு, அவளிடம் திரும்பி, ''என்ன மேடம் வந்துடுவீங்க இல்லையா? உங்களுக்குத் தனியா சொல்லணுமா? சிறு குறும்புடன் கேட்டான்.



''வேண்டாம் நானே வருவேன்... அம்மா என்னை முன்னாடியே ஸ்பெஷலாக் கூப்பிட்டாங்க! அதனால கட்டாயம் வருவேன்'' சிறு குறும்புடன் தலை சரித்தபடி கூறினாள்.

உடனே கைகளை விரித்து தோளைக் குலுக்கியபடி அவன் விடைபெற்றபோதுதான் இப்போதெல்லாம் இருவருக்குமிடையே சிறு நட்புணர்வு இழை கோர்த்து இணைத்திருப்பதை உணர முடிவதாய்!

ஞாயிறன்று காலையில் ப்ரதீப்பின் வீட்டிற்கு அனைவரும் சென்றனர்.

அழகிய ஓவியப் பாவையாய் வந்த சௌந்தர்யாவை பிரமிப்புடன் ரசித்த புனிதா, அவளுக்கு வீட்டைச் சுற்றிக் காண்பித்தார்.

நாகராஜுடன் பேசியபடியே ஓரக் கண்ணால் அவளையே அளவிட்ட ப்ரதீப்பின் விழிகளிலும் சிறு ஆர்வம் புதிதாய்!

சமையலறைக்குச் சென்றபோது, அங்கு ஒரு பெண்மணி சமைத்துக் கொண்டிருக்க, சிறுமி ஒருத்தி உதவிக் கொண்டிருந்தாள்.

புதுவிதமான நறுமணம் நாசியை நிறைக்க அவர்களை அறிமுகப்படுத்தினார்.

''இவங்க ரெண்டு பேரும் 'தோடியா'ங்கிற மலைவாழ் இனத்தைச் சேர்ந்தவங்க! இவங்க இந்துக்கள் தான்.. ஆனா கொங்கணி பேசுவாங்க. தமிழும் கத்துக் குடுத்திருக்கேன்!'' என்றவர் ரேணுகாவிடம் திரும்பினார்.

''நானும் ப்ரதீப்பும் வருஷத்துக்கு ஒரு தடவை பத்து நாள் லீவு எடுத்து[illegible]ர்க்கக்

12.02.2009 00:40

கிளம்பிடுவோம்! போன வருஷம் எங்ககூட நளினியும் வந்திருந்தா.

''அக்டோபர்லேருந்து பிப்ரவரி வரைக்கும் கிளைமேட் ரொம்ப நல்லா இருக்கும்!

''ஜூன்லேருந்து செப்டம்பர் வரை இங்கே மழைக் காலம்... அதனாலதான் நவம்பர் டிசம்பரிலே கிளம்பு வோம்.

''அடுத்த வாரம் கிளம்பறோம். இந்த முறை நீங்க மூணு பேரும் எங்களோட வரலாமே!

''எனக்கும் நல்ல பேச்சுத் துணையா இருக்கும்! உங்களுக்கும் ஊர் சுத்திப் பாத்த சந்தோஷம் கிடைக்கும்... யோசிச்சி சொல்லுங்க. காரிலதான் போறோம்!'' ஆவ லுடன் அழைத்தார்.

''சார்கிட்டே கேட்டு சொல்றேம்மா! அவருக்கு ஹார்ட் ஆபரேஷன் ஆகியிருக்கு... அவ்வளவு தூரம் அலைய முடியுமான்னு தெரியலை.'' ரேணுகா இழுத்தாற் போல் நிறுத்தினார்.

''ஓ! அப்ப நீங்க ரெண்டு பேரும் வாங்க... சாரை இங்கே இருக்கறவங்க பாத்துப்பாங்க! பயப்படாம வரலாம்! எங்க பேமிலி டாக்டர் தயானந்த் பண்டேகர் இருக்காரு! நல்லா கவனிச்சுப்பாரு!''

அதற்குள் அங்கு வந்த ப்ரதீப் அவரிடம் என்னவென்று விசாரித்தான்.

''என்னம்மா..! தயானந்த் அங்கிளுக்கு இப்ப என்ன தேவை? யாருக்கும் உடம்பு சரியில்லையா என்ன?'' அக்கறையுடன் வினவினான்.

அவர் விபரம் கூற, ''அம்மா! அவங்க இப்ப பெரிய கோடீஸ்வரி. முன்னே மாதிரி இல்லை! நம்மோடல்லாம்



வரமாட்டாங்கம்மா! அதைக் கேக்காம நீங்க கூப்பிட றீங்களே!'' உலர்ந்த குரலில் கூறினான்.

உடனே தலையை சிலுப்பி நிமிர்ந்தவள், ''இல்லம்மா! நாங்களும் உங்களோட வரோம்... எங்களுக்கும் இந்த ஊரை சுத்திப் பார்த்த மாதிரி இருக்கும்'' வீம்புடன் முடித்தாள்.

''சௌந்தர்யா! நீ போயிட்டு வாம்மா. என்னால அலைய முடியாது... அம்மா எனக்குத் துணையா இருக்கட்டும்! உன் அம்மாவோட சொந்த பூமி எப்படி இருக்குன்னு சுத்திப் பாத்துட்டு வா.''

பரிவுடன் கூறிய நாகராஜிடம் திரும்பியவள், ''இல்லைப்பா! நீங்க இல்லாம எப்படி. அதுவும் தனியா.. ஊஹூம்'' தலையசைத்து மறுத்தாள்.

''இதில தனியா என்னம்மா? நானும் ப்ரதீப்பும்தான் கூட வரோமே! உனக்கு நான் துணை. நம்ம ரெண்டு பேரையும் ப்ரதீப் பாத்துப்பான். அப்புறம் என்ன கஷ்டம்'' என்றபடி சாப்பாட்டு மேஜையிலிருந்தவற்றை பரிமாற ஆரம்பித்தார் புனிதா.

முடிவாக ஒன்றும் கூறாமல் யோசனையுடன் அவள் சாப்பிட அமர்ந்தபோது, ப்ரதீப்பின் விழிகள் அவளையே கூர்ந்திருந்தன.

சாப்பாட்டை ரசித்து சாப்பிட்டபோது, ஒவ்வொன்றும் வித்தியாசமான சுவையிலிருந்தன.

''இது சோர்படேல்... இது பால் சாம்.. இந்த ஸ்வீட் பெபின்கா.. இந்த மாம்பழம் சாப்பிட்டுப் பாரு ரொம்ப நல்லாருக்கும்... இதுக்கு முசராட்டான்னு பேரு!'' ஆர்வத் துடன் விளக்கினார் புனிதா.

12.02.2009 00:40



சாப்பிட்டு முடித்து சிறிது நேரம் பேசிவிட்டுக் கிளம் பியபோது, அவளுக்கும், ரேணுகாவுக்கும் அழகிய காஷ்மீர் சில்க் புடவைகளைப் பரிசளித்தார் அவர்.

ஏனோ, புனிதாவின் பாசமும் பரிவும், சௌந்தர்யாவைப் பெரிதும் நெகிழ்த்தின.

காரில் ஏறும்போது மீண்டும் ஞாபகப்படுத்தினார் அவர்... ''என்னம்மா எங்களோட டூருக்கு நீ வரேதானே?'' ஆர்வத்துடன் கேட்டார்.

ஆவலுடன் கேட்டவரிடம் மறுக்க மனமின்றி, ''ம்...'' என்று ஒப்புதலாகத் தலையசைத்தாள் அவள்.

உடனே, வெற்றிக் களிப்பில் ப்ரதீப்பின் விழிகள் குறுகுறுத்ததை அவள் அறியவில்லை.

## 17

ஒரு வாரம் காற்றின் வேகத்துடன் விரைய, சௌந் தர்யா அவர்களுடன் கிளம்பும் நாளும் வந்தது.

முதல் நாளே, பத்து நாட்களுக்கு வேண்டிய, சுடிதார், ஜீன்ஸ், லாங் ஸ்கர்ட், டாப்ஸ், புடவை என்று எல்லா வற்றையும் எடுத்து தயாராக 'பேக்' செய்து வைத்தார் ரேணுகா!

அன்றிரவு, மாலதியிடம் விபரம் கூறுவதற்காகச் சென்றவள், அங்கு நளினியை எதிர்பார்க்கவில்லை.

''மாலதிக்கா! நாளைக்கு நான் புனிதாம்மாவோட கோவாவை சுத்திப் பார்க்க பத்து நாள் டூருக்குப் போகப் போறேன்.



''அதான் சொல்லிட்டுப் போகலாம்ன்னு வந்தேன்.''

அவள் கூறியவுடன் நளினியின் முகம் கறுத்துவிட கடும் கோபத்துடன் எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

மறுநாள் காலையில் நாகராஜிடம் விடை பெற்றவள், ''அப்பா! உடம்பை ஜாக்கிரதையாப் பாத்துக்கங்க... அம்மா நீங்களும் தான்! ஏதாவது ப்ரச்னைன்னா உடனே சொல்லுங்க... தினமும் நான் செல்லிலப் பேசறேன்'' என்றபடிக் கிளம்பினாள்.

மாலதியும் வாசலுக்கு வந்து வழியனுப்ப, மனோ சௌந்தர்யாவை விட்டு இறங்க மறுத்து அடம் பிடித்தாள்.

திடீரென்று எங்கிருந்தோ வந்த நளினி, பட்டென்று குழந்தையை அடித்துப் பறித்தாள்.

''ஏய்... குட்டிப் பிசாசு! புதுசா ஒருத்தர் வந்துட்டா பழைய ஆளுங்களை மறந்துடுவியா? நன்றி கெட்ட கழுதை!''

அவளை அர்ச்சிப்பது போல் ஓரக்கண்ணால் புனி தாவையும் ப்ரதீப்பையும் வெறுப்புடன் நோக்கி விட்டுச் சென்றாள்.

சிறு தர்ம சங்கடத்துடன் காரின் பின்புறம் புனிதாவின் அருகில் ஏறி அமர்ந்து கொண்டாள் அவள்.

மெதுவாகக் கையசைத்தபடி அவள் விடைபெற முன்புறம் டிரைவருக்குப் பக்கத்தில் ப்ரதீப் உட்கார்ந்தான்.

கார் நேராக பனாஜி எனப்படும் பாஞ்சிம் நகருக்குச் சென்றது.

அங்கு ஒரு நட்சத்திர ஓட்டலில் இரு அறைகளை எடுத்துத் தங்கியவர்கள், அன்று மதியமே சுற்றிப் பார்க்கக் கிளம்பினர்.

12.02.2009 00:41

லேட்டின் பாணியில் அமைந்த அழகான வீடுகளும் சுற்றிலும் தெரிந்த புல்வெளியும் பூந்தோட்டமும் சௌந்தர்யாவின் மனதைப் பெரிதும் கவர்ந்தன.

மண்டோவி ஆற்றங்கரையும், அதில் வரிசையாக வருபவர்களை வரவேற்கும் பனை மரங்களும், மிக அழகாய்!

அந்த ஆறு கடலில் கலக்குமிடமான 'காஸ்பர் டைஸ்' என்ற இடத்திற்குச் சென்றபோது மாலை மறைந்து சிவந்த பந்தாய் சூரியன் அஸ்தமனமாகிக் கொண்டிருந்தான்.

சூரியன் கடலில் சிறுகச் சிறுக மூழ்கி மறைவதை ஒருவித லயிப்புடன் அவள் விழி எடுக்காமல் ரசிக்கும் போதே, சட்டென்று கேமிராவின் ஃப்ளாஷ் லைட் வெளிச்சத்தில் கலைந்து திரும்பினாள்.

சிறு முறுவலுடன் அருகில் வந்த ப்ரதீப்பும், அவளுடன் இணைந்து ரசிக்க ஆரம்பித்தான்.

கடற்கரையில் கடல் நீரும், ஆற்று நீரும் ஒன்றையொன்று தழுவிக் கலப்பதை அதன் நிறங்களின் மூலம் உணர முடிந்தது.

அவள் வியப்புடன் ஒரு குழந்தையின் ஆர்ப்பரிப்புடன் அதை ரசித்தாள்.

அவளையே ஒரு கணம் அளவிட்டவன், சட்டென்று அவளுடைய கையைப் பற்றி, நீரில் நடுவே தெரிந்த மணல் திட்டிற்கு இழுத்துச் சென்றான்.

முதன் முதலாக, ஒரு அந்நிய ஆடவனின் தொடுகை அவளை சலனமுறச் செய்ய, அவனிடம் எந்தவித மாற்றமுமில்லை.

மணல் திட்டிற்குச் சென்றதும் கையை விடுவித்துக் கொண்டவளுக்கு, இது புதுவித அனுபவமாய்!



கரையில் நின்றிருந்த புனிதா, ''பாத்துப்பா... மெதுவா! சீக்கிரம் வந்துடுங்க... கவனமா இருங்க!'' உரத்த குரலில் எச்சரித்தார்.

கடலின் ஆர்ப்பரிப்பை மௌன உற்சாகத்துடன் உள் வாங்கியவள், அவனிடம் திரும்பினாள்!

''ஏன் அம்மா பயப்படறாங்க?'' குழப்பத்துடன் வினவினாள்.

''ஒண்ணுமில்லை! சில சமயங்கள்லே கண் மூடித் திறக்கறதுக்குள்ளே இந்த மணல் திட்டுகள் கரைஞ்சு ஆளை உள்ளே இழுக்கற அபாயம் உண்டு. அதான்!

அவன் இலகுவாக முடிக்க, ''பொய்தானே'' குறுகுறுத்த விழிகளுடன் கேட்டாள் அவள்.

''இல்லை! நிஜம்!'' அவன் முடிப்பதற்குள் அவளிடம் சஞ்சலத்தையும் பயத்தையும் கண்டவன், அவளை மெதுவாக சமாதானப் படுத்தினான்.

''சௌந்தர்யா! பயப்படாதே! நான்தான் இருக்கேனே... அப்புறம் என்ன பயம்? ம்... ஒருவேளை அதான் பயமா?'' ஒற்றைப் புருவம் ஏறி இறங்கக் கேட்டான்.

''புரியலை... உங்களுக்கு ஏன் நான்..?''

குழப்பத்துடன் அவனை ஏறிட்டபடி அவள் முடிப்பதற்குள், ''இல்லை! ஒருவேளை என் நண்பனுக்குப் போட்டியா வந்திருக்கிற உன்னை இந்த மணல் திட்டுலே நிறுத்தி கரைய வச்சு மாயமாக்கிடுவேனோன்னு பயமான்னு கேட்டேன்'' உணர்ச்சிகளைத் தொலைத்த முகத்துடன் வினவினான்.

சட்டென்று தெளிந்தவள், ''உங்க மேல நம்பிக்கை இல்லேன்னா நான் தனியா உங்களை நம்பி வந்திருக்கவே மாட்டேனே?'' தலை[illegible]

12.02.2009 00:41



''ம்... உன் நம்பிக்கையை நான் நிச்சயமாக் காப்பாத்துவேன். என் உயிரைக் கொடுத்தாவது உன்னை மீட்பேன்... அப்படி ஒரு சூழ்நிலை வந்தா!''

ஆழமான குரலில் அவன் முடிக்க, முதன் முதலாக அவனைப் பற்றிய அற்புதக் கருத்துப் பதிவுகளை அந்த வார்த்தைகள் விதைப்பதாய்!

''தேங்க்யூ!'' மென் குரலில் சிலிர்ப்புடன் அவள் பகர்ந்தாள்.

''வெல்கம்! இப்போ என்னை நம்பித்தானே அங்கிளும் ஆன்ட்டியும் உன்னை அனுப்பியிருக்காங்க... அதான்!''

சட்டென்று அவனிடம் ஒருவித ஒதுக்கமும் இறுக்கமும் தெரிவதாய்!

சிறிது நேரம், அங்கிருந்தே கடலை ரசித்தவர்கள் கரைக்கு வந்தபோது, ஏனோ முன்பிருந்த இதம் தொலைந்து போனதைப் போல்!

பிறகு புனிதாவுடன் பொழுது இனிமையாகச் செல்ல ஹோட்டலுக்குத் திரும்பியபோது, ஏதோ ஒன்றை இழந்ததைப் போல் உணர்ந்தாள் அவள்.

## 18

மறுநாள் காலையில் கிளம்பி ஆக்வாதா கோட்டைக்கு மூவரும் சென்றனர்.

அந்த மலையில் நிறைய நீரூற்றுகள் இருந்ததால் அந்த மலைக்கோட்டைக்கு அந்தப் பெயர் வந்ததாக ப்ரதீப் கூறினான்.



அந்தக் கோட்டை இப்போது மத்திய சிறையாக மாற்றப் பட்டிருந்தது.

குதிரையேற்றத்திலும் நீச்சல் போட்டிகளிலும் பலர் பங்கேற்க, அங்கிருந்த கலங்கரை விளக்கத்தில் இருவரும் ஏறலாமென்று ப்ரதீப் தெரிவித்தான்.

புனிதா அங்கிருந்த பூங்காவில் அமர்ந்துகொள்ள, இருவரும் ஏற ஆரம்பித்தனர்.

மேலே சென்றதும், கடல் காற்று முடிக்கற்றையைக் கலைத்து சில்மிஷம் செய்ய,

கடலலைகளின் சீற்றத்தை ரசித்தபடி நின்றிருந்தாள் அவள்.

''என்ன... எங்க ஊர் உனக்குப் பிடிச்சிருக்கா?''

மென்மையான குரலில் கேட்டவனிடம் திரும்பியவள், ''ரொம்பப் பிடிச்சிருக்கு! அழகான ஊர் இது.. இங்கே சின்ன வயசுலருந்து வசிக்கக் குடுத்து வச்சிருக்கணும்'' சிலிர்ப்புடன் கூறினாள்.

''ஆமாம்! என்னதான் தமிழ்நாடு எங்களுக்குப் பூர்வீகமானாலும் அப்பா இங்கே வந்தப்புறம், அம்மாவை இங்கேயே பாத்து விரும்பி கல்யாணம் செஞ்சுக்கிட்டாங்க.

''மூணாவது தலைமுறையில ஆரம்பிச்ச நட்பு இது. கோபிச்செட்டிப்பாளையத்துல, எங்க தாத்தாவும், உங்க தாத்தாவும், நல்ல நண்பர்களாம்!

''உங்க தாத்தா ரொம்ப வசதியானவராம்! ஆனா, என் தாத்தா சீக்கிரம் இறந்திட்டதால, எங்கப்பா மேல அவருக்கு பிரியம் அதிகமாம்.

''தன்னோட பையன் மாதிரியே தான், தன்னையும் பாத்ததா, அப்பா [illegible]

12.02.2009 00:41

'உங்க தாத்தா ஜீவரத்னத்துக்கிட்டே, எங்கப்பா இங்கே வந்து வேலை செஞ்சிருக்காங்க.

''எங்களோட வாழ்க்கைத் தரம் உயர்ந்ததுக்கு முக்கிய காரணமே உன் தாத்தாதான்!

''அப்புறம், உங்க மாமா வேதாசலமும், எங்கப்பா சதுர்வேதியும் இணைபிரியா நண்பர்களா ஆகியிருக்காங்க.

''எங்கப்பா, அம்மாவோட கல்யாணத்தை இங்கே நடத்தி வச்சி எங்க வீட்டையும் வாங்கிக் குடுத்து குடித்தனம் வச்சதே அவர்தான்னு அம்மா சொல்லுவாங்க!''

சிறு யோசனையுடன் அவன் கூற, ''எங்க அம்மாவோட காதலை அவங்களாலே ஏத்துக்க முடியலை... ஆனா, நண்பரோட மகன் காதலை மட்டும் நடத்தியிருக்காங்க... ப்ச் வேதனையா இருக்கு!'' விரக்தியுடன் மொழிந்தாள் அவள்.

''அப்படி இல்லை! எப்பவுமே பிறருக்குன்னு வந்தா ஒரு மாதிரி யோசிக்கிறவங்க, தனக்குன்னு வரும்போது அதை ஏத்துக்கறதில்லை! ஒருவேளை உங்க தாத்தா இருந்திருந்தா, ஒத்துட்டிருந்திருப்பாரோ என்னமோ... தெரியலை!''

''ஆனா, பாட்டியும் மாமாவும் அதை ஏத்துக்காம, அம்மா இறக்கற வரைக்கும் ஒதுக்கித் தானே வச்சிருந்திருக்காங்க!''

ஒரு பெருமூச்சுடன் வருத்தம் கலந்த தொனியில் அவள் கூற, அவனும் புருவ மத்தியில் யோசனையுடன் தொடுவானத்தில் பார்வையைப் பதித்திருந்தான்.

''வேண்டாம்! அதெல்லாம் நினைச்சா மனசே கனத்துப் போயிடும். எதையுமே அனுபவிக்க முடியாது! தேவை



யில்லாத சஞ்சலங்கள், கவலைகள் வந்துரும்! விட்டுடலாமே!''

தலை சரித்து அவள் கேட்ட விதத்தில் சட்டென்று புன்னகைத்தான் அவன்.

''ஓகே! அப்போ நீ இங்கேயே இருந்திடப் போறியா?''

''அப்படின்னா?'' புரியாமல் அவள் கேட்க, ''இல்லை இங்கே கோவாவிலேயே யாரையாவது கல்யாணம் செஞ்சுகிட்டு செட்டிலாகப் போறியான்னு கேட்டேன்'' அவளையே கூர்ந்தபடிக் கூறினான்.

ஒரு கணம் யோசித்தவள், ''தெரியலை!'' என்றாள் இயல்பாக.

''ம்... நீ யாரையாவது விரும்பறியா சௌந்தர்யா? அதாவது கோயம்புத்தூர்ல கேட்டேன்!''

எதிர்பாராமல் வந்த அந்தக் கேள்வியில் விதிர்த்துத் போனவளுக்கு தன் மனதையே இன்னும் தெளிவற உணர முடியாத ஒரு நிலை!

''என்ன? நான் கேட்டது சரிதானே. யாரையோ மனசுல நினைச்சுட்டிருக்கிறே.... அப்படித்தானே'' அவன் குரல் சட்டென்று சுதியிறங்கியது போல்!

''இல்லை... இதுவரைக்கும் அது மாதிரி யாருமே என் வாழ்க்கையில வந்ததில்லை... இனிமே தெரியாது!''

தோளைக் குலுக்கி சிறு முறுவலுடன் அவள் முடிக்க, சட்டென்று அவனுடைய முகத்திலிருந்த குழப்ப மேகங்கள் விலகி, ஒருவிதத் தெளிவு வருவதாய்!

பிறகு ஏதோ யோசனையிலிருந்தவனை, கீழே போகலாமென்று அவள்தான் கலைக்க வேண்டியதாயிற்று!

12.02.2009 00:41



அன்று மாலையே அங்கிருந்த மபுசா என்னும் நகருக்குச் சென்றனர்.

அங்கிருந்த பூங்காவை சுற்றிப் பார்த்துவிட்டு வாரா வாரம் நடக்கின்ற புகழ்பெற்ற சந்தைக்கும் சென்றனர்.

தனக்கும் தாய் தந்தைக்குமென அவள் சில பொருட்களை வாங்கினாள்.

அங்கு எல்லாப் பொருட்களும் விலை மலிவாகவும் தரமாகவும் இருக்குமென்று கூறிய புனிதா, அவளுக்கு ஒரு போர்ச்சுக்கீசிய பாணியில் தைக்கப்பட்ட பெரிய நீண்ட கவுன் போன்ற உடையை வாங்கிப் பரிசளித்தார்.

அவளும் பதிலுக்கு ஒரு புடவையை அவரிடம் அளிக்க, ப்ரதீப் வேண்டுமென்றே சீண்டினான்.

''ம்... இது கூட வசதிதான். இல்லை! நமக்குன்னு வாங்கினா, ஏன் இவ்வளவுன்னு கேப்பாங்கன்னு நீங்க அவளுக்கும் அவ உங்களுக்கும் பரிசளிப்பா... நல்ல ஐடியாதான்!

''ஹூம்... எனக்கு வாங்கித் தரத்தான் ஆளில்லை'' போலிப் பெருமூச்சுடன் நிறுத்தினான்.

''ஏன்... உனக்குத் தான் நாங்க இப்ப செலக்ட் பண்ணிட்டிருக்கோம்...''

புனிதா கூறியதும், ''என்ன... கர்ச்சீப்பா?'' குறும்புடன் கேட்டான் அவன்.

''ம்... இல்லை... சௌந்தர்யா உனக்கு டை வாங்கிட்டிருக்கா. நான் டி-சர்ட் பாக்கறேன்.''

''ம்... ஏதோ மத்தவங்க ஞாபகமும் இருந்தா சரி!'' கேலியாகக் கூறிவிட்டு கைவினைப் பொருட்கள் விற்குமிடத்திற்குச் சென்றான் அவன்.

* * *



அன்றிரவு ஹோட்டலுக்குத் திரும்பியவுடன், அவள் தன் அறைக்குள் நுழைந்தபோது 'ஒரு நிமிஷம்' என்று அழைத்தான் ப்ரதீப்.

அவள் திரும்ப, ஒரு சிறு அட்டைப் பெட்டியை அவளிடம் அளித்தான்.

''தேங்க்யூ'' என்றபடி உள்ளே வந்து பிரித்தபோதுதான் தெரிந்தது.... அழகிய பளிங்குக் கல்லால் செய்யப்பட்ட அலங்கார யானை பொம்மை ஒன்று நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் எழிலுற நின்றிருந்தது.

அதை மகிழ்ச்சியுடன் எடுத்து பத்திரப்படுத்தியவளுக்குள், அவனுடைய நட்பும் பரிவும் பெரும் இதமாய்!

மறுநாளே பனாஜியிலிருந்து கிளம்பி பெர்ணம் என்ற இடத்திற்கு சென்றனர்.

அங்கு மராட்டிய மன்னர்கள் கட்டியுள்ள வரலாற்றுப் பெருமை மிக்க திரகோல் கோட்டையை சுற்றிப் பார்த்தனர்.

''இது பதினாறாவது நூற்றாண்டுல கட்டப்பட்ட கோட்டை! ரொம்ப அழகா இருக்கும்'' என்றபடி எல்லாவற்றையும் புனிதா விளக்க, வியப்புடன் ரசித்தபடி சுற்றி வந்தாள் சௌந்தர்யா!

பிறகு அங்கிருந்து இயற்கையான நீரூற்றுக்கள் நிறைந்த ஒரு இடத்திற்கு அவளைப் ப்ரதீப் அழைத்துச் சென்றான்.

மனம் லேசாகி அந்த ஊரின் அழகில் லயித்துவிட, மாலையில் சென்று வந்த சாந்த துர்கா கோவில் அவளை முழுமையாய் இதயம் வருடி இதப் படுத்தியது.

அன்றிரவு உறங்கப் போவதற்கு முன்பு, அவனை அழைத்து உணர்ச்சிப் பெருக்குடன் நன்றி கூறினாள் அவள்.

12.02.2009 00:41

"தேங்க்யூ ப்ரதீப்! இந்த ஊர் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இதை எல்லாம் எனக்கு அறிமுகப்படுத்தினதுக்கு ரொம்ப நன்றி."

அவள் குரல் பெரிதும் கனிந்திருந்தது.

"ம்... உனக்கு சந்தோஷம்தானே! அதான் எனக்கு வேணும்!"

அவன் மென்மையாக உரைத்தான்!

அவள் கேள்வியாக புருவங்களை உயர்த்த, அவன் முகத்திலும் சிறு யோசனையுடன் புருவங்கள் நெறிந்திருந்தன.

"என்னடா இவன் இப்படி சொல்றானேன்னு பாக்கறியா? இப்ப நீயும் எனக்கு ஒரு முதலாளியாச்சே உன்னை சந்தோஷப்படுத்தலைன்னா, என் வேலைக்கு இல்லே ஆபத்து!"

ஒரு மாதிரிக் குரலில் அவன் கூறியதும், சட்டென்று ஒருவித இறுக்கம் அவளைச் சூழ, அதுவரை இருவருக்கிடையே இருந்த இதம் தொலைந்து போனாற் போல்!

* * *

காலையில் கிளம்பி பிசோலிமுக்கு போனபோதும் ஏனோ அவளிடம் பழைய உற்சாகம் தொலைந்து போயிருந்தது.

"என்னம்மா சௌந்தர்யா ரொம்ப டல்லா இருக்கே? உடம்பு ஏதும் சரியில்லையா?" அக்கறையுடன் விசாரித்தார் புனிதா!

"அதெல்லாம் இல்லம்மா நல்லாத்தான் இருக்கேன்" என்றவளின் குரலிலிருந்த சோர்வைக் கண்டு கொண்ட ப்ரதீப்பின் பார்வை ஓரக்கண்ணால் அவளையே அள விடுவதாய்!



அங்கிருந்த மாயம் ஏரிக்கு சென்றபோது, சௌந்தர்யாவின் மனம், கவலைகளைக் களைந்து உற்சாகத்தைத் தத்தெடுத்தது.

அழகிய நீல நிறக் கல் ஒன்று, ஒய்யாரமாய் ஒளி வீசுவது போல் சூரிய ஒளியில் மின்னிக் கொண்டிருந்தது அந்த ஏரி!

புனிதாவிற்கு தண்ணீர் என்றால் பயம் என்று கூற, அவர்களிவரும் போட்டிங் சென்றனர்.

சுற்றிலும் தெரிந்த இயற்கையழகையும் மலையையும் குதூகலத்துடன் ரசித்தபடி மெய்மறந்திருந்தாள் சௌந்தர்யா!

திடீரென்று ப்ரதீப்பின் குரல் அவளை மீட்டது... "என் மேலக் கோபமா?" யோசனையுடன் அவளையே உரசிய விழிகளுடன் கேட்டான்.

"ஹூம்! நான் எதுக்கு உங்க மேல கோபப் படணும்? அதோட நான் யாரு?"

அவள் முடிப்பதற்குள், "நான் யாரா? நீ என் முதலாளிம்மா! இனிமே எனக்குப் படியளக்கப் போறவ!" சிரிக்காமல், குறும்பு விழிகளில் மிளிரக் கூறினான்.

சட்டென்று அவள் முகம் மொட்டாய்க் கூம்பியது.

"ம்... கோபம் இல்லைன்னு பொய்தானே சொன்னே? இதானே... இப்படி நான் சொன்னேன்னுதானே உனக்கு வருத்தம்?"

"ஆமாம்! நான் என்னை ஒரு முதலாளியா நினைச்சி உங்களோட வரலை! ஒரு தோழியாத்தான் வந்தேன்." சிறு ஊடலுடன் கூறியவளையே இமைக்காது நோக்கியவன்,

12.02.2009 00:41



"நிஜம்மா... ப்ரெண்ட்ஸ்?" என்று கை நீட்டினான்.

"ம்... நிஜம்மா!" என்றவளின் கரம் அவனுடைய கரத்துடன் இணைந்தது.

"இது... கடைசி வரைக்கும் அதாவது இந்த நட்புணர்வு கடைசி வரைக்கும் மாறாம அப்படியே இருக்குமா?" விழிகள் குறுகுறுக்கக் கேட்டான் அவன்.

"ம்... இருக்கும்" உறுதியுடன் கூறினாள் அவள்.

பிறகு ஏதோ ஞாபகத்தில் இணைந்திருந்த அந்த கைகளைப் பற்றியே கவலைப்படாமல் இருவரும் அமர்ந்திருந்தனர்.

தன்னையறியாமலே ஏதோ ஒரு இனம் புரியாத சுகம் சூழ்வதையும் பெரும் பலத்தை அந்தத் தீண்டல் தருவதையும், அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

சிப்பிக்குள் விழுந்த மழைத்துளி முத்தாக உருமாறும் இயற்கையின் ரசவாதமாய்... அவனுடைய நினைவுத் துளி, இதயத்தில் வீழ்ந்து காதலாய் உருமாறி குளிர்ச்சியாய் உள்ளே பரவுவதை உணர்ந்தாள் அவள்.

ஏரியுடைய நீர்ப்பரப்பில் அதிர்வலைகளால் நடுங்கியபடி நடனம் செய்து கொண்டிருந்தது... சூரியன்!

இவன் பெரும் கோபக்காரனாயிற்றே... விதிர்த்த மனதிற்குள் வார்த்தைகள் எங்கிருந்தோ பரிந்து வந்தது! "ஒருத்தரை நேசிக்கிறோம்னா... அவங்க குறைகளோட சேர்ந்து ஏத்துக்கறதுதான் உண்மையான அன்பு!"

பிறகு போட்டிங் முடிந்து படகுத் துறையில் படகு நின்றபோதுதான் யாரோ எழுப்பியது போல் கண் விழித்தாள் அவள்.

சட்டென்று கைகளை விடுவித்து நிமிர்ந்தபோது, முகம் இளகி அவன் விழிகளும் கனிந்திருந்தன.



மௌனமாக கரையில் இறங்கியபோது, இருவரிடமும் ஏதோ ஒரு விதப் புரியாத மாற்றம் வந்திருப்பது தெரிவதாய்!

## 19

மறுநாள் பண்டாலா காடுகளுக்குச் செல்லும்போது புனிதா வர மறுத்து விட்டார்.

இன்று ஹோட்டலிலேயே ஓய்வெடுப்பதாக அவர் கூறியபோது, இருவருக்குமே உற்சாகமாய்!

இருவரும் மிகவும் விரும்பிய தனிமையை காட்டுக்குள் அனுபவித்தனர்.

இரு ஆறுகளுக்கு இடையே இயற்கை எழில் சூழ அமைந்திருந்த அந்தக் காட்டினுள் இருந்த வனவிலங்கு சரணாலயத்தையும் சுற்றிப் பார்த்தனர்.

ஒருவர் கையை மற்றொருவர் பற்றியபடி ஊர்க் கதைகளை உற்சாகத்துடன் பேசியவாறு உல்லாசமாக வலம் வந்த இருவருமே, உலகை மறந்திருந்தனர்.

உள்ளே சாப்பாடு கிடைக்காதென்பதால் காலையில் ஹோட்டலிலிருந்தே எடுத்து வந்திருந்த உணவை அவள் பரிமாற, இருவரும் சாப்பிட்டனர்.

திடீரென்று, "இந்த அன்பும் அக்கறையும்... எனக்கு கடைசி வரைக்கும் கிடைக்குமா சௌந்தர்யா?" ஆழ்ந்த குரலில் கேட்டான் அவன்.

இதை எதிர்பார்த்திராத அவளுக்கோ தூக்கி வாரிப் போட, குலுங்கிக் குலுங்கிச் சிரிக்க ஆரம்பித்தான் அவன்.



12.02.2009 00:41

பிறகு "ஏன் இவ்வளவு பயம்... என்னைப் பாத்தா புலி, சிங்கம் மாதிரி பயமாவா இருக்கு... இப்படித் தூக்கிப் போடுது!" குறும்பாகக் கேட்டான்.

"இல்லை... திடீர்னு கேட்டவுடனே..." திக்கித் திணறி வார்த்தைகளின்றிப் பரிதவித்தாள் அவள்.

"சரி சரி! இப்ப சொல்லு... என் மேல உனக்கு வெறுப்பு ஏதுமில்லையே?" கூர்மையுடன் கேட்டான் அவன்.

"இல்லை!" யோசிக்கும் முன்பு அடுத்த நொடியே வந்தது பதில்!

"அந்த... பேக்டரி கட்டற விஷயத்துல உன்கிட்ட நான் ரொம்பக் கடுமையா நடந்துக்கிட்டேன் இல்லை?" உலர்ந்த குரலில் கேட்டான்.

"அதை நான் அப்பவே மறந்துட்டேன்! அந்த ப்ராஜெக்ட்டை ட்ராப் பண்றதுக்காக, ஜீவாகிட்டே பேசினது நீங்கதானே. அதனாலதானே அவரோட மனசும் மாறிச்சு!"

இயல்பான முறுவலுடன் அவள் முடிக்க "ம்... அது உண்மைதான்! உன் பேச்சு என்னை ரொம்ப பாதிச்சது... அதோட, கென்யாவிலே மூணு கோடி மரங்களை நட்டு... அரசியலிலேயும் கடும் போராட்டங்களை எதிர் கொண்ட ஆப்பிரிக்கப் பெண்மணி, "வாங்கரிமாதாய்" பற்றிப் படிச்சதும் என்னை அது அடியோட மாத்திடுச்சி!" என்றான்.

"ஆமாம்! சமாதானத்துக்கான நோபல் பரிசும், இந்தியாவோட உயர்ந்த நேரு விருதையும் வாங்கியிருக்காங்க அவங்க! அதை நினைச்சா ரொம்பப் பெருமையா இருக்கு!" உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினாள் அவள்.



"எனக்கென்னவோ இதுவரைக்கும் எந்தப் பெண் மேலயும் பெரிசா ஒரு ஈர்ப்பு வந்ததில்லை! ஆனா, உன்னோடப் பழகினப்புறம் என்னையறியாமல் ஏதோ ஒரு சலனம் மனசிலே!

"அம்மாவும், நீ வந்ததிலருந்து சொல்லிட்டே இருந்தாங்க... எனக்கு பொருத்தமானவ நீதான்னு!

"அதோட, நீ நளினி மாதிரி மேல விழுந்து பழகலை... இயல்பான ஒதுக்கத்தோடவும் கம்பீரத்தோடவும் இருந்தே!

"பல பெண்கள் என் வசீகரத்துலயும், வசதியிலயும் மயங்கி என்னை விடாம சுத்தினாங்க... அதிலே வித்தியாசமா அறிமுகமானவ நீ!

"அது சரி! நான் கேட்டதுக்கு இன்னும் பதிலே வரலையே? உனக்கு சம்மதமில்லையா?"

தவிப்புடன் கேட்டவனிடம், மறுக்கவே மனம் வராமல், அவள் மௌனம் சாதித்தாள்.

"மௌனம் சம்மதம்"னு நான் எடுத்துக்கலாமா? இந்த அமைதிக்கு அர்த்தம் என்ன?" பெரும் தவிப்புடன் வந்த அவனுடைய குரல், அவளுடைய தற்காப்பு வளையங்களை ஒரே நொடியில் தகர்ப்பதாய்!

"ம்..." அவள் தலையசைத்ததும் அவன் முகத்தில் கோடி சூரியப் பிரகாசம் தெரிவதாய்!

உயிர்க்கொடியில், காதல் பூ பூத்த உணர்வு!

"தேங்க்யூ. எனக்கே ரொம்ப ஆச்சரியமா இருக்கு! நாம நினைக்கிறதெல்லாம் சில சமயங்களிலே நடக்கறதில்லை தெரியுமா? நீ ஒருவேளை என் மேல இருக்கற வெறுப்புல என்னை மறுத்துடுவியோன்னு நினைச்சேன்!" உணர்ச்சிகள் நிரம்பிய கு...

12.02.2009 00:42



அவள் மனம் சிணுங்கலாக உரைத்தது... 'மறுக்கிறதா? நான் உன்னை நினைப்பது மட்டும் என்னுள்ளே நிகழ்ந்து கொண்டு தானிருக்கிறது...!'

தன் இதயத்தை தொட்டுக் காண்பித்தபடி அவனிடம் கூற வேண்டும் போல்!

* * *

தொடர்ந்து வந்த இரு நாட்களும் என்ன சுற்றிப் பார்த்தோம் என்ற நினைப்பே இன்றி கனவுலகில் சஞ்சரித்திருந்தாள் சௌந்தர்யா.

புனிதாவும் இருவரையும் நமட்டுச் சிரிப்பும் யோசனையுமாக அளவிட்டுக் கொண்டிருந்தார்.

மூவரும், சுற்றுலா முடிந்து ஊருக்குச் செல்லும் நாளும் வந்தது.

அன்றிரவு எப்போதும் போல் ரேணுகாவிடமும், நாகராஜிடமும் பேசிவிட்டு செல்லை அணைத்தவள், உறக்கம் வராமல் காரிடாரில் வந்து நின்றாள்.

திடீரென்று யாரோ கன்னத்தில் வெப்ப மூச்சை சீறலாய் சிதறடிக்க, பதறித் திரும்பினாள்.

அங்கே இரவு உடையில் கம்பீரமாக நின்றிருந்தான் பிரதீப்!

"என்ன... உனக்கும் தூக்கம் வரலையா?" மென் குரலில் வினவினான்.

அவள் பதில் கூறாமல் தலையசைத்தபடி விழிகளைத் தழைக்க, அந்த நேரம்... அந்த இனிய தருணத்தில் அவளைப் பார்த்தால் நிலவொளியில் வார்த்த தங்கச் சிற்பமாய் தோன்றியது அவனுக்கு!



உடனே தலையைக் குலுக்கியபடி கருநீலக் கடலைப் பார்வையிட ஆரம்பித்தவனுக்குள் பல நினைவுச் சரங்கள்!

மீதமிருந்த மணித்துளிகள் மௌனமாகக் கழிய இருவரும் திரும்பி தங்களுடைய அறைக்குச் சென்றனர்.

## 20

மறுநாள், கிளம்பி ஊருக்கு வந்து சேர்ந்தபோது, இருவருக்கும் ஏதோ ஒரு தயக்கமும், ஒதுக்கமும் வந்திருந்தன.

யாரும் எதிர்பாராத விதமாக, அடுத்த நாளே சம்மந்தம் பேச வந்து விட்டார் புனிதா!

சீர்வரிசைத் தட்டுகளுடன் வந்தவரை வியப்புடன் வரவேற்று அமர வைத்தாள் மாலதி.

"மாலதி! ஜீவா இருக்காராம்மா? அப்புறம்... சௌந்தர்யாவோட அப்பா அம்மாவோடயும் நான் பேசணும்!" புன்னகையுடன் கூறினார் புனிதா!

"இதோ கூப்பிடறேம்மா!" என்றவள் அனைவரையும் அழைக்க, நளினியும் சந்தோஷத்துடன் அங்கு வந்தாள்.

"ஜீவா! என் மகனுக்கு பொண்ணு கேட்டு நான் இங்கே வந்திருக்கேன்!"

அவர் கூறியதைக் கேட்டதும், விழிகள் மின்ன கர்வத்துடனும் உதட்டுச் சுழிப்புடனும் சௌந்தர்யாவை ஏறிட்டாள் நளினி.

மறுகணம் அவர் கூறிய வார்த்தைகள் அவள் தலையில் பெரும் இடியை இறக்கின.

12.02.2009 00:42

"நம்ம சௌந்தர்யாவை, எங்க ப்ரதீப்புக்கு ரொம்பப் பிடிச்சிருக்காம்! எனக்கும் ரொம்ப சந்தோஷம்... பூர்ண சம்மதம்! உங்க பொண்ணை என் மகனுக்குத் தருவீங்களா?" நாகராஜிடமும், ரேணுகாவிடமும் கேட்டார்.

அந்த நொடியே விழிகள் சிவந்து, முகம் வெளிறி வெறுப்புடன் சௌந்தர்யாவை முறைத்து விட்டு, உள்ளே ஓடி விட்டாள் நளினி.

சிறு யோசனையும், பெரும் தவிப்புமாய் நின்றிருந்தவளிடம் வந்தார் ரேணுகா!

"சௌந்தர்யா! உனக்கு சம்மதம்னா எங்களுக்கு எந்த ஆட்சேபணையுமில்லை! உங்கப்பா ரொம்ப ஆசையா எதிர்பார்த்துட்டிருந்த ஒரு விஷயம் இது!

அவளுடைய கையைப் பற்றியபடி மெல்லிய குரலில் அவர் கேட்க, ஏனோ உடல் சிலிர்த்தது.

சட்டென்று குனிந்தவள், "உங்களுக்கும் அப்பாவுக்கும் பிடிச்சிருந்தா... எனக்கு ஓகே!" சிறு நாணத்துடன் உரைத்தாள்.

"அப்புறம் என்ன? தட்டை வாங்கிக்கங்க!" புனிதா உற்சாகத்துடன் தட்டை எடுத்து மாலதியிடம் நீட்டினார்.

"மாலதி நீயே என் சார்பில சம்மந்தி கிட்டே குடும்மா" என்றார்.

அவளும் மகிழ்ச்சியுடன் வாங்கி ரேணுகாவிடம் அளிக்க, நாகராஜும் இணைந்தே பெற்றுக் கொண்டார்.

"எப்போ எங்க வீட்டு மகாலெஷ்மியை என்னோட அனுப்புவீங்க?"

"ம்... நேரம் காலம் எல்லாம் பார்க்க வேண்டாமா? அதுக்குள்ளே அம்மாவுக்கு அவசரத்தைப் பாருங்க!"



மாலதி கிண்டலடித்தபோது, ஜீவாவின் முகத்திலும் சிறு முறுவல் எட்டிப் பார்க்க, சௌந்தர்யாவிற்குத் தான் அதிசயமாய்!

எட்டாவது உலக அதிசயத்தைப் பார்த்த பிரமிப்பில் நின்றிருந்தாள் அவள்.

* * *

பிறகு திருமண வேலைகள் துரித வேகத்தில் நடக்க ஆரம்பித்தன.

ஆனால், முன்பு போல் ப்ரதீப்பைத் தான் அடிக்கடி அவளால் பார்க்க இயலவில்லை.

நாகராஜ் ரேணுகாவுடன் மாலதியும் சேர்ந்து உற்சாகத்துடன் திருமண வேலையில் பங்கு கொள்ள ஆரம்பித்தனர்.

நளினி மட்டும் கடும் கோபத்திலிருப்பது தெரிந்தது.

தான் இங்கு வந்த சில மாதத்தில், தன் வாழ்க்கையில் இப்படி ஒரு திருப்பம் ஏற்படுமென்று அவள் கனவிலும் நினைக்கவில்லை.

எல்லா சொத்துக்களையும் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்துவிட்டு ஊருக்குத் திரும்பி விடலாமென்ற எண்ணத்தில் வந்தவள், இந்த ஊருடனே ஒன்றிப் போனது, எதிர்பாராத ஒன்றாய்...!

ஆனால், இவ்வளவு சீக்கிரம் மனதில் காதல் துளிர்க்குமா வென்ற கேள்விக்கோ, விடைதான் அவளிடம் இல்லை.

அவளுடைய நகைகள், உடைமைகள் என்று எல்லாவற்றையும் எடுத்து வருவதற்காகவும் பத்திரிகைகள் கொடுப்பதற்காகவும் இடையில் ஒரு முறை அவர்கள் ஊருக்குக் கிளம்பினர்

12.02.2009 00:42



அன்றுதான் ப்ரதீப் அவர்களை ஏர்போர்ட்டுக்கு வழியனுப்புவதற்காக காருடன் வந்திருந்தான்.

இரு வாரங்கள் கழித்து அவனைப் பார்த்ததில், பெரும் உற்சாகத்திலிருந்தாள் அவள்.

அவனோ, நாகராஜிடமே பேசிக் கொண்டிருக்க, சிறு ஊடலுடன் நின்றிருந்தாள் அவள்.

"ப்ரதீப், என்ன நீங்க... உங்க வருங்கால மனைவியை கவனிக்காம மாமனாரோடவே பேசிட்டிருக்கீங்க. பாவம் சௌந்தர்யா." குறும்புடன் கிண்டல் செய்தாள் மாலதி!

"ம்! இப்படி நீங்க எல்லாரும் சுத்தி இருக்கறப்ப என்ன செய்யறது...?"

அவனும் ஒற்றைக் கண் சிமிட்டியபடி அவளைக் குறுகுறுப்பாய் ஊடுருவ, ரோஜாவாய் சிவந்தது அவள் தேகம்!

"சரி! நாங்க எல்லாரும் போயிடறோம். வேண்டாம். நீங்க ரெண்டு பேரும் தோட்டத்துக்குப் போய் தனியாப் பேசுங்க. கல்யாணம் முடிவு பண்ணினப்புறமும் நீங்க இங்கே வரவே இல்லை! அவளும் எவ்வளவு எதிர் பார்த்திருப்பா?" பரிந்து வந்தாள் மாலதி.

ஒற்றைத் தலையசைப்பில், தன்னைப் பின் தொடர்ந்து வருமாறு அழைத்து விட்டு அவன் நடக்க, அவள் நிழலாய்த் தொடர்ந்தாள்.

தோட்டத்திற்குச் சென்றதும் சட்டென்று திரும்பியவனுடைய முகம் கனிந்திருக்க, விழிகளில் சிறு குறும்புச் சிரிப்பு!

"என்ன? நான் ஊருக்குப் போறேன்னவுடனே ரொம்ப ஜாலியா?" கிண்டலாகக் கேட்டாள் சௌந்தர்யா.

"ஏய்! நீ ஊருக்குப் போறது கஷ்டம்தான்னாலும், திரும்பி வந்தவுடனே, எனக்கு சொந்தமாகப் போறியே, அதை நினைச்சிதான் சிரிச்சேன்!" மென் குரலில் கூறினான்.

வெட்கம் வந்து அவளை குல்மொஹர் மலராய் மாற்ற, அப்படியே அவளை இழுத்து தன் மீது சாத்திக் கொண்டான் அவன்!

மெதுவாகக் குனிந்தவனிடம், "ஊஹூம்... அதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்!" பிடிவாதமாக மறுத்து விட்டு விலகி ஓடினாள் அவள்!

"இரு இரு! ஊருக்குப் போய்ட்டு இங்கே தானே வந்தாகணும்! அப்ப இருக்கு உனக்கு கச்சேரி!"

"பார்க்கலாம்" குறும்புடன் உரைத்து விட்டு ஓடியவளை, ரசனையுடன் தொடர்ந்தான் அவன்.

பிறகு, அவள் ஊருக்குச் சென்ற ஒரு வாரமும், அவனுக்கு பெரிய வெற்றிடமாய்!

தன் உயிரே தன்னிடமிருந்து நீங்கிச் சென்ற ஒரு உணர்வு!

ஆனால் அப்போது....

சௌந்தர்யாவிற்கோ அவனின்றி அணுவும் இயங்காதது போல்... சங்க காலத் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலையிலிருந்தாள் அவள்!

ஒரே வாரத்தில் அவள் ஊருக்குத் திரும்பி வர, இருவருமே கனவுலகில் ிருந்தனர்.

அனைவரும் எதிர்பார்த்த திருமண நாளும் வந்தது.

கண்ணன், தாரா, சந்தானம் எல்லோரும் வந்திருந்தனர்.

12.02.2009 00:42

முதல் நாளிரவு, மாப்பிள்ளை அழைப்பு நிச்சயதார்த்தம் எல்லாம் முடிந்த பிறகு அவளைத் தேடி அறைக்கு வந்தான் ப்ரதீப்!

அவன் உள்ளே வந்ததும் ரேணுகா, கூச்சத்துடன் வரவேற்று விட்டு வெளியேற, கம்பீர நடையுடன் அவளருகே வந்தான்.

தன் கையிலிருந்த நகைப் பெட்டியை அவன் திறக்க, அழகிய வைர டாலருடன் கூடிய சிறு செயின் ஒன்று அதில் இருந்தது.

மெதுவாக அதை எடுத்து சௌந்தர்யாவின் கழுத்தில் அணிவித்தான் அவன்.

அவளுடைய கழுத்துச் சருமம் கூசிச் சிலிர்க்க, உடல் முழுவதும் பூகம்பமாய் பெரும் அதிர்வுகள்!

"என்ன... பிடிச்சிருக்கா?" ஆழ்ந்த குரலில் அவன் கேட்க, வெட்கத்துடன் தலையசைத்தாள் அவள்.

"இன்னும் இருபத்து நாலு மணி நேரம் இருக்கு இல்லை?"

குறும்புடன் அவன் கேட்க, "இல்லையே பத்து மணி நேரம்தானே இருக்கு!" குழப்பத்துடன் கூறினாள் அவள்.

"சரியான தத்தி! நான் கல்யாணத்தைச் சொல்லலை..."

அவன் இழுக்க, விதிர்ப்பும், தவிப்புமாய் நிமிர்ந்தவளால், அவனை ஏறெடுத்தும் பார்க்க முடியவில்லை.

விழிகள் வெட்கத்தில் தழைய சிலிர்ப்பும் நடுக்கமும் உள்ளூரப் பரவின.

"குட்நைட்...!" மென்மையாக முணுமுணுத்து அவன் விடைபெற, எதையோ இழந்த உணர்வு அவளிடம்!



தான், எதை எதிர்பார்த்தோம்... எதை இழந்தாற் போலத் தவிக்கிறோம்... ஒன்றுமே புரியவில்லை.

ஆனால், அங்கிருந்த தன் அறைக்குச் சென்ற ப்ரதீப்பிற்கோ, நண்பனாய் ஒரு பெரும் கோரிக்கை வைத்த ஜீவாவின் நினைவு!

அது... இருவருடைய சந்தோஷத்தையும் நெருக்கத்தையும் சிதைக்கப் போவதை இருவருமே அறியவில்லை!

அன்றைய இரவு... உறங்கா இரவாய்க் கழிய, விடியற் காலையிலேயே அவளை எழுப்பினார் ரேணுகா!

ஒரே மணித்துளியில் உற்சவச் சிற்பமாய் மாறி விட்டிருந்த சௌந்தர்யா மேடைக்கு வர, ப்ரதீப்பின் விழிகள் இமைக்க மறந்து ஸ்தம்பித்தன.

பிறகு, திருமணம் இனிது முடிய, அதைத் தொடர்ந்த சடங்குகளும், அன்பளிப்பு வைபவமும் ஏதோ ஒரு மாயத் தருணமாய் நீண்டன!

அந்த மெஸ்மரிசத்தில் மெய் மறந்து அவள் தன்னை மறந்திருந்த வேளையில் இரவும் வந்து விட்டது.

## 21

முதலிரவு!

சௌந்தர்யா தனிமையை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்த அந்த இரவுப் பொழுதில் நறுமணங்களை சுமந்து காத்திருந்தது அந்த அறை!

12.02.2009 00:42



பலவித வாச மலர்த் தோரணங்களுடன் பூக்களின் பல்லக்காய் அந்த அறை அலங்கரிக்கப் பட்டிருக்க, தவிப்பும், எதிர்பார்ப்புமாய் நுழைந்தாள் சௌந்தர்யா!

அங்கு பட்டு வேட்டி சட்டையில், ப்ரதீப் கம்பீரமாய் காத்திருந்தான்.

வெட்கமும், பயமும், அவள் முகத்தில் முகவரிகளாய் பரவியிருக்க, மெதுவாக அணைத்தபடி, அழைத்து வந்து அவளைப் படுக்கையில் அமர வைத்தான் அவன்!

ஆனால், அடுத்து அரங்கேறப் போகின்ற அதிர்ச்சி அலைகளை அவள் உணரவேயில்லை!

"சௌந்தர்யா! முதல்லே நான் உன் கூடக் கொஞ்சம் பேசணும்!" மெதுவாக நிறுத்தினான் அவன்!

என்னவென்பது போல் அவள் கேள்வியாய் நோக்க, சில ஸ்டாம்ப் பேப்பர்களை டீபாயிலிருந்து எடுத்து வந்தான்.

"முதல்லே உன் பாட்டியோட இந்தப் பூர்வீக வீட்டை நீ ஜீவா பெயருக்கு மாத்தி எழுதித் தரணும்!" ஆழ்ந்த குரலில் கோரினான்.

அதிர்ச்சியும் திகைப்புமாய் அவள் மிரண்டு நோக்க, அவளைக் கவனிக்காமலே தொடர்ந்தான் அவன்!

"இந்த வீடு ஜீவாவுக்கு சொந்தமானது.... இந்த வீட்டில, பிறந்ததிலிருந்தே வளர்ந்தவன் அவன்! இது அவனுக்கு உரிமையானது!

"பாட்டி, மத்த சொத்தை எல்லாம் பிரிச்சிக் கொடுத்தப்பகூட அவன் கவலைப்படலை! ஆனா இத்தனை வருஷமா தன் உயிரா நினைச்சு வாழ்ந்த வீட்டை உனக்குன்னு சொன்னப்ப, அவனாலத் தாங்க முடியவேயில்லை!



"யோசிச்சுப் பார்த்தா அது நியாயமும் இல்லை. எத்தனையோ வருஷங்களுக்கு முன்னாடி விலகிப் போன உங்கம்மாவுக்கும், உனக்கும் அதிலே உரிமை இருக்கறதா நான் நினைக்கலை...

"மத்ததெல்லாம் எப்படியோ... இந்த வீட்டை மட்டும் அவன் பேருக்கு நீ மாத்தித் தரணும்."

அவன் முடித்ததும், சிறிது நேரத்திற்கு அங்கு ஒருவித அசாத்திய அமைதி நிலவ, மெதுவாக அதைக் கலைத்தாள் அவள்.

"அப்படி மாத்தித் தர முடியாதுன்னு நான் மறுத்தா?" கூர்மையாக வந்தது அவள் குரல்!

சட்டென்று நிமிர்ந்தவனின் முகம் பாறையாய் இறுகியிருக்க, விழிகள் செவ்வரிகளுடன் சிவந்தன.

"உன் நிம்மதி... வாழ்க்கை ரெண்டையுமே நீ இழக்க வேண்டியிருக்கும்" அழுத்தமாக முடித்தான்.

உடலும் உள்ளமும் விதிர்த்துப் போக நிமிர்ந்தவளின் விழிகளில், 'என் மன்னவனே... நீயா இப்படி பொய்த்துப் போனாய்?' என்ற போராட்டம்!

அவளுடைய இதயம் உடைந்து துகள் துகளாய் சிதறியது.

"அப்போ... நீங்க என்னை உண்மையா விரும்பலை...?"

பெரும் குமுறலுடன் அவள் கேட்க, "இல்லை... உன்னை என் உயிரா விரும்பறேன்... ஆனா இது வேற! என்னால என் நண்பனுக்கு துரோகம் செய்ய முடியாது!"

"நான் உன்னை விரும்புறேன்னு தெரிஞ்சவுடனே முதன் முதலா என்கிட்டே ஒரு கோரிக்கை வெச்சான் ஜீவா!

12.02.2009 00:42

''வேற யாரும் உன்னை மணந்தா, இந்த சொத்தை இழந்துடுவோமேன்னு அவன் ரொம்ப பயந்தான்... கவலைப்பட்டான்!

''நம்ம கல்யாணம் அவசரமா நடந்ததுக்கு அதுவும் ஒரு காரணம்! அதான் உடனே நான் ஒரு முடிவெடுத்தேன்!''

அவன் முடிக்கும் முன்பே நம்ப இயலா வெறுப்பும் விரக்தியுமாய் எழுந்தவளிடம் பெரும் அதிர்ச்சி தெரிவதாய்!

''அப்போ, உங்க சுயநலத்துக்காக, இந்த வீட்டுக்காக என்னை திட்டம் போட்டு இந்தக் கல்யாண வலையில மாட்ட வெச்சிருக்கீங்க... அதானே!''

நீயும் ஒரு மனிதனாவென்ற ஏளனமும், கேவலமான ஒரு ஜந்துவைப் பார்ப்பது போன்ற சீற்றமும், ஒன்றாய் விரவித் தெரிந்தன அவள் விழிகளில்!

''இல்லை! திட்டம் இல்லை... இது ஒரு விதமான நன்றிக் கடன்! ஜீவா குடும்பத்துல இருக்கறவங்களுக்கு என்னால செய்ய முடிஞ்ச ஒரு சின்ன உதவி!''

உடனே எல்லாவற்றையும் மீறி பாட்டியின் கோரிக்கை, அவளின் நினைவிற்கு வருவதாய்!

''நோ! நீங்க என்ன சொன்னாலும் என்னால முடியாது!''

தீர்க்கமான முடிவுடன் அவள் கூற, வெடித்தெழுந்தான் அவன்.

''சே! நான் தப்புப் பண்ணிட்டேன். உன்னை ரொம்ப நல்லவ... நியாயம் தெரிஞ்சவன்னு நினைச்சேன்! ஆனா ஏமாந்துட்டேன்!''



''ஏமாந்தது நீங்க இல்லை... நான்தான்! என்னை, எந்தவித சுயநலமும் உள் நோக்கமும் இல்லாம நீங்க கல்யாணம் செஞ்சிட்டீங்கன்னுதான் நான் நினைச்சேன்!

''ஆனா... என் கனவு, ஆசைகள் எல்லாமே கானல் நீராப் போயிடுச்சு! என்னைப் பொறுத்தவரைக்கும் எல்லாமே முடிஞ்சிடுச்சி!''

ஓய்ந்து போய் அமர்ந்தவளை கோபத்துடன் பற்றி உலுக்கியவன், ''ஏய்... என்ன சொல்றே நீ! என்னை விட இந்த வீடுதான் உனக்குப் பெரிசாப் போயிடுச்சி இல்லை!'' மிருகமாய் உருமினான்.

''இல்லை! உங்களுக்குத்தான் காதல், மனைவி எல்லாத்தையும் விட, இந்த வீடு பெரிசாத் தெரியுது! இப்படிப்பட்ட ஒருத்தரையா நான் காதலிச்சேன்! நான் தப்பு பண்ணிட்டேன்'' தனக்குள்ளேயே அரற்றினாள்.

''நான்தான் தப்புப் பண்ணிட்டேன். ஒரு பணப் பேயை... தனக்கு உரிமையில்லாத ஒரு பொருளுக்காக பேராசைப் படறவளை நல்லவன்னு நினைச்சி தப்புக் கணக்குப் போட்டுட்டேன்!''

''ஓ! உங்க இஷ்டத்துக்கு நான் நடக்கலைன்னா, நான் பணப் பேயா... பரவாயில்லை... எனக்கு நல்ல பட்டம் குடுத்திருக்கீங்க! ஆனா நீங்க என்ன சொன்னாலும் நான் ஒத்துக்க மாட்டேன்.'' பெண் புலியாய் சீறினாள்.

''ஓ! அப்போ இதையும் கேட்டுக்க! நீ கையெழுத்து போடற வரைக்கும் நான் உன்னோடப் பேச மாட்டேன்... உனக்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை! புரியுதா?''

''நீ என் மனை[illegible] வெளியே மட்டும்தான்!''

12.02.2009 00:43



ஒரு கணம் கலங்கி நின்றவள், உடனே தன்னை சமாளித்து நிமிர்ந்தாள்.

''எனக்கும் கொஞ்சம் சுய கௌரவம், தன்மான மெல்லாம் உண்டு. அதை எதுக்காகவும் என்னால விட்டுத்தர முடியாது!

''இதுதான் உங்க முடிவுன்னா எனக்கும் அதிலே சம்மதம்தான்!'' கூறிவிட்டு வேகமாகச் சென்று ஒரு போர்வையை உதறிப் போட்டுப் படுத்து விட்டாள்.

இதை எதிர்பாராத ப்ரதீப், எரிமலையாய் குமுற ஆரம்பித்தான்.

அவன் நினைத்ததற்கு மாறாய் அவள் நடக்க, என்ன செய்வதென்றே புரியாத ஒரு நிலை.

உள்ளுக்குள் இறுகிப் போனாலும், விழிகள் எங்கோ வெறித்திருக்க, உறக்கத்தைத் தொலைத்து தவித்திருந்தாள் சௌந்தர்யா!

இந்த ஒரு திருப்பத்தை அவள் சத்தியமாக எதிர் பார்த்திருக்கவில்லை!

உலகில் யாருக்குமே கிடைக்காத ஒரு அன்புக் கணவன் தனக்கு கிடைத்திருக்கிறானென்ற பூரிப்பும் பிரமிப்பும் அந்த நொடியே சீட்டுக்கட்டு மாளிகையாய் சரிந்து விழுந்தன.

காலையில், முப்பத்து முக்கோடி தேவர்கள் சாட்சியாக, சப்தபதி மந்திரத்துடன் இனிதாய் கைப்பிடித்த அந்த பந்தம், அறுந்து போனதைப் போல்!

நட்புக்காக, நண்பனுக்காக, அவன் இவ்வளவு தூரம் கீழிறங்குவானென்று அவள் எதிர்பார்க்கவில்லை.



துரோகம்... அவன் செய்த நம்பிக்கை துரோகம் கூர்வாளாய் நெஞ்சை அறுக்க, விழிகளில் தீக்கனலுடன் விழித்திருந்தாள்.

அதே நேரம், ஒரு பெண்... அதுவும் தான் முதன் முதலாக இதயத்தைப் பறி கொடுத்தவள், தன் பேச்சைத் தட்டாது கேட்பாள் என்று இறுமாந்திருந்த ப்ரதீப், ஏமாந்து போனான்.

திருமணம், தன் கோரிக்கைக்கு வலுவான ஒரு ஆயுதமாக இருக்குமென்ற அவன் எதிர்பார்ப்பும் பொய்த்துப் போவதாய்!

அவனும், அன்றிரவு உறங்கவேயில்லை!

இன்பத்தில் மூழ்கி இனிய முத்தெடுக்க வேண்டிய அந்த முதலிரவு... பாலையாய்!

## 22

மறுநாள் விடியலில் உறங்க ஆரம்பித்தவளை, மெல்லிய கதவுத் தட்டல் உசுப்பி எழுப்பியது.

முதல் நாளைய குழப்பத்திலும் போராட்டத்திலும் ஓய்ந்து எழுந்து அமர்ந்தவள், மெதுவாக எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

அங்கு ரேணுகாவைக் கண்டதும் உதடுகள் துடிக்க, இமைக்கரையை உடைக்க முயன்றது கண்ணீர்!

ஆனாலும், அதை அடக்கியவள், ''இதோ குளிச்சிட்டு வந்திடறேம்மா'' என்றபடி குளியலறைக்கு விரைந்தாள்.

12.02.2009 00:43

பெண்ணின் சிவந்த விழிகளும், நடையின், தடு மாற்றமும் நடந்ததை ரேணுகாவிற்கு வேறு விதமாகப் புரிய வைக்க, சிறு வெட்க முறுவலுடன் விலகிச் சென்றார் அவர்.

காலையிலிருந்தே விருந்து அமர்க்களப்பட, உறவினர் கள், நண்பர்களின் வருகையால், அந்த மாளிகையே களைகட்ட ஆரம்பித்தது.

அவன் பரிசாக அளித்து, முப்பத்தியாறு மணித் துளிகளாக அவள் கழுத்தை ப்ரியத்துடன் தழுவியிருந்த அந்த வைர டாலர் பதித்த சங்கிலி... இன்று பெட்டிக்குள் சரணடைந்தது.

அவன், எப்போது உண்மையான நேசத்துடன் தன்னை நாடி வருகிறானோ... அன்று அந்தச் சங்கிலி என் மார்பில் தவழட்டுமென்ற வீம்பும் வைராக்யமும் அவளிடம் வந்தன.

ஆனால், அதை விடக் கனமாய்... அவன் தன் மனதி லிருப்பதை நினைவு படுத்தியபடி நெஞ்சப் பரப்பை ஆக்ரமித்திருந்தது... அவன் அணிவித்த திருமாங்கல்யம்!

* * *

அன்று முழுவதும், வெட்கம் எனும் போர்வை அணிந்து, தலை குனிந்து அனைவரின் கேள்விக் கணைகளையும் சமாளித்தவளுக்கு, ஒரு நேரம் அதையும் தாங்க இயலாது போயிற்று!

பொறுமையிழந்து நிமிர்ந்தபோது, எதிரே தெரிந்த மாடிப்படியில் கம்பீரமாக இறங்கி வந்து கொண்டிருந்தான் ப்ரதீப்!

உடனே அவள் பார்வை ஜீவாவிடம் செல்ல, அவனும் ப்ரதீப்பையே பார்த்திருந்தான்.



அவன் கண்கள் ரகசியமாக எதையோ வினவ, தலையசைத்து ப்ரதீப் உதடு பிதுக்கியதிலிருந்து, தன்னைப் பற்றிய கேள்விதான் என்பதை உணர்ந்து கொண்டாள் அவள்.

உடனே, மனதில் நெருப்பாய் கனன்றது அவனுடைய துரோகம்!

'என்ன வந்தாலும் இந்த வீட்டின் உரிமையை மட்டும் ஜீவாவிடம் விட்டுத் தர மாட்டேன். அதனால் என் வாழ்க்கையே பறிபோனாலும் கவலைப்படப் போவ தில்லையென' இதயம் உறுதி பூண்டது!

மறுநாளே, அவள் ப்ரதீப்பின் வீட்டிற்குச் செல்ல விருப்பதால், அன்று மாலையே கிடைத்த தனிமையில் தன் தந்தையிடம் இதுபற்றிப் பேசினாள் சௌந்தர்யா!

விஷயத்தை அறிந்ததும் அவர் அதிர்ந்து போக, "சௌந்தர்யா! எனக்கு பயமா இருக்கு. எடுத்தோம், கவிழ்த்தோம்கிற விஷயமில்லை கல்யாணம்கிறது! பாத்து முடிவெடுடா!" கவலையுடன் கூறினார் ரேணுகா!

"ரேணு! நீ சும்மாயிரு! அவ எடுத்திருக்கற முடிவுதான் கரெக்ட்! மாப்பிள்ளை இப்படி ஒரு பிரம்மாஸ்திரத்தை ஏவுவாருன்னு நான் சத்தியமா எதிர்பார்க்கலை!

"அவருக்கு எப்படி நட்பு முக்கியமோ, அதே மாதிரி சௌந்தர்யாவுக்கும், அவங்க பாட்டியோட விருப்பம் தான் முக்கியம்!" ஆணித்தரமாக உரைத்தார்.

"என்னங்க, நீங்களும் இப்படி அவளுக்கு சப்போர்ட் டாவே பேசறீங்க... யாரோ இறந்து போன ஒருத்தரோட வேண்டுகோளுக்காக, என் பொண்ணு வாழ்க்கை வீணா கப் போறதை நான் அனுமதிக்க மாட்டேன்!" கண்ணீருடன் கூறினார் ரேணுகா!

12.02.2009 00:43



"அம்மா! அவங்க யாரோ ஒருத்தர் இல்லை, என் பாட்டி! அவங்க சொன்னதுலயும் அர்த்தம் இருக்கு! என்னால எந்தக் காரணத்துக்காகவும் இந்த வீட்டை மாத்தி எழுதித் தர முடியாது!

பிடிவாதமாக மறுத்தவள், அந்த கணத்திலிருந்தே அதை செயல்படுத்தவும் ஆரம்பித்து விட்டாள்.

நேரே மாலதியிடம் சென்றவள், "அக்கா! எனக்கு பதிலா அம்மாவும், அப்பாவும் இங்கேதான் இருப்பாங்க. உங்களைத்தான் நம்பியிருக்கேன். அவங்களைப் பாத்துக் கங்க! நானும் அப்பப்ப வந்து பாத்துக்கறேன்!" மென் குரலில் யாசித்தாள்.

உடனே அவளுடைய கைகளை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டவள், "நீ கவலைப்படாதே சௌந்தர்யா! சந்தோஷமா கிளம்பிப் போ! இனிமே, எனக்கும் அவங்க அப்பா அம்மாதான்! நான் பாத்துப்பேன்" பெரும் நம்பிக்கை அளித்தாள்.

அதே நேரம், புடவைத் தலைப்பை யாரோ பிடித்து இழுப்பது போல் தோன்ற, குனிந்தால் குழந்தை மனோ நின்றிருந்தாள்.

அவள் விழிகளில் புரியாத ஒரு குழப்பமும் சிரிப்பும் தெரிய, அவளைத் தூக்கி முத்தமிட்டவள், "நான் உங்க ப்ரதீப் அங்கிள் வீட்டுக்குத்தான் போறேன்! அம்மாவோட என்னைப் பார்க்க அங்கே வரியா?" ஆர்வத்துடன் கேட்டாள்.

ஏதோ புரிந்தாற்போல் அவள் தலையசைக்க பிரியத் துடன் அணைத்துக் கொண்டாள் சௌந்தர்யா!

"நானும், மனோவும்தான் உன்னை ரொம்ப மிஸ் பண்ணுவோம் சௌந்தர்யா!"



மெல்லிய குரலில் சோர்வுடன் கூறிய மாலதியைப் பார்த்தால் பரிதாபமாய்!

"உங்களுக்கு என்ன ப்ரச்னைன்னாலும் என்கிட்டே சொல்லுங்கக்கா!"

அவளுடைய கைகளைப் பிடித்து அழுத்தி ஆறுதல் கூறிவிட்டுத் தன் அறைக்கு வந்தாள்.

ஆனால், நேற்றைய நினைவுகள், காட்டாறாய் பெருகி நெஞ்சக் கூட்டை நனைத்தன.

என் காதல் வெற்றி பெறுமா... பாட்டியின் விருப்பம் நிறைவேறுமா... ப்ரதீப் என்றாவது என்னைப் புரிந்து மாறுவானா? பல கேள்விகள் எழும்பி, நீர்க் குமிழியாய் உடனே உடைந்தன.

* * *

அன்றிரவு, வெகு நேரம் கழித்தே அறைக்கு வந்தான் ப்ரதீப்.

அதற்குள், சௌந்தர்யா உறங்கியிருக்க, தூக்கத்தில் அவள் முகத்தை ஆராய்ந்த போது, அதில் குழந்தைத் தனமும், பிடிவாதமுமே தெரிவது போல்!

நேற்று அவள் பொங்கியெழுந்து பேசிய பேச்சுக்கள், இன்று வரை அவன் செவிகளில் ரீங்காரமிடுவதாய்!

எவ்வளவு தைரியமும் திமிரும் இருந்தால் என் பேச்சை ஏற்க மறுத்திருப்பாள்... இவளுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும்... மனம் வன்மத்துடன் இறுகியது.

பிறகு உடைமாற்றிப் படுத்தவனால், ஏனோ நிம்மதி யாகவே உறங்க முடியவில்லை.

தன் அப்பா காலத்தில் [illegible] இணைந்து, தன் குடும்பத்திற்கு பெரும் உ [illegible]

12.02.2009 00:43

உயர்த்திய ஜீவாவின் குடும்பத்திற்கு தன்னால் முடிந்த நன்றிக் கடனை செய்தேயாக வேண்டுமென்ற, வேகமும் தவிப்பும், மற்றதை மறக்கடித்தன.

தான் விரும்பி மணந்தவளைப் பிரிந்து அவளைக் கஷ்டப்படுத்தி... இப்படி ஓர் பிரிவு தேவையா என்றே அவன் யோசிக்கவில்லை.

## 23

மறுநாள் காலையில் இருவருமாக அவனுடைய வீட்டிற்குச் சென்றனர்.

ரேணுகாவும் நாகராஜுவும் உடன்வர, புனிதாவும், மற்ற உறவுப் பெண்களும் ஆரத்தி எடுத்து வரவேற்றனர்.

அவனுடைய வீடும் மிகப் பெரியதாய் அழகாய் இருந்தது.

இந்த வீட்டை போனமாதம் தான் புதிதாய் அவன் வாங்கியிருந்தான்.

நவீனமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த பங்களாவின் கீழ்ப் பகுதியில் ஹால், டைனிங், கிச்சன் ஸ்டோரும், பூஜையறையுடன் ஒரு படுக்கையறையும் இருந்தன.

புனிதா, அதை தன் உபயோகத்திற்கென வைத்திருந்தார்.

முதல் தளத்தில் நான்கு அறைகள் இருந்தன.

ஒரு அறை ப்ரதீப்பின் படுக்கையறை என்றும். மற்றொன்று அவனுடைய அலுவலக அறை என்றும் புனிதா கூறினார்.



மற்ற இரு அறைகளையும் விருந்தினர் அறையாக உபயோகப் படுத்தினர்.

சௌந்தர்யா தன்னுடைய பொருட்களை அலுவலக அறையிலிருந்த வார்ட்ரோபில் அடுக்கி வைத்தாள்.

பீரோ அவனுடைய அறையிலேயே வைக்கப்பட்டிருக்க, பட்டுப் புடவைகள், நகைகள் எப்போதாவது உபயோகப்படுத்தும் உடைகளை மட்டும் அதில் எடுத்து அடுக்கினாள்.

ரேணுகா, அவளுக்கு உதவி செய்ய, நாகராஜ் கீழே ப்ரதீப்பிடம் பேசிக் கொண்டிருந்தார்.

தன் மகள் எதையும் கூறியது போலவே அவர் காட்டிக் கொள்ளவில்லை.

இயல்பாகப் பேசிக் கொண்டிருந்த ப்ரதீப்பைப் பார்த்தாலோ, இவனுக்குள் இப்படி ஒரு தீவிர உணர்வா என்றும் நம்ப முடியவில்லை.

புனிதா, அவளை சொந்த மகளைப் போல் தாங்க, மறுநாளே, நாகராஜுவும், ரேணுகாவும் விடைபெற்றுக் கிளம்பினர்.

முதன் முறையாகத் தாயையும், தந்தையையும் பிரியும் உணர்வு, கலக்கமாய் அவள் விழிகளில் கசிய, அருகிலிருந்து கைப்பிடித்து ஆறுதல் சொல்ல வேண்டியவன், விலகியே நின்றிருந்தான்.

புனிதாதான் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்து சமாதானம் செய்தார்.

அன்றிலிருந்தே, ஒரு மாமியார், மருமகளாய் இல்லாமல், நெருங்கிய தோழிகளாய் இருவரும் இணைந்து விட்டனர்.

12.02.2009 00:43



இப்போதெல்லாம் எதுவாக இருந்தாலும் சௌந்தர்யாவைக் கேட்காமல் அவர் செய்வதில்லை.

"என்னம்மா! மகனை மறந்திட்டீங்க போலருக்கு... இப்பல்லாம் மருமகளைத் தான் தலைக்கு மேல தூக்கி வச்சி ஆடிட்டிருக்கீங்க."

ப்ரதீப்பே, அவரை சிறு எரிச்சலுடன் கேலி செய்ய ஆரம்பித்தான்.

தொடர்ந்த நாட்களில் ஹோட்டலையும், ரெடிமேட் ஆடை தொழிற்சாலையையும், தானே நேரில் சென்று நிர்வாகம் செய்ய ஆரம்பித்தாள் சௌந்தர்யா.

நாகராஜுவும் ஹோட்டல் நிர்வாகத்தை கவனிக்க அதில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன.

மீன் பண்ணையும், நிலங்களும் பொதுவாக இருந்ததால், எப்போதாவது அங்கு சென்று வருவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

உரிமையாளரே முன் நின்று கவனித்து, ஒவ்வொரு விஷயங்களிலும் அக்கறையுடன் செயல்பட்டதில் இரு தொழிலிலுமே நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

ரெடிமேட் ஆடை தொழிற்சாலையில், அவர்கள் வெகு நாட்களாக எதிர்பார்த்திருந்த பெரிய வெளிநாட்டு ஏற்றுமதி ஆர்டர் கிடைத்துவிட, மிகுந்த மகிழ்ச்சியிலிருந்தாள் அவள்.

இப்போதெல்லாம் ரேணுகாவும், அங்கு வந்து சில ஐடியாக்களைக் கூறி, தொழில் திறம்பட நடக்க உதவினார்.

சௌந்தர்யா வராத நேரங்களில் நாகராஜுவும், ரேணுகாவும் வந்து விடுவதால், தொழிலாளர்களும் ஒருவித பயமும் அக்கறையுமாக வேலையில் ஈடுபட்டனர்.



இதை அறிந்த ப்ரதீப்பிற்கோ, மகிழ்ச்சிக்குப் பதிலாக எரிச்சலே வருவதாய்!

* * *

ஒருநாள், அவள் கிளம்பிக் கொண்டிருந்தபோது அருகில் வந்தவன், "என்ன? புதுசா எக்ஸ்போர்ட் ஆர்டரெல்லாம் கிடைச்சிருக்கு போலருக்கு! ரொம்ப ஆட்டமா? ஒரேயடியா ஆடாதே... அடங்கிடுவே!" எகத்தாளமாகக் கூறினான்.

"ஹூம்! உழைப்புக்கேத்த கூலி எப்பவுமே கிடைக்கும்! உடையவன் பார்க்காவிட்டால் பயிர் ஒரு முழம் கட்டைன்னு சொல்லுவாங்க! அதான்!

"யாரும் இங்கே ஆட்டம் போடலை! இதுவரைக்கும் மத்தவங்க போட்ட ஆட்டத்தால வர இருந்த நஷ்டத்தை தவிர்த்து, தொழிலை புத்திசாலித்தனமா நடத்திட்டிருக்கோம்..."

அதே ஏளனக் குரலில் பதிலடி கொடுத்து விட்டு அவள் கிளம்பிச் சென்றாள்.

தன் அறையிலிருந்து இதைக் கேட்டிருந்த புனிதாவிற்கோ, ஒன்றும் புரியவில்லை.

ஏன், இருவரும் இப்படி ஒருவருக்கொருவர் எதிரும் புதிருமாய் இன்று எதிர்வாதம் செய்து கொள்கிறார்களென்று புரியாமல் தவித்தவர், அன்றிலிருந்து இருவரையும் அவர்களறியாமல் கவனிக்கத் துவங்கினார்.

எப்படியாவது, தொழிலை மேம்படுத்தி, அவன் முன்னால் தலை நிமிர்ந்து நின்று காட்ட வேண்டுமென்ற வெறியுடன் செயல்பட்ட சௌந்தர்யாவாகட்டும்...

ஒரு பெண் தன்னை எதிர்ப்பதா? எப்படியாவது அந்தப் பூர்வீக மாளிகையை தன் நண்பனிடம் ஒப்படைக்க

12.02.2009 00:43

வேண்டுமென்ற வேகத்துடன் இருந்த ப்ரதீப்பாகட்டும், இருவருமே புனிதாவை கவனிக்கவில்லை!

* * *

ஒரு நாள், புனிதாவே இது பற்றி ப்ரதீப்பிடம் கேட்டு விட்டார்.

''ப்ரதீப்! என்னப்பா... சௌந்தர்யாவை ஆசைப்பட்டு கல்யாணம் செஞ்சுக்கிட்டே! இப்ப என்னடான்னா, ரெண்டு பேர் முகத்திலயும் சுரத்தே இல்லை!

''நீ ஒரு பக்கம் வேலை வேலைன்னு ஓடறே... அவ ஹோட்டல், பேக்டரின்னு போயிடறா.

''நமக்குன்னு கொஞ்சம் நேரம் ஒதுக்கணும்பா... அவளை எங்கேயாவது வெளியே அழைச்சிட்டுப் போ! அவங்கம்மா அப்பாவைப் பார்க்க ஆசையாயிருக்கும் இல்லையா? அங்கே கூட்டிட்டுப் போ!'' அக்கறையுடன் முடித்தார்.

''அவ என்ன சின்னக் குழந்தையா... நான் அழைச் சிட்டுப் போறதுக்கு? அங்கே, அவளாவே போயிட்டு வந்துடுவாம்மா! அவளுக்கு என்ன வழியா தெரியாது!''

விட்டேத்தியாகக் கூறிவிட்டுச் சென்றாலும், தாயின் கேள்வி மனதைத் தைக்க, அவரின் மன நிம்மதிக்காகவே அவளை, ஜீவாவின் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

மாலதியும் ரேணுகாவும் ஓடி வந்து வரவேற்க, மனோ ஒருவித உற்சாகக் கூச்சலுடன் சௌந்தர்யாவைக் கட்டிக் கொண்டாள்.

பின் தொடர்ந்து வந்த நளினியின் முகத்திலோ கடும் வெறுப்பும் எரிச்சலும் தெரிந்தன.

ஆனால், சூரியனைக் கண்டதும் மறையும் பனித் துளியாய், ப்ரதீப்பைக் கண்டதும் அந்த எரிச்சல் மறைந்து சிரிப்பு மட்டுமே நிறைந்தது!



அதைக் கண்டதும் உடலும் உணர்வுகளும் தகித்து விட, எதற்காகவும் ப்ரதீப்பை விட்டுத் தர இயலாதென்ற உண்மை புரிவதாய்!

அவனை வெறுப்பதாக நினைத்திருந்த மனதிற்குள் அவனுடைய சுவடுகள் ஆழமாய்!

ரேணுகாவுடன் பேசியபடி அவள் அவர்களுடைய அறைக்குச் செல்ல, ஜீவாவுடன் அலுவலக அறைக்குச் சென்றான் ப்ரதீப்.

நளினியை அழைத்த மாலதி, டிபனை இருவருக்கும் கொடுக்கும்படிப் பணித்தாள்.

''அக்கா! அவளுக்கெல்லாம் என்னால சப்ளை பண்ண முடியாது! வேணும்னா மாமாவுக்கும் ப்ரதீப்புக்கும் கொண்டு போய்க் குடுக்கறேன்!''

நிர்த்தாட்சண்யமாக அவள் மறுக்க, ஜீவாவிற்கும் ப்ரதீப்பிற்கும் அவளிடம் அளித்த மாலதி, சௌந்தர்யா வுக்குத் தானே எடுத்துச் சென்றாள்.

டிபன் ட்ரேயுடன் சென்ற நளினி, அறைக் கதவைத் திறக்கும்போது கேட்ட செய்தியால் ஒரு கணம் உறைந்து நின்று விட்டாள்.

''ஜீவா! அவகிட்டே முதல் நாளே கண்டிஷன் போட் டாச்சு! இந்த வீட்டை உன் பெயருக்கு மாத்திக் குடுத்தா தான் அவளை என் மனைவியாவே ஏத்துப்பேன்னு சொல்லிட்டேன்!

''ஆனா, அப்படியும் அவ ஒத்துக்கலைன்றதுதான் உனக்குத் தெரியுமே! ரொம்பப் பிடிவாதமா இருக்கா... என்ன செய்யறதுன்னு தெரியலை! ஆனா, எப்படியும் எழுதி வாங்கிடலாம்... டோண்ட் ஒர்ரி!'' மெல்லிய குரலில் கூறினான்.

12.02.2009 00:44



''சே! உன்னை என் தங்கைன்னு சொல்லவே வெக்கமா இருக்கு! நீ சொன்னதை நம்பி, சௌந்தர்யா ப்ரதீப்பை பிரிஞ்சிருந்தா, அது எவ்வளவு கொடுமை! நல்லவேளை.. நான் வந்திட்டேன்!''

''கோபத்துடன் தங்கையை மாறி மாறி அறைய ஆரம்பித்தாள் மாலதி!

''அக்கா! ப்ளீஸ் அவளை அடிக்காதீங்க... பாவம் சின்னப் பொண்ணு தெரியாம செஞ்சிட்டா! விட்டுடுங்க!

''பாத்தியாடி! சௌந்தர்யா உனக்காகப் பரிஞ்சு வர்றதை! சீ.. நீயும் ஒரு பொண்ணாடி! கல்யாணமான ஒருத்தரோட உன்னை இணைச்சிப் பேச உனக்கு வெக்கமாயில்லை!'' என்றவள் உடனே சௌந்தர்யாவிடம் திரும்பினாள்.

''சாரிம்மா! நீ ப்ரதீப்பை தப்பா நினைக்காதே!''

அவள் முடிக்கும் முன்பே, ''அக்கா! இவ சொல்றான்னு ப்ரதீப்பைப் பத்தி என்னால எப்படிக்கா தப்பா நினைக்க முடியும்? அவரைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும்!'' சிறு முறுவலுடன் முடித்தாள்.

இந்த ப்ரச்னை ஆரம்பிக்கும்போதே சௌந்தர்யாவை அழைத்துச் செல்ல தோட்டத்திற்கு வந்த ப்ரதீப், நடந்த எதையுமே நம்ப முடியாமல், பூமியில் கால்கள் வேரோடி நின்றிருந்தான்.

புருவங்கள் நெறிந்திருக்க, கடும் சீற்றமும் சிறு கனிவும் இணைந்து, இரு நிலவுகளாய் ஒளிர்ந்தன அவன் விழிகள்!

வேகமாகத் திரும்பிச் சென்ற நளினியோ, அவனை அங்கு கண்டதும், வாயைப் பொத்தி விம்மியபடி உள்ளே ஓடி விட்டாள்.



அப்போதுதான் திரும்பிய மாலதிக்கோ, முகம் வெளுத்து நடுங்கவே தொடங்கி விட்டாள்.

''அக்கா! ப்ளீஸ்... டென்ஷனாகாதீங்க!'' மெதுவாக ஆறுதல் படுத்தினாள் சௌந்தர்யா.

''சாரி ப்ரதீப்! நளினியை தப்பா நினைச்சிக்க வேண்டாம்! தெரியாம செஞ்சிட்டா! நாளைக்கே அவளை ஊருக்கு அனுப்பிடறேன்'' மாலதி மெல்லிய குரலில் இறைஞ்சினாள்.

''பரவாயில்லை... விட்டுடுங்க! இவதான் எதையும் தப்பா எடுத்துக்கலையே!''

யோசனையும், குழப்பமுமாய் கூறி விட்டு அங்கிருந்து அகன்றான் அவன்!

அதற்குப் பிறகு, நூறு முறையாவது சௌந்தர்யாவிடம் மன்னிப்பைக் கோரியிருப்பாள் மாலதி.

பிறகு அவளை சமாதானப்படுத்தி உள்ளே அழைத்து வந்தபோது, கிளம்பத் தயாராக இருந்தான் ப்ரதீப்.

எல்லோரிடமும் விடைபெற்று திரும்பி வரும்போது, காரில் நிலவிய மௌனத்தை திடீரென்று கலைத்தான்.

''ரொம்ப தேங்க்ஸ்! என்னைப் பத்தி நல்லாப் புரிஞ்சி வெச்சிருக்கே! என்னை விட்டுக் குடுக்காம பேசினதுக்கு நன்றி!'' மெல்லிய குரலில் கூறினான்!

''ம்! பெண்கள் விஷயத்துல நீங்க நல்லவருன்னு முன்னாடியே எனக்குத் தெரியும்! ஆனா, சொத்து விஷயத் துல அப்படியில்லைன்னு இப்ப தெரிஞ்சுக்கிட்டேன்'' கள்ளென்று பதில் கொடுத்தாள்.

''நான் ஒண்ணும் பணம், சொத்துன்னு பறக்கலை! உன் பேரில இருக்கற சொத்தை, மாத்தி எழுதிக் குடுன்னுதான்

12.02.2009 00:44

சொல்றேன். நீதான் மாட்டேன்னுட்டே! இதிலே எனக்கு என்னவோ சொத்து மேல ஆசைங்கிற மாதிரிப் பேசறே!" குத்தீட்டியாய் வார்த்தைகள் எறியப்பட்டன.

"அது... எனக்கு.. என் பாட்டி எழுதித் தந்தது. அதைக் கேக்க யாருக்கும் உரிமையில்லை, தெரியுமா?" அவளும் கூர்மையாகவே பதில் கொடுத்தாள்.

"சின்ன வயசலருந்து இப்ப வரைக்கும் அந்தப் பாட்டியை ஒரு நாள் கூட வந்து எட்டிப் பாத்ததில்லை! சொத்துன்னவுடனே ஓடி வந்தாச்சு!"

பற்களைக் கடித்தபடி அடிக்குரலில் அவன் சீற, "ஸ்டாப் இட்" வேகமாகக் கத்தினாள் சௌந்தர்யா.

"ஏன்... உண்மையச் சொன்னா கோபம் வருதோ?" நக்கலாகக் கேட்டான்.

"எது உண்மைன்னு புரியாமப் பேசாதீங்க! எதையுமே நான் காரணமில்லாம செய்ய மாட்டேன்!" அழுத்தமாக முடித்தாள்!

"ஓ! ஆமாமாம்! பல கோடி ரூபா சொத்துங்கறது பெரிய காரணம்தான்! அதை விட முடியுமா?"

அவன் நக்கலாக முடித்த போது, வீடு வந்திருந்தது.

வேகமாக இறங்கி அவள் உள்ளே செல்ல, முகச் சிவப்பும், மூச்சிரைப்புமாய் வருகின்ற மருமகளை வியப்புடன் வரவேற்றார் புனிதா!

தாய் வீட்டிற்குச் சென்று வரும் உற்சாகமில்லாது, ஏதோ ஒரு இனம் புரியா சீற்றமும் வேதனையும் அவளிடம் தெரிவதாய்!

யோசனையுடன் மகனிடம் திரும்பியவர், அவன் அதைவிடக் கோபமாகத் தெரியவே, இதை எப்படியாவது சீர் செய்ய வேண்டுமென்று முடிவெடுத்தார்.

12.02.2009 00:44



## 25

மறுநாளிலிருந்தே, இருவருக்குமிடையே இருந்த பனிப்போர் அதிகரிக்க, மேலும் ஒதுங்கிப் போனான் ப்ரதீப்!

அதுவே அவளுக்குள் உரமாய்ப் பதிய, ஹோட்டல் நிர்வாகம், தொழிற்சாலை, பண்ணை என்று அவளின் கவனம் தொழிலில் அதிகமாகப் பதிந்தது.

நாகராஜும், ரேணுகாவும் உதவ, எதிர்பாராத விதமாக எல்லாவற்றிலுமே சிகரம் தொட ஆரம்பித்தது அந்தப் பெண்மை!

ஹோட்டலில் புதுப் புது உத்திகளை செயல் படுத்த ஆரம்பித்தவள், அதில் வெற்றியும் கண்டாள்.

ஒரு நாள் ஹோட்டலின் பின்புறமிருந்த இடத்தில் புது உத்தியொன்றை செயல்படுத்தலாமென்று தோன்ற அந்த இடத்திற்கு, மேனேஜரை அழைத்துச் சென்றாள்.

அடர்ந்த மரங்களின் நடுவே அழகாய் மென் இருளுடன் ஒளிர்ந்தது அந்த இடம்!

புல்வெளி சீராய் பராமரிக்கப் பட்டிருக்க,

"மேனேஜர், எனக்கு இன்னிக்குக் காலையில் தான் அந்த யோசனை தோணுச்சி... இங்கே ரெண்டு மரங்களுக்கிடையில, 'ஹேமக்'குன்னு சொல்லுவோமே, கயித்து ஊஞ்சல்... அதை அங்கங்கே கட்டிடலாம்...



12.02.2009 00:44



"அது, தேனிலவுத் தம்பதிகளையும், வெளிநாட்டுப் பயணிகளையும் ரொம்ப அட்ராக்ட் பண்ணும்!

"அங்கங்கே தொட்டியில செடிகளை வெச்சி நடுவில இருக்கற அந்த இடத்துல ஒரு சின்ன தாமரைக்குளம் மாதிரி செயற்கையா வெச்சிட்டோம்னா, டூரிஸ்ட்களுக்கு அது ரொம்பப் பிடிக்கும்."

சிறு புன்னகையுடன் அவள் கூற, மேனேஜருக்கு அந்தத் திட்டம் மிகவும் பிடித்துப் போனது.

"ஓகே மேடம்! நாளைக்கே அதுக்கான வேலைகளை ஆரம்பிச்சிடலாம்!" என்றார் அவர்.

இருவரும், சுவாரசியமாக அதைப் பற்றிப் பேசிக் கொண்டு வரும்போது, எதிரில் வந்த ப்ரதீப்பை இருவருமே கவனிக்கவில்லை.

எவ்வளவு இடைவெளியில் ஹேமக்கை அமைத்தால், அதில் இளைப்பாறுகின்றவர்களின் தனிமை கெட்டு விடாமலிருக்கும் என்று விவரித்துக் கொண்டே வந்தாள் சௌந்தர்யா!

திடீரென்று, யார் மீதோ அவள் இடித்துக் கொள்ள, துள்ளி விலகியவள், "சாரி..." என்றபடி நிமிர்ந்தாள்.

எதிரே, விழிகளில் கோபச் சாயலோடு ப்ரதீப் நின்றிருந்தான்.

உடனே அவனை வணங்கிவிட்டு மேனேஜர் விலகிச் செல்ல,

"என்ன... எதிர்லே வரவங்க மேலகூடக் கவனமில்லாம, வேலை நேரத்துல அப்படி என்ன பர்சனல் பேச்சுன்னு தெரிஞ்சுக்கலாமா?" குத்தலாக வந்தது அவன் குரல்!



"ம்... இங்கே புதுசா ஒரு அரேன்ஜ்மெண்ட் செய்யலாமின்னு அதைப்பத்தி டிஸ்கஸ் பண்ணிட்டு இருந்தோம்... அதான்!

"அதோட மேனேஜர் கிட்ட பர்சனலாப் பேசறதுக்கு எனக்கு எதுவும் இல்லை! நீங்க... உங்க மேனேஜரோடதான் பர்சனலாப் பேசுவீங்க போலருக்கு... அது எனக்குத் தெரியாம போயிடுச்சி" அவளும் நக்கலாகவே பதில் கொடுத்தாள்.

அவன் ஒரு விதத் தீவிரத்துடன் அவளையே வெறிக்க, "ஆனா, ஒய்ஃப் கிட்ட மட்டும் தான் பர்சனலாப் பேசறதில்லை போலருக்கு! மத்த எல்லார்கிட்டயும் ரொம்ப ஃப்ரீயா பர்சனல் விஷயங்களை டிஸ்கஸ் பண்றீங்க!" ஒரு பெருமூச்சுடன் முடித்தாள்.

"பர்சனலாப் பேசத் தகுதியில்லாத மனைவிகிட்டே எதையும் பகிர்ந்துக்க முடியாது! அது எனக்குப் பிடிக்கவும் பிடிக்காது!"

"ஓ! அதனாலதான் அந்த நளினி கிட்டே எல்லாத்தையும் பகிர்ந்துக்கிட்டீங்களோ... நம்ம ரெண்டு பேருக்கும் நடுவில எந்தவிதத் தொடர்பும் இல்லாதது... சொத்து எழுதித் தரலைங்கிற காரணத்துக்காக என்னை விலக்கி நிறுத்தியிருக்கறது... இப்படி எல்லாத்தையும்!"

எகத்தாளமாக அவள் கேட்க, அவனுடைய கை முஷ்டிகள் இறுகி, விழிகள் சிவந்தன.

"ஏய்! இது பொது இடம்கிறதாலே பேசாம இருக்கேன். இல்லேன்னா நடக்கறதே வேற!" அடிக் குரலில் கர்ஜித்தான்.

12.02.2009 00:44

''ம்... என்ன செய்வீங்க.. ஆசை மனைவியை ஓடி வந்து அணைச்சிப்பீங்களா... இல்லை ஒரே அறையிலே கன்னத்துல அறைஞ்சு என்னைப் பழி வாங்குவீங்களா?''

ஓரக் கண்ணால் அவனையே கூர்ந்தபடிக் கேட்டாள்.

அதற்குள் மேனேஜரின் குரல் இடையிட்டது.

''சார்! ஜூஸ் எடுத்துக்கங்க! மேடம்... நீங்க சொன்ன ஹேமக் ஐடியாவை நம்ம ஸ்டாஃப்ஸ் கூட ரொம்ப வரவேற்கிறாங்க?'' பெருமையுடன் சிலாகித்தார்.

பழரசத்தை எடுத்துக் கொண்ட ப்ரதீப் ''என்ன மேனேஜர் அது? ஹேமக் ஐடியா?'' அலட்சியமாகக் கேட்டான்.

''மேடம் புதுசா ஒரு ஐடியா சொன்னாங்க... நீங்க வரும்போது. அதைப் பத்திதான் பேசிட்டிருந்தோம்'' என்றவர், மெதுவாக விவரிக்க ஆரம்பித்தார்.

விட்டேத்தியாகக் கேட்க ஆரம்பித்தவனின் முக பாவம் மாறி, விழியோரம் ஆச்சர்ய மின்னல் ஒன்று புதிதாய் வந்தது.

பிறகு, ''எக்ஸ்கியூஸ் மீ சார்... எனக்கு வேலையிருக்கு... நான் கிளம்பறேன்'' வேகமாக விடைபெற்றுச் சென்றவரையே அவன் விழிகள் தொடர்ந்தன.

''இவன் மட்டும் என்மீது அன்பாக இருந்திருந்தால் எப்படியிருக்கும்...'' ஆசை மனது ஏக்கத்துடன் பெருமூச்சு விட ஆரம்பித்தது.

கண்களுக்குள் நுழைந்து இதயத்திற்குள் பள்ளி கொண்டிருந்த அவன் உருவம்... இன்று ருத்ர தாண்டவத் தோற்றமாய்!

கூடு மறந்த பறவையாய் உள்ளம் பதறித் துடித்தது.



எல்லாவற்றையும் நொடியில் கலைத்தது... காதோரம் கேட்ட அழுத்தமான ஒரு குரல்!

''ஹும்! நான்கூட எவ்வளவோ கற்பனை பண்ணி வெச்சிருந்தேன்... நம்ம ஹனிமூன்லே, அது மாதிரி ஒரு 'ஹேமக்'கிலே நீ ரிலாக்ஸ் பண்ணிட்டு இருக்கும்போது, நான்... சே... எல்லாம் வேஸ்ட்!

''தகுதியில்லாத ஒருத்தியை விரும்பினதாலே என் ஆசையெல்லாம் நிராசையாய் போயிடுச்சி!''

கோப நெருப்பாய் சுடும் விழிகளுடன் அவளை வெறுப்புடன் ஊடுருவினான் அவன்!

''ஒரு நிமிஷம்! உங்க பார்வையில வேணா நான் தகுதியில்லாதவளா இருக்கலாம்! ஏன்னா, உங்க பார்வை, கணிப்பு எதுவுமே சரியில்லை!

''ஆனா இது என் பாட்டியோடது! அதுக்கு நான் தகுதியானவன்னு அவங்களே முடிவு செஞ்சப்புறம் நீங்க யாரு அதை மறுக்கறதுக்கு?'' அவளும் சீறினாள்.

''ம்! நான் உன் கணவன்! அதாவது தெரியுமா... இல்லை... மறந்து போச்சா?''

''ஹும்! எனக்கு எல்லாம் ஞாபகம் இருக்கு! ஞாபகம் வெச்சிருக்க வேண்டியவங்களுக்குத்தான் எல்லாமே மறந்துடுச்சி!''

''ஒரு மனைவின்னா, அவ அதுக்கேத்த குவாலிட்டியோட இருக்கணும்!''

அவன் குத்தலாகக் கூற, ''ஓ! அது ரெண்டு பேருக்குமே பொருந்தும்! கணவனும், அந்த மாதிரி இருக்கணும்... தன்னை மட்டுமே விரும்பணும்! நண்பனுக்காக தன்னை விலக்கி நிறுத்[illegible] மனைவி எதிர்

12.02.2009 00:44



பார்ப்பா இல்லையா?'' உதடுகள் ஏளனத்துடன் சுழியக் கேட்டாள்.

''என்ன... பழைய ஞாபகமா? கோவாவை சுத்திப் பார்த்தப்ப, ரொம்ப இன்னொசெண்ட்டா நடிச்சியே! ஆனா, இப்ப நான் அதை நம்பமாட்டேன்.''

''ப்ச்! நீங்க நம்பினா நம்புங்க. இல்லேன்னாலும் நான் கவலைப்படப் போறதில்லை. ஆனா நான் அப்படியே தான் இருக்கேன். மாறலை!''

''நான் மாறிட்டேன். என் மனசிலே அந்த மாதிரி எண்ணமெல்லாம் எதுவும் கிடையாது! என்னோட மென்மையான உணர்வுகளை சாகடிச்சவளே நீதானே?''

குத்தலாகக் கூறிவிட்டு விருட்டென்று திரும்பி வேகமாக நடக்கத் தொடங்கினான் அவன்.

இவன் எதற்காக வந்திருப்பான் என்று யோசித்தவளால், எதையுமே யூகிக்க முடியவில்லை.

## 26

மறுவாரமே, தாய், தந்தையைப் பார்க்க மாளிகைக்கு கிளம்பியபோது, புனிதாவும் உடன் கிளம்பினார்.

அங்கு சென்றதும் எப்போதும் போல், மனோவுடன் விளையாடி விட்டு, ரேணுகாவுடன் அவர்களுடைய அறைக்குச் சென்றாள் சௌந்தர்யா.

நாகராஜுடன், ஹோட்டலில் செய்யப் போகும் மாற்றங்களைப் பற்றி விசாரித்தவள், பண்ணை நிலங்களில்



இயற்கை உரத்தின் பயன்பாட்டைப் பற்றியும், அதன பலன்களையும் பற்றிக் கலந்தாலோசித்தாள்.

சென்ற முறையே விசாரிக்கும்படிக் கூறி இருந்ததால், மண்புழு இயற்கை உரத்தைப் பற்றி உற்சாகமாக விவரித்தார் அவர்.

''நம்ம நிலத்தில் ஒரு பகுதியில மண்புழு உரம் தயாரிக்கலாம் சௌந்தர்யா! மண்புழுக்கள், தான் வசிக்கிற மண்ணோட தன்மையை சுழற்சி முறையில மாத்திக் கிட்டே இருக்குமாம்! மக்கிய குப்பை, மாட்டுச் சாணம் எல்லாத்தையும் குவியலா கொட்டி வெச்சி அதிலே மண் புழுக்களை விட்டுட்டா அங்கேயே வசிக்க ஆரம்பிச்சடுமாம்!

''அவற்றின் கழிவுகள்லே, பயிர்களுக்குத் தேவையான சத்துமிக்க தாது உப்புக்கள் நிறைய இருக்குமாம். அதை மேலுரமாவும் அடியுரமாவும் பயன்படுத்தலாம்!

''இந்த மாதிரி இயற்கை உரத்தாலே நல்ல ரிசல்ட் கிடைக்குதாம்... ரசாயன உரத்தைத் தவிர்க்கலாம்... நல்ல விளைச்சல்... மார்க்கெட்ல நல்ல விலையும் கிடைக்குதாம்! முயற்சி செஞ்சுதான் பாப்போமே!'' உற்சாகத்துடன் முடித்தார்.

''அம்மா! விட்டா, அப்பா பெரிய விவசாயியா ஆயிடுவாங்க போலருக்கு!'' பெருமையுடன் கிண்டல் செய்தாள் சௌந்தர்யா.

''ஆமாம்மா! எங்கப்பா, அதுக்கு முந்தின தலைமுறையில எல்லாருமே விவசாயிங்க தானே சௌந்தர்யா!

''விவசாயிங்க இல்லைன்னா, நாம சாப்பிட முடியுமா? மனுஷன் எதிலே வேணா மாறலாம்! ஆனா அடிப் படையான [illegible] அதுக்கு பதில

12.02.2009 00:45

பணத்தையா சாப்பிட முடியும்? இப்ப விவசாயிங்க, விளைநிலங்கள்லாம் அழிஞ்சிட்டு வரதை நினைச்சா ரொம்பக் கஷ்டமா இருக்குடா!

"எத்தனை விவசாயிகள் வெள்ளாமை செய்ய முடியாம, தற்கொலை பண்ணிக்கறதா பத்திரிகையில படிச்சோம்... ரத்தக் கண்ணீர் வருதுடா!

"மத்தவங்களை சொல்லாம நாமே முயற்சி செஞ்சு பார்க்கலாமே! நான் எல்லாத்தையும் பாத்துக்கறேன் நீ தைரியமா இரு!

"நம்ம பங்கு பண்ணை நிலத்துல பசுமைப் புரட்சியை ஆரம்பிப்போம். மத்தவங்க ஏத்துக்கிட்டா ஏத்துக்கட்டும் இல்லேன்னா விட்டுடலாம்!"

பெரும் கனவு தெரிந்தது அவர் கண்களில்!

அதைக் கலைக்க மனமின்றி, "ஜமாய்ங்கப்பா!" என்று கட்டை விரலை உயர்த்த, ரேணுவின் குரல் இடையிட்டது.

"இப்பல்லாம் அப்பாவும் பொண்ணும் பேச ஆரம்பிச்சாலே பிசினஸ், பிசினஸ் தானா? நீ எப்படிடா இருக்கே.. மாப்பிள்ளை உன்னைப் புரிஞ்சிக்கிட்டாரா?" ஆதங்கத்துடன் கேட்டார்.

"அம்மா! நான் நல்லாருக்கேன்... உங்களுக்கு பதிலா, அத்தை என்னை ஒரு மக மாதிரி அன்பாய் பாத்துக்கறாங்க... பூவாத்தாங்கறாங்க... அதை விட வேற என்ன வேணும்!" தலை சரித்துக் கேட்டாள்.

"அதெல்லாம் இல்லாமக் கூட வாழ்ந்துடலாம்டா! ஆனா, புருஷனோட அன்பும், அவர் மனசுல நிலையான ஒரு இடமும்தான் வேணும்! அதுதான் ஒரு பொண்ணுக்கு பெரிய சொத்தே!"



ஒரு பெருமூச்சுடன் கூறியவரிடம், "உங்க மாப்பிள்ளை மாறினா, அப்புறம் கடலுக்கடியில பூகம்பம் வந்து சுனாமியா மாறி கோவா அழிஞ்சுடாது!

"அவ்வளவு அபூர்வமான விஷயம் நடந்து சுனாமியால நாம எல்லாரும் கஷ்டப்படறதை விட, பேசாம இப்படியே இருந்துடலாம்மா!"

மெல்லிய குரலில் அவள் முடிக்க, விழிகளில் கண்ணீர் வந்து எட்டிப் பார்த்தது ரேணுவிற்கு!

மகளின் மனநிலை உணர்ந்து ஆதரவாய் அவள் தலையை வருடிக் கொடுத்தார் நாகராஜ்!

"பேசாம மாப்பிள்ளைகிட்டே உண்மையைச் சொல்லி, உன்னால பாட்டியோட வேண்டுகோளை மீற முடியாதுன்னு சொல்லிடலாமே சௌந்தர்யா!"

"இல்லைம்மா! பாட்டி இதை யார்கிட்டயும் சொல்ல வேண்டாம்னு எழுதியிருக்காங்களே.. நான் அதை எப்படி மீறுறது?"

"அதுக்காக... செத்துப் போனவங்க சொல்லிட்டு போனதுக்காக உயிரோட இருக்கறவங்க கஷ்டப்படறதாம்மா?" கவலையுடன் கேட்டார் ரேணு!

"அப்படி இல்லைம்மா! இதைப் பத்திப் பேசணும்னா நான் எல்லாத்தையும் சொல்லியாகணும்... பாட்டி இந்த வீட்டில கஷ்டப்படுத்தப்பட்டது... ஒரு வேலைக்காரி மாதிரி தனிமைச் சிறையில அடைக்கப்பட்டதெல்லாம் ப்ரதீப்புக்கு ஏன் தெரியணும்?

"இறந்து போனவங்க, மதிப்போடவே இருக்கட்டுமே! எல்லாம் சரியாயிடும்மா.. நீங்க கவலைப்படாதீங்க."

12.02.2009 00:45



தெளிவும், தீர்க்கமுமாய் ஆறுதல் கூறியவளைப் பார்த்ததும், இந்தப் பெண்ணிற்குத்தான் எவ்வளவு தைரியத்தையும், பக்குவத்தையும் அளித்திருக்கிறான், அந்த ஆண்டவனென்ற பிரமிப்பு வந்தது.

* * *

அங்கே மாலதியுடன் பேசிக் கொண்டிருந்த புனிதா, எல்லா விபரங்களையும் அறிந்தவுடன் சிலையாக அமர்ந்து விட்டார்.

தன் மகனின் போக்கு... அதனால் இருவரும் பிரிந்திருப்பது... நளினி ஊருக்கு அனுப்பப்பட்டது... எல்லாவற்றையும் அறிந்தவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

ஒரே வீட்டிலிருந்தும், இதுவரை தனக்கு எதுவுமே தெரியவில்லையே என்ற கலக்கமும், குழப்பமும் அவரை வெகுவாய் வியாபித்தன!

மகனுடைய பிடிவாதத்தை அறிந்திருந்ததால் விட்டுக் கொடுக்காத மருமகளின் மீது பெரும் பரிதாபம் வர, இனிமேல் இருவரையும் இணைத்து வைப்பதுதான் தன் வேலையென்று, மனதிற்குள் சூளுரைத்துக் கொண்டார்.

"இந்த விஷயத்தை நான் சொன்னேன்னு யார் கிட்டயும் சொல்லிடாதீங்கம்மா! அப்புறம் இவருக்குக் கோபம் வந்துடும்! எனக்கே இப்பதான் எல்லாம் தெரிய வந்தது..."

பயத்துடன் வேண்டுகோள் விடுத்த மாலதியை சமாதானப்படுத்தியவர், ஒரு முடிவுடன் அங்கிருந்து கிளம்பினார்.



## 27

மறுநாளிலிருந்தே அவரிடம் நிறைய மாற்றங்கள்!

தன் மகனையும், மருமகளையும் கூர்மையாகக் கவனித்தவர், இருவரையும் இணைத்து வைக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட ஆரம்பித்தார்.

ஒருநாள், இருவரும் ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, ப்ரதீப் வீட்டிற்கு வர, மகனை நிறுத்தியவர், "என்னப்பா... வர வர என்னை ரொம்ப சோம்பேறி ஆக்குறீங்க... சீக்கிரம் ஒரு பேரக் குழந்தையை பெத்துக் குடுத்தா நான் சுறுசுறுப்பா ஆயிடுவேன் இல்லையா?" ஆதங்கத்துடன் கேட்டார்.

ஒரு கணம் உறைந்து விரைத்து அமர்ந்திருந்த மருமகளும், விழிகளில் கூர்மையும் எச்சரிக்கையுமாய் மனைவியை ஊடுருவிய மகனையும் அவருடைய ரகசிய விழிகள் அளவெடுத்தன.

சட்டென்று பதில் கொடுத்தாள் சௌந்தர்யா.

"அதெல்லாம் கொஞ்ச நாள் போகட்டும்னு ப்ளான் பண்ணியிருக்கோம் அத்தை!" மெல்லிய குரலில் கூறினாள்.

அதைக் கேட்டதும் இறுகிய முகத்துடன் மாடிக்குச் சென்ற மகனைப் பார்த்தவரின் மனதில், கணவனை விட்டுத் தராமல் பேசிய மருமகளின் மேல், பெரும் மதிப்பும் பெருமையும் வந்தன!

12.02.2009 00:45

மறுநாளே அவர் ப்ரதீப்பிடம் நச்சரிக்க ஆரம்பித்தார்!

"ப்ரதீப்! சௌந்தர்யாவை எங்காவது அழைச்சிட்டுப் போடா! ஊருக்கு உழைக்கறதிலே இருக்கியே தவிர, உன் சந்தோஷத்துக்காக நீ நேரம் ஒதுக்கறதே இல்லை தெரியுமா? பாவம் அந்தப் பொண்ணு!"

அவர் கூறியதும், "அம்மா! இப்ப நான் பிசியா இருக்கேன்... தொந்தரவு பண்ணாதீங்க! உங்க மருமகளும் இப்ப தொழிலை டெவலப் பண்றதிலே மும்முரமா இருக்கா! மெதுவாப் பாத்துக்கலாம்மா!"

விட்டேத்தியாகக் கூறிவிட்டுச் செல்லும் மகனையே வெறித்தவர், மருமகளிடம் திரும்பினார்.

"ஏம்மா? உன்னை விரும்பித்தான் என் மகன் கல்யாணம் செஞ்சுக்கிட்டான்! அப்புறம் ஏன் ஒரு ஹனிமூனுக்குக் கூடப் போகாம இப்படி பிசினஸ்தான் வாழ்க்கைன்னு ரெண்டு பேருமே இருக்கீங்க?"

"அப்படி இல்லத்தை! இப்பதானே என் கையில சில பொறுப்புகள் தரப்பட்டிருக்கு! அதை நல்லா நிர்வகிச்சு நல்ல பெயர் வாங்கணுமேன்னு நான் பாடுபடறேன்!

"அவருக்கும், இப்ப நிறைய கடமைகள் இருக்கு... அவர் ஃப்ரெண்டோட தொழிலை முன்னுக்குக் கொண்டு வரணும் இல்லையா? கொஞ்சம் எங்களுக்கு டைம் குடுங்கத்தை... ப்ளீஸ்!"

மென்மையாய் இறைஞ்சிய மருமகளிடம் கரை காணாப் பரிவு சுரக்க மெல்ல அணைத்துக் கொண்டார் புனிதா!

ஆனாலும், மனதிற்குள் தன் முயற்சிகள் தோற்றுப் போகிறதேவென்ற சஞ்சலமும் ஆதங்கமும் நிறைய, ஓய்ந்து போனார் அவர்.

தங்களுடைய ரகசியம் அவருக்குத் தெரிந்து விட்டதோவென்ற பயத்துடன் அமர்ந்திருந்தாள் சௌந்தர்யா.



பிறகு அவர் பூஜையறைக்கு செல்ல சிறிது நேரத்தில் கீழே இறங்கி வந்த ப்ரதீப்பின் முகத்தில் எரிமலையின் சீற்றம் தெரிய, அவளருகே வந்தான்.

"என்ன... ஹஸ்பெண்ட் வந்தா டிபன் காபி தரணும்கிற சாதாரண விஷயத்தைக் கூட உங்கம்மா உனக்குச் சொல்லித் தரலையா?

"கல்யாணம்கிறது, சும்மா உக்காந்து சாப்பிட்டு உடம்பை வளர்க்கிறதுக்கு இல்லை... கணவனோட சில தேவைகளையும் கவனிக்கணும்! போய் டிபன் எடுத்துட்டு வா" அடிக்குரலில் சீறினான்.

உடனே பதறி எழுந்தவள், சமையலறைக்கு சென்ற போது, தினமும் அவன் வந்தவுடனே எல்லாவற்றையும் எடுத்துச் சென்று, ஒரு கடமைக்காகவேனும் அவனிடம் கொடுத்து உபசரிப்பது நினைவு வந்தது.

இன்று புனிதா ஆரம்பித்த ப்ரச்னையால், மறந்து விட்டதை வன்மையாய் அவன் நினைவு படுத்தியது, குற்றக் குறுகுறுப்பாய்!

அவசரமாக டிபன் காபியை எடுத்துச் சென்று அவனிடம் அளித்துவிட்டு, வேகமாகத் தன் அறைக்குச் சென்றாள் அவள்.

அவன் ஏன் அப்படி நடந்து கொண்டான் என்று யோசிக்கும்போதே, அது அவளைப் பழி வாங்கும் நடவடிக்கைதான் என்பது மறு நாளே புரிந்து போயிற்று.

* * *

அன்று, மண்புழு இயற்கை உரம் தயாரிக்கவென்று நிலம் தேர்ந்தெடுத்து, அதற்கான முன்னேற்பாடுகளை நாகராஜுடன் சேர்ந்து செய்து விட்டு, அவள் வீட்டிற்கு வரும்போதே, இருட்டி விட்டது.

12.02.2009 00:45



புனிதா அவளை வரவேற்று காபியைக் கொடுத்து விட்டு விபரம் கேட்க, தன் புது முயற்சியை உற்சாகத்துடன் விவரிக்க ஆரம்பித்தாள் அவள்.

பிரமிப்புடன் கேட்டிருந்த புனிதாவிற்கும் மிகுந்த உற்சாகம் தொற்றிக் கொள்ள, "ரொம்ப சந்தோஷம் சௌந்தர்யா! போற போக்கைப் பாத்தா நீ நிர்வாகம் பண்றதிலே ப்ரதீப்பை மிஞ்சிடுவே போலருக்கே!" மனமாரப் பாராட்டினார்.

அதைக் கேட்டபடி படிகளில் இறங்கிய இரு வலிமையான பாதங்கள் ஒரு கணம் இறுகி நின்றன.

## 28

பிறகு மேலே ஏறிச் சென்றவன் திரும்பும்போது, அவன் கையில் குவியலாய் பேண்ட் சட்டைகள்!

வேகமாகக் கீழே வந்தவன் அதை அவளின் முன்னால் போட்டு விட்டு, "இந்த பேண்ட், சர்ட்டெல்லாம் துவைச்சி அயர்ன் பண்ணி எடுத்து வை! புருஷனை விட நாம பணக்காரிங்கிற ஆணவமெல்லாம் இங்கே வேண்டாம்!"

அழுத்தமாக மொழிந்தவன் திரும்ப, "ப்ரதீப்! அதுக்குதான் நம்ம வீட்டில ஆட்கள் இருக்காங்களேப்பா... அவளை ஏன்?"

புனிதா முடிப்பதற்குள் ஒரு கையுயர்த்தித் தடுத்தவன், "அம்மா! சும்மா உக்காந்து சாப்பிட்டா உடம்பு திருப்பிடிச்சிப் போயிடும்... அவ செய்யட்டும்! ஏன்



முன்னாடி நீங்க செஞ்சதில்லை?" கோபமாய் கேட்டான்.

"அதில்லை ப்ரதீப்... அவ பிசினஸையும் பாத்துட்டு இதையும் எப்படிச் செய்வா!

"அதான்ப்பா சொன்னேன்!"

மகனின் வித்தியாசமான பேச்சும் நடத்தையும் சிறு பயத்தை உள்ளே விதைக்க, குழப்பத்துடன் முடித்தார்.

"ஓ! அதனாலதான் அவ என்னை மிஞ்சிடுவான்னு புகழாரம் சூட்டிட்டிருந்தீங்களா? நீங்க இப்படி ஓவரா இடம் குடுக்கறதாலதான் இவ இப்படி ஆடறா?"

அவன் குரல் உயர, "ப்ரதீப்! என்னாச்சிப்பா உனக்கு? அவ உன் மனைவி... அதுவும் நீ விரும்பிக் கல்யாணம் செஞ்சுக்கிட்டவ! அவளைப் போய் ஏம்பா இப்படிப் பேசறே... அவ என்ன தப்பு செஞ்சா?"

"என்ன தப்பா? அது அவளுக்கே தெரியும்மா! அங்கே கேளுங்க! அவகிட்டே ஜாக்கிரதையா இருங்க... அவ ஒரு பணப்பேய்! அவளோட உங்களை தனியா விட்டுட்டுப் போகக்கூட எனக்கு பயமாருக்கு!"

குரூரமாய் அவன் கூற, தொப்பென்று சோபாவில் சரிந்து அமர்ந்தவளின் இதயம் பல துகள்களாய் சிதறியது... விழிகள் உலர்ந்தன!

"ப்ரதீப்! வார்த்தைய அளந்து பேசு... அவ உன் மனைவி! அவளை நீ மதிச்சாத்தான் மத்தவங்க மரியாதை குடுப்பாங்க.

"நல்லவேளை... இன்னிக்கு சமையல்காரம்மா லீவு... வேலைக்காரங்க காதில விழுந்தா என்னாகிறது?

12.02.2009 00:45

''புருஷன், பொண்டாட்டி ப்ரச்னை நாலு சுவத்துக்குள்ளே இருக்கணும்! எனக்குத் தெரியறது கூட அநாவசியம்... தப்பு பண்றே ப்ரதீப்!'' அடிக்குரலில் எச்சரித்தார் புனிதா.

அந்தக் கணமே, அவனுடைய ஈகோவிற்கு பெரிய அடி விழ, ''ஓ! என்னை விட இப்ப வந்த அவ உங்களுக்கு முக்கியமாப் போயிட்டாளா?''

நம்ப முடியாமல் வினவியவனின் விழிகளில் பெரும் வலி தெரிய, உடைந்து போனார் புனிதா!

''ஏன்ப்பா இப்படிப் பேசறே? எப்பவுமே எனக்கு நீதான் முக்கியம்கிறது உனக்குத் தெரியாதா? ஆனா, இப்ப சௌந்தர்யாவையும் என்னால விட்டுத் தர முடியாது. அவ என் மருமக!''

ஆணித்தரமாக அவர் முடிக்க, ''அவ மேல இவ்வளவு பாசமா இருக்கீங்களே? ஒரு விஷயம் உங்களுக்குத் தெரியுமா? அவ உங்க மருமக மட்டும்தான்... என் மனைவியா வாழலை!''

தாங்க முடியாத கோபத்தில் தங்களின் வாழ்க்கை ரகசியத்தைப் போட்டு உடைத்து விட்டான் அவன்!

சௌந்தர்யா பதட்டத்துடன் நிமிர, ''எனக்கு அது தெரியும் ப்ரதீப்... ஆனா, ஏன் வாழலை தெரியுமா? தப்பு முழுக்க உன் மேல இருக்கிறதாலதான்!'' புனிதா கோபத்துடன் சீறினார்!

''அம்மா...'' இதை எதிர்பார்க்காததால் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றவன், உடனே சமாளித்து அவளிடம் திரும்பினான்.

''ஏய்! இது உன் வேலையா? எங்கம்மா கிட்டே இல்லாததும் பொல்லாததும் சொல்லி, அவங்க மனசைக் கலைச்சி வச்சிருக்கியா?'' ரௌத்ரமாய் கர்ஜித்தான்.



''ப்ரதீப்! அவ எதுவும் சொல்லலை! அவளை ஏன் மிரட்டறே? நீதான் கொஞ்ச நாளா உன் நல்ல பண்புகளை எல்லாம் எங்கேயோ தொலைச்சிட்டு நிக்கறே!''

''அப்போ வேற யார் சொன்னது?''

உடனே மாலதியின் கோரிக்கை நினைவு வர

''யாரோ சொன்னாங்க.. விடேன்! இப்ப அதுவா முக்கியம்! ஆனா சௌந்தர்யாவை இந்த சொத்து விஷயத்துல, நீ வற்புறுத்தித் தொந்தரவு செய்யறது சரியில்லைப்பா!''

பெரும் சஞ்சலத்துடன் கூறினார்.

''அது என் கடமைம்மா! நம்ம குடும்பம் இந்த நிலைமையில இருக்கறதுக்குக் காரணமே ஜீவாவோட அப்பாதான்... அது மறந்திடுச்சா?''

''மறக்கலைப்பா! அதுக்கு நீதான் நன்றிக் கடன் படணும்! வேணும்னா, இது வரைக்கும் நீ சம்பாதிச்சி வாங்கின இந்த வீடு...

''ஃபார்ம் ஹவுஸ் எல்லாத்தையும் குடு!

''அதுக்காக சௌந்தர்யாவை அவ பேரில இருக்கற சொத்தை எழுதிக் குடுன்னு கட்டாயப் படுத்தறது நியாயம் இல்லைப்பா!

''அது அவங்க பாட்டி, அவளுக்குக் குடுத்தது... அதை எப்படி அவளால தர முடியும்...! இப்பக்கூட ஜீவாவை அந்த வீட்டை விட்டு அவ காலி பண்ணச் சொல்லலையே! பெருந்தன்மையா விட்டுக் குடுத்துட்டு தானே இங்கே நம்ம வீட்டில வந்து வாழ்ந்திட்டிருக்கா!''

அவருடைய நியாயம், அவளிடம் எடுபடவே...

12.02.2009 00:46





வேகமாய் அவளிடம் திரும்பியவன், ''நல்லா நடிச்சி, எங்கம்மாவை உன் பக்கம் திருப்பிட்டே இல்லை? இது எத்தனை நாளுன்னு நானும் பார்க்கறேன்'' வெறுப்புடன் கத்திவிட்டு வெளியேறினான்.

உணர்வுகள் தொய்ந்து போய் அமர்ந்திருந்தவளுக்குள், பெரும் ஆறுதலாய், புனிதாவின் வார்த்தைகள்!

மகன் என்று பாராமல் நியாயத்தின் பக்கம் பேசியவரிடம், மனம் நிறைந்த நன்றியும், மதிப்பும் ஒருங்கே பெருகின.

விழிகளில் இரு சோக நிலாக்கள் உதயமாக, தன் வாழ்க்கையை எண்ணி அவளுக்கே பெரும் தவிப்பாய்!

அதே நேரம் அவளருகே அமர்ந்து, கையைப் பிடித்து அழுத்தி ஆறுதல் தந்த புனிதாவின் தொடுகை, பெரும் பலமாய்!

அனலாய் தகித்த உடல், சட்டென்று குளிர்ந்தது.

''கவலைப்படாதே சௌந்தர்யா! இந்த நேரத்துல தான் நீ ரொம்ப தைரியமா இருக்கணும்! உனக்கு எந்தக் காலத்துலயும், பக்கபலமா நான் இருப்பேன்.''

அழுத்தமாக வந்த சொற்கள் பெரிதும் பலப்படுத்த, நிமிர்ந்து, ''உங்களுக்கு எங்க விஷயம் எப்படித் தெரியும்...?'' குழப்பத்துடன் கேட்டாள்.

''அன்னிக்கு, மாலதிதான் எல்லாம் சொன்னா! நளினி டிபன் கொடுக்கப் போனப்ப ஜீவாவும், ப்ரதீப்பும் பேசிட்டிருந்திருக்காங்க...

''அதைக் கேட்டுட்டு வந்து, அவ உன்னைக் காயப் படுத்தற மாதிரிப் பேசினாளாமே! அப்பதான் மாலதிக்கே தெரியுமாம்.



''உடனே தலையிட்டு, தன் தங்கையை ஊருக்கு அனுப்பிட்டதா சொன்னா! ப்ரதீப் மேல நீ வச்சிருந்த நம்பிக்கைக்கு ரொம்ப நன்றிம்மா!

''ஆனா, அவன் உன்னைப் புரிஞ்சிக்கலையே... உன் மேல நம்பிக்கை வெக்கலையே!

''நட்புக்காக தன்னையே தந்த கர்ணன் மாதிரி, என் மகனும் இருக்கறது எனக்குப் பெருமைதான்னாலும், இது இழக்கக் கூடிய உறவில்லையே!

''கர்ணன் தான் பிறந்தவுடனே பிரிஞ்ச தாயை, இழந்தான்... ஆனா அதே தாய்கிட்ட் செய்த சத்தியத்துக்காக, தன் உயிரையே இழந்தான்!

''மனைவிங்கற உறவு, அவனை நம்பி வந்ததாச்சே! நண்பனுக்காக அதை எப்படி இவன் விலக்கி வைக்கலாம்?

''நான் அவனோடத் தனியாப் பேசிப் பாக்கறேன்... அப்படியும் அவன் புரிஞ்சிக்கலைன்னா, அவன் என் மகனே இல்லை'' கண்ணீருடன் குமுறினார்.

அவளுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

ஆனாலும், ''அப்படி சொல்லாதீங்கம்மா அவருக்குன்னு இருக்கற ஒரே உறவு நீங்கதான்!'' மெதுவாகக் கூறினாள்.

''என்னம்மா சொல்றே? உனக்குன்னு இருக்கறதும் அவன் மட்டும் தானே! அவனுக்கும் கணவன்கிற கடமை இல்லியா?''

''எந்தப் பொண்ணுக்குமே என்ன தான் அம்மா அப்பா இருந்தாலும், கடைசி வரைக்கும் துணையா வரப் போறது அவ கைப்பிடிச்ச ...

12.02.2009 00:46

என்றவரின் மனதிற்குள், மருமகள் தன் மகனை விட்டுக் கொடுக்காது பேசியது பெரும் இதமாய்...!

இருவரும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

## 29

பிறகு மெதுவாக எழுந்தவள் தோட்டத்திற்குச் செல்ல, பூவாடைக் காற்று மென்மையாய் அவள் தேகம் தீண்டியது.

மழை வந்து நின்றிருந்ததில், மின் கம்பிகள் முத்து மாலை சூடியிருந்தன.

அவன் என்னதான் வெறுப்பாகப் பேசினாலும், விளக்கை சுற்றும் விட்டிலாய் மனம் அவனையே சுற்றியது.

ஒரு விதத்தில் பெரும் நிம்மதியாய்!

வரதட்சணை கேட்டு மனைவியை தாய் வீட்டிற்கு விரட்டியடிக்கும் ஆண்களுக்கு நடுவே, தன் மனைவியின் பெயரில் இருக்கும் சொத்தை நண்பனிடம் ஒப்படைக்கத் துடிக்கும் மனதின் சுய நலமில்லா நன்றியுணர்ச்சி புரிவதாய்!

அந்த ஒரு விஷயத்தில் அவன் மீது ஏனோ கோபப் படவே இயலவில்லை. அந்த வீடு அவளிடமிருந்தால் தனக்கு தானே சொந்தமென்று லாபக் கணக்கு போடாமல், நட்பிற்காக அதை இழக்கத் துணிந்தவனுடைய உணர்வுகளும் புரிவதாய்!

ஆனால், தன்னை அவன் புரிந்து கொள்ளவில்லையே என்று நினைத்தவுடனே சிறு வலி தேகமெங்கும் பரவியது.



உள்ளத்தில் சிறு கவிதைத் துளி உதயமானது.

உன்னை...
உயிராய்
நேசிக்கிறேன்...
உள்ளம் கவர் கள்வனே!
விபத்தில்...
விழி இழந்தவன்
வர்ணங்களை
விரும்புவது போல்!

* * *

மறுநாளே, அவளை அழைத்த நாகராஜ் ஒரு அருமையான யோசனையை அவளிடம் கூறினார்.

"நம்ம ஊரிலே என் ஃப்ரெண்ட் சுப்பையா கிட்ட தாம்மா இந்த இயற்கை உரத்தைப் பத்தி விசாரிச்சேன்...

"அவன் மகன் வெங்கடேஷ், கிராமத்துல அதானே செஞ்சிட்டிருக்கான்... அவனை இங்கே அனுப்பி வைக்க முடியுமான்னேன்!

"நல்ல சம்பளம்னதும் சுப்பையா ஒத்துக்கிட்டான்... அவனும் கிராமத்துலயே போய் செட்டிலாகப் போறானாம்.

"அதனால மகனை இங்கே அனுப்பறேன்னான்... ரொம்ப சந்தோஷமா இருக்கு...

"நம்ம பண்ணை வீட்டிலேயே அவனைத் தங்க வெச்சிடலாம்... நமக்கு ரொம்ப உதவியா இருப்பான்... அவன் கிட்டயும் பேசிட்டேன்...!" உற்சாகத்துடன் முடித்தார்.

"ரொம்ப சந்[illegible] பெரும் அதை மேற்பார்வை பாத்துக்கிட்டா நானே நிம்மதியா



ஹோட்டலையும் டெக்ஸ்டைல் பேக்டரியையும் பாத்துப் பேன்."

நிறைவுடன் மொழிந்தாள் அவள்.

## 30

மறுவாரமே, வெங்கடேஷ் வந்து பொறுப்பேற்க, பாதி வேலை குறைந்தது போல்!

சிறு வயதிலிருந்தே குடும்ப நண்பரின் மகன், உடன் பழகி விளையாடிய தோழன் என்பதால், பல விஷயங்களை அவனுடன் சுலபமாகப் பகிர்ந்து கொள்ள முடிந்தது.

அவனும் உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபட, நாகராஜும் அவனும் பண்ணையை நிர்வகிக்க ஆரம்பித்தனர்.

இயற்கை உரம் சம்மந்தமான வேலைகளும் துரிதமாக நடக்க, எல்லாவற்றையும், ஒருவித மௌனக் கோபத்துடன் வேடிக்கை பார்த்திருந்தான் ப்ரதீப்.

ஜீவா குடும்பத்துடன் மலேசியாவிற்கு சுற்றுலா சென்றிருந்தான்.

வருடத்திற்கு இருமுறை இதுபோல் அவன் சென்று வருவது பழக்கமென்பதால், ப்ரதீப்பிற்கு தான் பொறுப்புகள் அதிகமாகியிருந்தன.

ஒரு நாள் மாலையில் சீக்கிரமே வீட்டிற்கு வந்து விட்டதால், உற்சாகத்துடன் ப்ரட் கட்லெட் செய்து கொண்டிருந்தாள் சௌந்தர்யா.



சமையல்காரம்மாவிற்கு அன்று காய்ச்சல் என்பதால் விடுமுறை எடுத்திருந்தாள்.

புனிதா அவளுக்கு உதவி செய்ய, கட்லெட்டின் நறுமணம் வீட்டையே கமகமக்கச் செய்து கொண்டிருந்தது.

வாசலில் அழைப்பு மணி ஒலிக்கவே கதவைத் திறந்த புனிதாவிற்கு பெரும் ஆச்சர்யம்!

அன்று, சீக்கிரமே வீட்டிற்கு வந்திருந்தான் ப்ரதீப்!

சமீப காலங்களாகவே அவன், தாயிடம் கூட இயல்பாகப் பேசுவதில்லை.

அந்த ப்ரச்னைக்குப் பிறகு, அவரே சென்று அவனிடம் பேசி நியாயத்தைப் புரிய வைக்க முயன்ற போதும், அவன் மாறவேயில்லை.

நீறு பூத்த நெருப்பாய் அவனுள் தகித்த கோபக் கனல், இருவரிடமும் வீச அன்று, ஏதோ ஒரு புரியாத புதிராய் அவன் முகம் இளகிக் கனிந்திருந்தது.

"என்ன... ஒரே வாசனையா இருக்கு? சமையக்காரம்மா ஸ்பெஷலா ஏதோ டிபன் செய்யறாங்க போலருக்கு? குளிச்சிட்டு வந்துடறேன்!"

இயல்பாகக் கூறிவிட்டு அவன் மாடிக்குச் செல்ல, பல நாட்கள் கழித்து அவன் சகஜமாகப் பேசியது, புனிதாவிற்கு, இனிய வரமாய்!

வேகமாய் உள்ளே சென்றவர், "ப்ரதீப்... இன்னிக்கு நல்ல மூடிலே இருக்கான்மா! நீயே கொண்டு போய் டிபனைக் குடு!" உற்சாகத்துடன் அனுப்பி வைக்க டிபன் தட்டுடன் மாடிக்குச் சென்றவளை வெறுப்புடன் வரவேற்றது அவன் பார்வை!

12.02.2009 00:46

"என்ன... அம்மா உன்கிட்ட குடுத்தனுப்பிட்டாங்களா? தம்பி சாப்பிடலாமா?"

தக்கலாகக் கேட்டபடி பெற்றுக் கொண்டு அவன் கீழே சென்ற போது, அவனுடைய வார்த்தைகளால் துவண்ட மனதுடன், அவளும் பின் தொடர்ந்து சென்றாள்.

ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்தபடி சாப்பிட ஆரம்பித்தவனிடம், "நல்லாருக்காப்பா? சௌந்தர்யா தான் செஞ்சா?" மகிழ்ச்சியுடன் கேட்டார் புனிதா!

உடனே, "தூ..." என்று கட்லெட்டைத் தட்டிலேயே துப்பியவன், "கட்லெட்டா இது? சே... கொடுமையா இருக்கு... மனுஷன் சாப்பிடுவானா இதை! செய்யத் தெரியாதுன்னா பேசாம இருக்க வேண்டியதுதானே! நிம்மதியா இந்த வீட்டில சாப்பிடக் கூட முடியாது போலருக்கு!"

தட்டை டீப்பாயில் எறிந்து விட்டு அவன் வெளியே செல்லத் துடித்துப் போனாள் சௌந்தர்யா.

தன் முன்னாலேயே இவ்வளவு அவமானப் படுத்துபவன், அவளை தனியறையில் எப்படி நடத்துகிறானோ வென்ற கலக்கமும் பதட்டமுமாய் உறைந்து அமர்ந்திருந்த புனிதாவின் விழிகளிலோ, கண்ணீரின் முகவரி!

தன்னிடம் எவ்வளவு மதிப்பும் பிரியமாகவும் இருந்தவன் இப்படி மாறிப்போனது அவரை உடைத்துப் போட மார்பைப் பிடித்துக் கொண்டு அப்படியே சரிந்து விட்டார்.

கணவரின் இறப்பிற்குப் பிறகு, மகனையே சார்ந்திருந்த அந்தத் தாயுள்ளத்தால் அவனுடைய புறக்கணிப்பையும் வெறுப்பையும் தாங்க முடியவில்லை!



காரின் சப்தம் வேகமாய்க் கேட்க, பதட்டத்துடன் மாமியாரை ஏந்தியவள், உடனே அருகிலிருந்த மருத்துவ மனைக்கு போன் செய்தாள்.

ஆம்புலன்ஸில் ஏற்றி அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வரை அவளுக்கு உயிரே இல்லை.

வழியிலேயே ப்ரதீப்பிற்கு போன் செய்தால் அவன் செல்லை எடுக்கவேயில்லை.

உடனே, நாகராஜுக்கு போன் செய்தவள், அவரையும் ரேணுகாவையும் அவசரமாக மருத்துவமனைக்கு வரும் படிக் கூறினாள்.

அவர்கள் வரும்போதே, அபாய கட்டத்தைத் தாண்டியிருந்தார் புனிதா!

'சிசியூ'விலிருந்து வெளியில் வந்த டாக்டர், மைல்ட் அட்டாக் தானென்றும் சீக்கிரமே தேறி விடுவாரென்றும் கூறியபோதுதான், அவளால் மூச்செடுக்கவே முடிந்தது.

சட்டென்று தாயின் தோளில் சாய்ந்து அவள் அழ ஆரம்பிக்க, அப்போதுதான் அங்கு வந்த ப்ரதீப்போ உறைந்து நின்று விட்டான்.

கண்களில், கலக்கமும் பயமும் புதிதாய் தடம் பதிக்க அவன் நின்றிருந்த கோலம், நாகராஜை அசைத்துப் போடுவதாய்!

"மாப்பிள்ளை! பயப்படாதீங்க... ஒண்ணுமில்லை... அம்மாவுக்கு இப்ப பரவாயில்லை... மைல்ட் அட்டாக் தானாம்... சீக்கிரமே சரியாயிடும்னு இப்பதான் டாக்டர் வந்து சொல்லிட்டுப் போனாரு!" ஆறுதலாகக் கூறினார்.

ஒரு நெடுமூச்சுடன் தொப்பென்று அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தவனது பார்வை, குழப்பத்துடன் சௌந்தர்யாவிடம் படிந்தது.

12.02.2009 00:47



"அவ ரொம்ப ஆடிப் போயிட்டா... போன் அடிச்சா, நீங்க எடுக்கலையாம்! பயந்து போய் எனக்கு கூப்பிட்டா... அதான் உடனே உங்களுக்குத் தகவல் சொல்லிட்டு நாங்க கிளம்பி வந்தோம்!"

அவர் கூறியதும் குற்றவுணர்வுடன் இரு கைகளால் தலையைத் தாங்கி அமர்ந்தவன் சிறிது நேரம் நிமிரவேயில்லை.

இது தன்னால்தான் என்ற உறுத்தல், தேகமெங்கும் ஊசியாய் உரசத் தன் மீதே கோபம் வந்தது அவனுக்கு.

ஏனோ தன் தாயை உடனே பார்க்க வேண்டுமென்ற தவிப்பும், ஆவலும் வர, வேகமாக எழுந்து டாக்டரின் அறைக்குச் சென்றான்.

பிறகு அவரின் அனுமதி பெற்று அவன் உள்ளே சென்ற போது, மருத்துவ உபகரணங்கள் புடைசூழ அசைவின்றிப் படுத்திருந்தார் புனிதா!

'அம்மா... உங்களின் இந்த நிலைக்கு நான்தான் காரணம்... என்னை மன்னித்து விடுங்கள்' என்று கதற வேண்டும் போல்!

ஆனால், தான் ஒரு ஆண் மகன் என்கிற ஈகோ அதை அடக்க, தவித்து நின்றிருந்தான்.

இதயம் நொறுங்கிய உணர்வுடன் சிலையாய் இருந்தவனை, நாகராஜ் தான் பெரிதும் தேற்றினார்.

தொடர்ந்த இரு நாட்களும், அனைவருக்கும் சிம்ம சொப்பனமாய்!

சாப்பிடாமல், தூங்காமல் அறை வாசலிலேயே ஓய்ந்து அமர்ந்திருந்தவனைப் பார்த்தால், சௌந்தர்யாவிற்குப் பரிதாபமாக இருந்தது.



## 31

பிறகு, மெதுவாகக் கண் விழித்த புனிதா மகனைக் கண்டதும் கண்கள் கலங்க திரும்பிக் கொண்ட போது, சௌந்தர்யாவிற்குத் தான் மிகவும் கஷ்டமாய்!

ப்ரதீப்பிற்கோ... தன் உயிரையே யாரோ பறித்ததைப் போல!

புனிதாவின் அலை பாய்ந்த பார்வை, மருமகளிடம் நிலைக்க, மெதுவாகக் கை நீட்டி அவளை அருகில் அழைத்தார் அவர்.

வேகமாக அவரருகில் சென்று குனிந்தவள், "இப்ப எப்படி இருக்கு அத்தை? அவர்தான் பாவம்... ராத்திரி பகலாத் தூங்கலை சாப்பிடவும் இல்லை!"

மெதுவாகக் கூறினாள்.

நடுங்கும் கைகளை உயர்த்தி, மருமகளின் முகத்தை வருடியவரின் விழிகள், கலங்கியிருந்தன.

இந்த அற்புதமான பெண்ணை தன் மகன் புரிந்து கொள்ளவில்லையே என்ற ஏக்கமும் வேதனையும் அதில்!

பிறகு, மெதுவாக மகனிடம் திரும்பியவரின் கரத்தை அழுந்தப் பற்றியவன், உணர்ச்சிகளின் பிடியிலிருந்தான்.

வெகுநேரம் அப்படியே அவன் அமர்ந்திருக்க, இருவரையும் தனியே விட்டு விட்டு இங்கிதத்துடன் வெளியே வந்தாள் சௌந்தர்யா.

திடீரென்று, அவருடைய குரல் அவனைக் கலைத்தது.

12.02.2009 00:47

"ப்ரதீப்! சௌந்தர்யா ரொம்ப நல்லவ! அவளை பத்திரமா பாத்துப்பியா?" விழியோரங்களில் நீர் துளிக்க அவர் கேட்டபோது, ஒரு கரம் அவன் முன் யாசிப்பாய் நீள, அதைப் பிடித்தபடி மௌனமாய்த் தலையசைத்தான் அவன்.

* * *

அடுத்த வாரமே உடல் நிலை சரியாகி அவர் வீட்டிற்கு வந்து விட, மற்ற வேலைகளை எல்லாம் ஒதுக்கி விட்டு அவரை கவனிக்க ஆரம்பித்தாள் சௌந்தர்யா.

ஹோட்டல் வேலைகளை நாகராஜ் மேற்பார்வையிட, வெங்கடேஷ் பண்ணையை கவனித்துக் கொண்டான்.

ப்ரதீப் இப்போதெல்லாம் அவளிடம் அநாவசியமாக வம்பிழுப்பதில்லை! ஒதுங்கியே இருந்தான்.

அவளும், புனிதாவை கவனிப்பதில் ஈடுபட்டிருக்க, எந்த வித ப்ரச்னைகளும் இல்லாமல் வாழ்க்கை செல்ல ஆரம்பித்தது.

அன்றுதான், ஜீவாவும் மாலதியும் குழந்தையுடன் மலேசியாவிலிருந்து திரும்பியிருந்தனர்.

விபரமறிந்ததும், உடனே புனிதாவைப் பார்க்க வந்து விட்டனர்.

புனிதாவை நலம் விசாரித்து விட்டு அவளிடம் வந்த மாலதிக்கோ பெரும் கவலையாய்!

"சௌந்தர்யா! நான் ஊருக்குப் போறதுக்கு முன்னாடி உனக்கும் ப்ரதீப்புக்கும் நடுவிலே இருக்கற ப்ரச்னையைப் பத்தி அம்மாகிட்ட சொல்லிட்டேன்.

"இப்போ ஊரிலிருந்து வந்ததும், விஷயம் கேள்விப் பட்டவுடனே ரொம்ப கஷ்டமா கில்ட்டியா இருந்தது.



கவலையுடன் அவள் வருந்த, "அதெல்லாம் ஒண்ணுமில்லைக்கா! இது வேற ப்ரச்னை! நீங்க சொன்னதால இல்லை!" ஆறுதலாக மொழிந்தாள்.

பிறகு, அவர்கள் விடைபெற்று செல்ல, யோசனையுடன் உள்ளே வந்த போதுதான் அவளை அழைத்தான் ப்ரதீப்!

"சௌந்தர்யா... தேங்க்யூ! எங்கம்மாவை ஹாஸ்பிடல்லே அட்மிட் பண்ணினதிலேருந்து இன்னிக்கு வரைக்கும், அவங்களை பொறுப்பா நீ பாத்துக்கிட்டதை நான் என்னிக்குமே மறக்க மாட்டேன்!"

உணர்ச்சித் தளும்பல்கள் அவன் குரலில்!

ஏதோ இனம் புரியாத ஏகாந்த உணர்வில் தேகம் சிலிர்க்க, "வெல்கம்!" என்றாள், சிறு முறுவலுடன்!

கண்களிலோ, வண்ணக் கனவுகளின் அணிவகுப்பு!

உடனே அவன் முகம் பாறையாய் இறுகிப் போயிற்று!

"இன்னிக்கு நன்றி சொன்னேங்கிறதுக்காக நான் மாறிட்டேன்னு நினைச்சி, அதீதமா எதையும் என்கிட்டருந்து எதிர்பார்க்க வேண்டாம்!

"என்னால என்னை மாத்திக்க முடியாது... உன் பிடிவாதத்தை நீ தளர்த்திக்கற வரைக்கும்! மத்தவங்க சொத்து நமக்கு எதுக்கு? நான் சம்பாதிச்சி சேத்து வெச்சிருக்கறதே நம்ம வாழ்க்கைக்குப் போதும்! யோசி... புரியும்!"

அடிக்குரலில் வன்மையாய் அறிவுறுத்திவிட்டு அவன் செல்ல, சில நொடித் துளிகளுக்கு முன் அங்கு ஜனித்த ஒரு மாயத் தருணம் காற்றோடு போனது போல்!

12.02.2009 00:47



எதற்காகவும், இறந்து போன என் பாட்டியின் கடைசி ஆசையை என்னால் புறக்கணிக்க முடியாதென்ற உறுதியுடன் நிமிர்ந்த போது, இவன் என்றாவது நம்மைப் புரிந்து கொள்வானாவென்ற ஏக்கம் அவள் விழிகளில்!

"உள்ளுடைந்து உளேன்!" என்று பொருள்படும் "ஒங்கு மனால் உடுத்த நெடுமாப் பெண்ணை" என்ற நற்றிணைப் பாடலில் வருகின்ற தலைவியின் நிலையிலிருந்தாள் சௌந்தர்யா!

அங்கு, உணர்வுகளைப் பகிர ஒரு பாங்கியில்லாது, விழிகள் வானத்து நிலவைத் தோழியாக்கி மனதின் ரகசியம் பேசின!

"பிரிவுத் துயராலே நலிவுற்றிருந்த அள்ளலென்ன என் உள்ளம், தானே வருந்தித் தளரும்...

காற்றலே அலைக்கழிக்கப்பட்டும் ஒளி அவியாது சுடர் விடும் விளக்காய், பிரிவுத் துயரால் அலைக்கப்பட்டு வருந்தியிருந்தும், அவர் ஒரு நாள் என்னைப் புரிந்து வருவார் என்னும் நம்பிக்கையோடு தான் உயிர் வாழ்ந்திருப்பதை உருகிக் கூறியது அந்தப் பெண்மை!

## 32

வாழ்க்கை அதன் போக்கில் செல்ல, இப்போதெல்லாம் புனிதாவிற்கு முன் அவளிடம் ப்ரதீப் எதுவுமே பேசுவதில்லை.

மௌனமாக சாப்பிட்டு விட்டு, தாயிடம் மட்டும் உடல் நலம் விசாரித்து விட்டு மாடிக்குச் சென்று விடுவான்.



புனிதாவும் நன்றாகத் தேறி விட்டதால், சௌந்தர்யா, பழைய மாதிரி தினமும் பிசினஸை கவனிக்க ஆரம்பித்திருந்தாள்.

சமையல்காரம்மா வீட்டோடு இருப்பதால், நிம்மதியாக அவளால் வெளியே சென்று வர முடிந்தது.

வெங்கடேஷும், ஹோட்டல் நிர்வாகத்தையும், டெக்ஸ்டைல் பேக்டரியையும் அவ்வப்போது கவனிக்க ஆரம்பித்திருந்தான்.

குறுகிய காலத்திலேயே நிறைய மாற்றங்கள் செய்ததால், எல்லாத் தொழிலுமே நல்ல வளர்ச்சியடைந்திருந்தன.

இயற்கை உரம் மூலம் நிலங்களில் பயிரிடப்பட்டு நல்ல மகசூல் காண ஆரம்பித்தது.

ஹோட்டலிலும் பல விரும்பத்தகுந்த மாற்றங்கள் நிகழ்ந்திருக்க, சீசனில்லாத நேரங்களிலும் ஓரளவு கூட்டமிருந்தது.

ஆயத்த ஆடை வடிவமைப்பில் புதிய யுக்திகளையும், சிறந்த உடைகளையும் அறிமுகப் படுத்தியதால், வெளிநாட்டு ஏற்றுமதி ஆர்டர்கள் தொடர்ந்து கிடைக்க ஆரம்பித்தன.

தொழிலில், சில மாதங்களிலேயே, கடும் உழைப்பாலும், தீவிரக் கண்காணிப்பாலும், புதுப்புது உத்திகளை செயல்படுத்தியதாலும், சிகரம் தொட ஆரம்பித்திருந்தாள் அவள்.

அப்போதுதான் ஒரு நாள், அவளிடம் அந்த யோசனையைக் கூறினான் வெங்கடேஷ்.

12.02.2009 00:47

"சௌந்தர்யா! இங்கே பக்கத்துல ஒரு ஆசிரமம் இருக்கு! கிறிஸ்டியன் மிஷன்லே எடுத்து நடத்தறாங்க. அநாதைப் பசங்களுக்கு வாழ்வு தந்திருக்காங்க.

"நாம அதுக்கு ஏதாவது உதவலாமே! வரியிலக் கழிஞ்சிடுமே... ஒரு நாள் போகலாமா?" ஆர்வத்துடன் கேட்டான்.

அந்த வாரமே [illegible]தாவையும் அழைத்துக் கொண்டு அங்கு அவள் செல்ல, நாகராஜூம், ரேணுகாவும் வெங்கடேஷுடன் வந்து காத்திருந்தனர்.

மதர் சுப்பீரியரிடம் பேசியவள், புதிதாகக் கட்டப்பட விருக்கும், பள்ளிக் கட்டடத்திற்கு, தன்னால் முடிந்த ஒரு பெரிய தொகையை நன்கொடையாக வழங்கினாள்.

செக்கைப் பெற்றுக் கொண்ட மதர் சுப்பீரியருக்கு மிகுந்த மகிழ்ச்சி!

"தேங்க்யூ, அண்ட் காட் ப்ளஸ் யூ மை சைல்ட்! உன்னை மாதிரி, சின்ன வயசுலயே இந்த அளவுக்கு மன முதிர்ச்சியோட எல்லாரும் செயல்பட்டா இந்த இல்லங்கள் ரொம்பப் பயன்பெறும்! ஹேப்பி மேரீட் லைஃப்."

நெகிழ்வுடன் கைகுலுக்கி அவள் வாழ்த்த, புனிதாவின் பார்வை அவளை வாஞ்சையுடன் வருடியது.

அன்று மாலையில் வீட்டிற்கு வந்த ப்ரதீப்பிடம் மருமகளின் சேவையைப் பற்றி மெய் சிலிர்த்துப் பாராட்டினார் புனிதா.

புருவங்கள் நெறிந்திருக்க, கடுமையான முகத்துடன் அதைக் கேட்டிருந்தவன், அவர் கவனித்து விடப் போகிறாரேயென்று குனிந்து கொண்டான்.

* * *



அன்றிரவு, பால் டம்ளரை அவனிடம் அளித்து விட்டு அவள் தன்னறைக்கு செல்கையில், "ஒரு நிமிஷம்" என்று அவளை நிறுத்தினான்.

"என்ன... பொது நல சேவையா? எல்லா வேஷமுமே நல்லாப் போடுவியா? அது சரி... நாம சம்பாதிச்சி கஷ்டப் பட்டு சேர்த்த சொத்தாயிருந்தா அதோட அருமை தெரியும்...

"மத்தவங்க சுலபமாத் தாரை வாத்துட்டுப் போன தாச்சே! யாருக்கு வேணும்னாலும் எடுத்து நீட்டலாம்!

"ஆனா... இதனாலெல்லாம் எனக்கு உன் மேல மதிப்பு மரியாதை வந்துடும்... நான் மனசு மாறி உன் காலடியிலே வந்து விழுந்துடுவேன்னு மட்டும் தப்புக் கணக்கு போடாதே!"

அலட்சியமாகக் கூறிவிட்டு அறைக்குள் செல்லத் திரும்பினான்.

"ஒரு நிமிஷம்..." அதே குரலில் அவனை நிறுத்தினாள் அவள்.

"ஒரு விஷயத்தை நீங்க முதல்லே புரிஞ்சிக்கணும்! அந்தப்பணம், பாட்டி எனக்கு கொடுத்த சொத்திலேருந்து நான் எடுத்ததில்லை!"

"எங்கப்பா எனக்குக் குடுத்தது!

"அப்புறம்.. வேஷம் போடறது நான் இல்லை... அது உங்களுக்கே தெரியும்! அத்தைக்கு முன்னாடி சாதுவாவும், இங்கே என்கிட்டே தேள் மாதிரியும் கொட்டறது... ரெட்டை வேஷம் போடறது நீங்கதான்!

"அதோட, இதெல்லாம் என் மனத் திருப்திக்காக நான் செய்யறது... மத்தவங்களை இம்ப்ரெஸ் பண்ணணும்கிற அவசியம் எனக்கில்லை!

12.02.2009 00:47





"ஏன் ப்ரதீப்...? உங்களுக்கு நல்லதே கண்ணுல படாதா? எந்த விஷயத்தையுமே நெகடிவ்வாவே தான் யோசிப்பீங்களா?

"மனசுல இருக்குற அழுக்கு குத்தம், குறை எல்லாத்தையும் கொஞ்சம் நீக்கி வச்சிட்டு பாசிடிவ்வா என்னைப் பாருங்க... உண்மை தெரியும்!"

அழுத்தமான குரலில் அவள் மொழிய, தாள முடியாத சினத்துடன், கையை ஓங்கியபடி, "எனக்கே அட்வைஸ் பண்றியா நீ..." சிவந்த விழிகளுடன் வேகமாக அருகில் வந்தான்.

அசையாமல் நின்று தைரியமாக அவனை எதிர் கொண்டவள், "இது அட்வைஸ் இல்லை... நிஜம்! உண்மையைச் சொல்ல நான் பயப்பட மாட்டேன்!

"என்ன... அடிப்பீங்களா? எனக்கும் கராத்தே தெரியும்... உடல் பலத்தால ஒரு பெண்ணை அடிச்சி வீழ்த்தறதை விட, அன்பால அடிச்சிப் பாருங்க... உடனே அவ அடிபணிவா!

"அன்புக்கும், பிரியத்துக்கும் இருக்கற சக்தி எவ்வளவு பெரிசுன்னு இன்னும் நீங்கள்லாம் புரிஞ்சிக்கலை!

"உள்ளத்தில் அன்பில்லாது வாழும் வாழ்க்கை... பாலைவனத்தில் முளைவிட்டுத் தளிர்க்கும் மரத்திற்கு ஒப்பானதுன்னு திருவள்ளுவரே சொல்லியிருக்காரு...

"நீங்க, இப்ப அந்த மாதிரி வாழ்க்கைதான் வாழ்ந்துட்டிருக்கீங்க..."

சிறு கசப்புடன் கூறி விட்டு வேகமாகச் சென்று தன் அறைக்குள் சரணடைந்தாள் அவள்.



இதயம் படபடவென்று அடித்துக் கொள்ள, நல்ல வேளையாக அவன் எதிர்க்கவில்லையென்ற பெரும் நிம்மதி!

அதே நேரம், தன் அறைக்குள் கூண்டுப் புலியாய் அங்குமிங்கும் நடை பயின்று கொண்டிருந்த ப்ரதீப்பின் முகம் ரௌத்ரமாய் மின்னியது.

'ஒரு தட்டுத் தட்டினால் தலை குப்புற விழுந்து விடுவது போல் மெல்லியளாக இருப்பவளுக்குள், எங்கிருந்து இவ்வளவு தைரியம் வந்தது...?'

மனதிற்குள் பல கேள்விக் கனல்கள்!

உடனே சென்று அவளுடைய கதவைத் தட்டி எதிர்த்தா பேசுகிறாயென்று ஓங்கி அறைந்து ஒரு பாடம் புகட்ட வேண்டும் போல்!

எப்படியாவது அவள் பேச்சுக்குப் பழி வாங்க வேண்டுமென்ற வெறி மனமெங்கும் நிறைய, அவன் உறங்க வெகு நேரமாயிற்று!

## 33

மறு வாரமே, நளினிக்கு நிச்சயதார்த்தம் என்று, மாலதியும் ஜீவாவும் வந்து அழைத்துச் சென்றனர்.

ஒரு மாதத்தில் திருமணமும் செய்ய நாள் குறித்திருந்தனர்.

நளினியின் கிராமத்து வீடு சிறியதென்பதால், அவர்களின் மாளிகையிலேயே நிச்சயதார்த்தமும், திருமணமும் ஏற்பாடு செய்யப்பட்[illegible]டிருந்தன.

12.02.2009 00:47

அன்று மாலையில் அழகிய பன்னீர் ரோஜா நிறக் காஞ்சிப் பட்டில் ரதியாய்த் தயாராகிக் கீழே வந்தாள் சௌந்தர்யா!

அழகிய சில்க் குர்த்தா, பைஜாமாவில் வித்தியாசமான கம்பீரத்துடன் தாயிடம் பேசிக் கொண்டிருந்த ப்ரதீப்பின் பார்வை அவளிடம் திரும்பியது.

சித்திரப்பாவையாய்... ரோஜா வனமாய் அவளுடைய எழிலுருவைக் கண்டவன், ஒரு கணம் இமைக்க மறந்து ஊமையாகி சிலையாய் அமர்ந்து விட்டான்.

"சௌந்தர்யா! என் கண்ணே பட்டுடும் போலருக்கு! திரும்பி வந்ததும் ரெண்டு பேரையும் நிக்க வெச்சி திருஷ்டி சுத்திப் போடணும்!" பெருமையுடன் அவளை ரசித்தார் புனிதா!

"சரி.. சரி... டைம் ஆயிடுச்சி... வாங்கம்மா போகலாம்!"

விருட்டென்று எழுந்தவன் வேகமாக வாசலுக்குச் செல்ல நமட்டுச் சிரிப்புடன் பின் தொடர்ந்தாள் அவள்.

நிச்சயதார்த்தத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் முடிந்திருக்க, மாப்பிள்ளை வீட்டினரின் வரவுக்கென அனைவரும் காத்திருந்தனர்.

நேரே நளினியிடம் சென்று, தான் ஆர்டர் செய்திருந்த பூங்கொத்தை அளித்தாள் சௌந்தர்யா!

ஒருவித இறுக்கத்துடனும், விலகல் தன்மையுடனும் அதை பெற்றுக்கொண்ட நளினியைக் கண்டபோது, அவள் கோபம் இன்னும் தணியவில்லை என்பது புரிவதாய்!

பிறகு, மாலதி, தன் குடும்பத்தை அறிமுகம் செய்த போது, அனைவரும் அவளை அன்புடன் நலம் விசாரித்தனர்.

வாசலில் வேன் சப்தம் கேட்க, மாப்பிள்ளை வீட்டினரின் வரவறிந்து அனைவரும் வெளியே விரைந்தனர்.



எல்லோரையும் வரவேற்று முடித்தபோது கடைசியாக இறங்கிய மாப்பிள்ளையைக் கண்டதும், இடி விழுந்தாற் போல் அதிர்ந்து போனாள் சௌந்தர்யா!

நினைவுகள்... தப்பாத தாளமாய் பின் சென்றன.

* * *

கோயம்புத்தூரில் நாகராஜ், மருத்துவமனையிலிருந்த போது, அங்கிருந்த டாக்டர், நர்ஸுகள் எல்லோருமே அவளுக்கு நட்பாகியிருந்தனர்.

சீஃப் டாக்டர் வேறு, ப்ரதீப்பின் அறிமுகத்தால் பழக்கமாகியிருந்ததால் அவளுக்கு அங்கு நல்ல நட்பு வட்டம் உருவாகியிருந்தது.

அப்போதுதான், ஒரு நாள் இன்று மாப்பிள்ளையாய் வந்திருப்பவனை சந்தித்தாள் அவள்.

அன்று நாகராஜை டிஸ்சார்ஜ் செய்யும் நாள்!

ப்ளட் பாங்கில், நாகராஜுக்காக ரத்தம் செலுத்திய விவரங்கள் அடங்கிய படிவத்தை வாங்க சௌந்தர்யா அங்கு சென்றிருந்தாள்.

அப்போது, ரத்த பரிசோதனை முடிவிற்காக அங்கு அமர்ந்திருந்தான் அவன்.

பிறகு ரிசல்ட்டை வாங்கியவன், வெளியே வந்து அழ ஆரம்பித்த போதுதான் பதறிப் போய் நர்ஸிடம் என்னவென்று விசாரித்தாள் சௌந்தர்யா!

அப்போது அவள் கூறிய செய்தி பேரிடியாய்!

அந்த மனிதனின் பெயர் காசிநாதன் என்றும், அவன் மாஸ்டர் ஹெல்த் செக்கப் செய்ய வந்ததாகவும், ரத்த பரிசோதனையின் முடிவில் அவனுக்கு 'ஹெச்.ஐ.வி.' பாசிட்டிவ் என்று வந்திருப்பதாகவும் வருத்தத்துடன் கூறினாள் அந்த நர்ஸ்!

12.02.2009 00:48



தனக்கு எய்ட்ஸ் நோய் என்று அறிந்ததும், உடைந்து கதறி அழுதவனுடைய முகம்... இன்று வரை அவள் மனதில் அழுத்தமாய்ப் பதிந்திருந்தது.

"கடவுளே! இப்போது என்ன செய்வது? இந்தப் பெண்ணிற்கு ஏன் இந்த சோதனை? இதை யாரிடம் சொல்வது?"

மின்னல் வேகத்துடன் அலை பாய்ந்த மனதிற்குள் மாலதியின் முகம் மட்டுமே பளிச்சிட, வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தவளை ரகசியமாக அழைத்தாள்.

"மாலதிக்கா! ஒரு முக்கியமான விஷயம்... அவசரமும் கூட...! என்கூட உடனே வாங்களேன்!"

பதட்டத்துடன் அழைத்து அவள் கூறிய விஷயம் உயிரையே உலுக்கிவிட, ரத்தப் பசையின்றி வெளுத்த முகத்துடன் ஒரு கணம் அசைவின்றி நின்று விட்டாள் மாலதி!

அவளைப் பிடித்து உலுக்கி சுய நினைவிற்கு மீட்டவள், "இப்ப என்ன செய்யறது மாலதிக்கா? உடனே, ஜீவாவை இங்கே கூப்பிடுங்க!" கவலையுடன் அனுப்பினாள்.

ஆனால், ஜீவாவுடன் ப்ரதீப்பும் உடன் வர, அவள் எல்லாவற்றையும் கூறியபோது இருவருமே அதிர்ந்து போயினர்.

"இதை... எப்படி நாங்க நம்பறது?" நம்ப இயலாமல் கேட்டான் ஜீவா!

"நம்பித்தான் ஆகணும்... இல்லேன்னா ஒரே ஒரு வழியிருக்கு! எங்கப்பா அட்மிட் ஆகியிருந்த ஹாஸ்பிடல் சீஃப் டாக்டர் ப்ரதீப்போட ஃப்ரெண்ட்!

"அப்பா டிஸ்சார்ஜ் ஆன அன்னிக்குத்தான் இவரும் ரிப்போர்ட்டை வாங்கிப் பாத்துட்டு அழுதாரு... நல்லா ஞாபகம் இருக்கு! அப்பாவோட டிஸ்சார்ஜ் சம்மரியைப் பாத்தா தேதி தெரியும்.

"அதை வெச்சி போனிலேயே விசாரிக்கலாமே! ப்ளீஸ் முயற்சி பண்ணுங்க... ஒரு பொண்ணோட வாழ்க்கை வீணாயிடக் கூடாதுன்னு தான் நான் இவ்வளவு சொல்றேன்... அப்புறம் உங்க இஷ்டம்!

அவள் கூறியதும், "ஜீவா, நீயும் மாலதியும் போய் மெதுவா வேலைங்களைக் கவனிங்க! நான் உடனே டாக்டர்கிட்ட பேசறேன்" என்று அனுப்பிவிட்டு அந்தக் கணமே செல்லில் தொடர்பு கொண்டான் ப்ரதீப்.

அதற்குள் மெடிக்கல் பைலிலிருந்து தேடி தேதியை அறிந்து ஓடி வந்த சௌந்தர்யாவின் பதட்டமும் அக்கறையும் அவனை வெகுவாய் பாதித்தன.

தனக்கு, தீங்கே செய்திருந்தாலும் நளினியின் வாழ்க்கை வீணாகி விடக் கூடாதென்று, அவள் பதைத்து உருகி நிற்பது புரிவதாய்!

உடனே, செயல்பட்டு, காசி நாதனின் பைலை கம்ப்யூட்டரில் தேடி எடுத்தது மருத்துவமனை நிர்வாகம்!

மாஸ்டர் ஹெல்த் செக்கப் என்பதால், அவனை பற்றிய ரிக்கார்டுகள் அதில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

ஐந்தே நிமிடத்தில், சௌந்தர்யா கூறியது உண்மை தானென்பதை உறுதிப்படுத்தினார், அந்த டாக்டர்!

அதிர்ந்து போய் ஒரு கணம் நின்றவன் உடனே சமாளித்து நிமிர்ந்து, "நீ போய் ஜீவாவையும் மாலதியையும் உடனே இங்கே அழைச்சிட்டு வரியா?" தவிப்புடன் வினவினான்.

12.02.2009 00:48

தன்னைப் போன்ற ஒரு பெண்ணின் வாழ்வில் பெருத்த அநியாயம் நடப்பதைத் தவிர்க்க வேண்டும் என்ற வெறியில் வெளியே வந்தபோது, அங்கு கண்ணீருடன் நின்றிருந்தாள் நளினி!

சௌந்தர்யாவைக் கண்டதும், இரு கரம் கூப்பி விம்மியபடி அப்படியே சரிந்து அவள் அழ ஆரம்பிக்க, வேகமாக அவளை ஏந்திக் கொண்டாள்.

பிறகு, அறைக்குள் அவளை அமர வைத்தவள், "இவளை பத்திரமாய் பாத்துக்கங்க" என்று ப்ரதீப்பிடம் ஒப்படைத்து விட்டு விரைந்தாள்.

## 34

பிறகு, அந்த வீடே அல்லோல கல்லோலப் பட ஆரம்பித்தது.

ஜீவாவும், மாலதியும், தனிமையில் காசிநாதனுடைய தாய் தந்தையை அழைத்துப் பேச, அவர்கள் கொதித்தெழுந்தனர்.

"யார் சொன்னது என் மகனைப் பத்தி கடவுளே... இந்தக் குடும்பத்துல போய் பொண்ணு கேக்க வந்தோமே!"

தலையில் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்த மாப்பிள்ளையின் தாயால் அங்கு ஊரே கூடிப் போனது.

தன் அந்தரங்க ரகசியம் அம்பலத்திற்கு வர, ஒன்றுமே கூறாமல் மௌனமாக நின்றிருந்தான் மாப்பிள்ளை!



மாப்பிள்ளை வீட்டினர் உரத்த குரலில் சண்டையிட்டு நியாயம் கேட்க, ப்ரதீப் வெகுண்டெழுந்தான்!

"எல்லாரும் கொஞ்சம் அமைதியா இருக்கீங்களா? இப்ப பேச வேண்டியது நாம கிடையாது! இந்தக் காசி நாதன் மட்டும் தான்!

"இந்த விபரத்தை எங்களுக்கு சொன்னதே இவனுக்கு மாஸ்டர் ஹெல்த் செக்கப் செஞ்ச ஹாஸ்பிடலோட சீஃப் டாக்டர்தான்!

"அவர் எதுக்கு பொய் சொல்லணும்? சரியான தேதி, ரிப்போர்ட் எல்லாமே சொல்லிட்டாரு! வேணும்னா இன்னும் கொஞ்ச நேரத்துல ஃபேக்ஸ் வந்துடும். அந்த ரிப்போர்ட்டைப் பாத்தாவது நம்புவீங்களா?" கடும் சீற்றத்துடன் வினவினான்.

அனைவரும் அமைதியாக நிற்க, பெருங்குரலெடுத்துக் கேவியபடி விம்ம ஆரம்பித்தான் காசிநாதன்!

பிறகு அவன் தன் தவறை ஒத்துக் கொண்டு, தான் ட்ரீட்மெண்டில் இருப்பதாகக் கூற, அந்த மாளிகையே ஸ்தம்பித்தது.

சிறிது நேரத்திலேயே வந்திருந்தவர்களெல்லாம் விடை பெறாமலே சென்று விட, நெருங்கிய உறவுகள் மட்டுமே மீதமிருந்தனர்.

"ரொம்ப நன்றிம்மா... என் பொண்ணு வாழ்க்கையைக் காப்பாத்திட்டே!"

சௌந்தர்யாவின் முன் சரிந்து அமர்ந்து நன்றி கூறி அழ ஆரம்பித்தார் நளினியின் தாய்!

உடனே அவரை எழுப்பியவள், "நடந்தது நடந்து போச்சு... நல்ல வேளை நளினி தப்பிச்சாளேன்னு

12.02.2009 00:48



சந்தோஷப் படாம எம்மா அழறீங்க... இனிமே எல்லாமே நல்லாவே நடக்கும்!" மெல்லிய குரலில் ஆறுதல் கூறினாள்.

பிறகு அனைவரும் என்ன செய்வதென்று தவிப்புடன் பேச, நளினியின் மனமும் உடலும் சௌந்தர்யாவிற்கான நன்றியை சுமந்து தவித்தன.

வேகமாக அவளருகில் வந்தவள், "என்னை மன்னிச்சுடுங்க சௌந்தர்யா! நான் உங்களுக்கு செஞ்ச அநியாயத்தை மறந்துட்டு எனக்கு இப்படி ஒரு நன்மையை செஞ்சிருக்கீங்க!"

"என் வாழ்க்கையை எனக்கு பிச்சையாப் போட்டிருக்கீங்க. இதை நான் இதை சாகற வரைக்கும் மறக்க மாட்டேன்!" கைகூப்பி அழுதாள்.

"ப்ச்! அசடு... நீ இல்லை... தெரியாதவங்களா இருந்தாலும் கூட இதைத்தான் நான் செஞ்சிருப்பேன்! எனக்கு ரொம்ப நெருங்கின உறவா... மாலதி அக்காவோட தங்கையா நீ இருக்கறப்ப எப்படி செய்யாம விடுவேன்..."

"முதல்லே கண்ணைத் துடை! ஒரு பெரிய கண்டத்துலருந்து தப்பிச்சிருக்கே... இனிமே நல்ல காலம் தான்! வா!"

நளினியைத் தோளோடு அணைத்து ஆறுதல் கூறி உள்ளே அழைத்துச் சென்றாள்.

அந்தக் கணம் அவளையே பார்த்திருந்த ப்ரதீப்பின் விழிகள் மெல்ல இளகிக் கனிந்தன.

உயிரின் ஆழம் வரை சென்று, அவள் மீது கொண்டிருந்த நேசத்தைத் தேடியது மனசாட்சி!

கள்ளிச் செடியில் பூக்கள் மலர்ந்ததைப் போல் அவன் பார்வையிலும் மெல்லிய மலர்வு!



மனதிற்குள் பல யுகங்களாகக் காத்திருந்த நேச விதை, இன்று அவளின் அழகிய அகப் பரிணாமத்தைக் கண்டதும், மழைச்சாரல் பட்ட நிலமாய் துளிர்த்தது.

தன் மகளுக்கு... அவளின் கல்யாணம் நின்று போன அவலத்திற்கு... அவளுடைய எதிர்காலத்திற்கு நான் என்ன செய்யப் போகிறேன் என்று அரற்ற ஆரம்பித்து மயங்கி விழுந்தவரை, நாகராஜ்தான் தேற்றினார்.

அந்த வீடே நிசப்தமாய் மாறி, சோகங்களை சுமக்க ஆரம்பித்தது.

## 35

மறுநாளே ஒரு யோசனை தோன்ற அருகில் நின்றிருந்த வெங்கடேஷிடம் திரும்பினார் நாகராஜ்!

"வெங்கடேஷ்! உனக்கு நளினியைப் பிடிச்சிருக்கா? எனக்காகச் சொல்ல வேண்டாம்... உன் விருப்பத்தைக் கேக்கறேன்!" மெதுவாகக் கேட்டார்.

திடீரென்று அவர் இப்படிக் கேட்டதும், ஒரு கணம் என்ன செய்வதென்று புரியாமல் தவித்தவன், பிறகு ஒரு முடிவிற்கு வந்தான்.

"சரி அங்கிள்! எனக்கு புடிச்சிருக்கு! ஒரு பொண்ணோட நிச்சயம் நின்னு போனாக்கூட பரவாயில்லை. ஆனா கல்யாணம் தடைபடக்கூடாது!

"உடனே அப்பாவுக்கு போன் போட்டு ரெண்டு பேரையும் இங்கே வரச் சொல்லலாம்.

12.02.2009 00:48

''முறையாப் பேசி முடிப்போம்... அந்தப் பொண்ணுக்கும் விருப்பமிருக்கான்னு கேளுங்க... குறிச்ச தேதியில கல்யாணத்தை நடத்திடலாம்!''

பெருந்தன்மையுடன் கூறியவனை நெகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டவர், உடனே அதற்கான முயற்சிகளில் இறங்கினார்.

அன்றே, தன் நண்பன் சுப்பையாவிடம் அவர் பேச, அவருக்கோ மிகவும் சந்தோஷம்!

இதுவரை, திருமணம் வேண்டாமென்று மறுத்து வந்த தன் மகன், கடைசியில் ஒத்துக் கொண்டான் என்று தெரிந்ததும் உடனே கிளம்பி வருவதாக இருவரும் வாக்களித்தனர்.

உடனே, சௌந்தர்யாவிடம் பேசி அவளை வரவழைத்தார் நாகராஜ்!

விபரமறிந்ததும் மிகவும் மகிழ்ந்தவள், உடனே கை கொடுத்து வெங்கடேஷை வாழ்த்தினாள்.

''வெங்கடேஷ்... ரொம்ப சந்தோஷமா இருக்கு! ஆனா இது தெளிவான ஒரு முடிவா இருக்கணும்... இப்ப அவசரத்துக்கு அப்பா சொல்றாங்கன்னு தலையாட்டிட்டு அப்புறம் வருத்தப்படக்கூடாது!

''எதிர்காலத்துல, நளினியை அவ குற்றம் குறைகளோட ஏத்துக்கற மனப்பக்குவம் உனக்கு இருக்கா?''

''என்னிக்காவது ஒரு நாள், உன்னையறியாம, அவளுக்கு பரிதாபப்பட்டு வாழ்க்கை கொடுத்த மாதிரி, ஏதாவது பேசிட்டேன்னா, அவ உடைஞ்சு போயிடுவா!

''பெண்கள் மனசு அனிச்ச மலர் மாதிரி!



''பெரிய பெரிய விஷயங்களை எல்லாம் சுலபமாத் தாங்கறவங்களாலே, தன் துணையோட புறக்கணிப்பை மட்டும் தாங்கவே முடியாது!

''அதனால, நல்லா யோசிச்சி ஒரு நல்ல முடிவா எடு! அப்புறமா நாங்க நளினி வீட்டிலப் பேசறோம்!

மென் குரலில் அறிவுரை செய்தவளையே வியப்புடன் பார்த்திருந்த நாகராஜின் விழிகள் கலங்கின.

வெங்கடேஷின் குரல் அவரை மீட்க, ''சௌந்தர்யா! நான் நல்லா யோசிச்சிட்டேன்! இதிலே எனக்கு சம்மதம்! அம்மா அப்பா கூட கிளம்பி வரேன்னு சொல்லிட்டாங்க!

''அந்தப் பொண்ணு அழுத அழுகை என்னை அப்படியே உலுக்கிடுச்சி... இவதான் என் மனைவின்னு மனசு உள்ளே சொன்னப்ப அதை எப்படி வெளிப்படுத்தறதுன்னு புரியாம இருந்தேன்!

''நல்லவேளை... அங்கிளே கேட்டுட்டாங்க! நீ பயப்பட வேண்டாம் சௌந்தர்யா! இந்த முடிவுல எந்த மாற்றமும் இல்லை!'' உறுதியாக முடித்தான்.

''தேங்க்யூ வெங்கடேஷ்! ஆனா, பரிதாபத்துல வந்த அன்பு அப்படியே உண்மையான நேசமா மாறணும்! மாறுமா?'' தலை சரித்துக் குறும்புடன் கேட்டாள் அவள்.

''ம்...'' அவன் மெதுவாகத் தலையசைத்த போதுதான் ப்ரதீப் உள்ளே வந்தான்.

அதுவரை அவள் பேசியதைக் கேட்டிருந்தவனுக்குள், மெலிதான நேசச்சாரல்!

வானவில்லின் ஜாடை அவளிடம் தெரிய, ரசனையுடன் அவளையே சிறை செய்தது அவன் பார்வை!

அவனைக் கண்டதும் அவள் எழ, உட்காரும்படி சைகை செய்து விட்டு அவளருகிலேயே அமர்ந்தான் அவன்!

12.02.2009 00:48



முதன் முதலாக அவனுடைய அருகாமையில் அமர்ந்திருப்பது அவளுக்குள் பெரும் தவிப்பாய்!

பிறகு, நாகராஜ் கூறியதைக் கேட்டு விட்டு அவனும் வெங்கடேஷை வாழ்த்தினான்.

உடனே ஜீவாவையும் மாலதியையும்,

ஹோட்டலுக்கு வரவழைத்துப் பேசி முடிவெடுத்து விட்டான்.

நளினியின் விருப்பத்தை அறிகின்ற பொறுப்பை மட்டும் சௌந்தர்யா ஏற்றுக் கொண்டாள்.

நளினியோ, சௌந்தர்யாவின் விருப்பம்தான் தன் விருப்பமென்றாள்.

அவள் எந்த முடிவெடுத்தாலும் தான் சம்மதிப்பதாகவும், தன் நன்மையை நாடுகின்றவர்களின் முடிவிற்கு, தான் கட்டுப்படுவதாகவும் கூறி விட்டாள்.

பிறகு, சுப்பையாவும் அவர் மனைவியும் தமிழ்நாட்டிலிருந்து வந்துவிட, திருமண ஏற்பாடுகள் வேகமாய் நடக்க ஆரம்பித்தன.

இப்போதெல்லாம், நளினி அவளைக் கேட்காமல் எதுவுமே செய்வதில்லை... சௌந்தர்யாவிற்கு நெருங்கிய தோழியாகியிருந்தாள்.

திருமணப் புடவை எடுக்கவும், நகைகள் வாங்குவதற்கும் சௌந்தர்யாதான் உடன் சென்று வந்தாள்!

இரு குடும்பத்தினருக்குமே பழகியவளாக இருந்ததால், இனிய பாலமாகவும் இருந்தாள்.

ஒரு நாள் அப்படிக் கோவிலுக்குச் சென்றபோதுதான், அவளால் நளினியின் உண்மையான மனநிலையை, அறிய முடிந்தது.



''சௌந்தர்யா! நான் சின்ன வயசிலருந்தே வீவுல இங்கேதான் இருப்பேன்... ஆனா, ரெண்டு வருஷத்துக்கு முன்னாடிதான் ப்ரதீப்பை பாத்தேன்!

''அதுக்கு முன்னாடியெல்லாம் அவரும் வருவாரு... நான் அவ்வளவா கவனிச்சதில்லை! இந்த வயசுன்னு நினைக்கிறேன்! மனசுக்குள்ளே அவரோட அழகு கம்பீரம் எல்லாமே ரொம்பப் புடிச்சிப் போச்சு!

''அப்பதான் நீங்க வந்தீங்க! உங்க அழகும் அறிவும் என்னை மிரட்டுச்சி! முதல் வருஷம் அவங்களோட நான்தான் டூருக்குப் போனேன்!

''அப்ப, எவ்வளவோ முயற்சி செஞ்சும் அவரைக் கவர முடியலை... விலகி விலகிப் போனாரு!

''எப்படியாவது அக்காகிட்டே சொல்லி அவரைக் கல்யாணம் செஞ்சிக்கணும்னு முடிவு பண்ணேன்... சாரி இப்ப உங்களுக்கு கேக்க கஷ்டமாத்தான் இருக்கும்!

''ஆனா, கடைசியில எல்லாத்தையும் உங்ககிட்டே சொல்லிடணும்னு தோணுச்சி! அதான் சொல்றேன்...

''ஆனா, உங்களைப் பாத்தவுடனே என் நம்பிக்கை ஆடிப் போச்சு... உங்க மேல காரணமில்லாம கோபம், பொறாமை எல்லாம் வந்தது.

''உங்களுக்கு கல்யாணம்னவுடனே துடிச்சிப் போனேன்! என்னமோ என்கிட்டருந்து நீங்க அவரைப் பிரிச்ச மாதிரி ஒரு உணர்வு!

''அதான்... அன்னிக்கு அப்படி ஒரு பொய்யைச் சொன்னேன்! மாமாவும் அவரும் பேசிட்டிருந்ததை ஒட்டுக் கேட்டதால வந்த வினை!

''ஆனா, அப்புறம் தான் அது எனக்கு தப்புன்னு உரைச்சது... அதுவும் அக்கா கன்னத்துல குடுத்த ஒரு அறையாலே!

12.02.2009 00:49

'இப்ப சந்தோஷமா இருக்கேன்... மனசுல எந்த கெட்ட எண்ணமும் இல்லை! உங்களுக்கு கெட்டது செஞ்ச என்னை அன்பால அறைஞ்சீங்க பாருங்க. அன்னிக்கே நான் முழுசா மாறிட்டேன்.

"இன்னிக்கி, உங்களுக்காகத்தான் வேண்டிக்கிட்டேன்... நீங்களும் ப்ரதீப்பும் சேர்ந்து சந்தோஷமா வாழணும்கிறது தான் என் ப்ரார்த்தனை!

"நீங்க இருந்ததாலே நான் தப்பிச்சேன்... நினைச்சிப் பாக்கவே பயமாருக்கு! அந்தக் கல்யாணம் நடந்து நானும் ஒரு எய்ட்ஸ் பேஷண்ட்டா மாறியிருந்தா... நினைச்சாலே நடுங்குது!

"ஒரு தெய்வம் மாதிரி வந்து என்னைக் காப்பாத்தி, உங்க நண்பரை விட்டு எனக்கு மறு வாழ்வும் தந்திருக்கீங்க! நன்றிங்கற வார்த்தையத் தவிர என்கிட்ட வேற எதுவுமே இல்லை..."

அப்படியே சௌந்தர்யாவின் மடியில் சரிந்து கதறி, தன் தவறைக் கண்ணீரில் கரைக்க ஆரம்பித்தாள் நளினி.

அவளை மெல்ல அணைத்து, முதுகை வருடி ஆறுதல் படுத்தியவளுக்குள், பல கேள்விகள்!

"ஒரு திருமணத்திற்கு, ஜாதகப் பொருத்தம், ஜாதிப் பொருத்தம், மனப் பொருத்தத்தை விட மருத்துவ சான்றிதழ் முக்கியமோ?

'ஹெச்.ஐ.வி.' வைரஸ் பரிசோதனை ஒவ்வொருவருக்கும் செய்யப்பட்டால், இது போன்ற கொடுமைகளிலிருந்து தப்பிக்கலாமோ?

"இந்த நோய் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு திருமண உறவின் மூலம் பரவுவதை தடுக்க இதை அவசியமாக்கலாமே!"



மனதில் குழப்ப அலைகள்!

மெதுவாக நிமிர்ந்த நளினி, ஒரு பாவ மன்னிப்பின் யாசிப்பில் வெகுவாகத் தெளிந்திருந்தாள்.

"எழுந்திரு... நல்லா கண்ணைத் துடைச்சிக்க... வீட்டுக்குப் போனதும் அங்கே வெங்கடேஷ் வந்திருக்கப் போறாரு!"

அவளைக் கிண்டல் செய்தபடி வீட்டிற்கு அழைத்துச் சென்றாள் சௌந்தர்யா.

## 36

ஒரு நாள் நாகராஜைத் தனியே சந்தித்து சில விபரங்களைப் பேச ஆரம்பித்தான் ப்ரதீப்.

அந்தப் பேச்சின் முடிவில், அவனுக்குள் பெரும் குழப்பங்களும், நம்ப இயலா வியப்புமே ஆக்ரமித்தன!

தொடர்ந்து அதைப் பற்றி விசாரித்து ஒரு முடிவெடுக்க விரும்பினான்.

ஆனால் நளினியின் திருமணம் முடியட்டுமென்று பொறுமையாக இருந்தான்.

நளினியின் திருமண நாளும் வந்தது. அவளுக்குத் தோழியாக சௌந்தர்யாவே நிற்க, மாப்பிள்ளைத் தோழனாய் ப்ரதீப்பை அழைத்தனர்.

திருமண சடங்குகள், தாலிகட்டுவது, மாலை மாற்றுவது, பாலிகை எடுத்தல், அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல், என எல்லாச் சடங்கு[illegible]ளைத் தாண்டி விட ஏக்கத்துடன் நின்றிருந்தாள் சௌந்தர்யா.



12.02.2009 00:49



அவளுடைய அந்தப் பார்வை மனதை ஏதோ செய்து, கூர்மையான கேள்விகளுடன் அம்பாய் பாய, யோசனையுடன் தன் விழிகளைத் தழைத்துக் கொண்டான் ப்ரதீப்!

அவளுக்குள்ளோ இனிய ஞாபகங்கள், தங்கப் போர்வையாய் விரிந்தன.

இதயத்திலோ மெல்லிய கவிதைப் பூ ஒன்றின் மலர்வு!

**என் மனதைக் கொள்ளையடித்தவனே!**
**என் காதல் சாம்ராஜ்யத்தில்...**
**இளவேனிற் நினைவுகளின்**
**இன்ப ஊர்வலம்!**
**காதோரம்...**
**காதல் பறவைகளின்**
**சிருங்கார ரீங்காரம்!**
**இதய மாளிகையில்...**
**உதய ராகங்களின்**
**ஸ்வர சங்கமம்!**
**என்னுயிர்**
**மன்னவனே!**
**மழை தர மேகம்**
**மறுப்பதுபோல்...**
**என்**
**இதயத்தில் புகுந்த**
**நேசப் பறவை...**
**உன்**
**நெஞ்சக் கூட்டிற்குள்**
**கூடு கட்ட**
**மறுப்பதேன்?**



அவனுடைய நேச ஞாபகங்கள், அவளுடைய பகல் கனவை நிறைக்க ஆரம்பித்தன.

விழிகளில் கனவு சுமந்து நின்றிருந்தவளை அளவிட்ட ப்ரதீப்பின் முகமோ சுய வெறுப்பில் சுருங்கி இறுகியது.

## 37

திருமணம் முடிந்து நளினி, கணவன் வீட்டிற்கு மறு வீடு சென்றிருந்தாள்.

நாட்கள் விரைய, அந்த வருடத்திற்கான சிறந்த தொழில் அதிபர் விருதுக்கு சௌந்தர்யாவைத் தான் பரிந்துரை செய்திருப்பதாக, கமிட்டியிலிருந்து தகவல் வந்திருந்தது.

சென்றமுறை அந்த விருதை ஜீவா பெற்றிருந்தான்.

விபரமறிந்து முதலில் வாழ்த்திய ப்ரதீப்பின் முகம் மகிழ்ச்சியில் விகசித்திருந்தது.

இவள் என் பெண்மை... என் கண்மணி எனக் கட்டியம் கூறி, பெருமிதத்தில் திளைத்திருந்தது இதயம்!

ஆனால் இது எதையுமே அறியாமல் இருந்தாலும் அவனுடைய வாழ்த்தால் அவளுக்குள் பூரண கும்ப மரியாதையோடு யாரோ தன்னை வரவேற்ற உணர்வு!

அவனுக்கோ, அவளுடைய மௌனமே பெரிதும் கொல்வதாய்!

ப்ரதீப்பின் நெஞ்சுக்குள் ஒரு சோகச் சூரியனின் உதயம்!

12.02.2009 00:49

எல்லாவற்றையும் கவனித்திருந்த புனிதாவோ, மகிழ்ச்சியின் உச்சத்தில் மருமகளை வாழ்த்தினார்.

அன்றுதான், தேனிலவு முடிந்து நளினியும், வெங்கடேஷும் வந்திருந்தனர்.

அன்றே வேலைக்கு வந்து விட்ட வெங்கடேஷ் அவளை வாழ்த்த, அவள் தான் நண்பனை செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

''என்ன வெங்கடேஷ்...? இன்னிக்குக் காலையில தானே ஊரிலிருந்து வந்தே! ரெஸ்ட் எடுத்துட்டு நாளைக்கு வரவேண்டியது தானே?''

''அதெல்லாம் கஷ்டம் சௌந்தர்யா! ஏற்கெனவே இருபது நாள் லீவெடுத்தாச்சு! போதும்.''

பிடிவாதத்துடன் மறுத்து விட்டு வேலையைப் பார்க்கச் சென்றான் அவன்.

அன்று மாலையில் ப்ரதீப், ஜீவாவைப் பார்க்க வீட்டிற்குச் சென்றிருந்தான்.

ஆனால் ஜீவா வெளியில் சென்றிருக்க மாலதி மட்டுமே இருந்தாள்.

அவனுக்கு அதுவும் நல்லதாகப்பட சில விபரங்களை அவளிடம் அறிந்து பல தீர்வுகளை, முடிவுகளை எடுத்தாக வேண்டிய கட்டாயம்!

மனதிற்குள் ஒரு முடிவு உறுதியான முடிச்சாய் இறுகியது.

''மாலதி! நான் கேக்குற சில விஷயங்கள் உனக்கு கஷ்டமா இருக்கலாம்... ஆனா எனக்கு உண்மை தெரிஞ்சாகணும்!'' மெதுவாக ஆரம்பித்தான்.

''இதுவரைக்கும் நம்ம பிசினஸ் கணக்கை நான் தானே பாக்கறேன். ஒவ்வொரு வருஷமும் லாபத்துல பாதி தொகைக்கும் மேல கணக்கிலேயே வராமக் காணாமப் போயிடும்!



''நான் கேட்டா, அது ஜீவாவோட அத்தை தேன்மொழியோட குடும்பத்துக்குப் போயிடறதா ஜீவா சொல்லுவான்...

''அத்தை இறந்தப்புறமும், அவங்க மகளுக்காக பாட்டி அந்தத் தொகையை அனுப்பறதா அவன் சொன்னப்ப, நானும் நம்பிட்டுதான் இருந்தேன்..

''அதனாலேயே எனக்கு சௌந்தர்யா இங்கே வந்தப்ப அவ மேல அவ்வளவு வெறுப்பு! இத்தனை வருஷமா அவ்வளவு பணத்தையும் வாங்கிக் கிட்ட ஒருத்தி நன்றியில்லாம, பாட்டியோட இறுதிச் சடங்குக்குக் கூட வரலையேன்னு கோபப்பட்டேன்!

''இப்போ சொத்தை மட்டும் அனுபவிக்க வந்த பணப் பேயின்னு கணிச்சி திட்டினேன்.

''நளினியோட கல்யாணம் முடிவான கொஞ்ச நாளிலே இந்த வருஷமும் அவ்வளவு பெரிய தொகை குறைஞ்சது தெரிஞ்சது!

''ஆனா, இந்தத் தடவை நான் என் மாமனார் கிட்டதான் போய்க் கேட்டேன்! அவர் சொல்லித்தான் தெரிஞ்சது. இது வரைக்கும் இங்கேருந்து ஒரு ரூபாய் கூட சௌந்தர்யாவிற்கு அனுப்பப் படலேங்கிற விஷயம்!

''அப்போதான் ரொம்ப ஷாக்காச்சு! இந்தப் பணமெல்லாம் எங்கே போகுது... எனக்குத் தெரியணும்...''

''முதல் தடவையா எனக்கு ஜீவா மேல சின்ன சந்தேகம் வந்திருக்கு! இதுக்கு உன்னால மட்டும்தான் விளக்கம் சொல்ல முடியும்னு நான் நினைக்கிறேன்.''

அழுத்தமாக முடித்தவனை, முதலில் மிரட்சியுடன் நோக்கிய மாலதி, பிறகு ஒரு முடிவுடன் பேச ஆரம்பித்தாள்.

* * *

12.02.2009 00:49



''ப்ரதீப் அண்ணா! எனக்கு எப்படிச் சொல்றதுன்னே தெரியலை... ஆனா சொல்லாமலும் இருக்க முடியலை... உங்ககிட்டே எல்லா உண்மையும் சொல்லிட்டேன்னு தெரிஞ்சா அவர் என்னை என்ன செய்வாரோ...

''பரவாயில்லை! உண்மை ஒரு நாள் வெளியே வந்துதான் ஆகணும்! நீங்க சொன்னது ரொம்ப சரி!

''இதுவரைக்கும் எந்த விதமான பணமோ சொத்தோ சௌந்தர்யாவுக்கு அனுப்பப்பட்டதில்லை... அது எனக்குத் தெரியும்!

''அதெல்லாம்... ப்ச்... உங்க... ப்ரெண்ட் ஜீவாவுக்கு பனாஜியிலே ஒரு பெண் தொடர்பு இருக்கு... எனக்கும் அது தெரியும்...''

அவள் கூறக் கூற அதிர்ந்து நிமிர்ந்தான் ப்ரதீப்!

''கடவுளே! தெரிஞ்சும் எப்படி சும்மா விட்டீங்க! அவனைக் கண்டிக்கலையா?'' பதட்டத்துடன் கேட்டான்.

''கண்டிக்க முடியாது... கண்டிச்சா அடிப்பாரு! பாதிப் பணம் அங்கே போகுது... மீதியை, மலேஷியாவில 'ஜென்ட்டிங்'கிலே சூதாட்ட விடுதியிலே நிறைய கேம்ப்ளிங் பண்ணி விட்டுடுவாரு!''

அவள் குற்றவுணர்வுடன் நிறுத்த, அதிர்ந்து போய் அமர்ந்திருந்தான் ப்ரதீப்!

முதன் முதலாக, நண்பனின் கொடிய முகம் தெரிந்த கலக்கமும் சஞ்சலமும் அவனிடம் தெரிந்தன!

''எனக்கு எப்படி இதெல்லாம் தெரியாமப் போச்சு?''

''ஹூம்! உங்களுக்குத் தெரிஞ்சது அவரோட ஒரு முகம்தான்! இன்னொரு முகம் எனக்கு மட்டுமே தெரியும்!''

அவனுடைய ஞாபகங்கள்... பின்னோக்கி சரம் கோர்த்தன...!



# 38

மாலதி, திருமணமாகி வந்த புதிதில் ஜீவாவுடைய தாய் மனோன்மணி உயிருடன் இருந்தார்.

அவரைப் பார்த்தாலே அனைவரும் பயப்படும் தோற்றமும் நடத்தையும் கொண்டவர்!

அவருடைய அதிகாரமும், ஆளுமைத் தனமும், அப்படியே ஜீவாவிடமும் பதிந்திருந்தன.

ஒரு நாள், வேலைக்காரி மூலமாகத்தான், ஜீவாவின் பாட்டி சௌந்தரா நாயகி உயிருடன் இருப்பதையே அவள் அறிந்தாள்.

யாருக்கும் தெரியாமல் அவளுடன் சென்று பார்த்த போதுதான், பின் பக்கமிருந்த ஒரு புழக்கமில்லாத இருட்டறையில் இருந்தார் அவர்!

கை கால் விளங்காமல் படுக்கையிலேயே இருந்த வரை, ஒரு வேலைக்காரி மட்டும் கவனித்துக் கொள்ள, அவரைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாய்!

அன்றிலிருந்து யாருக்கும் தெரியாமல் சென்று அவரைப் பார்த்து வந்தாள் அவள்.

அதுவும் ஒரு நாள் மனோன்மணிக்குத் தெரிய வர, ஜீவாவிடம் கூறி, அவர் அதையும் தடுத்து விட்டார்.

அவருடைய பேச்சும், ஜீவாவின் வெறுப்பும் அவளை வாய் மூடி மௌனியாக்கின.

பிறகு, அவள் கருவுற்றிருந்த நேரம் மனோன்மணி இறக்க, ப்ரதீப்பினால் சௌந்தரா நாயகியின் சிறைவாசம் தொடர்ந்தது.

12.02.2009 00:49

பூட்டப்பட்ட அந்த அறைக்குள் மாலதியாலும் செல்ல முடியாமல் போக, அந்த வேலைக்காரியுடன் தனிமையி லிருந்தார் சௌந்தரநாயகி!

வருடம் ஒரு முறை வக்கீல் வரும்போது மட்டும், அவர் உள் அறைக்குள் அப்புறப்படுத்தப் படுவார்.

அவரால் பேச முடிந்தாலும், அருகிலேயே இருக்கும் போனுக்கு பயந்து அவர் எதுவுமே சொல்வதில்லை.

அப்படி ஒரு நாள், அவனில்லாத நேரத்தில் அவன் மலேசியாவிற்குச் சென்றிருந்த போது வக்கீல் வந்து விட, அப்போதுதான் அவருக்கு உண்மையே தெரிந்தது.

உடனே மாற்று சாவியால் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவரிடம் சௌந்தரநாயகி வெகு நேரம் பேச, உடனே உயிலெழுதி விட்டார் விமல்நாத்!

சாட்சிக் கையெழுத்தை அவருடைய நண்பர்களே போட்டு விட, இது எதையும் அறியாத ஜீவா, அப்போது மலேஷியாவில் இருந்தான். மாலதியும் தாய் வீட்டிற்குச் சென்றிருந்தாள்!

அவன் ஊருக்குத் திரும்பும் முன்பே சௌந்தர நாயகி இறந்துவிட, செய்தியறிந்து உடனே கிளம்பி வந்தான்.

பதினாறாம் நாள் காரியம் முடிந்த பிறகுதான் அந்த இடியே அவன் தலையில் விழுந்தது.

உயில் வாசிக்கப் பட்டவுடன், அவன் ரௌத்ரமாகி விட்டான்.

இதை எதிர்பார்த்திராததால், ப்ரதீப்பின் உதவியுடன் வன்மையாக எதிர்த்தான்.

ஆனால், விமல்நாத், எல்லா சட்ட நுணுக்கங்களையும் ஆராய்ந்து செயல்பட்டிருந்தார். எதிர்த்து எதுவுமே செய்ய முடியாத தருணத்தில் தான், சௌந்தர்யா இந்த ஊருக்கு வந்தாள்.



மாலதி கூறி முடித்ததும், சௌந்தர்யா சொத்தை மாற்றித் தாராததற்கு ஏதோ ஒரு முக்கிய காரணம் இருக்க வேண்டுமென்பது. ப்ரதீப்பிற்குப் புரிந்தது.

அவளும் அதையே தான் கூறினாள்.

''நீங்க சௌந்தர்யாவைத் தப்பா நினைக்காதீங் கண்ணா! இந்த வீடு அவ கிட்டே இருந்தாலாவது பத் திரமா இருக்கும்னு பாட்டி நினைச்சிருக்கலாம்... அப்படித் தான் எனக்குத் தோணுது...''

''ஆனா இதை எல்லாம் நான்தான் சொன்னேன்னு உங்க ஃப்ரெண்ட்கிட்டே சொல்லிடாதீங்க! தெரிஞ்சா என்னை வெட்டிப் போட்டுடுவாரு!

அவன் கூறியதும், தீவிரமாய் யோசிக்க ஆரம்பித்தவ னுக்குள் எதுவோ புரிவது போல்!

சௌந்தர்யாவின் மேல் ப்ரியமும் பரிவும் போட்டி போட்டு பொங்கி எழும்பின.

தன்னுடைய இமாலயத்தவறும், இதுவரை வார்த்தை களாலேயே அவளைத் தான் சுட்டெரித்ததும் சம்மட்டி அடியாய் நெஞ்சில் விழுந்தன.

## 39

அதே நேரம், பண்ணையை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தாள் சௌந்தர்யா.

இருளத் தொடங்கியிருந்த அந்த முன் மாலை நேரத்தில், பச்சைப் பட்டாய் விரிந்திருந்த வயல் வெளி

12.02.2009 00:49



யும், தூரத்தே தெரிந்த சிறு மலைத் தொடர்களும் ரம்யமாய் தெரிந்தன.

மனதில் எந்தக் கவலை இருந்தாலும், அதைக் களையச் செய்து விடும் சக்தி, இயற்கையின் மாயக்கரங்களுக்கும், இனிய மெல்லிசைக்கும் மட்டுமே சாத்தியப்படுவது புரிவதாய்...!

இயற்கையின் பசுமையில், மனம் இலவம் பஞ்சாய் மிதந்தபோது, தூரத்து பம்ப் செட் கட்டிடத்தின் அருகே ஒரு உருவம் கையில் எதையோ தூக்கிக் கொண்டு பதுங்கிப் பதுங்கி செல்வது தெரிய, அதிர்ந்து போனாள்.

யாராக இருக்கும் என்று யோசிக்கும்போதே, அரை மணி நேரத்திற்கு முன்புதான் அத்தனை தொழிலாளர் களும் வேலை முடிந்து சென்றது ஞாபகம் வந்தது.

பரவி வந்த இருளில் அந்த உருவம் யாரென்று புரியாத தால், தவிப்புடன் யோசித்தவளுக்கு, அவன் தோளிலிருப் பது ஒரு சிறு குழந்தை என்பது மட்டும் உறுதியாவதாய்!

உடனே வேகமாய் அந்த இடத்தை நோக்கி நடந்தவள், ப்ரதீப்பின் செல்லுக்குத் தொடர்பு கொண்டாள்.

ஆனால், அது ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது.

என்னதான் கராத்தே தெரிந்தவளாக இருந்தாலும், அங்கு எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று தெரியாமல் எப்படி தனியே செல்வதென்ற யோசனையுடன், உடனே வெங்கடேஷை அழைத்தாள்.

அவனும் பண்ணைக்கருகிலேயே இயற்கை உரம் தயாரிக்கும் இடத்தில் இருந்ததால் பைக்கை எடுத்துக் கொண்டு விரைந்து வந்து விட்டான்.

இருவருமாகச் சென்றபோதுதான், அங்கு காசிநாதன், குழந்தை மனோவை தரையில் கிடத்தி விட்டு வெளியே வந்து செல்போனில் பேசிக் கொண்டிருந்தான்.



''உங்க குழந்தை உயிரோட வேணும்னா நளினி இங்கே வரணும்? இல்லே இந்தக் குழந்தையை ஏதாவது செஞ்சுடுவேன்!

''உங்க தங்கச்சியைக் காப்பாத்திட்டோம்னு பெருமைப் பட்டுட்டிருந்தீங்க இல்லையா?

''இப்ப உங்க குழந்தை இங்கே பலியாகப் போறா! எப் படியும் நீங்க வரதுக்குள்ளே எல்லாமே முடிஞ்சிருக்கும்.''

அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே பின்புற வழி யாக சப்தமின்றி மெதுவாக உள்ளே சென்று மனோவைத் தூக்கி வந்து விட்டாள் சௌந்தர்யா!

மறு கணமே, காசிநாதனின் மீது பாய்ந்த வெங்கடேஷ் அவனைத் துவைத்து எடுத்து விட்டான்.

''வேண்டாம் வெங்கடேஷ்... போதும்!

''ஏற்கெனவே அவன் உடம்பு சரியில்லாதவன், விட்டுடு! போலீஸ் பாத்துக்கட்டும்!''

உடனே போலீஸுக்குத் தகவல் கொடுத்தவள், ப்ரதீப்பின் எண்ணிற்கு முயன்றாள்.

முதல் ரிங்கிலேயே செல் எடுக்கப்பட்டது.

''சௌந்தர்யா! ஐயம் ஸாரி ஃபார் எவ்ரிதிங்! லட்சம்... கோடி சாரிடா... என்ன சொல்லி, நான் உன் அன்பை திரும்பப் பெறப் போறேன்னு எனக்குப் புரியலை.

''உன் மனசுல இருந்த காதலை, என் செயல்களாலே... வார்த்தைகளாலே, நான் அழிச்சிட்டேனா?

''வாழ்க்கையில முதல் தடவையா பயமாருக்கு சௌந் தர்யா! என்னை மன்னிப்பியா?''

உணர்ச்சிகள் நிறைந்த குரலில் அவன் கேட்க அவளுக்கோ ஒன்றுமே புரியவில்லை.

12.02.2009 00:50

''என்ன... திமிர்னு எதுக்கு சாரி? இங்கே மனோவுக்கு ஒரு ஆபத்து... ஆனா காப்பாத்தியாச்சு. அவ இப்ப பத்திரமா இருக்கா... அதை சொல்லத்தான் போன் செஞ்சேன்'' பதட்டத்துடன் மொழிந்தாள்.

''ஓ! தேங்க் காட்! இப்பதான் இங்கே போன் வந்தது... நானும் ஜீவா வீட்டிலதான் இருக்கேன்! உடனே போலீஸுக்கு சொல்லிட்டேன்... நீ இப்போ எங்கே இருக்கே?''

அவசரமாக அவன் கேட்க, அவள் விபரம் கூறி போனை வைத்துவிட்டு, மனோவின் மயக்கத்தைத் தெளிய வைக்க முயன்றாள்.

தண்ணீர் சில்லென்று முகத்தில் பட்டதுமே மெதுவாக விழித்த குழந்தை, அவளைக் கண்டதும் ''அக்கா...'' வென்ற தீனக் குரலுடன் சௌந்தர்யாவின் மார்பில் ஒட்டிக் கொண்டாள்.

அவள் உடல், காற்றில் அகப்பட்ட சிறு தளிராய் நடுங்கியது.

''கடவுளே! இந்தக் குழந்தையைக் காப்பாற்றி விட்டாய்... நன்றி.''

அவள் உருகும்போதே, போலீஸ் வந்து விட்டது.

சிறிது நேர விசாரணைக்குப் பிறகு காசிநாதன் காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட, அப்போதுதான் ப்ரதீப்பின் கார் விரைந்து வந்து நின்றது.

அதிலிருந்து கதறியபடி இறங்கி ஓடி வந்த மாலதி, குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள்.

''நீங்க குழந்தையை பத்திரமா அழைச்சிட்டு வீட்டுக்குப் போங்க! நானும் சௌந்தர்யாவும் தான் ஐ விட்னஸ்! ஸ்டேஷனுக்குப் போய், ஒரு கம்ப்ளெயிண்ட் எழுதிக் குடுத்திட்டு வந்துடறோம்'' என்றான் வெங்கடேஷ்.



அதற்குள், நாகராஜூம் ரேணுகாவும் நளினியுடன் வந்து சேர்ந்தனர்.

கோவிலுக்குச் சென்றிருந்த இருவரும், வெங்கடேஷ் போன் செய்ததும் வருகின்ற வழியில் நளினியிடம் விபரம் கூறி அழைத்து வந்ததாகக் கூறினர்.

ஒரு தீக்கனவு நடந்து முடிந்த தாக்கம் அனைவரிடமும் படிந்திருக்க,

ஒவ்வொருவரும் வெவ்வேறு மன நிலையிலிருந்தனர்.

## 40

குழந்தையை அவர்களுடன் பத்திரமாக வீட்டுக்கு அனுப்பி விட்டு, ப்ரதீப்பும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றான்.

அங்கு முறைப்படி கம்ப்ளெயிண்ட் அளித்து விட்டுத் திரும்பி வரும்போதுதான் அவளிடம் அந்தக் கேள்வியைக் கேட்டான் ப்ரதீப்.

''ஏன் சௌந்தர்யா? இப்படி ஒரு இக்கட்டான நிலைமையில கூட உனக்கு என் ஞாபகம் வரலை? உன் ஃப்ரெண்டைத் தான் கூப்பிடணும்னு தோணியிருக்கு இல்லை?''

ஆழ்ந்த குரலில் அவன் கேட்டபோது, அவனிடம் பெரிய வித்தியாசம் தெரிவதை உணர்ந்தவளுக்கு, உடனே போனில் அவன் மன்னிப்பு கேட்டதும் நினைவுக்கு வருவதாய்!

ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்தி[illegible]

12.02.2009 00:50



''ப்ரதீப்... நான் முதல்லே உங்களுக்கு தான் ட்ரை பண்ணினேன்... ஆனா உங்க செல் ஸ்விட்ச் ஆஃப்னு வந்தது.. அதான் உடனே வெங்கடேஷுக்கு கூப்பிட்டேன்.''

மென்குரலில் அவள் நிறுத்த, ''ஓ!'' என்றவனுடைய முகம், சட்டென்று இளகி மென்மையானது.

''எனக்கு இப்ப ஒரே ஒரு வரம்தான் உன்கிட்டருந்து வேணும் சௌந்தர்யா!

''கல்யாணத்துக்கு முன்னாடி உன்னை உயிரா விரும்பினேனே... அதே மனநிலையோடக் கேக்கறேன்... என்னை மன்னிச்சி... எந்தக் காலத்துலயும் பிரியாம என்கூடவே இருப்பியா?''

மென்குரலில் ஏக்கத்துடன் கேட்டவனை வியப்பும் பிரமிப்புமாய் ஏறிட்டவளின் விழிகள் மெல்லக் கனிந்தன.

''இவன் என்னைப் புரிந்து கொண்டு விட்டான். மறப்பது மனித குணம்.... மன்னிப்பதோ தெய்வ குணம்! இவன் என்னுடையவன்... இவனை விட எனக்கு என் ஈகோவும் கௌரவமுமா பெரிது?'' இதயம் பேசியது!

உடனே, மெல்லத் தலையசைத்து தன் பதிலை அறிவித்து விட்டுப் பின்புறம் சாய்ந்து கொண்டாள் அவள்.

பிறகு கழிந்த நொடிகள் மௌனத் துளிகளாய்...!

விடிந்த பின்பும் சில நேரங்களில் வானில் ஒளிரும் விண்மீன்களாய் அவன் மனதில் பெரும் பிரகாசம்!

மிக மென்மையாய்... இனிய தென்றலாய்... தேவ ரோஜாவின் நறுமணமாய்... நெஞ்சை நிறைத்தது. அந்த ஒற்றை செய்கை!

''இந்த அழகு தேவதை என் பெண்டு... என் இதயத்து மெல்லிசை... எனக்கு புத்துயிர் தந்த பெண்மை!''

இதயம் விம்மியது.



ஒரு போதும், கைகளுக்குள் சேகரிக்க முடியா காட்டுத் தீயாய்... அணையிட முடியாக் காட்டாறாய் பறந்தன உணர்வுகள்.

முன்பு யாரோ விதைத்த விதை விருட்சமாகி, இன்று எனக்கு ஒரு அறபுதக் கனியைப் பரிசளித்திருக்கிறது! வாழ்க்கையே.. பகிர்தலும், விட்டுக் கொடுத்தலும் என்பது புரிவதாய்!

அவளை ஓர விழிகளால் சிறையெடுத்தவனுக்குள், பெரும் பிரமிப்பாய்!

எவ்வளவு சாதித்திருக்கிறாள் என் தேவதை...!

''தன்னை விடப் பெரிய அளவு உணவை, மலையைக் கட்டி இழுப்பது போல் தன் பொந்துக்குள் எடுத்துச் சென்று விட முயற்சிக்கும் எறும்புகளின் வேகம்தான், உடனே நினைவிற்கு வருவதாய்!

''தன்னால் முடியுமாவென்று ஒரு நொடி கூட அவை யோசிப்பதில்லையே... முடியும் என்கிற சிறு நம்பிக்கைத் துளி, பெரும் பரிசை அல்லவா பெற்றுத் தந்திருக்கிறது!''

தொழிலில் உயர்வு... கணவன் புறக்கணித்தும் உடைந்து விடாத நிமிர்வு... மாமியாரை, தாயாய் ஏற்ற பரிவு...

நளினியின் வாழ்க்கையைக் காப்பாற்றிய வைராக்கியம்... மனோவை மீட்டெடுத்த தைரியம்...

''என்ன செய்து என் தவறுக்கு உன்னிடம் பிராயச்சித்தம் செய்யப் போகிறேன் கண்மணி?''

இதயம் சருகாய் உலர, ஞாபகப் பூக்கள் விகசிப்புடன் மலர்ந்தன.

கனவுகளுக்குள் வீழ்ந்த மனதில், தானும் அவளும் கோவாவை சுற்றிப் பார்த்ததும் அப்போது மயிலிறகின் வருடலாய் நடந்த பல நிழ்வுகளும்... தன் மனதிற்குள் முதல் காதல் உதயமான தருணமும்... ஏதோ மாயச் சிலிர்ப்பாய்!

உயிரில் பெருகும் ஊற்றாய் [illegible]

12.02.2009 00:50

## 41

இது எதையுமே அறியாத சௌந்தர்யாவோ, யோசனையுடன் அமர்ந்திருந்தாள்.

அவனிடம் இந்த மாற்றம் வந்ததற்கான காரணம் புரியா விட்டாலும் நிறைந்திருந்தது மனது!

பிறகு, மாளிகையும் வந்து விட, வேகமாக இறங்கி உள்ளே சென்றவளையே தாபத்துடன் தொடர்ந்தன ப்ரதீப்பின் விழிகள்.

அங்கு சென்றதும், மாலதி பெரும் நன்றிப் பெருக்குடன் அவளை அணைத்து கண்ணீர் விட, மனோவோ அதிர்ச்சியில் உறங்கிக் கொண்டிருந்தாள்.

கடத்தல் பற்றி விபரமறிந்து, புனிதாவும் வந்திருந்தார்... அவள் மாலதியை ஆறுதல் படுத்தும் போதுதான் அங்கு புயலென நுழைந்தான் ஜீவா!

''எங்கே மனோ? எங்கே என் குழந்தை?'' பதட்டத்துடன் தேடியவன், ஓடிச் சென்று மனோவை ஏந்தி அழ ஆரம்பித்தான்.

பிறகு சிறிது தெளிந்து ப்ரதீப்பிடம் வந்தவன், ''நான் தப்பு பண்ணிட்டேன் ப்ரதீப்!

''தப்பு பண்ணிட்டேன்... எல்லார் வாழ்க்கையையும் வீணாக்கிட்டேன்'' என்றபடி, தன் பாவங்களை எல்லோர் முன்பும் கரைத்துக் கொள்ள ஆரம்பித்தான்.

'தன் பாட்டியைத் தாயுடன் சேர்ந்து கொடுமைப் படுத்தியது... மனைவியை கொத்தடிமையாய் வைத்



திருந்தது... சௌந்தர்யாவிற்கு லாபத்தில் பாதி பங்கு பணம் அனுப்பியதாகப் பொய் சொன்னது... தன் தவறான தொடர்பு! காசிநாதன் தன்னுடைய ஆசை நாயகியின் உறவு என்கிற உண்மை... இருவருமாக சேர்ந்து திட்டம் போட்டு மனோவைக் கடத்தியிருப்பது... சூதாட்டத்தில் தான் இழந்த சொத்துக்கள்...' என அவன் தன் தவறுகளைப் பட்டியலிட்டுவிட்டு தலையில் அடித்துக் கொண்டு கதற ஆரம்பித்தான்.

நண்பனின் வேதனையைப் பொறுக்க முடியாமல் ப்ரதீப் அவனை அணைத்து ஆறுதல் படுத்த, சிறிது நேரம் கழித்து அவன் எழுந்தான்.

''என்னை மன்னிச்சிடு சௌந்தர்யா! நான் பண்ணின பாவங்களுக்கு சரியான தண்டனை கிடைச்சிருந்திருக்கும்... நீதான் காப்பாத்திட்டே...!

''உன்னை என் உயிர் இருக்கிற வரைக்கும் மறக்க மாட்டேம்மா... என் வாரிசை... என்கிட்டேயே திருப்பித் தந்திருக்கே... ரொம்ப நன்றி!'' கைகூப்பி இறைஞ்சினான்.

''ஜீவா இது என் கடமை! அவ என் குழந்தையும் தான்! தப்பே செய்யாதது ஒருவித அழகுன்னா தப்பு செஞ்சவங்க திருந்தறது பேரழகு...!''

''ரொம்ப சந்தோஷமா இருக்கு.... நீங்க மாறணும்னு நான் எதிர்பார்த்துட்டே இருந்தேன்... அதுக்கு இந்த அதிர்ச்சியான சம்பவம் உதவியிருக்கு.''

''ஆமாம்... இப்ப இன்னொண்ணும் சொல்றேன்! இது இனிமே உன் வீடு! மனசார நான் விட்டுத் தரேன்... நாங்க வேற வீட்டுக்குப் போயிடறோம்... ப்ரதீப்போட நீதான் இங்கே வாழணும்... அதுதான் நியாயம்!

தன்னை உணர்ந்து அவன் பேசியது பெரும் நெகிழ்வைத் தர, விழிகள் கசிய நிமிர்ந்தாள் சௌந்தர்யா!

12.02.2009 00:50





''ஊஹூம்... வேண்டாம்! இது நம்ம வீடு... எல்லாருமே இங்கே ஒண்ணா இருக்கலாம்!

''ஆனா, அது மனோவோட இருபத்தோராவது வயசு முடியற வரைக்கும் தான்!

''அதுவரைக்கும் தான் இது எனக்கு சொந்தம்! அதுக்கப்புறம் இந்த பண்ணை வீடு மனோவுக்குன்னு முன்னாடியே எழுதி வெச்சாச்சு!

சிறு முறுவலுடன் அவன் கூற, ''எப்படிப்பா என் மருமக?'' பெருமையுடன் சௌந்தர்யாவைத் தோளோடு அணைத்தபடி ப்ரதீப்பிடம் கேட்டார் புனிதா.

அவன் விழிகளிலோ... ஒரு தேவதையை... காதல் வேதத்தை... இனிய சொர்க்கத்தைக் கண்ட பரவசம்!

மறு நொடியே இடைவரை குனிந்து மேல் நாட்டு பாணியில் வணங்கியவன்,

''ஒத்துக்கறேம்மா! என் திமிர், அகங்காரம், ஈகோ எல்லாத்தையும் விட்டுட்டு, இந்த நிமிஷம் மனசார ஒத்துக்கறேன்...

''ஷீ இஸ் மை ஏஞ்சல்மா... என் வாழ்வில் ஏற்றம் புரிய வந்தவ அவ... அதோட எனக்கே உரிமையானவ... ப்ளீஸ் அவளை என்கிட்ட தந்துடுங்களேன்'' ஏக்கமும் குறும்புமாய் கூறி, இரு கை விரித்தான்.

அத்தனை பேரின் முன்பு அவன் தன் ஏக்கத்தையும், தாபத்தையும் வெளியிட..... நம்ப முடியாத வியப்புடன் விழி விரித்து உறைந்து நின்றிருந்தவளை... அதிர்ச்சியின் பிடியில் இமைக்க மறந்து சிலையாக இருந்தவளை... தனிஷியும், மாலதியும் இரு புறமும் பிடித்து ப்ரதீப்பின் கைப்பிடிக்குள் தள்ளி விட்டனர்.



ஒரு பூங்கொத்தாய் தன் மீது வந்து விழுந்தவ

காதலுடன் ஏந்திக் கொண்டான் ப்ரதீப்!

''மலரின் மேவு திருவே...

உன் மேல் மையல் பொங்கி நின்றேன்!''

அவன் விழிகள், நேசத்துடன் கூறின.

அவள் வெட்கத்துடன் விலக முயற்சிக்க, அனைவரின் விழிகளும், ஆனந்த அருவிகளாயின.

## 42

அடுத்த சில மணித் துளிகளில் இருவரும் புனிதாவுடன் வீட்டிற்கு வர, ''நீ மாடிக்குப் போ ப்ரதீப், நான் என் மருமகளைக் கொஞ்ச நேரத்துல அனுப்பறேன்!'' குறும்புடன் கூறினார் புனிதா!

''அம்மா... ப்ளீஸ்!'' அவனுடைய ஏக்கமும், தாபமும் பார்வையிலேயே கசிய, நாணத்துடன் தலை குனிந்த சௌந்தர்யாவின் கால் கட்டை விரல் பூமியில் ஓவியம் வரைவதாய்!

''இன்னிக்கு ஒரு நாள் கொஞ்சம் பொறுத்துக்கப்பா! அவ எத்தனை நாள் உனக்காக பொறுமையாக் காத்திட்டிருந்தா!'' என்றவர் தன் அறைக்கு அவளை அழைத்துச் சென்றார்.

நவராத்திரிக்காக, அவளுக்காக வாங்கியிருந்த பு பனாரஸ் புடவை நேற்றுதான் ப்ளவுஸ் தைத்து வந் திருந்தது.

உடனே அதை உடுத்தும்படி அவர் பணிக்க, குளித்து தயாராகி, முல்லைப்பூச்சூடி, அலங்காரம் செய்த உ ரோஜாவாய், சௌந்தர்யா மாடிக்குச் சென்றாள்.

12.02.2009 00:51

கையில் பால் டம்ளருடன், இளரோஜா நிற பனாரஸ் பட்டுடுத்தி, முல்லை மலர்களுக்கு நடுவே, தாமரையாய் மின்னிய முகத்துடன் உள்ளே வந்தவளைத் தாபத்துடன் சிறை செய்தான் ப்ரதீப்!

நெஞ்சில் ஏதோ உறுத்த, கவனித்தால் அவன் அளித்த வைர டாலரும்... அதனை விட பலமடங்கு உயர்ந்த திருமாங்கல்யமும்!

"தேங்க்ஸ் சௌந்தர்யா! உன் கழுத்திலிருந்து கோபத் தோட விலகியிருந்த அந்த வைர டாலர்... திரும்பவும் அங்கேயே குடி வநததுக்கு!"

"ம்... இதுதானே நீங்க முதன் முதலா எனக்கு அணிவிச்சது... உண்மையான நேசமில்லாம அதை பாரமா சுமக்க எனக்கு விருப்பமில்லை! இப்பதான் எலலாம் சரியாயிடுச்சே."

ஊடலுடன் வெட்கமும் கலந்து அவள் கூற, முத்த மழையில் அவளை நனைத்தபடி, தன்னையே குடை யாக்கியவனின் நிழல், பிம்பமாய் அவள் மீது படர்ந்தது.

மென் காற்றில் மிதந்து... தாள லயத்துடன் பூமிக்கு இறங் கும் மெல்லிய மலராய், அவள் மனம் அவன் வசம் சரிந்தது.

பல மணித்துளிகள் மௌனத்தில் கரைய, இரு இதயங்களின் ஆனந்த சங்கமம் அங்கு.

வெகு நேரம் கழித்து, கள்ளச் சிரிப்புடன் அவளை விட்டு விலகியவன், "சௌந்தர்யா... மை ஸ்வீட் ஹார்ட்... என்னென்னவோ பேசணும் போலருக்கு... உன்கிட்டே சாரி கேட்டுட்டாலும் மனசுக்குள்ளே உறுத்திட்டேதான் இருக்கு!" கண்கள் கனிய நிறுத்தினான்.

"ப்ளீஸ் தீபு! இப்ப எதுக்கு அதெல்லாம்... மறந் திடலாம்... வேண்டாமே!" மென்மையாய் அவன் உதடு களைத் தன் ஒற்றை விரலால் மூடினாள்.



"ஊஹூம்... உன்னால எப்படி, இந்த மாதிரி எல்லாத்தையும் சுலபமா ஏத்துக்க முடியுது... ஆச்சர்யமா இருக்கு ஹனி!" பிரமிப்புடன் நிறுத்தினான்.

"ஹூம்! அப்பா சொல்வாங்க... உனக்கு.. உன் மனசாட்சிக்கு முதல்லே நல்லவளா இரு... அப்புறம் ஊருக்கு நல்லவளா இருக்கலாமின்னு! நான் என் மனசாட்சிப்படி நடந்தேன் தீபு!

"எப்படிடா எல்லாத்தையும் தாங்கிட்டே... என் டார்ச்சரையும் சேத்துதான் கேக்கறேன்!" அவன் விழிகள் கசிந்தன.

"சிறகு வலிக்குதுன்னு நினைச்சி பறவை பறக்காம இருந்துடுதா என்ன? பாறைக்கு வலிக்குமேன்னு, சிலை செய்யாம இருக்கோமா? அவ்வளவு உயரத்துலருந்து விழுந்து சிதறும்போது, வலிக்குமேன்னு நினைச்சா அருவி உருவாகியிருக்க முடியாதே!"

அவள் கூறியதும்... அவன் முகம் பிரமிப்பில் விகசிக்க, அவளுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் வேதங்களாய்!

பிறகு மெதுவாகப் பேச ஆரம்பித்தான் அவன்.

"நாம் கோவாவை சுத்திப் பாத்தப்ப, முதன் முதலா நான் என் மனசை உன்கிட்ட பறி கொடுத்தேன்!

"ஆனா ஜீவா சொன்ன பொய்களாலே உன் மேல ஒரு ஓரமா கோபமும் இருந்தது.

"அதையும் மீறி என்னால உன்னை மறக்க முடியாம... இழக்க விரும்பாமத்தான் கல்யாணம் செஞ்சுக்கிட்டேன்!

"அப்பதான், ஜீவா என்கிட்ட அந்தத் திட்டத்தை சொன்னான். அப்போ, அதுதான் சரின்னு எனக்கும் பட்டுது! உன்கிட்ட கேட்டேன்.

"நீ பண்ணை வீட்டை எழுதித்தா மறுத்தே!

"ரொம்பக் கோபம் வந்தது. நீ என் பேச்சை கேட்டு நடக்கலைன்ற கோபம் ஒரு பக்கம்! என் நண்பன் கிட்ட

12.02.2009 00:51



தோத்துப் போன விரக்தி ஒரு பக்கம்னு உன்னை டார்ச்சர் பண்ண ஆரம்பிச்சேன்!

அவன் வார்த்தைகள் சட்டென்று நின்று... கண்கள் வலியுடன் இறுக மூடித் திறந்தன.

"அதுக்கெல்லாம்... சாரின்ற ஒற்றை வார்த்தை போதாது! என் ஆயுசு முழுக்க அன்பைப் பொழிஞ்சுதான் உன் காயங்களை நான் ஆத்தணும்."

மென் குரலில் நிறுத்தியவன், சிறிது நேரம் கழித்துத் தொடர்ந்தான்.

"ஆனா, என் துணையில்லாமலே நீ இமயமா உயர்ந்தே... எல்லார்கிட்டயும் நல்ல பெயரெடுத்தே...

"அம்மாவைக் காப்பாத்தினியே அப்பதான் என் மனது மெல்ல இளக ஆரம்பிச்சது... அப்புறம், உனக்கு தீங்கு செஞ்ச நளினிக்கும் நன்மையே செஞ்சே..."

"அப்பதான் நான் முழுசா மாறினேன். எப்படி உன் கிட்ட என்னை வெளிப்படுத்தறதுன்னு புரியாம தவிச் சிட்டிருந்தப்ப தான், எனக்குள்ளே சில சந்தேகங்கள்!

"அதை, உங்கப்பாகிட்டே பேசினப்புறம் தான், பல விஷயங்கள் தெளிவாச்சு!

"இன்னிக்கு சாயந்திரம் மாலதி கிட்ட பேசி எல்லா விபரமும் தெரிஞ்சுக்கிட்டேன். அதனால தான் செல்லை ஆஃப் பண்ணியிருந்தேன்!

"அப்புறம்தான் உன் போன் வந்தது... அப்பவும், எனக்கு முதல்லே சொல்லாம, வெங்கடேஷைக் கூப்பிட் டிருக்கியேன்னு பொறாமை வந்தது!

"அப்புறம், எனக்குதான் முதல்லே ட்ரை பண்ணினதா நீ சொன்னப்புறம்தான், நான் தெளிஞ்சேன்!

"முன்னாடி ஒரு நாள்... அம்மாவோட நீ பேசிட் டிருந்ததை நான் கேட்டேன். வரதட்சணை கேட்டு மனைவியை வீட்டுக்கு அனுப்பறவங்களுக்கு மத்தியில



தன் மனைவிக்கு சீரா வந்த ஒரு வீட்டை திருப்பி எழுதிக் குடுக்கச் சொல்ற, நல்ல மனசு எனக்கு இருக்கேன்னு நீ சொன்னது...

"நட்புக்கு நான் மரியாதை குடுத்தது பிடிசசிருக்குன் னும் நீ பேசினது... என்னை ரொம்பவே யோசிக்க வச்சிது!

"ஆனா அப்ப இருந்த பிடிவாதத்துல என்னால எதை யும் சரியாவே கணிக்க முடியலை!

"ஆனா அப்புறம்... அம்மா உன்னைப் புரிஞ்சுகிட்ட அளவு கூட, நான் உன்னைப் புரிஞ்சிக்கலையேன்னு என் மேலேயே வெறுப்பா வந்தது!

"அப்பதான் ப்ரதீப் தன் தவறுகளை பட்டியல் போட ஆரம்பிச்சான்... எனக்கு முன்னாடியே தெரியும்னாலும் அதை வெளிக்காட்டிக்கலை.

"மாலதியோட வேண்டுகோள் என்னைத் தடுத்தது! கடைசியா நீ சொன்னே பாரு... இங்கே நீ வந்த புதுசிலேயே மனோ பேருக்கு இந்த வீட்டை மாத்தி எழுதிட்டேன்னு... அது அப்படியே என்னைப் புரட்டிப் போட்டுடுச்சி!

"எவ்வளவு அற்புதமான ஒரு பெண்ணை... என் வாழ்க் கையை விடிய வெச்ச ஒரு ஏஞ்சலை... என் கண மணியை..

"சரியா புரிஞ்சிக்காம விலக்கி நிறுத்தி இத்தனை நாட் களை வேஸ்ட் பண்ணி அவளுக்கும் தாங்க முடியாத மன வேதனையைக் குடுத்திட்டமேன்னு உடைஞ்சு போயிட் டேன்!"

"ஆனா, இனி நீ என்னை ஏத்துப்பியான்ற மன உளைச்சலையும், பயத்தையும், உன் முகமும், அது சொன்ன வெட்க பாஷையுமே மாத்துச்சி!

"வாழ்க்கை அழகானதுன்னு எனக்கு சொல்லித் தந்தவ நீ... இப்போ என்னை மன்னிச்சி, உன்னையே பரிசாவும்

12.02.2009 00:51

குடுத்திருக்கே! இதுக்கு.. இந்த அற்புதத் தருணத்தை எனக்கு அறிமுகம் செஞ்சதுக்கு... என் ப்ரிய சகிக்கு என்னால வேற என்ன தர முடியும்? என் உயிரையே தர்றதைத் தவிர...?''

இரு கண்களை மூடி உணர்ச்சிகள் நிரம்பிய முகத்துடன், ஏக்கமும் தவிப்புமாய் அவன் கேட்க, அவள் விழிகள் மின்மினிகளாய்!

அவள் மௌனமே அவனை உலுக்கி, இமை திறக்கச் செய்ய, ''இந்த ப்ரியம், நான் பூமியில் வாழும் காலம் வரை நிலைத்திருக்க வேண்டும்... என்னுடைய நேசம்... இறுதி வரை உனக்குள் சாசுவதமாக வேண்டும்'' என்ற பரிதவிப்பு... அவள் விழிகளில் மெல்லிய நீர்ப்படலமாய்!

''வேதமடி நீ எனக்கு!'' என்ற மௌனச் செய்தி அவன் விழிகளில்!

இதயம்.... பாரதியின் வரிகளில் மூழ்கிக் களித்தது!

''காதலடி நீயெனக்கு... காந்தமடி நானுனக்கு!

வேதமடி நீயெனக்கு... வித்தையடி நானுனக்கு;

போதமுற்ற போதினிலே பொங்கி வரும் தீஞ்சுவையே!

நாத வடிவானவளே! நல்லவுயிரே கண்ணம்மா!''

ஐந்தாவது வேதமாய் காதலை உச்சரித்தவனுடைய மனம், மலர்ந்து விகசித்தது!

தேவமந்திரமாய்... தன்னுள் அவள் நுழைந்திருப்பது புரிவதாய்!

அன்று ஒரு வசந்த ருதுவில், உயிர்ப்புடன் அவனை ஈர்த்தவள், இன்று காதல் வேதமாய் அவனில் கலந்தாள்.

அந்த இனிய இரவில், பனிச் சாரலை புகையாய் தூவிக் கொண்டிருந்தன... இயற்கையின் மாயக் கரங்கள்!

வான் நதியில், ஒற்றைப் பரிசிலாய்... நிலவு மிதந்து கொண்டிருந்தது.

12.02.2009 00:51

உடனே நாகராஜிடம் திரும்பியவன், ''ஏய்! உன் உடம்புல உசிர் இருக்கணும்னா இந்த நிமிஷமே எங்கே யாவது ஓடிப் போயிடு'' என்று எச்சரித்துவிட்டு காரை எடுத்தான்.

உடனே கார் கிளம்பிச் செல்ல, ஓடி வந்து அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டார் அந்த டிரைவர்.

''தம்பி... அவரு பொல்லாதவரு. எங்கம்மாவைக் காப்பாத்த வந்து நீங்க பாவம்... வேண்டாம். உடனே கிளம்பி உங்க ஊருக்குப் போயிடுங்க.

''ஏன் பயப்படறீங்க பெரியவரே? நான் கோயமுத்தூரி லேருந்து வந்திருக்கேன். சூர்யா ஹோட்டல்லேதான் தங்கியிருக்கேன்... என் வேலை முடிஞ்சவுடனே நாளைக்கு மதியானம் கிளம்பிடுவேன்.''

''தம்பி! சீக்கிரம் கிளம்பிடுங்க.''

கெஞ்சுகின்ற குரலில் கூறிவிட்டு அவர் அவசரமாக விடைபெற்றார்.

ஏனோ நாகராஜின் மனதில் முதல் முறையாக ஒரு மெல்லிய சலனம்!

ஹோட்டல் அறைக்குச் சென்ற பிறகும் அவள் நினைவே பெரும் அலையடிப்பாய் அவனுள் நிறைந் திருந்தது.

என்ன மனிதன் அவன்! பிறர் கூறுவதைக் கேட்காமல் அந்தப் பெண்ணை சித்ரவதை செய்பவன் என்று மனம் கலங்கிப் போனது.

ஏனோ அந்தப் பெண்ணை மீண்டும் பார்க்க வேண் டும் போல்... அவளுடைய அழகிய முகமும், வாய் விட்டுச் சொல்ல முடியாமல் பரிதாபமாய் இறைஞ்சிய



விதமும் இரவு முழுவதும் அவனை உறங்க விடாமல் வதைத்தன.

## 7

மறுநாள் வந்த வேலை முடிந்து, அவன் பேருந்து நிலையத்திற்குச் செல்லும்போது, அவனுடைய ஆட் டோவை வழிமறித்தாற் போல் வந்து நின்றது, நேற்று பார்த்த அந்த அம்பாசடர் கார்.

அதிலிருந்து வேகமாக இறங்கிய அந்தப் பெண், ஓடி வந்து அவனிடம் கைகுவித்து தன் நன்றியைக் கலங்கிய விழிகளுடன் தெரிவித்தாள்.

டிரைவர் பவ்யத்துடன் நின்றபடி நடப்பதை வேடிக்கை பார்க்க, அவள் முக பாவத்திலிருந்து மிகவும் நெகிழ்ந் திருப்பது தெரிந்தது.

மொழிகளில் வெளிப்படுத்த முடியாத நன்றி உணர் வும், சைகை மொழியில் தன் அண்ணன் நடந்து கொண்ட தற்கு வருத்தமும் அவள் தெரிவித்தபோது, மனம் கனத்துப் போனது அவனுக்கு!

அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டவன், ''உங்க நிலைமை எனக்குப் புரியுது... நீங்க கிளம்புங்க... திரும்பவும் உங்க வீட்டிலே யாராவது பாத்துட்டா வம்பு!'' என்றபடி விடை கொடுத்தான்.

12.02.2009 14:13



32 வேதமடி நீயெனக்கு!

உடனே நாகராஜிடம் திரும்பியவன், ''ஏய்! உன் உடம்புல உசிர் இருக்கணும்னா இந்த நிமிஷமே எங்கே யாவது ஓடிப் போயிடு'' என்று எச்சரித்துவிட்டு காரை எடுத்தான்.

உடனே கார் கிளம்பிச் செல்ல, ஓடி வந்து அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டார் அந்த டிரைவர்.

''தம்பி... அவரு பொல்லாதவரு. எங்கம்மாவைக் காப்பாத்த வந்து நீங்க பாவம்... வேண்டாம். உடனே கிளம்பி உங்க ஊருக்குப் போயிடுங்க.

''ஏன் பயப்படறீங்க பெரியவரே? நான் கோயமுத்தூரி லேருந்து வந்திருக்கேன். சூர்யா ஹோட்டல்லேதான் தங்கியிருக்கேன்... என் வேலை முடிஞ்சவுடனே நாளைக்கு மதியானம் கிளம்பிடுவேன்.''

''தம்பி! சீக்கிரம் கிளம்பிடுங்க.''

கெஞ்சுகின்ற குரலில் கூறிவிட்டு அவர் அவசரமாக விடைபெற்றார்.

ஏனோ நாகராஜின் மனதில் முதல் முறையாக ஒரு மெல்லிய சலனம்!

ஹோட்டல் அறைக்குச் சென்ற பிறகும் அவள் நினைவே பெரும் அலையடிப்பாய் அவனுள் நிறைந் திருந்தது.

என்ன மனிதன் அவன்! பிறர் கூறுவதைக் கேட்காமல் அந்தப் பெண்ணை சித்ரவதை செய்பவன் என்று மனம் கலங்கிப் போனது.

ஏனோ அந்தப் பெண்ணை மீண்டும் பார்க்க வேண் டும் போல்... அவளுடைய அழகிய முகமும், வாய் விட்டுச் சொல்ல முடியாமல் பரிதாபமாய் இறைஞ்சிய

உமா பாலகுமார் 33

விதமும் இரவு முழுவதும் அவனை உறங்க விடாமல் வதைத்தன.

7

மறுநாள் வந்த வேலை முடிந்து, அவன் பேருந்து நிலையத்திற்குச் செல்லும்போது, அவனுடைய ஆட் டோவை வழிமறித்தாற் போல் வந்து நின்றது, நேற்று பார்த்த அந்த அம்பாசடர் கார்.

அதிலிருந்து வேகமாக இறங்கிய அந்தப் பெண், ஓடி வந்து அவனிடம் கைகுவித்து தன் நன்றியைக் கலங்கிய விழிகளுடன் தெரிவித்தாள்.

டிரைவர் பவ்யத்துடன் நின்றபடி நடப்பதை வேடிக்கை பார்க்க, அவள் முக பாவத்திலிருந்து மிகவும் நெகிழ்ந் திருப்பது தெரிந்தது.

மொழிகளில் வெளிப்படுத்த முடியாத நன்றி உணர் வும், சைகை மொழியில் தன் அண்ணன் நடந்து கொண்ட தற்கு வருத்தமும் அவள் தெரிவித்தபோது, மனம் கனத்துப் போனது அவனுக்கு!

அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டவன், ''உங்க நிலைமை எனக்குப் புரியுது... நீங்க கிளம்புங்க... திரும்பவும் உங்க வீட்டிலே யாராவது பாத்துட்டா வம்பு!'' என்றபடி விடை கொடுத்தான்.

12.02.2009 14:13

வே.நீ - 3